உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை: 30
பக்கங்கள்: 56
சுடர் 33 கதிர் 210 ஆனி 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 24 ஜீன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## மன்னார் மாவட்ட செயலராக மோகன்ராஜ்

யாழ்ப்பாணம், ஜூன் 24
மன்னார் மாவட்டச் செயலராக, மாகாணப் பொதுச் சேவை ஆணைக் » 53

# முதலமைச்சர் போட்டியிலிருந்து ஒதுங்கமாட்டார் மாவை. சேனாதி

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா ஒதுங்கிக் கொண்டதாக இணையத் தளங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என்று, மாவை.சேனாதிராசா அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிடம் நேற்று மாலை தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தம்மிடம் நேரடியாகத் தெரிவித்ததாக, அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன.
வடக்கு மாகாண சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக » 53

ஒட்டுசுட்டான் வெடிபொருள்கள் மீட்பு:

# இராணுவ புலனாய்வாளர்களுக்கும் கைதானவர்களுக்கும் கடுந்தொடர்பு

### நேற்று வரை 5பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24
முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் கிளைமோர் குண்டுகள், புலிக்கொடிகள் உள்ளிட்டவற்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் இராணுவ புலனாய்வாளர்களுக்கும் இடையே தொடர்பு உள்ளது என்று பொலிஸாரின் புலன் விசாரணையில் தெரியவந்துள் » 53

## கொள்கைகளை மாற்றுவது இலகுவான காரியம் அல்ல

*அமைச்சுப் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுத்த மனோவுக்கு சம்பந்தன் பதில்*

கொழும்பு, ஜூன் 24
தங்களுக்கு நீண்ட கால கொள்கைகள் இருப்பதாகவும், அவற்றை மாற்றுவது இலகுவான விடயம் அல்ல என்றும் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
அரசில் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு, அமைச்சர் மனோ கணேசன் அழைப்பு விடுத்திருந்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதி » 53

## புலிகள் இயக்கம் தலைதூக்காமல் தடுக்க நடவடிக்கை வேண்டுமாம்

*ஒட்டுசுட்டான் சம்பவம் தொடர்பில் மகிந்த அணி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 24
முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் விடுதலைப்புலிகளின் சீருடைகள், கொடி மற்றும் வெடிபொருள்கள் என்பன சிக்கியுள்ளமையினூடாக வடக்கின் நிலவரம் மோசமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அரசு இது விடயத்தில் உடன » 53

## வடக்கு -கிழக்கில் படைக்குறைப்பு என்பது பொய்

*13 ஆயிரம் பேரை புதிதாகச் சேர்க்கின்றோம் என்கின்றது ராணுவத் தலைமையகம்*

கொழும்பு, ஜூன் 24
இராணுவத்தில் ஆள்குறைப்புச் செய்யப்படவுள்ளதாகவும், வடக்கு கிழக்கில் பல முகாம்கள் விலக்கப்படவுள்ளதாகவும், » 52

## இரட்டைப் பிராஜாவுரிமையைப் பெற மாதாந்தம் ஆயிரம் விண்ணப்பங்கள்

கொழும்பு, ஜூன் 24
இலங்கையில் இரட்டைப் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடமி » 53

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## க.குமாரை இணைத்தால் தனிக்கட்சி தேவையில்லை

### முதலமைச்சர் விக்கி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன்24
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொ.கஜேந்திரகுமாரை மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் » 53

**மாணவர்களின் தாக்குதலில் மாணவ தலைவன் உயிரிழந்தார்**
*விரிவு பக்.02*

**பொலிஸாரைக் கண்டதும் கழுத்தறுத்தவர் கைதானார்**
*விரிவு பக்.08*

see more news in
newuthayan.com

## கூட்டமைப்பின் 2 எம்.பிக்களிடம் பதவி விலகல் கடிதம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாந்தி சிறீஸ்கந்தராசா, துரைரட்ணசிங்கம் ஆகியோரிடமிருந்து பதவி விலகல் கடிதங்களை கோரிப் பெறுமாறு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.
இலங்கை தமிழ் அரசுக் கட்டிசியின் நாடாளுமன்ற வெகுமதி ஆச » 53

## புதிய அரசமைப்புத் தோற்றால் மக்களிடையே பிரிவினை தோன்றும்

### சம்பந்தன் எச்சரிக்கை



» 52

## கடும்போக்காளர்கள் மிகக் குறைவு ஆனால் அவர்களது குரல் பலமானது

### எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நோர்வேப் பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 24
துவேச இனவாதச் சிந்தையுடன் செயற்படுவோர் இந்த நாட்டில் பெரும் எண்ணிக்கையில் இல்லை. அவர்கள் துரதிர்ஷ்டவசமாக மென்போக்காளர்களைவிட அவர்களின் கருத்துக்கள் முதன்மை பெறுகின்றது. ஆனால் மென்போக்காளர்கள் ஒன்று சேர்ந்து இயங்குகின்றபட்சத்தில் புதிய அரசமைப்பானது மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்படுவதை » 53

## திருவாசக அரண்மனை இன்று திறந்துவைப்பு

### எண்ணெய்க்காப்பு மதியம்வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் நாவற்குழியில் புதிதாக அமைக்கப்பட்ட சிவபூமி திருவாசக அரண்மனையில் சிவதெட்சணாமூர்த்தி தெய்வத்துக்கு எண்ணெய்க்காப்புச் சாத்துவது இன்று மதியம் 12 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
எண்ணெய்க்காப்புச் சாத்துவது நேற்றுச் சனிக்கிழமை வரை என்று வரையறை செய்யப் » 53

## கோத்தா தொடர்பிலான கருத்துக்கு அர்த்தம் வேறு

### தேரர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 24
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் 69ஆவது பிறந்ததின மத அனுஷ்டான நிகழ்வில் தான் தெரிவித்த கருத்துத் » 53

## வீடு திரும்பிய சிப்பாயிடம் துப்பாக்கியும் கத்தியும்


*மாங்குளத்தில் கைது* » 53

SDB
வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை
011 5 411 411
அரச ஓய்வூதியர்களான உங்களுக்கு, உற்பத்தியாளர்களாக எழுந்து நிற்க SDB வங்கியிடமிருந்து அழைப்பு
* நிபந்தனைகளுக்குட்பட்டது.

SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

## மாணவர்களின் தாக்குதலினால் உயிரிழந்தார் மாணவ தலைவன்

கொழும்பு.ஜீன்.24
சிலாபம்பிரதேசத்தில்பாடசாலைமாணவர்களின்தாக்குதலுக்கு இலக்காகிய பிரதான மாணவ தலைவன் நேற்று உயிரிழந்தார். படுகாயமடைந்த மாணவன்கொழும்புதேசியமருத்துவமனையில்சேர்க்கப்பட்டுசிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.
பாடசாலையின்பிரதான மாணவ தலைவனாகச்செயற்பட்ட11 ஆம்வகுப்பில் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.
கடந்த 15 ஆம் திகதி இரவு இடம்பெற்ற மத நிகழ்வில் கலந்து கொண்டு திரும்பி வந்த மாணவனை வீதியில் நின்ற மாணவர்கள் குழுவொன்று கொடூரமாகத் தாக்கினர் எனக் கூறப்பட்டது.
தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் அதே பாடசாலையைச் சேர்ந்த 3 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள் சிலாபம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அதில் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் ஒரு மாணவன் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)



மட்டக்களப்பு பேத்தாழை ஸ்ரீ நாவையடி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழாவின் பால்குட பவனியும், 108 சங்காபிஸேகமும் நேற்று முன்தினம் நடைபெற்றது. (ந.ரி4)

## புத்தரின் குணங்களை பின்பற்றப் பழகுங்கள்

*தென்னாபிரிக்கத் தூதுவர் கூறுகிறார்*

யாழ்ப்பாணம், ஜீன் 24
இந்த நாட்டில் வாழும் மக்கள் புத்தரின் போதனைகளான கருணை, மன்னிப்பு, மற்றவர்கள் மீதான வெறுப்பின்மை ஆகிய குணங்களைப் பின்பற்ற வேண்டும்.
இவ்வாறு தென்னாபிரிக்கத் தூதுவர் ஆர்.பி.மார்க்ஸ் தெரிவித்தார்.
தென்னாபிரிக்க முன்னாள் அரச தலைவர் நெல்சன் மண்டேலாவின் 100ஆவது பிறந்த தினமும் அவரது நினைவு தினமும் யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பல் இன மக்களும் ஒன்றாக வாழும் அழகிய நாடு இலங்கை. இங்கு பேசப்படும் மொழியும் அழகானது. இங்கு சகல இன, மதத்தவர்களும் சமமாக நடத்தப்படுகின்றார்கள். எதுவித பேதமும் இன்றி சட்டம் எல்லாருக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றது.
25 வருட போராட்டத்தின் பின்னரே நெல்சன் மண்டேலா வெற்றி பெற்றார். நீங்கள் தற்போது பத்து வருடங்களே போராடியுள்ளீர்கள். இன்றும் ஒரு இக்கட்டான சூழலில் தான் வாழ்ந்து வருகின்றீர்கள். இங்குள்ள மக்களுக்கு இடையில் சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்களிக்கும் உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது.
தற்போதைய அரசு உங்களுக்கு உதவுவதற்கு தயங்கப் போவதில்லை. இங்குள்ளவர்களில் எத்தனையோ பேர் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். உங்களின் பெற்றோர், உறவினர்கள் போன இடம்தெரியாது தவித்து வருகின்றீர்கள். புத்தரின் போதனைகளான கருணை, மன்னிப்பு மற்றவர்கள் மீதான வெறுப்பின்மை ஆகிய குணங்களை பின்பற்ற வேண்டும்- என்றார். (ந-8)

## காலத்துக்கு ஏற்ப போராட்டம் மாற வேண்டும் என்பது தவறு

*யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவிப்பு*



**யாழ்ப்பாணம், ஜூன் 24**
**எமது இன விடுதலைப் போராட்டம் காலத்துக்கு காலம் ஒவ்வொரு வடிவம் எடுக்கவேண்டும் என இங்குள்ள சிலர் விரும்புகின்றனர். ஆனால் அது தவறானது. எங்கள் உரிமைப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நாம் எக்காலத்திலும் கைவிடமாட்டோம்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.
தென்னாபிரிக்க முன்னாள் அரச தலைவர் நெல்சன் மண்டேலாவின் நூறாவது பிறந்த தினமும் அவரது நினைவு தினமும் யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
1948 ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்த போது எமக்கு தர மறுக்கப்பட்ட அரசியல் உரிமைக்காக எமது தலைவர்கள் ஜனநாயக வழிமுறைகளில் போராடத் தொடங்கினார்கள். அவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட சமயத்திலே எமது நிலங்களை அபகரித்து தமிழ் மக்களின் எதிர்காலத்தை சூனியமாக்க சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்களின் இந்த ஆயுதப் போராட்டத்தின் மீது காலப்போக்கில் நம்பிக்கை வைத்தனர். அதுவே இறுதியல் இங்கு பெரிய உள்நாட்டு போராக வெடித்தது.
இப்போது நாம் ஜனநாயக ரீதியாக போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றோம். நெல்சன் மண்டேலா ஒருபோதும் பழி தீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவில்லை. வெள்ளைக் கார்களின் வெறுப்புக் காட்டவில்லை. உரிமைகளைப் பறிக்கவில்லை. எமக்கான உரிமைகளைத் தாருங்கள் என்றே போராடினார். ஜனநாயக ரீதியாக இறுதிவரை போராடி வெற்றி பெற்றார்.
தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அந்த அடிப்படைக் கோட்பாடுகள் மாறாது பயணித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இங்குள்ள சிலர் காலத்துக்கு காலம் புது வடிவம் எடுக்க வேண்டும் என நினைக்கின்றனர். அது தவறான எண்ணமாகும்.
எங்களின் உரிமைப் போராட்டம் மூன்று அடிப்படையான விடயங்களை கொண்டது. அதில் சுய நிர்ணயம், தாயகம், சுயாட்சி ஆகியவற்றை கொண்டே பயணிக்கின்றது. இந்தக் கோட்பாடுகளில் நின்று ஜனநாயக வழிகளில் எமது போராட்டங்களை ஒழுங்கமைக்க மறைந்த முன்னாள் அரச தலைவர் நெல்சன் மண்டேலாவின் வாழ்வியலில் இருந்து கற்றுக்கொள்ள சில விடயங்கள் உள்ளன. அவற்றை நாம் உற்று நோக்க வேண்டும் - என்றார். (ந-ரி5,8)

## கத்திக் குத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு.ஜீன்.24
பொத்துவில் ரொட்டையில் மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்துத் தாக்குதலில் முன்னாள் போராளியொருவர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
குடும்பத் தகராறில் தந்தை ஒருவர்மகளைக்கத்தியால் குத்த முயற்சித்துள்ளார். இதனைத் தடுக்கச் சென்ற நபரே கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.
சம்பவத்தில்கோமாரிரொட்டையைச்சேர்ந்த55வயதுடையநபரேஉயிரிழந்தார். கத்திக்குத்தைமேற்கொண்டன நபர் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபரைக்கைது செய்யும் நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## ஸ்கேனர் இயந்திரத்தை வைத்திருந்த நபர் கைது

கொழும்பு.ஜீன்.24
குருணாகலை கொபெய்கனேயில் புதையல் உள்ள பகுதிகளை கண்டுபிடிக்க பயன்படுத்தப்படும் ஸ்கேனர் இயந்திரத்துடன் நபரொருவர்கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப் பின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
பொல்பிதிகமவைச்சேர்ந்த 29 வயதுடைய இளஞனே இவ்வாறுகைதுசெய்யப்பட்டார். அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த ஸ்கேனர் இயந்திரம் நிலத்தின் உட்புறத்தை கண்காணிக்க பயன்படுத்தப்படுகிறது எனக்கூறப்பட்டது.
சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கானநடவடிக்கைகளைப்பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## பயங்கரவாதிகளுக்கு அல்ல போராளிகளுக்கே இழப்பீடு

*ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு*

கொழும்பு.ஜீன்.24
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச உள்ளிட்டோர், பயங்கரவாதிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு முற்படுகின்றது என்று தெரிவித்தனர். ஆனால்கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்னாள் போராளிகளுக்கு இழப்பீடு வழங்கும் அமைச்சரவைப்பத்திரத்தை முன்வைத்தார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.
கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதேஅந்தக்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினரான முஜிபூர் ரஹ்மான் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னாள் போராளிகள் உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர்சுவாமிநாதன் அண்மையில்சமர்ப்பித்திருந்தார். இந்தநிலையில், தேசியசுதந்திர முன்னணியின்தலைவர்விமல்வீரவன்சஉள்ளிட்டசிலர் பயங்கரவாதிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு முற்படு கின்றது என்று தெரிவித்து வருகின்றனர்.
இந்தக்குற்றச்சாட்டுக்கள்தொடர்பில்அவர்விளக்கமளிக்கையில், "அமைச்சர்சுவாமிநாதன்சமர்ப்பித்த பத்திரத்தை அமைச்சரவை நிராகரிக்கவில்லை. மேலும், புலிகள் இயகத்துடன் தொடர்புகளைப் பேணிய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற அமைச்சரவை பத்திரத்தையும் அவர்சமர்ப்பிக்கவில்லை, மாறாகமுன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நியமித்த எல்.எல்.ஆர்.சி ஆணைக்குழுவின் பரித்துரைகளையே அவர் மையப்படுத்தி அந்தப் பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார். முன்னர் மறுவாழ்வு பெற்ற அவர் தற்போது இளைஞர்களின் புனர்வாழ்வை மறுக்கின்றார். அவரின்எண்ணத்தைப்போன்றுவடக்கிலும் பலர்உள்ளனர். அதில்குறிப்பாகவிக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம்போன்றோரின்மனோநிலையைக் குறிப்பிடலாம் - என்றார்.
அமைச்சரவைப்பத்திரம்நிராகரிக்கப்பட்டுவருகின்றமை தொடர்பில் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றநிகழ்வில்வடக்குமுதல்வர்ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ந.ரி4)

# படையினர் கையகப்படுத்தியுள்ள பொது இடங்களை விடுவிக்கவும்

## ஸ்ரீநேசன் எம்.பி நாடாளுமன்றில் பிரேரணை

மட்டக்களப்பு, ஜூன் 24

**போர்க்காலத்தில் தமது தேவைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது இடங்களை விரைவில் விடுவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது இடங்களை விடுவிக்கக் கோரும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசனால்கொண்டுவரப்பட்டது. இதன்போதுநாடாளுமன்றில்உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

போர்க்காலத்தில்தமதுதேவைக்காக ஆக்கிரமித்த சிலபொது மற்றும்தனியார் காணிகள் மற்றும் கட்டடங்களை படையினர் விடுவித்துள்ள போதிலும் இன்னும் பல பொதுப் பயன்பாட்டுக்காணிகள்கட்டடங்கள் இதுவரை விடுவிக்கப் படாமல் உள்ளன.

கோறளைப்பற்றுதெற்கு, முறக்கொட்டான்சேனை இராமகிருஷ்ண பாடசாலை, மண்முனைமேற்குபிரதேச சபை அலுவலகக் கட்டடம், மண்முனைமேற்குதாண்டியடிமயானம், கொக்கட்டிச்சோலை ஆசிரியர் மத்தியவளநிலையம்போன்றஇடங்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

பாதுகாப்பு தலைமை அலுவலகம் மற்றும்மாவட்டச்செயலகம்போன்ற இடங்களில், இவ்விடயம்தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று விரைவில்விடுவிக்கப்படும்எனஉத்தரவாதமளிக்கப்பட்டபோதிலும், முன்னேற்றம் மந்த கதியிலேயே உள்ளது.

இதே போன்றுவடக்கிலும்அரசகட்டிடங்கள், தனியார்காணிகள், வீடுகள் கூட இதுவரை முழுமையாக விடுவிக்கப்பட்டாமல்உள்ளன-என்றார்.

மட்டக்களப்பு வானூர்திப் படையினரால்மூடிவைக்கப்பட்டுள்ளதிமிலதீவு வலையிறவு பாதையைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடுமாறும், இவ்வாறு வீதி மூடப்பட்டுள்ளதால்பொதுமக்களும்விவசாயிகளும்



மிக மோசமான நீண்ட தூர பாதையில் சென்று அல்லல் படுவதையும் பாதுகாப்புஅமைச்சருக்குஅவர்எடுத்துரைத்தார்.

சிலமுகாம்களைஅகற்றிவேறுஇடங்களுக்கு மாற்றுவதில் இடப் பிரச்சனை உள்ளதால் தாமதமடைவதாகவும்எனினும்மிகவிரைவில்குறிப்பிட்ட இடங்களை விடுவிக்க நடவடிக்கைஎடுப்பதாகவும் இதன்போது, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவான் விஜேவர்தன உறுதியளித்தார். (ற.ரி2)

# மாணவர்களுக்கு மடிக்கணனி வேலைத் திட்டம் விரைவில்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜீன்24

ஜி.சி.ஈசதாரணப்பரீட்சையில்சித்தியடைந்து, ஜி.சி.ஈஉயர்தரம் கற்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் மடிக்கணனி வழங்கும்வேலைத் திட்டம் நிறுத்தப்பட்டிருந்தா லும் மீண்டும் வெகு விரைவில் அதனை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

காலி சாந்த எலவீஷீயஸ் கல்லூரியில் விளையாட்டுஅரங்குமற்றும்நீச்சல்தடாகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

மடிக்கணனி வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மடிக்கணனி வழங்குவதற்கானஅமைச்சரவைக்குழுஅனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காகதேவையான ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

விரைவில் பாடசாலை மாணவர்களுக்கு மடிக்கணனி பகிர்ந்தளிக்கப்படும். தகவல் தொழில்நுட்பத்துடன்கல்விமுன்னெடுக்கப்படும். கடந்த காலங்களில் பாடசாலை பரிசோதகர் இருந்தார்கள்.

அவர்கள் பாடசாலைக்கு வருவார்கள், பாடசாலையின் தன்மைகள் எவ்வாறு இருக்கிறது என்று தேடிப்பார்ப்பார்கள். இதற்காக நாங்கள் சுயாதீனமான பரிசோகர் குழுவொன்றைநியமிக்கவுள்ளோம். பணிப்பாளர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்படுவார். அவரின்கீழ்மாகாணத்திற்குஒன்பதுபிரதிப் பணிப்பாளர்களும் பிரதி ஆணையாளர்களும் நியமனம் செய்யப்படுவர்.


தற்போது இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அவர்கள் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைமட்டுமல்லபௌதீகவளம்பாடசாலை மாணவர்களின்காரியங்களையும்கவனத்தில் கொள்வார்கள். அந்த வகையில் கல்வியை மேலும் முன்னெடுத்துச் செல்ல எங்களால் முடியும்.

நிகழ்வில் சுதேச விவகார அமைச்சர் வஜிர ஆபேவர்தன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான சந்திம வீரக்கொடி, பந்துலால் பண்டார மற்றும் கல்விக் கேந்திர நிலையத் தின் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (ற.ரி2)






விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்



**சுந்தரியே காளியம்மா சுகம் சேர்ப்பாயே**



நல்லூரின் மேல் பாகம் நண்ணித் தாயாய்
நவில் எல்லை காக்கின்ற நமது காளி
எல்லோரும் புகழ் வண்ணை கோயில் கொண்டு
எழுந்தருளி இரட்சிக்கும் எமது மாதா
பல்லோரும் பாடும் பத்தினியுமாகி
பதிகாவல் தெய்வமாய் பாவை மானே
சொல்லாலே சுவை சேர்த்து தொழுது நின்றேன்
சுந்தரியே காளியம்மா சுகம் சேர்ப்பாயே

**ஆக்கியோன் கலாபூஷணம் குடாநீரூரான்**

[இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை வண்ணை வீரமாகாளியம்பாளின் 21 ஆம் திருவிழா]
அன்னதானம் வழங்கப்படும்.


# தேவை

**யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஹோட்டலுக்குக் கீழ்க் காணும் பதவிகளுக்கு அனுபவமும் ஆற்றலுமுடையவர்களிடம் இருந்து பாஸ்போட் அளவு படத்துடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. விடுதி பிரதம முகாமையாளர்**
- ஹோட்டல் முகாமைத்துவத்தில் 5 வருட முன் அனுபவமுள்ளவர்.
- ஹோட்டல் முகாமைத்துவக் கற்கை நெறி கற்றிருத்தல் வேண்டும்.

**02. சமையலாளர்**
- ஸ்ரீலங்கன், இந்தியன், சைனீஸ், மேல்நாடு உணவுகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்.
- சமையல் முகாமைத்துவ கற்கைநெறி கற்றிருத்தல் வேண்டும்.

**03. சமையல் உதவியாளர்**

**04. உணவு பரிமாறுபவர்கள்**

**05. காசாளர்**
- ஆண்/ பெண் A/L வர்த்தகத்துறையில் சித்தி அடைந்தவர்.

**06. விடுதி மேற்பார்வையாளர்**
- ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம்

**07. வரவேற்பாளர்**
- ஆண்/ பெண் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் சரளமாகப் பேசக்கூடியவர்கள்.

**08. விடுதிப் பராமரிப்பாளர் / சுத்திகரிப்பாளர்**
- 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்/ பெண்

**09. தொழில்நுட்ப உதவியாளர்**
- மின்சாரம் / குழாய் இணைப்பு / A/C பழுது பார்த்தலில் முன் அனுபவமுள்ளவர்.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

(CS/ 17704)(11.17)

**விளம்பர இல.1003,
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

# சுகாதாரம், கல்வி வளர்ச்சியால் பொருளாதாரம் உயர்வடையும்

கொழும்பு.ஜீன்.24
ஒரு நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சியடைந்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிக்கும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
கொழும்பில்நேற்று இடம்பெற்றநிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
தற்போதை அரசாங்கத்தின் கீழ் சுகாதாரத் துறையின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது.
நாட்டில் அனைத்து நபர்களினதும் சுகாதார நிலமை தொடர்பாக கணினி மயப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது-என்றார். (ந,ரி4)



# யோகா தின நிகழ்வு

கொழும்பு, ஜீன்24
இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பன்னாட்டு யோகா தின நிகழ்வு, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் காலை சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.
இதன்போது, யோகா ஆலோசகர்கள் 15 பேருக்கான சான்றிதழ்கள் அரச தலைவரால் வழங்கப்பட்டன.
இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரங்ஜித் சிங் சந்து, யோகா தொடர்பான இரண்டு நூல்களை மைத்திரியிடம் கையளித்தார். இந்த நிகழ்வில், அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ற-ரி5)



# மருத்துவ முகாம்

சாவகச்சேரி.ஜீன்24
மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கிராமத்தில் ஒரு நடமாடும் சேவைத்திட்டத்தின்ஓர்அங்கமான மருத்துவமுகாம்நேற்று நடைபெற்றது.
சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.விக்கிரமசிங்க தலைமையில்நடைபெற்ற மருத்துவமுகாமில்கைதடி ஆயுர்வேத மருத்துவமனை மருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன.
இதில் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 50 பேருக்குசாவகச்சேரிலயன்ஸ்கழகத்தினரால்மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டனஎனத்தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4,9)

# புதிய பிரேரணைக்கான அணுகுமுறையே அரசுக்குப் பொருத்தம்

## டிலான் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு,ஜூன்.24
**இலங்கைதொடர்பானபிரேரணையைஜெனிவாவில் கொண்டுவந்த அமெரிக்காவே ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து விலகியுள்ளதால் இலங்கை தற்போது அந்தப்பிரேரணையைக்கைவிடவேண்டும். அதற்குமாறாக தற்போது ஐ.நா. மனித உரிமை சபையில் இருக்கின்ற உறுப்பு நாடுகளுடன் இணைந்து புதிய பிரேரணை ஒன்றுக்குச் செல்வ தற்கான அணுகுமுறையை முன்னெடுக்கவேண்டும்.**

இவ்வாறு சுதந்திரக்கட்சியின் சுயாதீன அணியின் முக்கியஸ்தர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
ஐக்கியநாடுகள் மனித உரிமை சபையிலிருந்து அமெரிக்காவெளியேறியுள்ளமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
ஐக்கியநாடுகள் மனித உரிமை சபையிலிருந்து அமெரிக்கா விலகி யுள்ளமையானது ஒரு ஆரோக்கியமற்ற செயற்பாடாகவே காணப்படுகின்றது. சிறப்பாக அமெரிக்கா கடுமையான குற்றச்சாட்டுக் களை முன்வைத்தே சபை யிலிருந்து விலகியுள்ளது.
அதாவது மனித உரிமை சபை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இரட்டைவேடம் கொண்டுள்ளதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.
எனவே இவ்வாறு மனித உரிமை சபை மீது பெரிய குற்றச்சாட்டைமுன் வைத்து அதிலிருந்துவெளியேறிச் சென்றுள்ள அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்தப்பட முடியுமா என்பது தொடர்பாகஇலங்கைஅரசு சிந்திக்கவேண்டும்.
ஆனால் இலங்கை அரசு உடனடியாகவே அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து ஆதரவு கோரியுள்ளது.
அமெரிக்காமனித உரிமை சபையிலிருந்து விலகியுள்ள்நிலையில் அந்தநாட்டின்ஊடாகக்கொண்டுவரப்பட்ட பிரேரணையை நாம் நடைமுறைப்படுத்தவேண்டுமா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. எனவே அரசு உடனடியாக அந்த ஜெனிவாப் பிரேரணையை கைவிட்டுவிடவேண்டும்.
ஜெனிவாப்பிரேரணையை கைவிட்டதன் பின்னர் தற்போது உறுப்புரிமை கொண்டுள்ளநாடுகளுடன் இணைந்து புதிய பிரேரணையொன்றைக்கொண்டு வருவது தொடர்பாக அரசு சிந்திக்கவேண்டும். இல்லாவிடின் அமெரிக்கா கூறுவது தவறு என்றும் மனித உரிமை சபை பக்கச்சார்பு அற்றது என்றும் இலங்கை அரசு அறிவிக்க வேண்டும். ஆனால் அரசு அவ்வாறு செய்யவில்லை.
எனவே அரசு இந்தப்பிரேரணையைக்கைவிட்டுபுதிய பிரேரணைஒன்றுக்குசெல்வதே பொருத்தமாக அமையும்-என்றார். (ந,ரி4,31)

# யானை தாக்கி இருவர் சாவு

அம்பாறை,ஜீன்24
அம்பாறை பானமவாவிக்கு அருகில் காட்டு யானை தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்தது.
மீன்பிடித்தொழிலுக்குச் சென்ற இருவரே காட்டு யானைத்தாக்குதலுக்கு உள்ளாகினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
அதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
உயிரிழந்தவர்கள் 58 மற்றும் 59 வயதுடைய மீனவர்கள் என தெரியவந்துள்ளது.
இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (றரி5)

# மோட்டார்சைக்கிள்கள் விபத்து :இருவர் காயம்

## தென்மராட்சியில் இரு வேறு இடங்களில் சம்பவம்

தென்மராட்சி, ஜீன் 24
தென்மராட்சிப் பிரதேசத்தில் இருவேறு இடங்களில் சாலையோர மின்கம்பங்களுடன் மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகின.
நேற்றுக் காலை மிருசுவில் வடக்குப் பகுதியில் சாலையோர மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த ஏகாம்பரநாதன் துரைச்சந்திரன் (வயது - 28) என்பவர் காயமடைந்தார். இவர் கொடிகாமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின் சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, மிருசுவில் தவசிகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சாலை வளைவில் காணப்பட்ட மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த கோபால் தினேஸ் (வயது 25) என்பவர் காயமடைந்தார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ந,ரி5,9)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகிப் பெண் சாவு

கொழும்பு,ஜீன்24
தியத்தலாவ, லிந்தஎல்லப் பிரதேசத்தில், நேற்றுக் காலை குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். வயல் வெளியில் பணியாற்றிக்கொண்டிருந்த போதே இவர், குளவிக் கொட்டுக்கு இலக்காகினார்.
இரண்டு பிள்ளைகளின் தாயொருவரே குளவிக் கொட்டுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைபயனின்றி உயிரிழந்துள்ளார் எனப், பொலிஸார் தெரிவித்தனர்.
அதே பிரதேசத்தைச் சேர்ந்த டி.ஜி.ஜயந்தி சிறியலதா (வயது 56) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (றரி5)

# தங்கத்துடன் ஒருவர்கைது

கொழும்பு, ஜீன்24
சட்டவிரோதமான முறையில் உள்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தங்க நகைகளுடன் நபர் ஒருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
விமான நிலைய ஆயப்பிரிவு அதிகாரிகளினால் நபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.
சிங்கப்பூரில் இருந்து வந்த நபரே, இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
தங்க நகைகளின் பெறுமதி 22 லட்சம் ரூபா எனக் கூறப்படுகின்றது.
சந்தேக நபர் பத்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (றரி5)

# கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி விபத்து: இருவர் காயம்

புத்தளம்,ஜீன்24
புத்தளம் மங்களஹெலிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து நேற்றுக் காலை நடந்தது. விபத்தில் காயமடைந்தவர்கள் புத்தளம் ஆதார மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
புகையிலை தொகையொன்றை ஏற்றிச் சென்ற கொள்கலன் பாரவூர்தியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் கொள்கலன் பாரவூர்தியின் சாரதி மற்றும் அதன் உதவியாளர் ஆகியோரே காயமடைந்தனர்.
கொள்கலன் பாரவூர்தி சாரதியின் கவனவீனமே விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)





## திருப்பணி உண்டியல் திருட்டு

வவுனியா, ஜூன் 24

வவுனியா, குருமன்காட்டில் உள்ள ஆதிவிநாயகர் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் திருடப்பட்டுள்ளது. சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 6 மணியளவில் ஆலயத்தைத் திறந்த கணக்காளர் வழமைபோல அறையில் இருந்த திருப்பணி உண்டியலை எடுத்து ஆலய மண்டபத்தில் வைத்துள்ளார். வைத்துவிட்டுபின்பகுதிக்குச் சென்றதும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் உண்டியலைத் திருடிச்சென்றுள்ளனர்.

திருடப்பட்ட உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணத்தை எடுத்துவிட்டு களவாடிவிட்டு உண்டியலையும் அதனோடு இணைந்த பிள்ளையார் சிலையையும் அருகில் இருக்கும் பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள குளத்தில் போட்டுச் சென்றுள்ளனர்.

இரண்டுஇலட்சத்துக்கும்மேற்பட்ட பணம் உண்டியலில் இருந்திருக்கும் என்று ஆலய நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகவவுனியாபொலிஸ் நிலயத்தில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (எ-110)

# கால் கடுக்க வீதியில் விடப்பட்ட பெண்தலைமைக் குடும்பங்கள்

### பாலைப்பழங்களை விற்று வாழ்க்கை நடத்துகிறார்களாம்



கிளிநொச்சி, ஜூன் 24

**ஏ - 32 வீதியால் பயணிக்கும் அனைவரும் பார்க்கும் காட்சி வீதியோரத்தில் வைத்து விற்கப்படும் பாலைப் பழங்கள். அவற்றை விற்போர் பெரும்பாலும் குடும்பத்தைத் தலைமைதாங்கும் பெண்களே.**

வீதியில் வாகனங்கள் வரும்போது பைகளில் உள்ள பாலைப் பழங்களைக் காட்டுகின்றனர். பெரும்பாலான வாகனங்கள் அவர்களைப் பொருட்படுத்தாது சென்றுவிடுகின்றன. கடந்து செல்லும் வாகனங்களை ஏமாற்றத்துடன் நோக்கியவாறு அவர்கள் அடுத்தவாகனத்தைஎதிர்பார்த்து வீதியோரத்தில் காத்திருக்கின்றனர்.

அந்தப்பெண்களில்பலர்போரால்நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். போரில் கணவனை இழந்தவர்களும், கணவர் காணாமல் ஆக்கப்பட்டவர்களும்என்று அவர்கள் ஒவ்வொருவரிடமும் போரின் வடு பதிந்துள்ளது.

இறுதிப் போரில் கணவர் காணாமல்போக மகனின் கல்விக்காக வீதியில் கால் கடுக்க நின்று பாலைப் பழம் விற்கின்றார் 55 வயதுத் தாய் ஒருவர்.

அவரிடம் சிறிது பேசவும் கண்கலங்குகின்றார். "ஒருவரும் உதவி இல்லை. 15 வயது மகனின் கல்விக்காக வட்டக்கச்சியில் இருந்து வந்து, இப்படிப் பாலைப் பழங்கள் விற்கின்றேன்" என்று அவர் கண்கலங்கினார்.

எங்களுக்கு யாரும் உதவிகள் வழங்கினால் இப்படி வீதியில் நிற்க வேண்டி இருக்காது. நாங்கள் சுயமாக உழைப்பதற்காக வழிவகைகளை யாரேனும் ஏற்படுத்தித் தந்தால் கோடி புண்ணியமாக இருக்கும் என்று அவர் ஆதங்கத்துடன் கூறினார்.

இப்படி அந்த வீதியில் நெடுகிலும் பாலைப் பழங்களுடன் நிற்கும் ஒவ்வொரு பெண்களிடத்திலும் ஒவ்வொரு சோகப் பின்னணி உண்டு. எப்படியாவது சுயமாக உழைத்து வாழ்ந்துவிட வேண்டும்என்ற உத்வேகத்துடன் உணர்வுகளை அடக்கித் தமக்கு உதவிகள் ஏதும் கிட்டாதா என்ற ஏக்கத்துடன்அவர்கள் வீதியில்கால்கடுக்கநிற்கின்றனர். (எ-21)



## யோகாப் பயிற்சிகள்

வவுனியா, ஜூன் 24

பன்னாட்டு யோகா தினத்தை முன்னிட்டு வவுனியா கருப்பணிச்சாங்குளம் அ.த.க.பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை சிறப்பு யோகா பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் அட்டாங்க யோகங்கள் பற்றியும் அதன்சிறப்புக்கள்பற்றியும்விரிவானவிளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக 'செயற்பட்டு மகிழ்வோம்' ஆசிரிய ஆலோசகர் எஸ்.மனோகரன்கலந்துகொண்டதுடன், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர். (எ-110)

## குளவிக்கூடு அகற்றக் கோரிக்கை



கிளிநொச்சி, ஜூன் 24

மக்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள குளவிக் கூட்டைஅகற்றஉதவுமாறு உதயநகர்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி உயதநகர் மேற்கு கிராமத்தில் மக்கள்செறிந்துவாழும்பிரதேசத்தில்காணப்படும் குளவி கூட்டால் எந்தவேளையும் ஆபத்து ஏற்படலாம் . எனவே அதனைப் பாதுகாப்பாக அகற்றி உதவுமாறு பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெரியளவிலான குளவிக் கூடானது உயரமான பருத்திமரத்தில் காணப்படுகிறது. வீசுகின்ற காற்றின் வேகம் காரணமாக உடைந்து விழக் கூடிய ஆபத்தில் உள்ளது.

எனவே அதனை அகற்றித்தருமாறுசம்மந்தப்பட்ட தரப்பினரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-214)



# துரிதகதியில் இடம்பெறுகிறது மண்டைக்கல்லாறுப்பாலக்கட்டுமானம்

கிளிநொச்சி, ஜூன் 24

ஏ-32 வீதியில் மக்கள் பெரும் துயரங்களைச் சந்தித்த மண்டைக்கல்லாற்றுப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி ஏ-32 முதன்மை வீதியில் காணப்படும்மண்டைக்கல்லாறுப்பாலம்சுமார்400மில்லியன்ரூபாசெலவில்நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. ஜப்பானிய நிறுவனம் ஒன்று கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ளது. 95 மீற்றர் நீளம்கொண்டஇந்தக்கொங்றீட்பாலம்நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர்பொதுமக்கள் இவ்வளவுகாலமும்எதிர்நோக்கிவந்த போக்குவரத்துப்பிரச்சினைக்குமுற்றுப்புள்ளிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பாலம் நீண்டகாலமாகத் திருத்தியமைக்கப்படாது காணப்படுகின்றமையால்பகுதியால்பயணிக்கும்பெருமளவான பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

மழைக்காலங்களில்பாலத்தை மேவி நீர்பாய்வதனால் இவ்வீதியூடானபோக்குவரத்துமுற்றாகத்தடைப்பட்டுபடகுமூலம் மக்கள் பயணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

குறிப்பாக முழங்காவில் ஆதார வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் மூலம் நோயாளர்கள் கொண்டு செல்லப்படுவதில் பலத்த சிரமங்களும் நிலவிவந்தன. (எ-21)

## வவுனியாவில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கு




வவுனியா, ஜூன் 24

வவுனியாவில் புலைமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள தரம் ஐந்து மாணவர்களுக்கான இலவசக்கருத்தரங்கு மக்கள் வங்கியின் அனுசரணையில் இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன்பாடசாலையில்நேற்று நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மக்கள் வங்கியின் வவுனியா கிளைமுகாமையாளர்எஸ். பாலச்சந்திரன், கலந்து கொண்டார்.

வளவாளராகவடக்குகல்வி வலயத்தின் ஆசிரியர் ஆலோசகர்அ.பாலசுந்தரம் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

பூந்தோட்டம், மகாறம்பைகுளம், அண்ணாநகர் பாரதிபுரம், வெளிக்குளம், கோவில்குளம், தாண்டிக்குளம், பகுதியில் உள்ள பாடசாலைகளைச்சேர்ந்த 250 மாணவர்கள் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இவ்வாறான கருத்தரங்குகள் இனி வரும் காலங்களில்தொடர்ந்து நடத்தபடும் எனமக்கள்வங்கிமுகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது. (எ-110)

# நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தாவிடின் சபையில் இருந்து வெளியேறவேண்டி வரும்

## யாழ். மாநகர சபை உறுப்பினர் மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 24
சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல்விட்டால் நாம் சபைவிட்டு வெளியேறுவது தொடர்பில் யோசிப்போம் என்று யாழ்ப்பாணம் மாநகர சபைஉறுப்பினர் மணிவண்ணன்தெரிவித்தார். யாழ்ப்பாணம்மாநகரசபையின்அமர்வு முதல்வர் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று முன்தினம்நடைபெற்றது.
இதன்போதுசிவில்நடவடிக்கையில்இராணுவத்தினரை உள்ளவாங்குவதில்லை என்ற தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்ட போதும் அண்மையில் வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் நடைபெற்ற மரநடுகை நிகழ்வுக்கு இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டமைமற்றும்முதல்வர் நிகழ்வில் பங்கேற்றமை தொடர்பில் சபை உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர்மேலும் தெரிவித்ததாவது:
சபையில்தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டால் அதனைப்பின்பற்றவேண்டும்.இல்லைஎன்றால் நாம் இங்கு வந்து இருந்து கதைப்பதில் அர்த்தம் இல்லை.அவ்வாறு நிறைவேற்றப்பட்டதீர்மானம்நடைமுறைப்படுத்தாமல்பின் வாங்கினால் நாம் அனைவரும் சபையை விட்டு வெளியேறுவது தொடர்பில் சிந்திக்க வேண்டிவரும் - என்றார். (7)

## மறுசுழற்சி மையத்திலும் திருட்டுப் போகிறது

### நடவடிக்கை எடுக்கக் கோரும் உறுப்பினர்

யாழ்ப்பாணம்,ஜூன் 23
யாழ்ப்பாணம் மாநகர சபையின் நாவாந்துறை மீள் சுழற்சி மையத்தில் பல்வேறு திருட்டு சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதுதொடர்பில்நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று சபை உறுப்பினர் ஜெயந்தினி தெரிவித்தார்.
சபையின் அமர்வு முதல்வர் தலைமையில்சபைமண்டபத்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,
அவர் மேலும் தெரிவித்ததாவது. நாவாந்துறைமீள்சுழற்சிமையத்தில்அண்மைக் காலமாகவேலைஉபகரணங்கள்மற்றும் இரும்புகள் காணாமல் போகின்றன.
அங்கு கடமையில் காவலாளி இருந்தும் இந்த திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் உரியவர்களுக்கும் தெரிவித்துள்ளேன் - என்றார்
இதற்கு மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்ததாவது.
உண்மையில் இது மன வருத்தத்தை ஏற்படுத்தும்செயல். உடனடியாகப்பாதுகாப்பு ஊழியர்கள் விசாரிக்கப்பட்டுநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (7)

## மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட

# சமூக அமைப்புகளின் செயற்பாடுகளை சிறந்த முறையில் நிர்வகிக்க நடவடிக்கை

**யாழ்ப்பாணம்,ஜூன் 24**
**யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகள், சனசமுகநிலையங்கள்,விளையாட்டுகழகங்கள் ஆகிவற்றைசிறப்பானமுறையில் நிர்வகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.**

மாநகரசபையின்அமர்வுமுதல்வர் தலைமையில் சபைமண்டபத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றது. இதில் சமூகத்தின் நலனில் பங்குகொள்ளும் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் தற்போது குறைந்து வருவதாகவும் ,அது ஒரு கட்டுபாட்டுக்குள் இல்லைஎன்றும்சபை உறுப்பினர்களால்சுட்டிக்காட்டப்பட்டது.
இதற்கு பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சமூகஅமைப்புக்களின்வினைத்திறனான செயற்பாடுகள்சமூகத்துக்கு தேவை. அவைதற்போது இல்லாமல் போகின்றன.
ஆகவே அவ்வாறான அமைப்புக்களை எவ்வாறு நிர்வ கிப்பது. மற்றும் அவற்றுக்கான பொதுவான விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.
குறிப்பாக முன்பள்ளி கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுகழகங்கள்ஆகியவற்றின் இயங்குதன்மைபற்றிகருத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (7)

## கும்பாபிசேகமும் அறநெறி வித்தியாலய தொடக்கநிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஜூன் 24
சண்டிலிப்பாய் வீணாகான குரும்பீடபதி உறையும்உபதேசதிருக்கோவில் கல்வித் தெய்வம் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலய ம்கா கும்பாபிசேகமும்ஞானரத்தினகுருகுலஅறநெறிவித்தியாலய அங்குரார்ப்பணமும் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.
நாளை திங்கட்கிழமை மாலை3மணிக்குவிநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி எண்ணெய்க்காப்பு சாத்துதல் 27 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறும் என வீணாகான குருபீடம் சித்தன்கேணி குருமுதல்வர்சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்தெரிவித்துள்ளார்.

## சில்லுக்குள் அகப்பட்ட இளைஞனின் கால் பாதிப்பு

உழவியந்திரச் சில்லுக் குள் அகப்பட்டு இளைஞனின் கால் பாதப்பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை கைதடியில் இடம்பெற்றுள்ளது. இயங்க மறுத்த உழவி இயந்திரத்தை பலர் சேர்ந்து தள்ளி இயக்க வைக்க முயற்சித்த போது தவறுதலாகக் கால் பாதம் சில்லுக் குள் அகப்பட்டதென பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.
கைதடிவடக்கைச்சேர்ந்த சந்திரோதயம் யதுராம் (வயது 19) என்னும் இளை ஞனே பாதிப்புக்குஉள்ளானநிலையில்சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## மாகாண சபையைப் பார்த்து ‘கொப்பியடிக்கிறோம்’

### முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி தெரிவிப்பு

சபையில் ஒருவர் உரையாற்றும் போது அதனை குறுக்கீடு செய்து குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையை மாகாண சபை அமர்வுகளைப் பார்த்தே பழகியதாக யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குனராஜா தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று முன்தினம் முதல்வர் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது, யாழ்ப்பாணம் பண்ணை பகுதியினை சுற்றுலா நிறுவனம்ஒன்றிக்குகுத்தகைக்கு வழங்குவது தொடர்பில் முதல்வரின் அறிவிப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தது.
இச் சமயத்தில் சுற்றுலா நிறுவனத்திற்கு பண்ணை கடற்கரை பகுதியை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக நிபந்தனைகளை உறுப்பினர் சட்டத்தரணி மணிவண்ணன் ஏனைய சபை உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருந்தார். இதன்போது சபைஉறுப்பினர்கள்அதற்குகுறுக்கீடாக தமது கருத்துக்களையும் கூறிக்கொண்டிருந்த னர். இதன் போது முதல்வர் ஆர்னோல்ட், ஒருவர் பேசுவதை முற்றாக செவிமடுத்த பின்னர் ஏனையவர் பேச வேண்டும்என தெரிவித்தனர்.
இவ்வாறு முதல்வர் தெரிவிக்கும் போது முன்னாள் மாநகர முதல்வரும் தற்போதைய உறுப்பினருமானயோகேஸ்வரிபற்குனராஜா. முதல்வர் கூறுவதுமாகாணசபைகளிலேயே கடைப்பிடிக்கப்படுவதில்லை அதனை நாம் தொலைக் காட்சிகளில்பார்த்துள்ளோம்,பிறகு எவ்வாறு இங்கே கடைப்பிடிப்பது என கேள்வியெழுப்பினார்.105

## உடைந்த போத்தலால் குத்தியதால் படுகாயம்

சாவகச்சேரி, ஜூன் 24
உடைந்தபோத்தலால்குத்தப்பட்டு காயமடைந்த குடும்பத் தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் மட்டுவிலில்நேற்று இடம்பெற்றுள்ளது.
மகன் கண்டிக்கப்பட்டதைக்கேட்கச்சென்றபோது தன்னைத் தாக்கினர் என்று காயமடைந்தவர் தெரிவித்துள்ளார்.
முதுகு, கைபோன்ற இடங்களில்காயமடைந்த அவர் (வயது 29) சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)

## மீளக்குடியமர்ந்த பிரதேசங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம்,ஜூன் 24
யாழ்ப்பாணம் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த பிரதேசங்களின் வீதிகள், சனசமூக நிலையஅபிவிருத்திகள்தொடர்பில்அவசர முன்னுரிமைதெரிவுகளைமாவட்டச்செயலர் நா.வேதநாயகன் கோரியுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு பிரதேசங்களிலும் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.
இவ்வாறான மக்கள் மீளக்குடியமரும் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மீள்சீரமைப்பு செய்யப்பட வேண்டியவீதிகள்,சனசமூகநிலையங்கள் என்பவற்றின்விவரங்களைஉள்ளூராட்சி சபைகளுடன்இணைந்தவகையில்உடன் வழங்குமாறுகோரியுள்ளார். (50)



யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு தல்லையபுலம் ஸ்ரீ வீரபத்திரர் சமேதபத்திரகாளியம்மன்ஆலயவருடாந்ததேர்த்திருவிழாஅண்மையில்நடைபெற்றபோது, தேர்வீதிவலம்வருவதையும், காவடிகள் எடுத்துவரப்படுவதையும் காணலாம்.

## வடிகான்களை அதி உயர் நீர்பம்பல் மூலம் சுத்தப்படுத்துவதற்கு சபையில் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன் 24
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள வடி கான்களை அதி உயர் நீர் பம்பல் மூலம் சுத்தப்படுத்துவதற்கு மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் சிறப்பு அனுமதிஒன்றைசபையில் பெற்றுக்கொண்டார்.
சபையின்அமர்வுமுதல்வர் தலைமையில் சபைமண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.இதன் போதே இந்த அனுமதியை முதல்வர் பெற்றுக்கொண்டார்.
யாழ்ப்பாணம் குருநகர்பகுதியில்உள்ளகான்கள்மிகமோசமாக உள்ளது.அவற்றை சுத்தப்படுத்துவது கடினம்.
ஆகவே பவுசரில் கடல்நீர் பெறப்பட்டு அதனை அந்த கான்களில்உயர் அழுத்தத்துடன் விசிறிஅடித்துஅந்தகான்களை துப்பரவு செய்ய முடியும் என்ற கோரிக்கையை சபையில் முன்வைத்தார்.இந்த நடவடிக்கைக்குசபைஉறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்தனர். (7)

## மூன்றாவது மன்ற யாகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 24
யாழ்ப்பாணம் மேல்மருவத்தூர்சுயம்புஅருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் மூன்றாவது மன்ற யாகம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

# தபால் ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்று அரசு நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**உழைக்கும் மக்களின் போராட்டங்களை நசுக்க முற்படும் அரசை வன்மையாகக் கண்டிப்பதாக புதியஜனநாயகமாக்சிசலெனினிசகட்சிதெரிவித்தது. தபால் ஊழியர்தொழிற்சங்கங்களின் நியாயமானகோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நெருக்கடிக்குத்தீர்வுகாணவேண்டும் என்றும் அந்தக் கட்சி வலியுறுத்தி யுள்ளது.**

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில்மேலும் உள்ளதாவது:

நாடு தழுவிய ரீதியில் தமது கோரிக்கைகளுக்காகக் கடந்த 11ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் தபால் ஊழியர்களின் கோரிக்கைகளும் போராட்டமும் நியாயமானவையாகும். ஆனால், நல்லாட்சி எனக் கூறும் அரசு தபால் ஊழியர்களின் கோரிக்கைகளுக்குச் செவிகொடுக்காது போராட்டத்தை முறியடிக்கவே முற்பட்டு நிற்கிறது.

அரசு வழமையாகத் தொழிலாளர் போராட்டங்களில் கடைப்பிடித்து வரும், தொழிலாளர் விரோத, தொழிற்சங்கவிரோதப்போக்கைத் தொடர்ச்சியாகக் கைக்கொள்வதன் மூலம் உழைக்கும் மக்களின் போராட்டங்களை நசுக்க முற்படுவதைஎமதுபுதியஜனநாயகமாக்சிச லெனினிச கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாட்டின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களையும் சேர்ந்ததபால்ஊழியர்களின்பணிப்புறக்கணிப்பானது ஒற்றுமையான முறையில் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தமக்குரியசம்பளஉயர்வு,நியமனங்களில் பின்பற்றப்படும் முறையற்ற நடைமுறையைத் தவிர்த்தல், தபால் துறையினைத் தனியார்மயப்படுத்தும் முயற்சியைக் கைவிடல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இடம்பெறும் இந்தப் பணிப்புறக்கணிப்புபன்னிரண்டுநாள்களையும் தாண்டி இடம்பெற்றுவருகிறது.

ஆனால், அரசோ இதற்குச் செவிசாய்க்காது, தபால் ஊழியளர்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சம்பளம் வழங்குவதை நிறுத்தியும், பொலிஸ் மூலம் தபால் விநியோகத்தை முன்னெடுக்கவுள்ளதாக மிரட்டியும் வருகிறது. இவை உழைப்பாளர்களை உதாசீனம்செய்யும்அரசின்மெத்தனப்போக்கையும், அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைச் சிந்தனையையும் வெளிப்படுத்திநிற்கின்றன. இது அனைத்துத் தரப்பினராலும் வன்மையாகக்கண்டிக்கப்படவேண்டிய நிலைப்பாடாகும்.

எனவே, அரசு உடனடியாகத்தபால் ஊழியர் தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவ தன்மூலம் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும் என எமது கட்சி வலியுறுத்துகின்றது -என்றுள்ளது. (எ-21)

---

# ஓவியக் கலைக்கூடம் திறப்பு நிகழ்வு

சாவகச்சேரி, ஜூன் 24

முன்னாள் நில அளவையாளரானமறைந்த ரி.பீ.ஹன்ற்நினைவாக அன்னாரது குடும்பத்தினரால் யாழ்ப்பாணம், சாவகச்சேரி தேவாலய சாலையில் அமைக்கப்பெற்ற ஓவியக் கலைக் கூடம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களின் சித்திர பாட அடைவினை மேம்படுத்தும் முகமாகவும் சித்திர பாட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கற்றல் கற்பித்தல் உபகரணங்களையும் பயிற்சிகளையும் வாண்மை விருத்திச் செயலமர்வுகளையும் மேற்கொள்வதற்காகவும் கலைக் கூடம் அமைக்கபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

கலைக்கூடத் திறப்பு விழாவையொட்டி பாடசாலை மாணவர்கள் மற்றும் சித்திரக்கலைஞர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன் போட்டிகளில் முன்வைக்கப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. மேலும் 'ஓவியக்கலை' என்னும் நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். (9)

---

# திருவிழாவில் தவறவிட்ட பொருள்களுக்கு உரிமை கோரல்

தென்மராட்சி, ஜூன் 24

யாழ்ப்பாணம், வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர், தீர்த்தத் திருவிழா காலத்தில் அடியார்களால் ஆலய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டு கருமபீடத்தில் ஒப்படைக்கப்பட்ட அலைபேசிகள், கைக்கடிகாரங்கள் மற்றும் தங்க நகை போன்றவை இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவறைத் தவறவிட்டவர்கள் நாளை திங்கட்கிழமை மாலை 2 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை ஆலய கருமபீடத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (21.9)

---

# அரசதலைவரின் தம்பியரின் பெயரில் விஸ்வமடுவில் நுண்கடன் திட்டம்

## இது அரசுக்கும் தெரிந்த விடயமே என்கிறார் வடக்கு மகளிர் அமைச்சர்

கிளிநொச்சி, ஜூன் 24

வடக்கில் இன்று நுண்கடன் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது. விசுவமடுவில் நுண்கடன் திட்டம் ஒன்று அரசதலைவரின் தம்பியாரின்பெயரில்இயங்கிக்கொண்டிருக்கின்றது. இது தெரியாது அரசதலைவர் தனது கதிரையில் இருக்கவில்லை. தெற்கில் நுண்கடன் திட்டம்ஓடமுடியாதுஎன்பதால்எங்களுடைய பிரதேசங்களை அவர்கள் இலக்கு வைத்துள்ளனர். போரின் பாதிப்பு, ஏழ்மை, வறுமை என்பன நிறைந்த எமது மண் அவர்களின் சுரண்டலுக்குஇலகுவாகஅமைந்துவிட்டது. இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்ட பெண்களின் ஒன்றுகூடல் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போருக்கு முன்னர் நடுநிசியில்கூட பெண்களாகியநாங்கள் இந்த மண்ணில்நடமாடித்திரிந்தோம். ஆனால் இன்று அவ்வாறில்லை. சட்டத்தை கையில் வைத்திருப்போராலேயே இன்று சமூகத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியவில்லை. பாடசாலை மாணவிகளை, ஆசிரியர்களைநம்பிஅனுப்பமுடியவில்லை. பஸ்ஸில் பெண்களைத் தனியாக அனுப்ப முடியவில்லை. பெண்பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியில் சென்றால் வீடுதிரும்பும்வரை ஒவ்வொருதாயும்பதற்றத்தோடேஇருக்கின்றாள். இந்தநிலமை மாற வேண்டும். பெண்களாகியநாங்கள் இதனை மாற்ற வேண்டும். எங்களால்முடியும். நாங்களேஎங்களைப் பயத்துக்குள்வைத்துக்கொண்டிருக்கின்றோம். எப்போதும் ஒரு பிள்ளைக்கு முதல் பாதுகாப்பு தாய். எனது அம்மா என்றால் ஒரு பலம் என்ற நம்பிக்கை பிள்ளைக்கு வர வேண்டும். பிள்ளைகளுடன் நட்பாகப் பழக வேண்டும். இதன் போதே பிள்ளைகள் தனக்கிருக்கும் பிரச்சினைகளை உங்களிடம் எடுத்துக்கூறுவார்கள். துணிவாகதனக்கு நடக்கும் வன்முறைகள் தொடர்பில் மனம் விட்டுப்பேசுவார்கள். அதை விடுத்துஎதற்கெடுத்தாலும் பிள்ளைகளில்குறைகூறிச் சினந்து குற்றவாளியாகப் பார்த்து தண்டிக்க முற்பட்டால் அந்தப் பிள்ளை உங்களை விட்டு வேறொரு தயவை நாடிப் போகும். இதனால் பிள்ளை தடம் மாறிப்போகும் சூழல் இருக்கும். எனவே எந்தவிதமான பிரச்சினைகள், வேலைப்பழுஇருந்தாலும்தாய் தன் பிள்ளையோடு நண்பராக பழகும்போது இந்தப் பிரச்சினைகள் சிலவற்றைக்குறைத்துக்கொள்ளமுடியும்.

போருக்கு முன்னர் சமூகமொன்றில் அயல் வீட்டில் இருப்பவர்கள் யார்? புதிதாக யார்வருகின்றார்கள்? தெருக்களில் புதிதாக வருபவர்கள் யார்எனசகலவிவரங்களும்தெரிந்திருக்கும். ஆனால் இன்று அப்படியில்லை. யார் யாரோ வருகின்றார்கள்.

இந்த இடத்தில்தான் உங்கள் பிள்ளைகள் மிக இலகுவாக ஏமாற்றப்படுகின்றார்கள். சுமார்15 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இலகுவாக ஏமாற்றப்படுகின்றார்கள். எங்குபெண்களுக்கெதிராகவன்முறைநிகழ்கின்றதோ அங்கு எல்லோரும் இணைந்து எதிராகப் போராட வேண்டும்.



அத்துடன் இன்று பெண்கள்நுண்கடன்திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த திட்டத்தை மத்திய அரசாலும், மத்திய வங்கியாலுமே நிறுத்த முடியும். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும். பிரதேசசெயலகங்கள் இதற்குக் கட்டுப்பாடுகள் இட வேண்டும்.

அரச தலைவர் இந்த மண்ணில் தனது கட்சிக்காக ஏதோவொரு வகையில்ஓடிக்கொண்டிருக்கிறார். இந்த மண்ணில் கடந்தகாலப் போரில் தாயின் வயிற்றிலிருந்து வெளிவராது கருவிலேயே கொல்லப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க முடியாத அரசு, அந்தத் துன்பத்தைநிகழ்த்தியதற்குப்பொறுப்புக் கூறமுடியாத அரசதலைவர் இன்று 'குழந்தைகளைப் பாதுகாப்போம்' என்ற நிகழ்வை இங்கு வந்து நடத்திச்சென்றிருக்கின்றார். போரின் இறுதிக்காலத்தில்இன்றையஅரசதலைவர் பொறுப்புக்கூறும் கடமையில் அதிகாரியாக இருந்திருக்கின்றார். இறுதிப்போரின் எந்த ஆளும் கட்சியோ எதிர்க்கட்சியோ தமிழ் மக்களுக்காகதலையிடவில்லை.

ஆனால் ஐ.நா சபையின் செயலாளர், "இலங்கையின் இறுதி போரில் ஈழ மக்கள் கொல்லப்பட்டபோது நாங்கள் அதில்தலையிடவில்லை" என்று 9 வருடங்களின்பின் இன்று பகிரங்கமாக குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

அவர் ஒப்புக்கொண்ட செய்தி நாங்கள்இழந்தஉயிர்களைமீளத்தந்துவிடுமா? நாங்கள்வாழ்ந்தநாட்டை, ஒரு நிழல் நிர்வாகமாக இயங்கிய நாட்டை மீளத் தந்துவிடுமா? எதுவும்இல்லை-என்றார். (எ-6,35)

---

# கிணறுகளையும் விட்டுவைக்காத இரும்புத் திருடர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

வலி.வடக்கில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில்இரும்புக் கம்பிகளைத் தேடிச் சேகரிக்கும் திருடர்கள் அங்குள்ள கிணறுகளையும் விட்டுவைக்கவில்லை. துணிகரமானமுறையில்கிணறுகளுக்குள் இறங்கும் திருடர்கள் அவற்றினுள்ளும்இரும்புப்பொருள்களைத்தேடுவதில் ஈடுபட்டுள்ளனர் என்று அங்கு செல்லும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குட்பட்ட வலி.வடக்குப்பிரதேசத்தில்பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த ஜெ/233, ஜெ/236 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் குடியமர்வதற்குப் பாதுகாப்புப் படையினர் இந்த மாத ஆரம்பத்தில் அனுமதிவழங்கினர்.

இதையடுத்து, மக்கள் அங்கு சென்று தங்கள் காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில்குடிமக்களைப்போல் அங்கு செல்லும் திருடர்கள் பாதுகாப்புப்படையினரால்குண்டுவைத்துத் தகர்த்தப்பட்ட கட்டடங்களை உடைத்து அங்கு இருக்கும் இரும்புகளைத்திருடுவதில்ஈடுபட்டுள்ளனர். கிணறுகளையும் விட்டு வைக்காது கிணற்றுக்குள் இறங்கி இரும்பு உட்படப் பெறுமதியான பொருள்கள் இருக்கின்றனவா எனத் தேடுவதிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை, இந்தப் பகுதியிலுள்ள பல கிணறுகள் படையினரால் இருந்த இடம் தெரியாமல் மூடப்பட்டுள்ளமையால்அங்குகாணிகளைத் துப்புரவு செய்யச் சென்ற மக்கள் கிணறுகளை மீண்டும் தோண்ட வேண்டியநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார்கள்.

பலகிணறுகள்மூடப்படாதபோதிலும் தேவையில்லாத பொருள்கள் வீசப்பட்டுள்ளமையால்திருடர்கள்அந்தக் கிணறுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்திவருகின்றனர். (எ-115)

*கழுத்தை அறுத்து பொலிஸாரை அச்சுறுத்திய நிலையிலும்*

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த நபர் கைது

சாவகச்சேரி, ஜூன் 24

யாழ்ப்பாணத்தில், நீதிமன்றப் பிடியாணைகளையடுத்துதேடப்பட்டு வந்த நபுரை பொலிஸார் சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்ட வேளையில் தனது கழுத்தை பிளேட்டால் அறுத்து பொலிஸாரை அச்சுறுத்தியுள்ளார். எனினும் பொலிஸார் அவரை கைதுசெய்துள்ளனர்.

கடந்த 2015ஆம்ஆண்டுநாவற்குளிப்பகுதியில்இடம்பெற்றபாலியல் வன்முறை தொடர்பான வழக்கில்பிணையில்விடுவிக்கப்பட்டு பின்னர் நீதிமன்றுக்கு சமூகமளிக்காததால் சாவகச்சேரி நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கடந்த நான்கு வருடங்களாக பொலிஸாரின் கண்களுக்கு மண் தூவி தலைமறைவாக வாழ்ந்துள்ளார்.

இந்தநிலையில், மானிப்பாய்பகுதியில் இடம்பெற்ற திருட்டுச்சம்பவங்கள் தொடர்பாகவும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்புடுத்திய வழக்குகளில் பிணையில் விடப்பட்ட இவர் நீதிமன்றுக்குச் செல்லாததால் அங்கும்பிடியாணைபிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டுவந்தார்.

இந்தநிலையில் நல்லூர் கல்வியங்காட்டைச்சேர்ந்தஇவர்நேற்று முன்தினம்யாழ்ப்பாணம்நாவற்குளி ஐயனார் கோவிலடிப் பகுதியில் தங்கியுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்துசாவகச்சேரி பொலிஸ்நிலைய பெரும் குற்றத் தடுப்புப்பிரிவுப் பொறுப்பதிகாரிகளான உப பரிசோதகர் விஜயக்கோன் உப பரிசோதகர் பிரதீப் ஆகியோர்தலைமையில்சென்ற பொலிஸ் குழவினர் இவரை பிடிக்க முற்பட்ட வேளையில் ஓட முற்பட்டுள்ளார். பொலிஸார்துரத்தியதால் கையில் வைத்திருந்த பிளேட்டால்கழுத்தைவெட்டியுள்ளார். காயங்களுக்கு உள்ளான இந்த நபரைக் கைது செய்த பொலிஸார்சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

நபர் தொடர்பாக பொலிஸார் நேற்று நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்து குறித்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மருத்துவமனைக்குச்சென்றபதில்நீதிவான் நபரைப் பார்வையிட்டு ஜூலை மூன்றாம்திகதிவரைவிளக்கமறியலில்வைக்குமாறும்அத்துடன் மல்லாகம்நீதிமன்றில் முற்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும்பொலிஸாருக்கு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் கஞ்சா மற்றும் போதைப் பொருள்கள் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களால்தண்டிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-9)

*முகமாலைப் பகுதியில்*

# கையளிக்கப்பட்ட காணிகளிலிருந்து மீண்டும் வெடிபொருள்கள் மீட்பு

*மக்கள் கவலையும் ஆதங்கமும்*



கிளிநொச்சி, ஜூன் 24

முகமாலையில்இரண்டாவதுநாளாகவும் மக்களிடம் கையளிக்கப்பட்ட காணிகளில் இருந்து மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிமாவட்டத்தின்பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை தெற்கு பகுதியில் ஒரு பகுதி, மக்களின் பாவனைக்காக இந்த வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்டிருந்தது. மக்களும் தங்களுடைய காணிகளில் தற்காலிக வீடுகளை அமைத்து காணிகளை துப்புரவு செய்துவரும் நிலையில் அங்கிருந்து வெடிபொருள்களும் வெளிவருகின்றன. இதனையடுத்து மக்கள் அச்சம்

கடந்த சில நாள்களுக்கு முன்னரும் இந்தப் பகுதியிலுள்ள ஒருவர் நிலத்தைவிவசாயத்துக்காகபண்படுத்த முற்பட்டவேளை அங்கிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. இந்தநிலையில்நேற்றுமுன்தினம் மீண்டும் அங்குள்ள ஒரு காணியில் இருந்து வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளமை அந்த மக்களிடையேஅச்சத்தையும்கவலையையும்ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள காணி ஒன்றின் முதன்மை வாயிலில் இருந்தே மிதிவெடி மீட்கப்பட்டுள்ளது. காணி உரிமையாளர்கள் அந்த வாயிலூடாகவே பயணம்செய்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது வீசும் தொடர்ச்சியான கடும் காற்று காரணமாகமணல்அள்ளப்பட்டுநிலத்தில் புதைந்து காணப்பட்ட மிதிவெடிவெளிப்பட்டுள்ளது.

இதுதொடர்பாககாணிஉரிமையாளர் தெரிவிக்கையில், 'மிதிவெடி எடுக்கப்பட்டபகுதிஊடாகவேநாங்கள்காணிக்குள்வருவதுவழமை. நேற்றுமுன்தினம் மாலை காணிக்குள்வந்துகுப்பைகளுக்கு நெருப்பு வைப்பதற்காக வந்திருந்தோம். அயற்காணி காரர் எதேச்சையாக எமது காணிக்குள்ளால் வந்து தமது காணிக்குள் செல்லமுறப்பட்டபோதுஏதோகிடக்கிறதுஎன்றுபார்த்தபோதுமிதிவெடி இருப்பதனை அறிந்துகொண்டோம். பின்னர் இது தொடர்பாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தினோம்' எனறுதெரிவித்தார். நேற்றுக்காலை அங்கு வந்த கலோரஸ்ற் நிறுவனத்தினர் மதிவெடியைஅகற்றியதுடன்குறித்தபகுதியில் சோதனைநடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் குறித்த பகுதிக்குள் சோதனை செய்யும் வரை நடமாடுவதை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (எ-6)

# அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு செய்தவர் கைது

பருத்தித்துறை, ஜூன் 24

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட பொது சுகாதார பரிசோதகர்களை கடமைசெய்யவிடாமல் தடுத்ததுடன் அவர்களை தகாத வார்த்தைகளால் ஏசிய காணி உரிமையாளரை பருத்தித்துறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சிப்பிரதேசத்தில்டெங்கு நோயின்தாக்கம் அதிகரித்துவருவதால் சுகாதாரப் பகுதியினர் பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவ டிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர். பொது சுகாதாரப்பரிசோதகர்கள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களைப்பரிசோதனைசெய்து கட்டுப்பாட்டு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பருத்தித்துறை நகரசபையின்இருபொதுசுகாதாரப்பரிசோதகர்களும்இணைந்து நகரப்பகுதியின்வடிகால்கள்செல்லும் இடங்களைப் பார்வையிட்டனர். அங்குள்ள ஒரு இடத்தில் குடம்பிகள் காணப்பட்டதையடுத்து காணி உரிமையாளரை வரவழைத்து டெங்கு குடம்பிகள் காணப்பட்டநீர்நிலைகளைத்துப்பரவு செய்யுமாறும் துப்பரவுசெய்யத்தவறின்வழக்குப்பதிவுசெய்ய நேரிடும் எனக் கூறியுள்ளனர்.

இந்தத் தருணத்தில் காணி உரிமையாளர் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் கூற்றைச் செவிமடுக்காமல் அவர்களைக் கடமை செய்யவிடாமல் தடுத்ததுடன் அவர்களை தகாத வார்த்தைகளால் ஏசியுள்ளார்.

இது தொடர்பாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பருத்தித்துறை சுகாதார மருத்துவஅதிகாரி பருத்தித்துறை நகரசபை தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு முறையிட்டனர். அங்கு விரைந்து வந்த சுகாதார மருத்துவ அதிகாரி நகரசபையின் தவிசாளர் செயலாளர் ஆகியோர் காணி உரிமையாளருடன் கலந்துரையாடியபோதும் அவர் இணங்கிவர மறுத்ததால் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பொலிஸார் அங்கு வந்து அவரைக் கைது செய்தனர் எனவும் இந்த நபருக்கு எதிராக அரச அலுவலர்களை கடமை செய்யவிடாமல் தடுத்தமை டெங்கு உற்பத்திக்கு இடமளித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் வழக்குகள் தாக்கல்செய்யவுள்ளனர்எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் பராமரிப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 24

கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர் பராமரிப்புச்சேவைதொடர்பானபயிற்சிகள்இதுவரைக்கும்297 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. முதியோர்களின் பராமரிப்பை சுய தொழிலாக செய்யும் நோக்குடன் இவர்கள் இல்லத்துக்கு நேரடியாக வருகைதந்து பயிற்சி பெற்றுச் செல்கின்றனர்.

முதியோர் பராமரிப்புத் தொடர்பாகச்சகல பயிற்சிகளும் கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டின்எந்தப்பிரதேசத்திலும், முதியோர்களை வைத்து பராமரிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தமக்குரிய மேலதிக பயிற்சிகள், வழிகாட்டல்கள் போன்றவற்றை இல்லத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும்2022ஆம்ஆண்டில்முதியோர்களின்எண்ணிக்கை 24 வீதமாக அதிகரிக்கவுள்ளதாக இலங்கையின் புள்ளிவிவரங்கள் எதிர்வு கூறியுள்ளன. தற்போது முதியோர்களின் எண்ணிக்கை 16 வீதமாக உள்ளது. இவை 2022இல் எட்டு வீதமாக அதிகரிக்கும்போது முதியோர் பராமரிப்பு என்பது பெரும் சவாலாக அமையும்.

இதன் முன்னேற்பாடாக முதியோர் பராமரிப்புத்தொடர்பாககூடுதலானோரை இணைத்து அவர்களுக்கு பயிற்சிகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் என்பனவற்றை வழங்கவும் முதியோர் இல்லம் தயாராகி வருகின்றது. அதனைவிடசமூகநிறுவனங்கள்சமூகஆர்வலர்கள் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்றவைகூட தற்போது முதியோர் பராமரிப்புத் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் முன்வந்துள்ளன- என்றார். (எ-17)

# பண்ணை சிறப்பானதொரு சுற்றுலா மையமாக்கப்படும்

*யாழ். மாநகர சபை மேயர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 24

பண்ணையை சிறந்த சுற்றுலா மையமாக மாற்றுவதோடு பண்ணையில் படகோட்டலுடன் கூடிய இடத்தைதனியார்கோட்டல்ஒன்றுக்குவருடஒப்பந்த அடிப்படையில் வழங்கவுள்ளோம் என்று மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வு முதல்வர் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தஅமர்விலேயேஅவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணநகரஎல்லைக்குட்பட்டபண்ணையை சிறந்த சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான வேலைகள் 2016ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அவற்றை நிர்வகிப்பது கடினமாக இருந்தது. எனவே அதனை சிறந்த சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு கேள்வி கோரல் நடத்தினோம். தனியார் கோட்டல் ஒன்று குத்தைக்குஎடுக்கமுன்வந்துள்ளது. முதல்ஒருவருடம் அந்த இடத்தை விஸ்தரித்து பல்வேறு பொழுதுபோக்கு விடயங்களை உள்ளடக்கி சரியான முறையில் அவற்றை அந்த நிறுவனம் நிர்வகித்தால் தொடர்ச்சியாக5ஆண்டுகள்அந்தஇடத்தைகுறித்த நிறுவனத்துக்குவழங்குவோம். இதற்காககளியாட்ட வரியாக 9.5வீதமும், எம்மால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்கள் மற்றும் இடத்தின் தேய்மான வரியாக 7 வீதத்தை வழங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆகவே இது எமது சபைக்கு வருமானம் தரும் ஒரு விடயம் - என்றார். 'கலாசார சீர்கேடுகள் இடம்பெறாமலும், மீனவர்கள் வாழ்வாதாரம்அழிக்கப்படாமலும்வழங்கப்பட்டபடகுப்பாதையில் மாத்திரம் படகு சேவை இடம் பெற வேண்டும். அத்துடன் உடற் பயிற்சியில் ஈடுபடுவர்களுக்கு கட்டணம் அறவிடக் கூடாது. பண்ணை பூங்காவுக்குச் செல்வோருக்கும் எந்த கட்டணமும் அறவிடக் கூடாது.

இந்த நடவடிக்கைகளை அந்த நிறுவனம் மீறும் பட்சத்தில்ஒப்பந்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்' என்ற நிபந்தனைகளுடன் பண்ணையை சிறந்த சுற்றுலாதலமாக மாற்றுவதற்கு அனேமான உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்தனர். (எ-7)

# தியாகிகள் தின நிகழ்வு வவுனியாவில் இன்று

வவுனியா, ஜூன் 24

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம்பத்மநாபாமற்றும் உயிரிழந்த போராளிகளை நினைவு கூரும் தியாகிகள் தினம் இன்று காலை 10 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர் கே.அருந்தவராயா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ்பிரேமசந்திரன், நாடாளுமன்றஉறுப்பினர்களான சிவசக்திஆனந்தன், த.சித்தார்த்தன், செல்வம்அடைக்கலநாதன், மாகாணசபை உறுப்பினர்களான ம.தியாகராயா, இ.இந்திரராயா, வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் மற்றும் பொது அமைப்புகள் மற்றும் கட்சி தோழர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-110)


LG
Life's Good
மின்சார சேமிப்புப் புரட்சி
இலங்கையின் மிகச்சிறந்த
மின்சக்தி சேமிப்பு
குளிர்சாதனப் பெட்டி
இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர்களுடன் வரும் LG குளிர்சாதனப் பெட்டிகள் 42% வரை மின்சாரத்தை சேமிப்பதால் இது அதிகப்பட்சமான நீண்டகால சேமிப்பாகும்.
சிறப்பம்சங்கள் | LG | மற்றவை
Inverter Linear Compressor - LG இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர் ஒரு உராய்வு புள்ளியில் மோதி இலகுவாக இயங்குவதால் 42% வரை மின்சாரத்தை சேமிக்கின்றது. | ✓ | ✗
Door Cooling - குளிரூட்டியின் கதவில் இருக்கும் துளைகள் மூலம் குளிர் காற்றை வெளியேற்றி குளிர்ச்சியூட்டும் சிறப்பம்சம் LG குளிர்சாதனப் பெட்டிகளில் மாத்திரமே உள்ளன. கதவை திறப்பதால் வீண்விரையமாகும் குளிர்ச்சியை உடனடியாக மீண்டும் சரிசெய்கிறது. | ✓ | ✗
Hygiene Fresh+ காற்றினால் உணவு அசுத்தமாவதை வடிக்கட்டிகளின் மூலம் 5 படிமுறைகளில் 99.999% வரை அகற்றி சுத்தம் செய்கிறது. குளிர்சாதனப் பெட்டியில் உள்ள காற்றை தூய்மைப்படுத்துகிறது. | ✓ | ✗
Linear Cooling - குளிர்சாதனப் பெட்டியிலுள்ள வெப்பநிலையின் ஏற்ற இறக்கங்களை குறைக்கின்றது | ✓ | ✗
Bioshield - ஆன்டி- பங்கஸ் கேஸ்கட் உணவை சுத்தமாக வைத்திருக்கும். | ✓ | ✗
Moist Balance Crisper - உகந்த நிலையில் ஈரப்பதத்தைப் பராமரிக்கும் பாக்ஸ் கவரான இது, ஒரு புதுமையான அமைப்பு முறைமையாகும். | ✓ | ✗
ரு.67,900 இலிருந்து
சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர்
மோதும் 4 இடங்கள்
ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர் இயங்கும் போது 4 இடங்களில் மோதுவதால் மின்சாரம் மேலதிகமாக செலவாகிறது.
எதிராக
இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர்
மோதும் 1 இடம்
LG குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர் ஒரு இடத்தில் மாத்திரம் மோதி மிகவும் இலகுவாக செயல்படுவதால் இதில் குறைந்த அளவு மின்சாரமே செலவாகிறது.
INVERTER LINEAR COMPRESSOR 10 YEAR WARRANTY
*நிபந்தனைகள் உண்டு.
011 5 999 000
Buy Abans.com
us at www.facebook.com/abans
நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் ஏக முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans
சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.


கையடக்கத் தொலைபேசி
மாற்றீடு சலுகை
LG
Life's Good
எந்தவொரு வகை மற்றும் எந்தவொரு நிலையிலுமுள்ள
கையடக்கத் தொலைபேசிகளை மாற்றிடுங்கள்.
12:30
மாற்றீடு விலையில்
ரூ.6,000/-
விலைக்கழிவுடன்
LG K10
2017
கையடக்கத் தொலைபேசியை
இன்றே எடுத்துச் செல்லுங்கள்!
5.3" HD இன்- செல் டிஸ்பிலே
1.5GHz Octa-Core புரோஸொசர்
13MP பின்புற கெமரா + 120° அகலன்ட் கோணத்திலான செல்.்பி கெமரா
2GB RAM/ 16GB ROM
6
ரூ.32,999/-
மாற்றீடு விலை
ரூ.26,999/-
வட்டி இல்லை தொலைவி அதிகம்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
Abans

உ


சிவமயம்


# யாழ்ப்பாணம், நாவற்குழி


# சிவபூமி திருவாசக அரண்மனை

# திறப்பு விழா சிறப்பிதழ்

## 24.06.2018 பிற்பகல் 4.00 மணி







யாழ்ப்பாண நகரத்தின் எல்லையிலுள்ள பழைமை வாய்ந்த நாவற்குழி கிராமத்தில் மணிவாசகர் அருளிய திருவாசகத்தை அடிப்படையாகக் கொண்டு உன்னதமான திருவாசக அரண்மனை உருவாகியுள்ளமை பெருமைக் குரிய விடயமாகும். தமிழர்களின் வரலாற்றில் ஆவணப்படுத்தும் விடயத்தில் அதிக முக்கியத்துவம் கொள்ளாத காரணத்தால் பல முக்கியமான வரலாறு களை அறிய முடியாமற் போய்விட்டது. ஈழமண்ணில் தமிழ் வேந்தர் காலம் செழிப்புற்று விளங்கியமைக்குப் பல சான்றுகள் உள்ள போதிலும் கல்வெட் டுக்கள் போதிய அளவு இல்லாமை நாம் செய்த தவக்குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். அனுராதபுரத்தில், பொலநறுவையில், கண்டியில் பௌத் தர்கள் காட்டும் தொல்லியல் சான்றுகளுக்கு ஈடாக, எம்மண்ணில் இருந்த தொல்லியல் சான்றுகள் ஏதோ ஒருவகையில் அழிக்கப்பட்டுவிட்டன. இனிமே லாவது எம்மண்ணில் வரலாற்று அடையாளங்களைப் பேணவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.


சைவ சமயத்தவர்களின் அரும்பொக்கிஷங்களில் மணிவாசகப் பெருமான் படைத்த திருவாசகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஈழத்தமிழர்கள் பண்டுதொட்டு திருவாசகத்துக்குப் பெரும் மதிப்புக்கொடுத்து வருவது யாவரும் அறிந்ததே. திருவாசகம் முழுவதையும் கருங்கல்லில் - கையால் உளிகொண்டு செதுக்கப்பட்ட வரலாறு. எதிர்காலத்தில் வரலாற்று ஆய் வாளர்களால் பேசப்படும் என்பதில் ஐயமில்லை. இப்பெரிய முயற்சியானது சிவபூமி அறக்கட்டளைக்குப் பெருமை சேர்த்துள்ளமையை யாரும் மறுக்க முடியாது. இன்று இம்முயற்சியை சமூகம் சரியாக விளங்கிக்கொள்ள முடியாவிட்டாலும், எதிர்காலம் இந்த முயற்சியை நிச்சயமாக விதந்து பாராட்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமேயில்லை.

திருவாசகத்தில் வரும் 658 பாடல்களும் மிகவும் நேர்த்தியான வகையில் கருங்கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. கருங்கல் இல்லாத யாழ்ப்பாணத்தில் 21 அடி உயரமான நிலையான கருங்கல் இரதம் உருவாக்கப்பட்டுள்ளமையும் சிறப்புக்குரியது. இது திருவாசகம் படைத்த மணிவாசகப் பெருமானுக்கு ஈழத்தமிழர்கள் கொடுத்த உயர் கௌரவம் என்று சொல்லலாம்.


திருவாசகத்தின் ஒரு பகுதியான சிவபுராணம் பதினொரு உலக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு திருவாசக அரண்மனையில் அவை காட்சிப் படுத்தப்பட்டிருப்பதும் அனைவரையும் வியக்கவைக்கும். பைபிள், திருக்குர் ஆன் நூல்கள் பல உலகமொழிகளில் வெளிவந்திருப்பது போல சைவ சமயத் தவர்களின் பல நூல்களும் உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருப்பது பலரும் அறியாத செய்தியாகும்.

திருவாசக அரண்மனை வளாகத்தில் 108 சிவலிங்கங்கள் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டு வழிபாட்டுக்கு உரியதாக்கப்பட்டுள்ளது. குபேரன், இராவ ணேஸ்வரன் ஆட்சிக்காலத்தில் இலங்கை முழுவதும் சிவலிங்கங்கள் காட்சியளித்தன என புராணங்கள் செப்புகின்றன. இன்று இலங்கையில் ஒரேயிடத்தில் பெரிய 108 சிவலிங்கங்களை ஒன்றாகக் கண்டு தரிசிக்கும் வாய்ப்பினை சிவபூமி அறக்கட்டளை உருவாக்கியுள்ளது. பாடுபட்டு உரு வாக்கப்பட்ட இப்பெரிய சொத்தை எதிர்காலச் சந்ததி மிகவும் கவனமாக நேசிப்பதே இப்பணியை முன்னெடுத்தவர்களுக்குச் செய்யும் கைமாறு எனலாம்.





வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும், தாம் உயர்ந்து, தம்மை எல்லாம் தொழ வேண்டிச்
சூழ்த்த மதுகரம் முரலும் தாரோயை, நாய் அடியேன்,
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான், யானும் உன்னைப் பரவுவனே.
(திருவாசகம் - அறிவு உறுத்தல்)



# விக்கிக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு

## 29ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 24

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக முன்னாள் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்திருந்த மனு மீதான தீர்ப்பு, எதிர்வரும் 29ஆம் திகதி வழங்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், தம்மைப் பதவியில் இருந்து நீக்கியது தவறு என்று உத்தர விடக் கோரி, முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

நீதியரசர்கள் குமுதினி விக்ரமசிங்க, ஜானக டி சில்வா ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்திருந்தது. இந்த மனு மீதான விசாரணைகள் முடிந்து, கடந்த 11ஆம் நாள் தீர்ப்பளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அன்றையநாள் நீதியரசர்களில் ஒருவர் வராமையால், தீர்ப்பு நேற்றுமுன்தினம் ஒத்திவைக்கப்பட்டது.


நேற்றுமுன்தினமும் இந்தத் தீர்ப்பு அளிக்கப்படவில்லை. எதிர்வரும் 29ஆம் திகதி இந்த வழக்கின் தீர்ப்பு அளிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (5)

# இளைஞர் கொலை

கல்கிசைப் பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு 29 வயது இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் அந்தப் பிரதேசத்தில் உள்ள விடுதிக்கு முன்னால் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிய பிரச்சினை ஒன்று தீவிரமானதால் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொலைச் சந்தேகநபர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (5)








**SKILLS**
COLLEGE OF TECHNOLOGY

நீங்களும்
சர்வதேச ரீதியில்
அங்கீகரிக்கப்பட்ட
ஒரு
பொறியியலாளரக
முடியும்....

அதிகூடிய வருமானத்துடன்
இலகுவாக தொழில் வாய்ப்பினை
பெற்றுத்தரக்கூடிய பொறியியல் துறையில்
ஆர்வமுள்ள உங்களுக்காகவே...

**City & Guilds**
# Engineering

- Civil Engineering
- Quantity Surveying (QS)
- Motor Vehicle Engineering (Hybrid)
- Electrical & Electronic Engineering
- Mechanical Engineering

பாடநெறியை
பூர்த்தி செய்யும்
அனைவருக்கும்
தொழில்வாய்ப்பு

## July 8 முதல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

உட்பிரவேசிப்பதற்கான தகைமைகள்

**Diploma Level**
- GCE Advanced Level - Maths / Bio Stream
- GCE Advanced Level - Technology Stream
- SCOT Certificate in Engineering
- NVQ Level 3 in a relevant field
- Any other equivalant qualification

**Advanced Diploma Level**
- City & Guilds Level 4 Diploma
- NCT
- NVQ Level 5 in a relevant field (Subjected to valuation)
- Any other equivalant qualification

மேலதிக விவரங்களை பெற உங்கள் <Name> <Address> <Course> போன்ற விவரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்

Call us for more information
021 4 66 66 99 , 077 363 6801

City & Guilds
APPROVED CENTRE

**Skills College Of Technology - SCOT**

**Nugegoda Campus**
No. 102,
Stanley Thilakaratne Mw,
Nugegoda.
011 4 696 666
scot@skillsinternational.lk

**Kandy Campus**
No. 511,
Peradeniya Road,
Kandy.
081 4 66 66 99
kandy@skillsinternational.lk

**Kurunegala Campus**
No. 252,
Puttalam Road,
Kurunegala.
037 3 61 68 68
kurunegala@skillsinternational.lk

**Jaffna Campus**
No.207,
Navalar Road,
Jaffna.
021 4 66 66 99
jaffna@skillsinternational.lk


**Matara Campus**
No. 68,
Dharmapala Mawatha,
Matara.
041 4 501 501
matara@skillsinternational.lk


ஓம் விராட் விஷ்வ பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

(இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாம் வாழ்க)

அன்னை மடியில்
28
06
1962



ஆண்டவன் மடியில்
28
05
2018

கடந்த 28.05.2018 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த

## அமரர் சின்னையா அருளையா (ஆசாரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.06.2018) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 27.06.2018 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு சின்னையா அருளையா அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு விரைந்து வந்து அனைத்துவிதமான உதவிகளையும் வழங்கிய அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் வழியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கு உதவிய குருமார்களுக்கும், மலர்வளையங்களை சாத்தி மனத்துயரை அர்ப்பணித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், போசன உதவிகள், சரீர உதவிகள் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை வழங்கிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

15/16, நடுத்தெருலேன் (அன்னை இல்லம்),
அரியாலை, யாழ்ப்பாணம். 077 910 3392, 077 367 8166

குடும்பத்தினர்.

(CS/17713)(11.17)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். சபைநிதி வேலைத்திட்டம்.
## பெறுகைக்கான அழைப்பு.
## வீதி விளக்குகள் மற்றும் மண்டப ஒலி இணைப்புகள் வழங்கல்.

1. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தகுதியான தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி விளக்குகள் மற்றும் ஒலி இணைப்புகளிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும் பொருத்தமான வியாபாரப் பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்களில் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவின் தலைவருக்கு அதிகாரமுண்டு.
5. ஆர்வமுள்ள விலைக்கேள்விதாரர்கள் பெறுகைப்பத்திரங்களை வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் என்ற எமது அலுவலகத்தில் அலுவலக நாள்களில் 28.06.2018 தொடக்கம் 16.07.2018 வரை மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களைப் பெற தொலைபேசி மூலம் (021-2225381) அலுவலக நேரங்களில் தொடரப் கொள்ளலாம்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தவிசாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 17.07.2018 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 77(எழுபத்தி ஏழு) (06.09.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
8. சித்தியடைந்த கேள்விதாரர் கொள்வனவு கட்டளை திகதியில் இருந்து 07 நாள்களுக்குள் பொருள்களை வழங்க வேண்டும்.
9. கேள்விதாரர் பெறுகைப்பத்திரக் கட்டணமாக 1000.00 ரூபாவையும் அதற்குரிய NBT யும் செலுத்த வேண்டும்.

| வேலை விபரம் | ஒப்பந்த இல | மதிப்பீட்டு தொகை | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| வீதி விளக்குகள் வழங்குதல் | NP/14/41(16)/Str.L/01/2018 | 5,000,000.00 | 75,000.00 | 04.10.2018 |
| சபா மண்டப ஒலி அமைப்பு வழங்குதல் பொருத்துதல் | NP/14/41(16)03/CSS/2018 | 500,000.00 | 10,000.00 | 04.10.2018 |

அ. ஜெபநேசன்
தலைவர்,
உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

24.06.2018

## வாடகைத் தாய் தேவை

30 வயதுக்கு குறைவான பெண் ஒருவர் IVF ஊசி மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**077 906 1406** (ACO/250)(11,17)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - கடைச்சாமி வீதி, நீராவியடியில் சற்று பருமனான இலுப்பை மரம் விற்பனைக்குண்டு. (CS/17706)(11,17)

**077 949 6948**

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்துக்கு **காசாளர், வெயிட்டர் தேவை.** (CS/17709)(11,17)

**உடன் தொடர்பு கொள்ள -072 699 4681**

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு திறமையும் அனுபவமும் உள்ள வேலைத்தள முகாமைத்துவம் உடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O. - Civil) தேவை.

**தொடர்பு - 076 316 5734, 077 592 5371**
**E - mail : Careers@decon.lk**

## விற்பனைக்கு

குரும்பசிட்டி தெல்லிப்பழை அம்மன் கோயில் கிழக்கில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

**076 479 6367** (ACO/255)(11,17)

## விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பாவிக்கப்படாத புத்தம் புதிய 04 அடுப்பு காஸ் குக்கர் மற்றும் அவுன் (Oven) உடன் கூடிய Cooking range விற்பனைக்குண்டு.

**077 483 3111**

## விற்பனைக்கு

Washing Mechine, Laptop(APPLE) விற்பனைக்கு

**077 928 7846** (CS 17659)(04.17)

## வாடகைக்கு விற்பனைக்கு

அறைகள் (ரூம்கள்) பாவித்த குளிரூட்டி (AC) முதிரை மர கதவுகள் 12 அடி அகலம். 8 அடி உயரம் பாலை மர நிலைகள் 12 அடி அகலம் 08 அடி உயரம் பாவித்த பார ஊர்தி ரயர்கள் விற்பனைக்கு உண்டு.

**077 728 3811**

## விற்பனையாளர்கள் தேவை

**புடைவை வியாபாரத்தில்**
**அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை.**
(ஆண், பெண்)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**த.குமாரசாமி** ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

## தேவை

இலங்கையில் உள்ள எங்கள் சர்வதேச நிறுவனத்திற்கு தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தராக சேர விருப்பமா ? வயது 18 - 65 உட்பட்ட ஆண் / பெண் தேவை. 40 000 /= மேல் சம்பளம் Five star Hotels, தொழிற்சாலைகள், முதல் தர நிறுவனங்களில் வேலை. காசு வாங்க மாட்டம்

**தொடர்பு - 077 3404 222, 011 271 6634**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல **வெதுப்பகம்** ஒன்றிற்கு விற்பனையாளர், காசாளர், ஐசிங் கேக் செய்பவர், வெதுப்பக வேலை தெரிந்தவர் போன்ற வேலைகளுக்கு வேலையாள் தேவை. வேலை செய்ய ஆர்வமுள்ளோருக்கு வேலை பழக்கிக்கொடுக்கவும் முடியும்.

**077 314 7580/077 763 9159**

## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள சலவை இயந்திரம் ( LG வோசிங் மெசின்). குளிர்சாதனப் பெட்டி ( LG டபிள் டோர் ) LG மைக்ரோ அவன். லுமாலா முழுச் சைக்கிள், முதிரைச் சோக்கேஸ் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. கந்தர்மடம், யாழ்ப்பாணம். (CS/17710)(11,17)

**075 554 6000**

## காணிகள் விற்பனைக்கு

1. கீரிமலை சிவன் கோயிலுக்கு முன்பாக 50 பரப்புக்காணி மூன்று பிரிவாக உள்ளது.
2. கொல்லன்கலட்டி பிள்ளையார் கோயில் அருகில் 5 ½ பரப்புக் காணியில் 6 அறைகள் உள்ள வீடு.
3. சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்துக்கு அண்மையில் 7½பரப்பு தோட்டக்காணி ஆகியன உடன் விற்பனைக்கு உள்ளன.

**077 451 2789**
**தரகர்கள் தேவையில்லை** (ACO/248)(11,17)

## யாழ் நகரில் முதியோருக்கான உயர் தர சேவை / தாதியர் பராமரிப்பு

Centre for Humanitarian Affairs - ஜெர்மனியை சேர்ந்த Pflegedienst Bergstrasse உடன் இணைந்து யாழ் நகரில் முதியோருக்கான சேவையை ஆற்ற உள்ளது. மிக உயர்ந்த பாதுகாப்பு தரநிலைகளுக்கு அமைய முதியோருக்கான பராமரிப்பு சேவையில் 20 வருடத்திற்கும் மேலான அனுபவத்தினை Pflegedienst Bergstrasse, கொண்டுள்ளது. உங்கள் வாழ்க்கை முறைகளுக்கு அமைய, தனிப்பட்டரீதியில் நீங்கள் காலையில் நித்திரையிலிருந்து எழுந்தது முதல், இரவு படுக்கைக்கு போகும் வரை உங்களுக்கு ஆதாரமாக இருப்பதே எமது நோக்கம் ஆகும்.

**உங்களுக்காக நம்மால் வழங்கப்படும் சேவைகள்**

நாளாந்த உணவுக்கு உதவுதல், முழுமையான உடல் பராமரிப்பு, வீட்டு வேலைகளில் உதவுதல், கடையில் பொருட்கள் வாங்குதல், பிள்ளை பராமரிப்பு, சமைத்தல், துப்பரவு செய்தல், சலவை செய்தல், உலர்த்தல், இஸ்திரியிடல், வீட்டிலிருந்து வெளியே செல்வதற்கு உதவுதல - (உதாரணத்திற்கு – வைத்தியரிடம் மற்றும் அரச அலுவலகங்களுக்கு செல்லுதல்), உங்கள் வைத்தியருடன் உங்களுக்கான மருத்துவ பராமரிப்பு – குருதியில் சக்கரையின் அளவைப் பார்த்தல், புண் பராமரிப்பு, வலி சிகிச்சை, மணித்தியால பராமரிப்பு என்பவற்றை உள்ளடக்கும். மற்றும் நாளாந்த வாழ்வில் உதவுதல், ஓய்வு நேர நடவடிக்கைகள் - (உரத்த வாசித்தல், சுற்றுலா, பலகை விளையாட்டுக்கள்.

தொடர்புக்கு : 011 4061461; 0214-927201 or 021-4927200
Email : manager-reg-rehab@cha.lk ; jafdrc@cha.lk

Pflegedienst Bergstraße — CENTRE FOR CHA HUMANITARIAN AFFAIRS (GUARANTEE) LIMITED

## JAFFNA REAL ESTATE — வடமாகாணத்தில் வீடுகள்,காணிகள்,வியாபார நிலையங்கள் உடன் விற்பனைக்கு

**வீடுகள் / காணிகள் உடனடியாக வாங்க - விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்.**

| இடம் /விபரம் | பரப்பு ஒன்றின் விலை |
|---|---|
| காரை நகர் கசுரீனா பீச் 7 ஏக்கர கடற்கரை காணி | - 5 லட்சம் |
| நல்லூர் அருகில் 4 பரப்பு காணி வீட்டுடன் | - 70 லட்சம் |
| ஆஸ்பத்திரி வீதி சுபாஷ் கபே (மொத்த விலை) | - 11 கோடிகள் |
| விக்டோரியா வீதி சுபாஷ் ஹோட்டல் (12 பரப்பு காணியுடன் மொத்த விலை) | - 60 கோடிகள் |
| ஞானம் ஹோட்டல் அருகில் 2 ½ பரப்பு காணி | - 95 லட்சம் |
| பலாலி வீதி ஆரியகுளம் சந்தி 5 பரப்பு காணி | - 1 கோடி 80 லட்சம் |
| பூநாறி மரத்தடி KKS ROAD 2 பரப்பு காணி | - 40 லட்சம் |
| அரியாலை 4 பரப்பு காணி | - 20 லட்சம் |
| அரியாலை 4 பரப்பு காணி வீட்டுடன் | - 20 லட்சம் |
| கச்சேரி நல்லூர் வீதி 9 பரப்பு காணி வீட்டுடன் | - 55 லட்சம் |
| கச்சேரி நல்லூர் வீதி 2 பரப்பு காணி | - 40 லட்சம் |
| யாழ்ப்பாணம் நகர் 6 பரப்பு காணி வீட்டுடன் | - 80 லட்சம் |
| கந்தர்மடம் 4 ¼ பரப்பு காணி வீட்டுடன் | - 45 லட்சம் |
| பலாலி வீதி கந்தர்மடம் 3 பரப்பு காணி | - 65 லட்சம் |
| இருபாலை பருத்தித்துறை வீதி 2 ½ பரப்பு காணி.வீட்டுடன் | - 50 லட்சம் |
| தாவடி 10 பரப்பு தோட்டக்காணி | - 5 லட்சம் |
| நிலாவரை 10 பரப்பு தோட்டக்காணி | - 5 லட்சம் |
| தெல்லிப்பளை 1 ½ பரப்பு காணி.வீட்டுடன் | - 10 லட்சம் |
| தெல்லிப்பளை ஆஸ்பத்திரி அருகில் 2 ½ பரப்பு | - 10 லட்சம் |
| தெல்லிப்பளை 20 பரப்பு காணி | - 3 லட்சம் |
| 1 ¾ பரப்பு காணி - கச்சேரியடி | - 50 லட்சம் |
| 2 ½ பரப்பு காணி - தெல்லிப்பளை | - 10 லட்சம் |
| 3 பரப்பு காணி - தெல்லிப்பளை சந்தி | - 20 லட்சம் |
| பளை 50 ஏக்கர் மாந்தோப்பு/தென்னம் தோப்பு | - 63 ஆயிரம் |
| பளை 20 ஏக்கர் தென்னங்காணி | - 1 ¼ லட்சம் |
| 43 ஏக்கர் காணி 1000 தென்னை கன்றுகளுடன் | - 32 ஆயிரம் |
| 14 பரப்பு காணி புத்தூர் | - 10 லட்சம் |
| எழுதுமட்டுவாள் 5 ஏக்கர் தென்னங்காணி | - 50 ஆயிரம் |
| கிளிநொச்சி நகரில் கடை (15 X 50) கடை மொத்தவிலை | - 1 கோடி |
| கிளிநொச்சி நகரில் கடை தொகுதி (மொத்தவிலை ) | - 7 கோடிகள் |
| 1 ஏக்கர் மீன் பண்ணை /கோழி பண்ணை மொத்த விலை | - 35 லட்சம் |
| திருகோணமலை நிலாவெளி ஹோட்டல் | - 4.6 கோடிகள் |

**விலை பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்புகளுக்கு : 0094 76 121 4255**

வெளிநாட்டில் உள்ளவர்களும் வாட்சப் / வைபர் ஊடாக எம்மை தொடர்பு கொள்ள முடியும்.

பணப் பரிமாற்றங்கள் வெளிநாட்டிலும் செய்து கொள்ள முடியும்

வீடுகள் / காணிகள் உடனடியாக வாங்க - விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்.

மேலதிகள் விபரங்கள் .காணிகளின் படங்கள் / வீடியோக்களை பார்வை யிட கீழ்க்காணும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்

**www.jaffnarealestate.com**

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு தேவதாஸ்



ஆனைக்கோட்டை கூழாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தேவதாஸ் 22.06.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்துவின் அன்புக் கணவரும், தவமலர், செல்வதாஸ் (அன்ரனீஸ் ஹொட்டல் - மானிப்பாய்), கமலதாஸ் (அன்ரனீஸ் பல்பொருள் வாணிபம் - ஆனைக்கோட்டை), சாந்தினி தேவி, உஷாந்தினி (லண்டன்), அஜந்தன் (பிரான்ஸ்), அகிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2018) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கூழாவடி,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல் : குடும்பத்தினர்.**

**077 958 1738, 077 663 6732**



பிறப்பு 29 . 04 . 1932 — பிறப்பு 21 . 06 . 2018

### கணபதிபிள்ளை கணேசமூர்த்தி

(முன்னாள் மகாதேவா நகைக்கடை பங்காளர்)

கேசடை வீதி, கருங்காலி காரைநகரை பிறப்பிடமாகக்கொண்ட கணபதிபிள்ளை கணேசமூர்த்தி கனடாவில் 21.06.2018 சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிபிள்ளை (banker) தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து அன்ன முத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமி யின் அன்புக் கணவரும், தயானந்தன் (விஜயன்), திலகவதி, சூரியகுமார், ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, இராசமணி (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிற்சபேசன், தயாநிதி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.06.2018 கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**க.தயானந்தன் (விஜயன்),**
**சிற்சபேசன் திலகவதி,**
**க.சூரியகுமார்.**

**சின்னாலடி,**
**காரைநகர்.** (cs.17716) (13.17)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

### பொன்னையா பாலகிருஷ்ணன் (சின்னப்பாலு)

**(நீதிமன்றம், இலங்கை வங்கி, மக்கள் வங்கியின் பதிவு பெற்ற ஏலதாரர்)**



வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலகிருஷ்ணன் நேற்று (23.06.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (பெரியபாலு) அன்பு சகோதரரும், காலஞ்சென்ற ஜனந்தன் மற்றும் லசிந்தா, சசிந்தன் ஆகியோரின் தந்தையும், சிறிதேவி, பகவன்தாஸ், சுபாஜினி ஆகியோரின் மாமனாரும், கோஜனன், அபிஷா, சரலாஜினி, தஸ்வின், ரவின், டர்ஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.பி.பாலகிருஷ்ணன்,**
**1058, கே.கே.எஸ் வீதி,**
**பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.** (CS/17698)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## வேலை ஆள்கள் தேவை

யாழ். வவுனியாவில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்திற்கு திருமண அழைப்பிதழ்கள் பிறிண்டிங் (ஸ்கிறீன் பிறிண்டிங்) செய்து தருவதற்கு ஆள்கள் தேவை

குறிப்பு: வீட்டில் இருந்தும் பிறிண்டிங் செய்துதரலாம்

**076 826 7695**

## கடை இடமாற்றம்

172, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த

**மைக்ரோ எலக்ரிக்கல்**

**நாளை (25.06.2018)**

**திங்கட்கிழமை** முதல் 119, ஸ்ரான்லி வீதியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**021 222 8345**

## IELTS™

English for International Opportunity



REGISTER FOR FREE

ஏன்? எப்படி? யாருக்கு?
இலவச விளக்கமளிப்பு

By

**British Qualified Lecturer with teaching experience in UK & Maldives**
**British Council Alumni Member.**
**PTLLS(UK), PGD(Bradford,UK)**
on
**30.06.2018 (10.00 am & 11.00 am)**

COURSES BY THE LECTURER

IELTS / A1, B1 – for student visa & migration to UK, USA, Canada, NZ & Aus
General English – for Nurses, Bank staff, University entrants, Teachers
Advanced Writing – for Law College students

- ☐ வார இறுதி நாள் வகுப்புக்கள்
- ☐ ஒவ்வொரு பிரிவிலும் 15 பேர் மாத்திரமே
- ☐ தவணை முறையிலான குறைந்த கட்டணம்
- ☐ பரீட்சைக்கு பதிவு செய்யும் அனைத்து சேவைகளும் வழங்கப்படும்

Learn English the fast & Easiest way; Success Guaranteed

அன்றைய தினம் இணைபவர்களுக்கு
COME & JOIN US 30% OFF
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்

YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கன்னாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

## காணி விற்பனைக்கு

A9 வீதி, யாழ்.கச்சேரிக்கு அண்மையில் சுற்று மதிலுடன் கூடிய 1¾ பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.

**077 302 3722**

## உடனடி வேலைவாய்ப்பு

O/L, A/L முடித்த மற்றும் பகுதிநேர வேலை செய்ய ஆர்வமுள்ள அனைவருக்கும் EPF/ETF உடனான நிரந்தர வேலைவாய்ப்பு

**077 241 7007**

## ஜெயக்குமார் திருமணசேவை

ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ், பெல்ஜியம் மற்றும் கனடா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் உள்ள மணமகன், மணமகளுக்கு இலங்கையிலுள்ள படித்த மணமகன், மணமகள் தேவை.

(CS/17705) (11,17)

வைபர் - 0094 7672 50144
076 178 7848
075 568 5766
நெற் - 0049 162 7462 526

## கார் விற்பனைக்கு

TOYOTA Aqua
2015 Xurban Model,
Pearl White Colour
Doctor own Used
Milage 29500 km உடனடி விற்பனைக்கு (தரகர் தேவையில்லை)

**077 307 9459**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை

- Technical Officer (with 2yrs experience)
- Technical Assistant (with 1yr experience)
- We need Technical Officer and Technical Assistant for office duties (Female recommended)

**075 918 3944**
shaganaconstruction@hotmail.com

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 11 . 1931

இறப்பு 17 . 06 . 2018

### திருமதி மங்கையற்கரசி (பேபி, மங்கை) இராசதுரை

சுதுமல்லை வடக்கை பிறப்பிடமாகவும், கொழும்பு, பிரித்தானியா (KENT) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி (பேபி, மங்கை) இராசதுரை 17.06.2018 ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் (ஓவசியர்) - செல்லாச்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராசதுரையின் (சூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லநாயகி சின்னத்தம்பி மற்றும் பாலசுந்தரம் (Canada) ஆகியோரின் சகோதரியும், யோகாம்பிகை, காலஞ்சென்ற மீனாம்பிகை மற்றும் கந்தவேள், காலஞ்சென்ற நடனசபேசன் மற்றும் பாலாம்பிகை ஆகியோரின் தாயாரும், சிதம்பரநாதன், Dr.வத்சலா, சுபேந்திரன் ஆகியோரின் மாமியும், Dr.நிருத்திகா - சஞ்சீவன், லாவண்யா - தயாகரன், பவித்திரா, காயத்திரி, கார்த்திகேயன், சத்தியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.06.2018 புதன்கிழமை பிரித்தானியாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/17715)(11,17)

தொடர்புகளுக்கு -
பாலசுந்தரம் (சகோதரன், RamBala- Canada)- 001 647 806 1164,
கந்தவேள் (மகன், U.K) - 01634719394, 07956812410,
யோகாம்பிகை (யோகா, மகள், Canada)- 001 416 261 6456,
பாலாம்பிகை (மகள், U.K) - 077 566 93546

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாவதி இராஜகுலசூரியர்

தோற்றம் 28.03.1938

மறைவு 05.07.2017

திதி: 24.06.2018

அன்பின் திருவுருவமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் எமக்கெல்லாம்
நல்வாழ்க்கை காட்டிய தாயே! ஓராண்டு ஆனதுவோ
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(cs.17697) (13,17)

மடத்தடி லேன்,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

என்றும் நீங்கா நினைவுடன்
கணவர், மகன், மருமகள், பேரன்.

## மரண அறிவித்தல்

### திருமதி சௌந்தராம்பிகை இராசையா

(களபூமி, சத்திரந்தை, காரைநகர்)



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கருங்காலி தற்போது இல.46, பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சௌந்தராம்பிகை இராசையா 23.06.2018 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி (விசுவப்பா), - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சண்முகம்(மண்பிட்டி) - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் பாசமிகு மனைவியும் தனலட்சுமி, தவயோகம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன்(திருத்தணிகை ஹாட்வெயர் வட்டக்கச்சி), இன்பகாந்தன்(லண்டன்)ஆகியோரின் அன்பு மாமியாரும் வதுர்சன், நிவேதனா, ஜதுர்சனா, அக்சயா, றொக்சிகா, லக் ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, வைத்திலிங்கம், சரஸ்வதி, நேசரத்தினம், பூமணி, தியாகராசா, பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கந்தையா, காமாட்சி இராமலிங்கம், ஆறுமுகம் இராசையா மற்றும் பராசக்தி பாலமணி, இராசம்மா, நடராசா ஆகியோரின் மைத்துனியும் இராசரத்தினம் விசாலாட்சி (வட்டக்கச்சி) மற்றும் பாலசிங்கம் சரோஜினிதேவி(இங்கிரியா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இல.46, பிறவுண் வீதி, யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.46, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(00367) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருவாசக அரண்மனை நாவற்குழி
# திறப்பு விழா

**காலம்**
இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.00 மணிக்கு

**தலைவர்**
கலாநிதி ஆறு.திருமுருகன்
( தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**அதிதி**
வைத்திய நிபுணர்.வை.மனோமோகன் தம்பதிகள்
(ஆஸ்திரேலியா)

**கருங்கல் ரதம் திறந்துவைத்தல்**
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
(தலைவர் - மனிதநேயம் அறக்கட்டளை)

**திருவாசக ஆராய்ச்சி நூல்நிலையம் திறந்து வைத்தல்**
திரு.கு.பாலசிங்கம் (கணக்காளர் - இங்கிலாந்து)

**சிறப்புரை**
திருவாசகம் -கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**திருவாசக இசை விருந்து**
பேராசிரியர் தி.பாலச்சந்தர் தேசிகர்
(அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூமி அறக்கட்டளை
இலங்கை.

சிவபூமி திருவாசக அரண்மனை
A9 வீதி, நாவற்குழி.
(cs/1772l) (11,17)

## T.P.ஹன்ற் ஞாபகார்த்த கலைக்கூடம்
## திறப்பு விழாவும் நூல் வெளியீடும்

காலம் : 24.06.2018 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3.00 மணி
இடம் : இல.27 தேவாலய வீதி, சாவகச்சேரி.

கலைக்கூடத்தில் வடமாகாண பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஓவியக் கலைஞர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் முன்வைக்கப்பட்ட ஓவியங்கள் கலைக் கூடத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் கலந்து கொண்ட அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மாணவர்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட "சித்திரக் கலை" என்னும் நூல் வெளியீடும் இடம் பெறும்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாட்டுக்குழுவினர்.
(C 7108) (14,17)

## வேலையாள்கள் தேவை

எமது Hotel இற்கு கீழ் குறிப்பிட்டுள்ள
வேலையாள்கள் தேவை.
தகுதியும், அனுபவமும் உடையவர்கள் நேரில் வரவும்.

1) Hotel Manager - விடுதி முகாமையாளர்
2) Hotel Rooms Cleaner - விடுதி அறை சுத்திகரிப்பாளர்
3) Female cook - பெண் சமையலாளர்
4) Receptionist - வரவேற்பாளர்.
(Computer knowledge) - கணினி அறிவு
5) Security (Night) - பாதுகாப்பு உத்தியோகத்தர்

உடனடியாகத் தேவை.

SAI HOLIDAY INN 132, Kachcheri Nallur Road, Jaffna.

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**Fast track Degree Programme - Topup**
**(Tamil / English Medium)**

- BA in English
- BA in Teaching / Education
- B.Sc in Computer Science
- BBA in Management

1 Year

- B.Sc in Nursing
- B.Sc in Civil Engineering

2 Years

UGC Approved

Spot Admission 26.06.2018 28.06.2018

* க.பொ.த. சா/த, உ/த, NVQ, HND தகைமைகளினை கொண்டவர்கள் அடையாள அட்டை பிரதி, பிறப்பு சான்றிதழ் பிரதி, கலர் புகைப்படம், தகைமைகளினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேர்முகத் தேர்விற்கு 26, 28/06/2018 காலை 10.00AM இற்கு தோற்றமுடியும். கற்கைநெறிகள் யாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

Mr.S.சிவபாலன், கலாநிதி.N.தணிகாசலம்பிள்ளை
முகாமைத்துவ நிர்வாக சபை சார்பாக
021 4508489, 0766852529
E-Mail: degreepgrm@gmail.com

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 290
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.06.23

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 76,605,690/-

வெற்றி இலக்கங்கள்
07 17 41 48
ஆங்கில எழுத்து D

தொ.பே: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர தீர்க்க அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இராசியில் நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# வேலை வாய்ப்பு
## (பகுதி நேரம் / முழு நேரம்)

எமது நிறுவன வேலை வங்கி சேவை ஊடாக தங்கள் கல்வித் தகைமைக்கும், தகுதிக்கும், திறமைக்கும், முயற்சிக்கும் ஏற்ப வேலை வாய்ப்பு ஒழுங்குகள் செய்து தரப்படும். வேலை தேடுவோர் தங்கள் முழுமையான சுயவிபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு தபால் / மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கவும்.

K.S.K. Marketing (Pvt) Ltd,
(Job Bank)
G.P.S. Road,
Kalviyankadu,
Jaffna.

- வயது எல்லை -
18 தொடக்கம் 60 வரை
(ஆண் / பெண் இருபாலாரும்)

மின்னஞ்சல் : jobbankksk@gmail.com
மேலதிக தொடர்புகளுக்கு : 0768446358

## வேலையாள்கள் தேவை,
## Room வாடகைக்கு உண்டு

சைவ உணவகம் ஒன்றிற்கு பகுதி நேர மற்றும் முழு நேர வேலையாள்கள் தேவை.

1) சப்பிளையர் ( ஆண் /பெண் இருபாலாரும்)
2) சுத்திகரிப்பாளர்
3) ஏனைய குசினி வேலையாள்கள்

பாதுகாப்பு சூழல், வாகன தரிப்பிட வசதியுடன், வைமன் றோட்டில் அமைந்துள்ள மேல்மாடி வீடு ஒன்றில் மேல் பகுதி பல்கலைக்கழக மாணவிகள், பயிற்சி தாதியர், ஏனைய உத்தியோக பெண்களுக்கு வாடகைக்கு வழங்கப்படும்.
கீழ்பகுதி விசேட வைபவங்களுக்கு தங்குவதற்கு வழங்கப்படும்.

தொடர்பு - 077 791 7753

## பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்**
**(வரையறுக்கப்பட்டது)**

**அதி விசேட பொதுக்கூட்டம்**

இடம் : பிள்ளையார் இன் மண்டபம் (PILLAYAR INN)
இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : ஞாயிற்றுக்கிழமை 15ஆம் திகதி யூலை 2018
நேரம் : முற்பகல் 09.30 மணி

*தயவுகூர்ந்து தவறாது சமூகமளிக்கவும்.*

R.சபேசன், செயலாளர்.

*ஓம் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

## மரண அறிவித்தல்
## கதிரிப்பிள்ளை தங்கராசா
*(தங்கன்)*



தோற்றம் 10.01.1947 மறைவு. 23.06.2018

காளிகோவிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை தங்கராசா (தங்கன்) நேற்று (23.06.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - ரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - மகிழ்மணி தம்பதிகளின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, தவமணி, ஆறுமுகராசா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, ரஞ்சிதமலர், ஜெயராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஸ்வலிங்கம், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, ராஜேஸ்வரி, கேதீஸ்வரன், லதா, வைத்திலிங்கம், பரமலிங்கம், அன்னலிங்கம், பரமேஸ்வரன், மங்கையர்திலகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற யுசானி மற்றும் ரஜீகரன் (ஆஸ்திரேலியா), யாழினி (தபால் கந்தோர், யாழ்ப்பாணம்), மதுசாளினி (மாணவி - இணுவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையாரும் அருள்மோகன், காலஞ்சென்ற நேர்மிளாவின் ஆகியோரின் மாமனாரும் லியாளிக்கா வின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2018) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் தகனக்கிரியைகள் மல்லாகம் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## விற்பனைக்குண்டு

பெரிய இன ஆடுகள் மற்றும் ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 075 511 3457 கோண்டாவில்.

## வேலையாள்கள் தேவை

WASANA ENVIRONMENT SERVICE
இன் யாழ்ப்பாண பிரதான காரியாலயத்திற்கு சகல மாவட்டங்களிலிருந்தும் முகாமையாளர்.
அலுவலக உத்தியோகத்தர்கள்,
கள உத்தியோகத்தர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு - 071 425 7977,
070 3108 446

## HOME VISITING



MBBS வைத்தியர்களினால் உங்கள் வீடுகளுக்கு நேரடியாக வந்து
- வைத்திய ஆலோசனைகள்
- வைத்திய பரிசோதனைகள்
- தேவையான மருத்துவ சிகிச்சைகள்

மாதுஜன் மருத்துவ ஆலோசகர் நிலையம்
021 205 5105, 076 565 5283
யாழ். வீதி, மருதடி, வல்வெட்டித்துறை.

## ES Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்




021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

1) மேசன் 02) கூலி வேலை செய்பவர்கள்
03) சீமெந்து கிறில் வேலை செய்பவர்கள் 04) கல் அரிபவர்கள்
05) தூண் அரிபவர்கள்
06) சீமெந்திலான வீட்டு அலங்கார கற்கள் செய்பவர்கள்
வெளி மாவட்டங்களில் இருந்து வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவமுள்ளவர்கள் மட்டும் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - 076 780 6942**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 . 03 . 1925



உதிர்வு 05 . 07 . 2017

அமரர் **விக்கினேஸ்வரமூர்த்தி குகரூபன்**

உங்கள் இழப்பின் துயரத்தால்
பரிதவித்த எம் மனதின் காயங்கள்
இன்றும் கூட ஆறவில்லை
ஆண்டு ஒன்று வேகமாக கடந்துவிட்ட
போதிலும் எம் நெஞ்சங்களில்
உங்கள் நினைவுகள்
கனமாய் நிலைத்திருக்கிறது.

உசன் மிருசுவில். குடும்பத்தினர்.

## சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் நாவற்குழி

## மகா கும்பாபிஷேகம்

காலம் - 25.06.2018 திங்கட்கிழமை
காலை 9.40 முதல் 10.45 மணி வரை

பிரதமகுரு
**சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள்**
(பீடாதிபதி, வீணாகான குருபீடம், சித்தன்கேணி)

அருளாசி
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
(முதல்வர் - நல்லை ஆதீனம்)

அனைவரும் வருகை தந்து சிவதட்சணாமூர்த்தியின் திருவருளை பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

சிவபூமி அறக்கட்டளை இலங்கை. சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் A9 வீதி, நாவற்குழி.

## விற்பனைக்கு உண்டு

Ex beds, Computer + Computer Table, Photocopy Machine with Stand, Chairs, Printers உடன் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் கீழ்காணும் இலக்கங்கள், முவரியில் தொடர்பு கொள்ளவும். **021 222 4615, 021 222 4616**

**132, Kachcheri Nallur Rd., Jaffna.**

(CS 17723/15/17)

## கார் விற்பனைக்கு

Model TATA INDICA eV2, No CAB XXXX இலக்கம் கொண்ட கார் விற்பனைக்கு உண்டு. **- 077 844 5876 / 0777 296 909**

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், கடைச்சாமி வீதி, 42/1 ஆம் இலக்கமுடைய நிலப்பரப்பு 1, குளி 7 காணி விற்பனைக்குண்டு. **- 077 949 6948**

## வேலையாள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் புடைவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் ஆண்/பெண் இருபாலாரும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் / பழக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். **- 077 189 6004**

## கார் விற்பனைக்கு

Suzuki Aldo CAE xxxx Model - 2015 வெள்ளை நிற கார் விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 7299 261
076 7299 261**

## கடை வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நவீன சந்தை மேல்மாடியில் இரு கடைகள் வாடகைக்கு அல்லது நீண்ட கால குத்தகைக்கு உண்டு.

**தொடர்பு - 077 3611 282**

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
**தொடர்பு - 076 4242 090**

## காணி விற்பனைக்கு

யாழ். மருத்துவபீடத்துக்கு அருகில் 1 1/2 , 1 3/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 305 8782, 076 697 2287**

## பசுக்கள் விற்பனைக்கு

மூன்று வயதிற்கு உட்பட்ட நல்லின பசுக்கள் விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 913 3017**

## வேலை ஆள்கள் தேவை

கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதிக்கு 55 வயதிற்கு உட்பட்ட மேற்பார்வையாளர் தேவை. அத்துடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 18 வயதிற்கு மேற்பட்ட பணியாள் தேவை. (ஆண்)
**தொடர்பு - 077 2543 113**

## VACANCY

வடமாகாணத்தில் மாணவர்களின் அறிவுக்கண்களை திறக்கும் முகமாக பத்து வருட அனுபவம் உள்ள சர்வதேச கல்வி ஆலோசனை பீடமாக விளங்கும் நிறுவனமொன்று வெகு விரைவில் யாழ் நகரில் ஒரு கிளையை ஆரம்பிக்க இருக்கின்றது. அதற்கு தகுதியானவர்களை சேர்த்துக் கொள்வதற்கு கீழ்வரும் விபரங்களுடன் தகுதி உடையவர்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றது.

பிரதான ஆலோசகர்

- வயது : 25-40 வயதிற்குப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- பிரதானமாக ஆங்கில மொழியில் சரளமாக பரீட்சயமுள்ளவர்களாகவும் கணனி அறிவுத்தகமை இருத்தல் அவசியம்.

மாணவர்கள் இணைப்பு ஆலோசகர்


- இளமைத்துடிப்புடன் ஆற்றல் மிக்க முன்னேற்றகரமான சிந்தனை கொண்ட, சரளமான ஆங்கில தகமையுடன், ஒரு சிறந்த குழுவுடன் இணைந்து இயங்ககூடிய, கணனி அறிவுடையவராக இருத்தல் அவசியம்.

தொடர்புகளுக்கு : 0777547447
info@conceptinaction.com உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி வையுங்கள்.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

உ

# மரண அறிவித்தல்

மலர்வு 1952 ♦ 01 ♦ 05



உதிர்வு 2018 ♦ 06 ♦ 22

## சிற்றம்பலம் சற்குணலிங்கம்

உரிமையாளர்: S.M.R. Transport (மயிலிட்டி)

யாழ்-மயிலிட்டியை பிறப்பிடமாகவும், கொழும்பு 13, (இல. 82/37, இராமநாதன் தொடர்மாடி) கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும், கொண்டவரான சிற்றம்பலம் சற்குணலிங்கம் அவர்கள் வெள்ளிக்கிழமை (22.06.2018) மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜனதாவின் (Janatha) பாசமுள்ள கணவரும், Dr.ரதீசன்(U.S.A) ராகுலன் ஆகியோரது அன்புத்தந்தையாரும் Dr. சிந்துஜாவின் (U.S.A) அருமை மாமனாரும், மாயா, அநாயாவின் பாசமுள்ள பேரனும் மற்றும் சகோதர-சகோதரிகள், பிள்ளைகள் மைத்துனர்-மைத்துனிமார்கள், பேரக்குழந்தைகள் அனைவரதும் பாசத்துக்குரியவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளையதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில், **பொரளை ஜெயரட்ன** மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 4.00 மணிக்கு பொரளை கனத்தை இந்து பொதுமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயருடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் அறிவித்தலை, உற்றார்-உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : மகன் இராகுலன்**
011 2422153, 077 7317265

**துயருடன் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

## கந்தையா சங்கரப்பிள்ளை



பிறப்பு 29.03.1929 இறப்பு 23.06.2018

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், காரைநகர் இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் வவுனியா நெளுக்குளம் அம்பிகைபாகன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சங்கரப் பிள்ளை நேற்று (23.06.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றகந்தையாபொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சுப்பிர மணியம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் சுசிலா தேவியின் அன்புத்தந்தையும் சுந்தரசிவத்தின் அன்பு மாமனும் கோகிலன் (மருத்துவபீட மாணவர், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) விதுசன் (மாணவர் வ/ தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இல.07, அம்பிகைபாகன் தோட்டம், நெளுக்குளம், வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 6353 502**

# மழைக்காலம் வந்துவிட்டால் விழிப்புடன் இருங்கள்

பா. பாலாஜினி

மழை இல்லையே, எங்கினும் வறட்சி கூடி எம்மை வாட்டுகின்றதே என்ற நிலை இப்போது இல்லை சிறிது காலத்துக்கு முன் மக்களுக்கும், மிருகங்களுக்கும் குடிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்கும் நீரின்றி அல்லல்படும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அதற்குக் காரணம் பல்வேறு தேவைகளின் காரணமான நிலத்தடி நீரானது எம் மக்களால் அதிகளவுக்கு வெளியேற்றப்படுகின்றமையே. இன்று கிணறு ஆழ்துளைக் கிணறுகளின் மூலமாக நீரை வெளியே எடுப்பதற்கான பல்வேறு நவீன ரக வசதிகள் காணப்படுகின்றன. இதுதான் நிலத்தடி நீர் குறைந்து செல்கின்றமைக்கு காரணம். அதனாலேயே வறட்சிக் காலத்தில் நீருக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது.

ஆனால் திடீரென அந்தநிலை மாறி. வீடு வாசல் எல்லாம் மழை வெள்ளம் நிரம்பி வழிகின்றது. அதனால் வறட்சி நீங்கிவிட்டது. மரம் செடி கொடிகளும் இனி வாடி வதங்கத் தேவை இல்லை. செழிப்பாக வளர முடியும் என்ற நிலை வந்து விட்டது. ஆனாலும் அதி கூடிய மழையால் விவசாயப் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பமும் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. சில பிர தேசங்களில் வெள்ளப் பெருக்கால் மக்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்தவரை மேல்மாகாண மற்றும் அதனை அண்டிய சற்று மலைப்பாங்கான இடங்களிலும் தான் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு முதலிய அனர்த்தங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. கொழும்பையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு காரணம் திட்டமிடப்படாத நகர குடியமர்வுகளும் கட்டடங்களுமே. கொழும்புப் பிரதேசத்தின் சனத்தொகைப் பெருக்கம் காரணமாக நீர் தேங்கி நிற்கின்ற நிற்கக்கூடிய பள்ளமான பிரதேசங்களில் எல்லாம் மண் இட்டு நிரவி இன்று கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. அத்துடன் மழைநீர் வடிந்து செல்கின்ற பாதைகளும் இதனால் த்டை செய்யப்படுகின்றன. இவற்றின் காரணமாகவே அப்பிரதேசங்களில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு நிகழ்கின்றது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை இதற்கான அனர்த்த வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஏனெனில் எமது தரைத்தோற்றம் இவ்வாறான நிலமைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையிலேயே அமைந்து காணப்படுகின்றது. ஆனாலும் மழைக்காலங்களில் ஏற்படக்கூடிய சில அசாதாரண சூழ்நிலைகள் எல்லா இடங்களுக்கும் பொதுவாகவே காணப்படுகின்றன. அந்த சிக்கலான சூழ்நிலைகளில் இருந்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வீட்டில் உள்ள பெரியவர்களே உங்கள் குழந்தைகளை இந்நேரத்தில் மிகக் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். மழைக்காலம் உங்களுக்கும் உங்கள் குழந்தை களுக்கும் பேராபத்துக்களை உண்டாக்கியும் விடும் பின்வரும் விடயங்களில் அவதானமாக இருங்கள்.



மாரி
காலங்களில்
பகல் குறைவாகவும் இரவு
நீட்சி உடையதாகவும் காணப்படும்
எம்மில் பலருக்கு இவ்வேளையில்
தர்ன் அதிகமாக பசி எடுக்கும் குளிர்
நிறைந்த சூழலானது அவ்வாறான ஓர்
உணர்வை எமக்குள் தூண்டிவிடுகின்றது.
ஆனால் பல விடயங்களின் சிக்கலான
தன்மை காரணமாகவும் உடலும் மனமும்
இந்நேரத்தில் ஒத்துழையாமையின்
காரணமாகவும் உணவை சமைப்பதற்கு
நாம் பின்னிற்பது வழமையே. எனவே
இவ்வாறான வேளைகளில் நாம்
பசியை தீர்த்துக் கொள்வதற்காக
உலர் உணவுப் பொருள்களைத்
தயாராக வைத்திருத்தல்
வேண்டும்.

**போக்குவரத்து**

மழைக்காலத்தில் போக்குவரத்தில் அவதானமாய் இருத்தல் வேண்டும். நீங்கள் பயணம் செய்யும் பாதை குறுகிய சந்துகளை உடைய ஒழுங்கைகளாகவும் இருக்கலாம் பெரிய தெருக்களை கொண்ட பெருவீதிகளாகவும் இருக்கலாம். எந்த வீதியாக இருந்தாலும் அங்கு மழை நீர் தேங்கிக் காணப்படும். சில நேரங்களில் வீதிகளில் காணப்படும் மின்கம்பங்க ளில் இருந்து மின்கம்பிகள் அறுந்து அம்மழை வெள்ளத்தினுள் மறைந்திருக்கும் நீரானது மின்னைக் கடத்தும் இயல்பினை உடையது. இதனால் அவ்வழியால் பயணம் செய்வர்கள் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படும். மேலும் குண்றும் குழியுமான வீதிகளில் மழைநீர் தேங்கி நிற்கும் போது அவ்வாறான ஏற்ற இறக்கங்கள் கண்ணுக்கு தென்படாது. எனவே இவ்வாறான நிலையில் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களாக இருக்கட்டும், அல்லது பாதசாரிகளாக இருக்கட்டும் யாராக இருந்தாலும் அவர்கள் பாதகமான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும். இவற்றைவிட மழை வெள்ளத்தில் வேறு அசாதாரண பொருள்களும் கூட அடித்து வரப்படக் கூடும். எனவே இவ்வாறான நிலைமைகளில் மிகுந்த முன்னாயத்துடன் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக சிறு குழந்தைகளை வைத்திருப்பவர்கள் மற்றும் சிறுவர்கள் போன்றோரை பாதுகாப்பில்லாது வெளியில் நடமாட விடுதலை தவிர்த்தல் நன்று.

**விஷ ஜந்துகளின் விபரீதம்**

மழைக்காலம் ஆரம்பித்துவிட்டால் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துவிடும். தமது வளைகள், பொந்துகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு மனித வசிப்பிடங்களில் அவையும் வாசம் செய்ய ஆரம்பித்துவிடும். உருண்டு தவழ்கின்ற சிறு பிள்ளைகள் அவற்றையும் தமது விளையாட்டுப் பொருள்களாக எண்ணி நெருங்க ஆரம்பித்துவிடுவார்கள். அத்துடன் மழைக்காலத்தில் நாம் அணியும் ஆடைகளில் நன்கு கவனமாக இருத்தல் வேண்டும். இந்த விஷ ஜந்துக்கள் ஆடை ஓரங்களில் ஒட்டிக் கொண்டு இருந்து விடும். அவ் ஆடைகளை நாம் அணிந்து கொள்ளும் போது எங்களைத் தீண்டிவிடும். அதன் விசம் பரவும்போது அது எம்மை மரணம் வரை கூட கொண்டு சென்று விட்டு விடும். எனவே மழைக்கலாம் நெருங்கும் போது வீட்டுக்குள்ளும், வெளிச்சூழலிலும் உள்ள குப்பை மற்றும் மாசுக்களை அகற்றி தெளிவான இடங்களாக அவற்றை வைத்திருத்தல் வேண்டும். அதிலும் குறிப்பாக குளியலறை, மலசலகூடம் போன்றவை முக்கியமானவை ஆகும். எப்போதும் திறந்து கொண்டு விழிப்புடன் இருத்தல் வேண்டும். நீங்கள் இரவில் நிம்மதியாக உறங்குகின்ற மெத்தைகள் படுக்கைகளுக்கு இடையிலும் கூட இவை ஒழிந்திருக்கலாம். கவனமாக இருங்க வேண்டும்.



**குடிதண்ணீர்**

மழைக்காலம் தொடங்கிவிட்டால் ஏனோ நோய்த்தொற்றுக்களும் அதிகரித்து விடுகின்றன. கிருமிகள் அதிகமாக பரவ ஆரம்பித்து விடுகின்றன. வயிற்றோட்டம், வாந்திபேதி, சிரங்கு மலேரியா, போன்ற நோய்களை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். நீங்கள் கிணற்றில் இருந்தோ அல்லது குழாய் நீரின் வழியாகவோ உங்களுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்கின்ற ஒருவராக இருக்கலாம். சிலரது வீட்டுக்கிணறுகளை அவதானித்துப் பாருங்கள். மழைக்காலத்தில் அக்கிணறுகளில் வெளித் தண்ணீர் புகுந்துவிடும். இதனால் கிணற்று நீர் அசுத்தமடைந்து அதனுள் கிருமிகள் பெருகிக் காணப்படும் மேலும் குழாய் மூலமான நீர் ஆனது எப்போதும் சுத்தமானதாகவே இருக்கும் என்று நம்பிவிட முடியாது. சில வேளைகளில் வடிகால் ஒழுங்கமைப்பு சீராக செய்யப்படாதவிடத்து அந்நீருடன் கழிவு நீர் கலப்பதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன. எனவே நீரை சுட வைத்து அருந்துவது நல்லது. அத்துடன் கிணறுகளில் மழைநேரங்களில் நீர் நிரம்பிக் காணப்படும். எனவே சிறுபிள்ளைகளை அவற்றுக்கு அருகே விடுவதனை தவிர்ப்பது சாலச்சிறந்தது.

**உணவுத் தேவை**

மாரி காலங்களில் பகல் குறைவாகவும் இரவு நீட்சி உடையதாகவும் காணப்படும் நம்மில் பலருக்கு இவ்வேளையில் தான் அதிகமாக பசி எடுக்கும் குளிர் நிறைந்த சூழலானது அவ்வாறான ஓர் உணர்வை நமக்குள் தூண்டிவிடுகின்றது. ஆனால் பல விடயங்களின் சிக்கலான தன்மை காரணமாகவும் உடலும் மனமும் இந்நேரத்தில் ஒத்துழையாமையின் காரணமாகவும் உணவை சமைப்பதற்குநாம் பின்னிற்பது வழமையே. எனவே இவ்வாறான வேளைகளில் பசியை தீர்த்துக் கொள்வதற்காக உலர் உணவுப் பொருள்களைத் தயாராக வைத்திருத்தல் வேண்டும். பிஸ்கட் உடனடி நூடில்ஸ், நிலக்கடலை, போன்ற பைக்கற்றில் அடைக்கப் பட்ட பொருள்களை தேவையான அளவு கொள்வனவு செய்து வைத்திருங்கள்.

**வெளிச்சம்**

மழைக்காலத்தில் இலங்கை மின்சார சபை உங்களை அடிக்கடி வஞ்சித்த வண்ணம் இருக்கும். மழையுடன் சேர்ந்தே வருகின்ற காற்றும் அக்காற்றால் எற்படுகின்ற விளைவுகளும் மின்கம்பங்களை பாதிப்படையச் செய்துவிடும். எனவே மின்சாரம் எப்போது தடைப்படும் என்று யாராலும் சொல்லிவிட முடியாது. மின்சாரம் இல்லாவிடில் இன்றைய உலகில் பெரும் வேதனையாகிவிடும். விஷ ஜந்துக்களை விட திருடர்களின் உலாவுகை அதிகமாக காணப்படும். எனவே இவற்றில் இருந்து விடுபட்டுக் கொள்வதற்காக வேறு வெளிச்ச வழங்கிகளை நாம் தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

**வேறு விடயங்கள்**

இவற்றை விட இன்னும் பல விடயங்களில் நாம் அவதானமாக இருக்க வேண்டும். உடனுக்குடன் காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஊடக வசதிகளை நாம் எற்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். ஏனெனில் மழை வந்துவிட்டால் அதனுடன் இணைந்த வகையில் தாழமுக்கம் புயல், மண்சரிவு, வெள்ளப் பெருக்கு என்பன ஏற்படுவது இயற்கையே. இவற்றில் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். மழைக்காலத்தில் குறிப்பாக நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக காணப்படும். மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்களை அப்புறப்படுத்தி அவற்றை இல்லாது செய்திடல் வேண்டும். அத்துடன் அனர்த்தங்களின் போது செய்யக்கூடிய முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் அறிந்திருத்தல் அவசியமாகும். மேற்கூறப்பட்ட விடயங்களை அவதானித்து செயற்படுங்கள் உங்கள் வாழ்க்கையின் பாதுகாப்பு உங்கள் கைகளில் தான் உள்ளது மழைக்காலத்தில் உங்களையும் உங்களை சார்ந்தவர்களையும் பத்திரப்படுத்தி கொள்ளுங்கள். விபரீதங்கள் எப்படியும் வரலாம். தயாராக இருங்கள்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# குண்டுகளின் பின்னணி என்ன?

ஒருபுறத்தில் கோத்தபாய ராஜபக்ச நாட்டின் பாதுகாப்பு மோசமாகிவிட்டது, பலமான அரசில் தலைமை இல்லாததால்தான் இத்தகைய நிலமை என்கிறார். மறுபுறத்தில் புத்தம்புதிய புலிச் சீருடைகள் மற்றும் கிளைமோர் குண்டுடன் சிலர் முல்லைத்தீவு ம ாவட்டம் ஒட்டுசுட்டானில் கைது செய்யப்படுகிறார்கள். இவையெல்லாம் தற்செயலாகத்தான் நிகழ்கின்றனவா?

போர் முடிந்த பின்னர் விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி என்று வெளி உலகுக்குக் காட்டத்தக்கதாக நடந்த 5ஆவது சம்பவம் இது. இதுவரை அனேகமாக எல்லாச் சம்பவங்களிலும் சந்தேகநபர்களையும் அவர்களது நடவடிக்கைகளையும் பொலிஸார் தற்செயலாகத்தான் கண்டறிந்தார்கள்.

போருக்குப் பின்னரான காலத்தில் அப்பன், கோபி ஆகியோர் சுட்டுக்கொல்லப்படக் காரணமாக இருந்த சம்பவம் விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சிக்கான பெரும் முயற்சி முறியடிப்பு என்று பரப்புரை செய்யப்பட்டது. இது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் நடந்தது. அதனால் இந்தப் புரட்சியின் பின்னணியல் இருந்தார்கள் எனக் கூறப்பட்ட மூன்று முக்கிய சந்தேகநபர்களும் கைது செய்யப்படாமல் கொல்லப்பட்டார்கள். எனவே உண்மை என்ன என்பது மக்களுக்குத் தெரியவரானமலேயே போனது.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தின் மறவன்புலவு பகுதியில் தற்கொலை அங்கி, வெடிமருந்து என்பன மீட்கப்பட்டன. அவை தொடர்பான விசாரணைகளும் அவற்றின் உண்மைகளும்கூட இதுவரையில் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்தச் சம்பவம் குறித்து விசாரித்த அதிகாரிகள், வெளிநாடு ஒன்றில் இருக்கும் இராணுவப் புலனாய்வாளர் ஒருவரால் இந்தச் சந்தேகநபர்கள் இயக்கப்பட்டார்கள் என்று கண்டறிந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட மேலிடத்து அழுத்தத்தால் அந்த விசாரணை அப்படியே கிடப்பில் போடப்பட்டது என்கிற தகவல்களும் உண்டு.

அதன் பின்னர் மன்னாரிலும் இதுபோன்றே குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை இலக்கு வைத்தார்கள் என்று சொல்லப்படும் சந்தேநபர்களும் கிளிநொச்சியில் கைது செய்யபப்ட்டார்கள். இவர்களுக்கு எதிரான வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இவ்வாறான ஆயுத மீட்புகள் மற்றும் கைதுகளின்போது அது குறித்த தகவல்கள் தற்போதைய அரச தலைவர்களை அடைய முன்னரே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக் ஷவை அடைந்துவிடுகின்றன என்பதும் இங்கு கூர்ந்து அவதானிக்கப்படவேண்டியது. நேற்றுமுன்தினம்கூட ஒட்டுசுட்டானில் கைது செய்யப்பட்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரனைக் குறி வைத்துத்தான் செயற்பட்டார்கள் என்று மகிந்தவே சுமந்திரனிடம் தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய பின்னணியில் தற்போது கைது செய்யப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்கள் என்று அவர்களின் கிராம மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. இதுவும் அக்கறை காட்டவேண்டிய செயற்பாடு. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீள் உருவாக்கமும் அப்படி அந்த இயக்கம் உருவாவதால் யாருக்கு தற்போதைய சூழ்நிலையில் அதிக லாபம் என்பதும் இந்த விவகாரத்தில் கூட்டிக் கழித்துப் பார்ப்பதற்குரிய விடயங்கள். இந்தப் பின்னணியில், வெடிகுண்டுகளுடன் கைது செய்யப்படுபவர்களுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் இருக்கும் உறவு நாட்டின் பாதுகாப்பு என்பதையும் தாண்டி அக்கறைகாட்டப்படவேண்டிய விடயம்.

அத்தோடு எந்தவொரு சம்பவமும் நடப்பதற்கு முன்னர் அவை எல்லாம் எப்படித் தற்செயலாகப் பொலிஸாரிடம் மாட்டிக்கொள்கின்றன என்பதும் இவற்றுடன் இணைத்து நோக்குவதற்குரியனவே!

தெற்கில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக, சிங்கள மக்களுக்குப் புலிப் பீதியைக் கிளப்புவதற்கு ஏதுவாக இத்தகைய சம்பவங்கள் ஒரு சீரான கால இடைவெளியில் உருவாக்கப்படுகின்றனவா என்கிற கோணமும் ஆராயப்படவேண்டும்.

# இலங்கையர்களது அரசியலும் பாதாள உலகக் குழுக்களது கிரக மாற்றமும்

சிங்கள மூலம்:- பேராசிரியர் நாலக கொடஹேவா (மல்பிம)
தமிழில்- வீ.எஸ்.ரீ



அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பாக கடந்த மகிந்த அரசின் காலத்தில் அரச சேவையில் கடமையாற்றிய குறிப்பிட்ட சில அதிகாரிகளுக்கு எதிராக, இன்றைய கூட்டு அரசினால் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில், எதிரிதரப்பு வழக்கறிஞரொருவர் வழக்கை விசாரணை செய்த நீதிபதியிடம் "பிரபுவே, இலங்கைச் சட்டங்களுக்கமைய வழக்கொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அதற்கான முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். எனது சேவை பெறுநருக்கு எதிராக முதலாவது முறைப்பாட்டை மேற்கொண்ட நபரது பெயர் விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை எனக்கு உள்ளது" எனக் கோரிக்கை விடுத்தார்.

அரச தரப்பு வழக்கறிஞர், அவ்விதம் முறைப்பாடு மேற்கொண்ட நபர் குறித்து விவரத்தை வெளியிடப் பின்வாங்கியபோது, அத்தகைய முறைப்பாட்டுக்காரரது பெயர் விபரத்தைத் தெரிந்து கொள்வதற்கான சட்டபூர்வ உரிமை எதிரி தரப்பினருக்கு உண்டென்பதால், குறித்த தகவலை வெளிப்படுத்தியே ஆக வேண்டுமென நீதிபதி தெரிவித்தார்.

அரச சட்டத்தரணியோ நீதிபதியை நோக்கி "பிரபுவே, அவ்விதம் முறைப்பாட்டுக்காரர் தரப்பேதும் இல்லை. இது அனாமதேய முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் என நான் அறிகிறேன்" என்றார்.

### முறைப்பாடு இன்றி விசாரணைகளை ஆரம்பித்து நடத்துவது சட்டப்படி செல்லுபடியாகாது என வாதம் முன்வைப்பு

"நாமறிந்த சட்டங்களின்படி, பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அதற்கான முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதற்கும் மேலாக அந்த முறைப்பாட்டை மேற்கொள்ளும் நபரது பெயர், விலாச விவரங்கள் பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். தமது முறைப்பாடு உரிய விதத்தில் தவறோ, மாற்றமோ இன்றி முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதை வாசித்து உறுதிப்படுத்திக் கொண்டதாக குறித்த முறைப்பாட்டுப் புத்தகத்தில் முறைப்பாட்டை மேற்கொள்பவர் கையெழுத்திட வேண்டும். அப்படியல்லாது நேரடியாக பொலிஸ் விசாரணையொன்று ஆரம்பிக்கப்படும்போது பொலிஸ் தரப்பின் உயர் அதிகாரியொருவர் அதற்கான உத்தரவை வழங்கி அதற்கான பொறுப்பையும் தாமே ஏற்றாக வேண்டும். அப்படியானால் பொலிஸ் தரப்புக்கா இந்த அனாமதேயக் கடிதம் கிடைக்கப்பெற்றது?" என எதிரிதரப்பு வழக்கறிஞர் வினா எழுப்பினார்.

இல்லையில்லை; குறிப்பிட்ட முறைப்பாடு தலைமை அமைச்சரது அலுவலகத்தில் நிறுவப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்டுள்ள ஊழல் தடுப்புக் குழுவால் அனுப்பப்பட்டதொன்று. அவர்கள் தான் பொலிஸ் தரப்புக்கு குறித்த முறைப்பாட்டை அனுப்பியிருந்தனர்" என அரச சட்டத்தரணி விளக்கம் தெரிவித்தார்.


ஆயினும் எதிர்தரப்புச் சட்டத்தரணி, அரச சட்டத்தரணியின் குறித்த பதிலை ஏற்றுக்கொள்ளாது அரச சட்டத்தரணியை நோக்கி "தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நிறுவப்பட்டிருந்ததாக நீங்கள் கூறும் குழு, அரசியல்வாதிகள் சிலர் இணைந்து உருவாக்கிய சட்டபூர்வமற்ற குழுவொன்றாகும். அது ஒருபோதுமே சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதில்லை. அது அமைச்சரவையின் அனுமதி மூலமோ, அல்லது நாடாளுமன்ற சட்டமொன்றின் மூலமோ நிறுவப்பட்டதொன்றல்ல. அத்தகையதொரு குழுவிடமிருந்து கிடைத்ததாகக் கூறி பொலிஸ் தரப்பு குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு விசாரணைகளை ஆரம்பிக்க இயலும்?" எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்காக உரிய பதில் வழங்கப்படாதபோதிலும், குறித்த வழக்கு தற்போதும் விசாரிக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட தகவல், சம்பவம் உண்மையாக இடம்பெற்ற சம்பவமொன்றே. இன்றைய கூட்டு அரசின் நிர்வாகத்தில் நாட்டின் சட்டங்கள் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம் மட்டுமே.

### தமக்கு எதிரான அரசியல் தரப்பினருக்கு பாடம் கற்பிக்கப் போவதாக 1977 நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் ஜே.ஆர்.கூளுரை

"நான் அதிகாரத்துக்கு வந்ததும், இதுவரை நாட்டை நிர்வகித்து வந்து கூட்டு முன்னணி அரசின் ஆதரவாளர்களுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுப்பதற்காக, சட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்த அரச நிறு வனங்களுக்குஒரு வாரகால விடுமுறை வழங்குவேன்" என 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின் போது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பகிரங்கமாகவே தெரிவித்து வந்திருந்தார். அவ்விதமே அந்தப் பொதுத்தேர்தல் மூலம் அவர் அதிகாரத்தைக் கைப்பற்றியதும், அரசின் கொள்கையே எதிர்தரப்பினரை இம்சைப்படுத்துவதுதான் என்ற விதத்தில் ஆகிப் போனது. ஜே.ஆரினது எதிர்வுகூறல் நிஜமாகிப்போயிற்று.

'ராவய' சிங்கள அச்சு ஊடகத்தின் முன்னாள் ஆசிரியர் விக்டர் ஐவன் தாம் எழுதி வெளியிட்ட 'சவுர ராஜ்ஜிய' (திருடர்களது அரசு) என்ற தலைப்பிலான நூலில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் ஆச்சரியம் அளிப்பவை. குறித்த பொதுத் தேர்தலின் முடிவுகள் வெளியான 1977ஆம் ஆண்டின் ஜீலை மாதம் 22ஆம் திகதியன்றே அரசியல் படுகொலைகள் என்ற வகையில் ஆறுபேர் கொல்லப்பட்டனர். முதல் ஒரு வாரகாலத்துள் மட்டும் கொழுத்தப்பட்ட வீடுகள், தாக்கப்பட்ட பொதுமக்கள், கொள்ளைச் சம்பவங்கள் என்ற வகையில் 1400சம்பவங்களுக்கு மேல் பதிவாகின. முதல் ஒருமாத கால முடிவுக்குள் அரசியல் காரணங்களுக்காக சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட மற்றும் இடமாற்றத்துக்கு உள்ளான சம்பவங்களில் ஒரு இலட்சம் வரையான அரச ஊழியர்கள் பாதிப்புக்கு உள்ளாக நேர்ந்தது. நாட்டின் வடபகுதியில் ஐ.தே.கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்களைப் பழி வாங்கும் நோக்கில் தொடங்கி வைக்கப்பட்ட நடவடிக்கைகள் கடைசியில் இனக் கலவரமாக உருவெடுத்துத் தமிழ் மக்களுக்குப் பெரும் நாசத்தை ஏற்படுத்தி வைத்தன. அந்த வகையில் நாட்டின் வடபகுதியிலும், மலைநாட்டின் இந்தியத் தோட்டத் தொழிலாளர் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்கள், கொள்ளைகள், வீடெரிப்புக்கள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் என்பவற்றுடன் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் அந்தக் கலவரத்தில் உயிரிழக்கவும் நேர்ந்தது. ஐ.தே.கட்சியின் 17ஆண்டுகள் கால பயங்கர ஆட்சியின் ஆரம்பமே இவ்விதம் இனக் கலவரத்துடனேயே ஆரம்பித்தது. குறித்த அந்த 17ஆண்டுகள் கால ஐ.தே.கட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் அந்தப் பயங்கர யுகத்தில் தமிழ் மற்றும் சிங்களவர் என்ற பேதமின்றி 70ஆயிரம் வரையிலான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலையுற நேர்ந்தது.



**1977ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் வேளையிலேயே பாதாள உலகக் குழுக்கள் அரசியலில் சம்பந்தப்படுத்தப்பட்டன**

பாதாள உலகக் குழுக்கள் அரசியலில் சம்பந்தப்பட ஆரம்பித்ததும் குறித்த 1977ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் சமயத்திலேயே ஆகும். எதிர்தரப்பினரை அச்சுறுத்தவும், அவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதைத் தடுக்கவும் அரசியல்வாதிகள் இந்தப் பாதாள உலகக் குழுவினரைப் பயன்படுத்திக் கொண்டனர். பிரபல அரசியல்வாதிகள் பலர், முக்கிய பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களுடன் நேரடித் தொடர்புகளை பேணிவந்ததாக விக்டர் ஐவன் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக ஜே.ஆரது ஆட்சிக்காலத்தில் பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவனான கோனவல சுனில் சிறைத் தண்டனைக்கு தீர்ப்பிடப்பட்டிருந்த நிலையில் ஜே.ஆரின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சரொருவர் ஜே.ஆர் ஊடாக அவனுக்குப் பொது மன்னிப்பு வாங்கிக் கொடுத்து அவனைத் தண்டனையிலிருந்து காப்பாற்றியிருந்தார். வேடிக்கையென்னவெனில், பின்னாளில் அந்தக் கோனவல சுனில் என்ற பாதாள உலகக் குழுத் தலைவன் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டமையாகும். அதே போன்று, ஆர்.பிரேமதாச நாட்டின் அரச தலைவராகப் பதவி வகித்த காலகட்டத்தில் பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவனாகவிருந்த சொத்தி உபாலி என்பவன் பிரேமதாசவுடன் மிக நெருங்கிய வகையில் செயற்பட்டதாகக் கூறப்பட்டது. அந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு அந்த வேளையில் வேடிக்கைக்கு உரியதொன்றாகக் காணப்பட்டது. நாட்டின் வடக்கிலும், தெற்கிலும் இளைஞர்கள் எழுச்சி உருவாகி அது ஆயுதம் ஏந்திய பயங்கரவாதம் என்ற அளவுக்கு வளர்ச்சி கண்டதன் மூலம் மூன்று தசாப்த காலத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களை இழக்கவும், கோடிக் கணக்கான சொத்துக்கள் நாசமடையவும் அடிப்படைக் காரணமாய் அமைந்ததே, ஜே.ஆரினதும், பிரேமதாசவினதும் நிர்வாக காலத்தில் அரசியல் தலைமைகள் காட்டிவைத்த மேற்குறித்த தவறான முன்னுதாரணங்களே ஆகும்.



மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும், இன்றுவரை குற்றவாளிகளால் ஒப்புக்கொள்ளப்படாத சில படுகொலைச் சம்பவங்கள், சில தாக்குதல் சம்பவங்கள் மற்றும் சில ஆள்கடத்தல் சம்பவங்கள் என்பவை உலக மகா குற்றங்கள் எனப் பொதுமக்களுக்குக் கூறி, அதிகாரத்துக்கு வந்த இன்றைய கூட்டுஅரசு, வேறு வழிகளில் முன்னைய அரசின் பயண மார்க்கத்திலேயே தானும் பயணத்தை ஆரம்பித்துள்ளது. ஆரம்பத்தில் பாதாள உலகக் குழுவினரை முன்னிலைப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட, தமது எதிர்தரப்பினர் மீதான குற்றச் செயற்பாடுகள் பின்னர் அரசதரப்பு உயர்மட்டங்கள் சம்பந்தப்படும் சம்பவங்களாக ஆகியதுடன் தற்போது அவற்றின் அணுகுமுறை மட்டுமே மாற்றம் அடைந்துள்ளது.

**இன்றைய கூட்டு அரசும், முன்னைய மகிந்த அரசின் பாணியிலேயே செயற்பட முனைந்தது**

இன்றைய அரசும்கூட அதிகாரத்துக்கு வந்த கையுடனேயே முதலில் நாட்டின் அபிவிருத்தி குறித்துச் சிந்திப்பதற்குப் பதிலாக தமது எதிர்தரப்பு அரசியல்வாதிகளை அரசியல் அரங்கிலிருந்து முற்றுமுழுதாக வெளியேற்றும் திட்டத்தை முன்வைத்தே செயற்பட ஆரம்பித்தது. துரதிஷ்ட வசமாக நாட்டின் பொதுமக்களில் பெரும்பாலோர் அந்த வேளையில் இன்றைய அரசின் அந்த நயவஞ்சகத் திட்டத்துக்கு, நாடகங்களுக்கு 'விசில்' அடித்து உற்சாகப்படுத்த தயாராக இருந்தனர். "வேறு எதையும் நாம் புதிய அரசிடம் எதிர்பார்க்கவில்லை. முதலில் முன்னைய அரசிலிருந்து கொண்டு திருட்டுக்களை மேற்கொண்ட திருடர்களைக் கைது செய்யுங்கள்" எனச் சில இளைஞர்கள் தமது முகநூல் பக்கங்களில் பதிவிட்டிருந்தனர். அந்த இணக்கப்பாட்டின் ஒரு பகுதியான வேறு எதனையும் செய்யாது புதிய அரசு அந்த ஒன்றைமட்டுமே செய்யுமாறான கோரிக்கையில் முதல் பகுதியை மட்டும் அரசு நிறைவேற்றி வைத்தது. அதாவது எந்தவொரு திட்டத்தையும் உருப்படியாக செய்யாது அரசு காலத்தைப் போக்கும் விதத்தில் செயற்பட்டுள்ளது. கடந்த மூன்றரை ஆண்டுகள் கால ஆட்சியில் கூட்டு அரசு நாட்டுக்கு எதனையும் செய்துவிடவில்லை என்பது மிகத் தெளிவான ஒன்று.



இந்த அரசு பதவியேற்ற வேளை 7வீதத்துக்கும் கிட்டவாக இருந்த அபிவிருத்தி வேகம் கடந்த ஆண்டில் 3.1வீதமாக வீழ்ச்சி கண்டது. நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நிலையில் இருந்த அரசு, வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் நிலைக்கு உள்ளாகியுள்ளது.

இரண்டு இலட்சம் வரையான தொழிலாளர்கள் தமது தொழில்களை இழக்க நேர்ந்துள்ளமைக்கும், நாட்டின் செலுத்தப்படாத கடன்தொகை 3கோடி இலட்சம் ரூபாவரை உயர்ந்தமைக்கும் நாட்டின் ஒட்டுமொத்த நிர்வாகக் கூட்டமைப்பு செயலற்றுப்போயுள்ளமையே காரணமாகும். அதுமட்டுமன்றி திருடர்கள் அடுத்த வீட்டில் இல்லை. அரசுக்குள்ளேயே பெரும் திருடர்கள் உள்ளனர் என்பது இன்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் அரசு ஆரம்பித்துள்ள ஒரே செயற்பாடான திருடர்களைக் கண்டுபடித்துக் கைது செய்தல் என்பது இன்று நகைப்புக்கு உரியதொன்றாக ஆகிவிட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி என்பதற்கு மேலதிகமாக அரசு நாட்டின் பொதுமக்கள் தொடர்பாக உரிய பாதுகாப்பை வழங்க வேண்டிய பொறுப்பையும் கொண்டுள்ளது. கடந்த அரசால் 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத அச்சுறுத்தல் கடந்த அரசால் எந்த அளவுக்கு வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்ட தென்பதற்கு இறுதிப்போரின் பின்னரான இந்த 9ஆண்டுகளிலும் நாட்டில் எத்தகையதொரு பாரதூரமான பயங்கரவாதச் செயற்பாடுகளும் இடம் பெறாததன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் போர்முடிவுக்கு வந்து ஓராண்டோ, இரண்டு ஆண்டுகளோ கழிந்த நிலையில் நாட்டின் பாதுகாப்புக்கு மற்றொரு விதத்தில் அச்சுறுத்தல் ஏற்படும் நிலையொன்று உருவாகியது. போரின் போது இருதரப்புக்களாலும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி வெவ்வேறு பாதாள உலகக் குழுக்கள் தோற்றம் பெற்றன. கொலை, ஆள்கடத்தல், கப்பம் பெறுதல் போன்ற சட்டரீதியற்ற செயற்பாடுகள் நாட்டின் பல பகுதிகளிலும் தலைதூக்கின. அத்தகைய நிலை நீண்ட காலம் நிலைக்கவில்லை. அரசு அத்தகைய பாதாள உலகக் குழுக்களை அழித்தொழிக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்தது. பல பாதாள உலகக் கோஷ்டிகளது உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். பலர் பொலிசாருடனான மோதல்களில் கொல்லப்பட்டனர். வேறுசிலர் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டளவில் பாதாள உலக கோஷ்டிகளது சட்டவிரோதச் செயற்பாடுகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

2015ஆம் ஆண்டின் அரசதலைவர் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமக்கு உதவும் பொருட்டு அரசியல்வாதிகள் சிலரால், முன்னர் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவழைக்கப்பட்டதாக பேச்சு அடிபட்டதுண்டு. 2015ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் இத்தகைய பாதாள உலகக் குழுக்களது உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவித்திருந்தன.

எந்தவொரு நாட்டிலும் சட்டம் ஒழுங்கு மீறப்படுமாயின், காலம் பிந்தியாவது அதனைக் கண்டுபிடித்து அதற்கெதிராக பொங்கியெழுந்து ஆட்சேபிப்பது நாட்டு மக்களது பொறுப்பாகும். அதற்கான நடவடிக்கை தாமதப்படுத்தப்படுமானால் காயங்கள் சுகப்படுத்த இயலாத அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அரசதரப்பு அரசியல்வாதிகள் மற்றவர்களைக் குறைகூறி விமர்சிக்காது, அச்சுறுத்தல் விடுக்காது, இடம்பெற்ற தவறுகளை நேர்சீர் செய்து சரிப்படுத்தும் வகையில், நிலைமை குறித்துப் பல்வேறு தரப்புக்களுடனும் கலந்துரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாட்டின் புத்திஜீவிகள் சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான காலம் தற்போது கனிந்துள்ளது. அதனை உரிய தரப்பினர்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வார்களா? ■

## ஆசிரியருக்கான கடிதம்

# உள்ளூர் கலைஞர்கள் வளர்வதற்கு உதவி செய்வோம்

ஆலயங்களில் வருட மகோற்சவங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இரவு நிகழ்வுகளாக கலைநிகழ்வுகள் முன்னொரு காலத்தில் நடைபெற்றன. தற்போது எங்கு பார்த்தாலும் இசைக்கச்சேரிகள்தான் பெரும்பாலும் நடைபெறுகின்றன. அதுவும் சிறிய ஆலயமோ பெரிய ஆலயமோ இந்தியப் பாடகர்களை அழைப்பது ஒரு "பாஷன்" ஆகிவிட்டது.

அவர்களுக்கு ஒருசில மணிநேர - ஒரு சில பாடல்களுக்காக பணம் வாரி இறைக்கப்படுகிறது. அத்துடன் இருவழி விமானச்சீட்டு தங்குமிடவசதி மற்றும் பல ஆடம்பர வசதிகளுடன் அழைத்து வந்து நிகழ்வு நடத்துகிறார்கள். மறுபுறம் ஒலிபெருக்கிகளை வரிசையில் அடுக்கி அலறும் வகையில் ஒலியை ஏற்படுத்தி பாடலை ஒழுங்காக கேட்கவும் முடிவதில்லை. ஐந்து ஆறுகூட இல்லை. பத்து முதல் பதினைந்து "பொக்ஸ்" வைத்து அதிரும் வகையில் ஒலியைக் கூட்டி மனம் வெதும்ப வைக்கிறார்கள். இளைஞர்களில் ஒருசாரர் இதை விரும்பினாலும் சிறுவர், பெண்கள், பெரியவர்கள் என பெரும் இரசிகர்களை இவ்வாறான ஒலிபெருக்கி முறைகள் சிரமத்திக்குட்படுத்துகின்றன. எமது கலை பண்பாடு நிகழ்வுகள் உரிய வசதி வாய்ப்புக்களுடன் நடாத்தப்படுமானால் மக்களால் இரசிக்க வாய்ப்பு கூடும். ஆனால் நாடகமோ, நடன நிகழ்வுகளோ, வில்லிசை மற்றும் இசைக்கருவிகள் உட்பட கர்நாடக இசைக்கச்சேரிகள் என்பன ஏதோ பேருக்கு நடத்தப்படுவதால் இரசிகர்களைக் கவர்வதில்லை. இந்தியக் கலைஞர்கள் என்றவுடன் கூட்டம் அலைமோதுகிறது. உண்மையில் போதிய பயிற்சி மற்றும் நவீன இசைக்கருவிகளை கையாண்டு எமது கலைஞர்கள் நிகழ்வுகளை வழங்கினால் இதுபோன்ற "பெரும் வீண்செலவு இறக்குமதிகளை" தவிர்த்து எமது கலைஞர்கள் வளர வாய்ப்பு உள்ளது.

இசை அல்லது பாடல் என்றால் கர்நாடக சங்கீதம் என்ற நினைப்புமாறி திரையிசை மற்றும் திரைப்பாடல்களைப் பாடிப் பயிற்சி பெறும் வகுப்புக்களை உரிய தரப்புக்கள் நடத்தினால் எமது பிள்ளைகளும் இந்திய பாடகர்களை போல மிளிர முடியும். யாருக்கோ கொட்டிக் கொடுக்கும் பணத்தை நவீன முறையிலான பயிற்சிகளைக் கொடுத்து எமது கலைஞர்களை ஊக்குவிப்பது எதிர்காலத்திலாவது பயன்தரும். அல்லது போனால் நாளையும் இந்திய பாடகர்களுக்கே வாரியிறைத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

*நா.துசாந்.*



370

# நித்திய சுகம்


உடலே கோயில்

# நோய் ஒன்றின் அறிகுறியான காய்ச்சலின் முக்கியத்துவம்

ந.ஸ்ரீசரவணபவானந்தன்

குழந்தைகளுக்கு ஏதாவது உடல்நிலை சரியில்லை என்றால் பெற்றோர் பயப்பட்டு வைத்தியரிடம் குழந்தையை உடனடியாக அழைத்துச் செல்வது இயல்பானதே. அதிலும் மிகப்பொதுவான உடல்நிலைக் குறைபாடு காய்ச்சல் என்பதேயாகும்.

சிலசமயங்களில் காய்ச்சல் தொடங்கியவுடனேயே பெற்றோர் குழந்தையை வைத்தியரிடம் கொண்டு செல்வதை அவதானிக்கலாம் அது நல்லதுதான். ஏனெனில் காய்ச்சலுக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றை கண்டறிய வேண்டும், ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளுக்கு காய்ச்சல் நிவாரணி மருந்தைத் தவிர (பரசிற்றமோல்) வேறுமருந்துகள் தேவைப்படுவதில்லை. முதலில் காய்ச்சல் என்பதை மருத்துவ ரீதியில் வரைவிலக்கணப்படுத்தினால், வெப்பநிலையானது உடல் வெப்பமானியில் அளவிடும்போது அது 100.4 பாகை பரனைட் அல்லது 38 பாகை செல்சியசைவிட கூடும்போதே ஆபத்து வருவிக்கக் கூடிய காய்ச்சல் உள்ளது எனலாம். ஒருவரது சாதாரண உடல் வெப்பநிலையானது 98.6பாகை பரனைட் அல்லது 37 பாகைசெல்சியஸ் ஆகும். எனவே உடல்வெப்பநிலை சாதாரணநிலையைவிட அதிகரிக்கும் போது குழந்தையின் உடல் வெப்பநிலையை அடிக்கடி சோதித்துப்பார்ப்பது நல்லது.



### காய்ச்சல் ஏற்படுவது என்பது நோய்களுக்கு எதிரான எதிர்விளைவே

காய்ச்சல் என்பது உடலில் ஏற்படும் நோய்களுக்கு எதிரான எமது உடலில் ஏற்படும் எதிர்த்தாக்கத்தின் விளைவேயாகும். எனவே கடும் காய்ச்சல் காணப்படும்போது நோயின் தாக்கம் அதிகமாகவுள்ளது எனத் தீர்மானிக்கலாம். குழந்தைகளைப்பொறுத்தவரையில், புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு காய்ச்சல் என்ன வெப்பநிலையில் இருந்தாலும் அதைப் பாரதூரமாகக் கருதி உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

வெப்பநிலையின் அளவைப்போல் காய்ச்சல் காணப்படும் காலமும் முக்கியமானதாகும். சாதாரணமாக ஏற்படும் வைரசு தொற்றுக்கள் 4 தொடக்கம் 5 நாள்களில் மாறிவிடும். எனினும் டெங்கு காய்ச்சல் அதிகமாக ஏற்படும் காலங்களில் இரண்டு நாள்களின் மேல் காய்ச்சல் காணப்படுமாயின் குருதிப் பரிசோதனை செய்தல் அவசியமாகும்.

### பாரதூரமான நோய்களுக்கான அறிகுறிகள் சில

ஒரு குழந்தைக்கு நீண்ட நாள்களுக்கு குறிப்பாக 7 நாள்களுக்கு மேல் காய்ச்சல் காணப்பட்டால் வைத்தியசாலையில் அனுமதித்தே சிகிச்சை வழங்க வேண்டும். முன்னர் கூறியவாறு காய்ச்சல் என்பது பலவித நோய்களின் ஓர் அறிகுறியாக அமைவதால் குழந்தைக்கு பாரதூரமானநோய் உள்ளது என்பதைப் பின்வரும் ஏனைய அறிகுறிகள் மூலம் தீர்மானிக்க வேண்டும்.


- குறிப்பிடத்தக்க அளவில் உணவு உட்கொள்ளாமை அல்லது பால் அருந்தாமை.
- பொதுவான உடல்நிலை காணப்படாமை சோர்வு, மயக்கம்
- வெளிறிய தோற்றம் அல்லது உடலின் சாதாரண நிறத்தில் மாற்றம்.
- கை, கால்கள் குளிர்வடைந்து காணப்படல்.
- அதிகமான வாந்தி வயிற்றோட்டம்.
- சிறுநீர்கழிக்கும் அளவு குறைவடைவதலும், சிறுநீர் கழிக்கும்போது எரிவு ஏற்படலும்.
- மூச்சுத்திணறல், மூச்சுவிட சிரமப்படல்.
- வலிப்பு ஏற்படல்.
- உடலில் அதிகமாக செம்புள்ளிகள் கொப்புளங்கள் அல்லது கருநீலநிற தளும்புகள் ஏற்படல்.
- அவயவத்தை அல்லது மூட்டை அசைக்க முடியாமையும் மூட்டு வீங்குதலும்.
- கடுமையான தலையிடியும், வாந்தியும்.
- கடுமையான வயிற்றுவலி.
- குருதியாக வாந்தி எடுத்தல் குருதி கலந்த மலங்கழித்தல் அல்லது முரசால் மூக்கால் குருதிக் கசிவு.

மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு செல்லவேண்டும்.

### பரசிற்றமொல் மட்டில் அவதானம் அவசியம்

காய்ச்சலை கட்டுப்படுத்த நாம் உடனடி நிவாரணியாக பரசிற்றமோல் எனும் மருந்தையே சாதாரணமாக பாவிக்கின்றோம்.

குழந்தைகளைப் பொறுத்தவரை நிறைக்கேற்றவாறு சரியான அளவில் பாவிக்க வேண்டும். அதிகளவில் பரசிற்றமோல் மருந்தை உட்கொண்டு ஈரல் பழுதடைந்து பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதை இப்போது நாம் காண்கின்றோம். மேலும் டெங்கு காய்ச்சலும் காணப்படுவதால்பரசிற்றமோல் தவிர ஏனைய காய்ச்சல் நிவாரண மருந்துகளை பாவிப்பது நல்லதல்ல.



சிலசமயங்களில் காய்ச்சலை குறைக்க அறை வெப்பநிலையிலுள்ள நீரால் நனைந்த துணியால் உடம்பைத் துடைக்கலாம். எனினும் குழந்தைகளுக்கு இந்த முறையானது காய்ச்சலைக் குறைப்பதையும் விட அசௌகரியத்தையும் ஏற்படுத்தும். எனவே காய்சலுக்கான சரியான காரணத்தைக் கண்டறிந்து அதற்கான உரிய சிகிச்சையை வழங்க வேண்டும். இறுதியாக குறைந்தபட்சம் எமக்கு தெரிந்திருக்கவேண்டிய விடயம் காய்ச்சல் குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற வேளையில் அது கடும் காய்ச்சலாக இல்லாதவிடத்தில் அதன் சாதாரண உடல்நிலை காணப்படுமாயின் அல்லது சாதாரண துடியாட்டம் தொழிற்பாடு காணப்படுமாயின் அதிகம் நாம் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் முன்னர் கூறிய ஆபத்தான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவேண்டும்.


*கட்டுரையாளர்: மருத்துவர் குழந்தைநல வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை.*

> காய்ச்சல் என்பது உடலில் ஏற்படும் நோய்களுக்கு எதிரான எமது உடலில் ஏற்படும் எதிர்த்தாக்கத்தின் விளைவேயாகும். எனவே கடும் காய்ச்சல் காணப்படும்போது நோயின் தாக்கம் அதிகமாகவுள்ளது எனத் தீர்மானிக்கலாம். குழந்தைகளைப் பொறுத்தவரையில், புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு காய்ச்சல் என்ன வெப்பநிலையில் இருந்தாலும் அதைப் பாரதூரமாகக் கருதி உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

சூரியகாந்தி
உதயன்



# ஞானசாரதேரர் எதிர் சந்தியா எக்னெலிகொட





கடந்த வாரமளவில் கைதாகியிருந்தார் ஞானசாரர். பின்னர் பிணையில் விடுதலையாகினர். நீதிமன்றத்தை அவமதித்தமை, சாட்சியை அச்சுறுத்தியமை ஆகிய குற்றங்களுக்காக அவருக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

அவருக்களிக்கப்பட்ட தீர்ப்பின் பின்பான புறச்சூழல் இயல்பாக இல்லை. அத்தோடு இந்தத் தீர்ப்பின் பின்னே பல அரசியல் சுழல்கள் உருவாகத் தொடங்கியிருக்கின்றன.

அரசுக்கு ஏகப்பட்ட நெருக்கடிகள்.

இந்த நிகழ்வு நீதிக் கட்டமைப்பையும், அரசையும், பெரும்பான்மைப் பலத்தையும் ஒரே தளத்தில் நிறுத்திப் பலப்பரீட்சை நடத்திப் பார்க்கிறது என்றும் சொல்லலாம்.

எது எப்படி இருப்பினும், ஆசார-அனுட்டானங்களைக் கடைப்பிடிக்கவேண்டிய நிலையிலுள்ள ஒருவர், அதற்கு முரணாகச் செயற்பாட்டு அதற்கான தண்டனையை அனுபவிக்க நேர்ந்தமை கவலைக்குரியதே.

கட்டுரை

வி. அருணாசலம்

பல வருடங்களுக்கு முன்பு கம்யூனிசக் கட்சியினரால் 'கம்கரு மாவத்த' என்று ஒரு பத்திரிகை வெளியிடப்பட்டது. 'கம் கரு' என்பது சிங்களத்தில் 'தொழிலாளர்'. 'மாவத்த' என்பது 'பாதை' என்று அர்த்தம். இந்தப் பத்திரிகை தமிழிலும் 'தொழிலாளர் பாதை' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இதை மக்கள் மத்தியில் விற்கும்போது தமிழ், சிங்கள இளைஞர்களும் இணைந்தே விற்பது வழக்கம். மலையகப் பகுதி ஒன்றில் இதை விற்றபோது, இரண்டு சிங்களவர்களும் ஒரு தமிழரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். சிங்களப் பத்திரிகையில் உள்ள விடயத்தைத்தான் தமிழில் எழுதியுள்ளார்கள் என்பதால் தமிழ் இளைஞருக்குப் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால், இரண்டு சிங்கள இளைஞர்களையும் பொலிசார் கடுமையாகத் தாக்கினார்கள். 'அவன் தமிழன். அவனுக்கு இந்த நாட்டில் பிரச்சினை உண்டு. உங்களுக்குஎன்னடாபிரச்சினை இருக்கு?' என்று கேட்டே தாக்கினார்களாம். இந்த விடயம்தான் புலிகளின் உத்தியோகபூர்வ சிங்களப் பத்திரிகையான 'தேதுன்ன' (வானவில்) பத்திரிகையின் தலைமை ஆசிரியராக இருந்த பிரகீத் எக்னலிகொடவுக்கும் நிகழ்ந்தது.

**அப்போதைய கடத்தலும், தற்போதைய கைதும்**

2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதியன்று (அரச தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர்) கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டார் பத்திரிகையாளர் எக்னலிகொட.

எக்னலிகொடவின் மனைவி சந்தியா தனது இரண்டு பிள்ளைகளுடன் மிகவும் வறுமைப்பட்ட சூழலில் காணாமலாக்கப்பட்ட தனது கணவனைத் தேடிப் போராடி வருகிறார். அவரை 25.1.2016அன்று கொழும்பு கோமாகம நீதிமன்றத்தில் வைத்து ஞானசாரதேரர் 'உனது கணவர் புலி' என்று அச்சுறுத்திப் பேசிய குற்றத்துக்காகவும், நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காகவுமே தற்போது சிறைத் தண்டனையை அனுபவித்துவருகிறார். அவரை விடுவிக்குமாறு பௌத்த அமைப்புக்களும், அரசியல்வாதிகளும் அழுத்தம் கொடுத்துவருகின்றனர்.

**பௌத்த அமைப்புக்களின் வேரூன்றல்**

இலங்கையில் காணப்படுகின்ற பௌத்தம் தேராவாதம், மகாயானம் என்ற இரண்டு பிரிவுகளை உடையது. மகாயான பௌத்தம் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்ததால் இலங்கையில் தேராவாத பௌத்தத்துக்கே அதிக முக்கியத்துவம் இருந்து வருகிறது.

பல்லவர் காலத்தில் இந்தியாவிலிருந்து இந்துக்களால் துரத்தப்பட்ட மகாயான தமிழ்ப்பௌத்த பிக்குகள் கடல் மார்க்கமாகக் கந்தரோடைப் பகுதிக்கு வந்து குடியேறினர். இந்தப் பிக்குகள் தமிழர் மீது கோபம் கொண்டவர்களாக இருந்தமையால் தமிழரைப் பௌத்த மதத்துக்கு இணைப்பதில் ஆர்வம் காட்டவில்லை. இந்தத் தமிழ்ப் பிக்குகளின் செயற்பாடுகள் பின்னர் ஜேதவனராமய (அநுராதபுரம்) விகாரையுடன் தொடர்பு பட்டதாக இருந்தது. மகாவிகாரையின் எழுச்சியின்பின்னர் தேராவாத பௌத்தமே இலங்கையில் அதிகம் செல்வாக்குப்பெற்ற மதமாக மாறியது. தேராவாத பௌத்த பிரிவேனாக்கள் (பௌத்த மதக் கல்வியைப் போதிக்கும் இடம்) பல எழுச்சியடைந்தன.

பௌத்த மதம் ஒருபுறமிருக்க சிங்கள பௌத்த தேசியவாதிகளின் எழுச்சி இன்னொரு பக்கத்தில் சிங்கள மக்களை விழிப்படைய வைத்தது. இதில் முதன்மை நபராகவும் பிரித்தானிய காலத்தில் மிக முக்கிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தியவராகவும் அநாகாரிக தர்மபால காணப்படுகிறார். பௌத்த மதத்துக்கு உறுதுணையாகச் செயற்படுகின்ற பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் பிக்குகளின் தலைமையிலும், தேசியவாதிகளான சிங்களவரின் தலைமையிலும் எழுந்தன. இந்த எழுச்சிக் குழுக்களுக்கு சிங்கள இனத்தினதும், பௌத்த மதத்தினதும் பூர்வீகப் பின்னணியிலேயே உள்ளனர்.

பௌத்த துறவிகளை அதிகம் உருவாக்குவதில் பிரிவேனாக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தேராவாத மதப்பிரிவை வளர்த்தெடுப்பதற்காகச் சிங்கள மக்கள் தங்கள் பிள்ளைகளில் ஒருவரைத் துறவியாக்கத் தயாராக இருப்பதும் அவர்களுக்கான கல்வியை வழங்கப் பல பிரிவேனாக்கள் தயாராக இருப்பதும் இங்கு தெளிவாகக் காணக்கூடிய ஒன்று.

தற்போது இலங்கை முழுவதிலும் 794பிரிவேனாக்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஒவ்வொரு தடவையும் 62ஆயிரம் இளம் பிக்குகள் கல்வி கற்கும் வசதிகள் உள்ளன. இவற்றில் மூன்று படிமுறைகளாகப் பௌத்த மதக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

**'மூலிக்க' (ஆரம்பக் கல்வி)**

இது ஐந்துவருட காலப்பகுதியைக் கொண்டது. பாளி, சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் என்பன கற்பிக்கப்படுகிறது.

**திரிபீடகக் கல்வி**

பௌத்த மதத்தின் மூல நூல், மற்றும் கணிதம் என்பன கற்பிக்கப்படுகின்றன. மேற்படிக் கல்வியில் உயர்வான






கல்வியைப் பெறுவது 'மகா' என அழைக்கப்படும் இந்தக் கல்வியில் ஏற்கனவே கற்றுத் தேர்ந்த பாடங்களை மேலும் விரிவாகக் கற்பதுடன் மேலதிகமாக மெய்யியல், மத வரலாறு, மொழியியல், ஆயுர்வேதம், வான சாஸ்திரம் ஆகியனவும் கற்பிக்கப்படுகின்றன.

மூன்றாவது நிலையில் மேலே குறிப்பிடப்பட்ட பாடவிதானத்தில் சித்தியெய்தியதும் உயர்கல்வியான பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியும்.

**சிறுபான்மையினர் ஒடுக்கப்படுதல்;**
**கத்தோலிக்கர் விதிவிலக்கு**

மதப்பிரிவுகளுடாகக் கற்றுத் தேறினும்

இந்த அமைப்புக்களின் முதன்மைச் செயற்பாடு இலங்கையின் தாம் தவிர்ந்த இனங்களை ஒடுக்குவதாகவே உள்ளது. இதில் முப்பது ஆண்டுகால ஆயுதப்போராட்டத்தில், வடக்குக் கிழக்குத் தமிழர் ஈடுபட்டிருந்ததால், தமிழர் மீது 'புலிகளை அழித்தல்' என்பதாக ஒடுக்குமுறைகள் இருந்தன. முஸ்லிம்கள் மீது பொருளாராதாரச் சுரண்டல் மற்றும் பசுவதைபோன்ற வழிகளில் ஒடுக்குமுறைகள் இருந்தன.

சிங்களவர்களில் கணிசமான அளவு மக்கள் கிறிஸ்தவர்களாகவும், பசு, பன்றி இறைச்சிகளை உண்பவர்களாக நீண்ட காலமாக இருந்து வருகின்றபோதிலும் அவர்களுக்கு எதிராக இந்தப் பௌத்த அமைப்புக்கள் கிளர்ந்து எழுவதில்லை. அதேவேளை கத்தோலிக்க மதத்தின் அதிமேற்று ராணியாரான மல்கம் ரஞ்சித் ஆண்டகை 'இலங்கையில் பௌத்த மதத்துக்கே முதலிடம்' என்பதை தான் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். அதை நோக்கிய சார்பு அணுகுமுறை ஒன்றையும் அவர் கையாண்டு வருகிறார்.

வத்திக்கானை மையமாகக் கொண்டுள்ள கத்தோலிக்கத்தை வீழ்த்துவதற்காக, உலகம் முழுவதும் கத்தோலிக்கத்துக்கு எதிரான 'இவான் சலிக்கல்' என்ற கிறிஸ்தவ மதச் செயற்பாட்டை அமெரிக்கா தூண்டி வருகிறது. ஐரோப்பாவின் கத்தோலிக்கத்தை முறியடித்துக் கிறிஸ்தவத்துக்கு அமெரிக்கா தலைமை தாங்கவேண்டும் என்பதே இதன் எதிர்பார்ப்பு அந்த வகையில் கத்தோலிக்கத்தைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் பௌத்தத்துடன் ஒத்துப்போக வேண்டிய கட்டாயதேவை கத்தோலிக்கர்களுக்கு இருக்கலாம்.

**இளம் பிக்குகளின் பெருக்கம் பெரும் ஆபத்து!**

கொழும்புப் பல்கலைக்கழக அரசியல்துறைப் பேராசிரியரான நிர்மல் ரஞ்சித் தேவசிறி சிங்கள பௌத்த அதிதீவிர தேசிய வாதம்பற்றி எழுதிய நூலொன்றில் பொதுபலசேன, சிங்கள ராவய, ராவண பலய, சிங்கலே போன்ற தீவிரவாத அமைப்புக்களில் இளம் பிக்குகளின் அங்கத்துவம் மிகவேகமாக அதிகரித்து வருகிறது எனவும், இந்தப் போக்கானது சிங்கள பௌத்தர்கள் அல்லாத ஏனைய சிறுபான்மை இனங்களை அதிகம் பாதிக்கும் எனவும் எச்சரிக்கிறார். இந்த அமைப்புக்களின் கவனம் சிறுபான்மை முஸ்லிம்களின்மீது அதிகமாகக் காணப்படுகின்றது.

நிர்மல் குறிப்பிடும் பௌத்த அமைப்புக்களுக்கு மேலதிகமாக அண்மையில் கண்டி திகன முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை 'மகாசொன் வலகாய' என்ற புதிய அமைப்பொன்று தலைமை தாங்கி மிக நேர்த்தியாக நடத்தியதாக அறியமுடிகிறது. இவ்வகையில் தான் ஞானசாரரும் கவனம் பெறுகிறார். ஆனாலும் அவருடைய அதிதீவிர போக்குச் சிங்கள பௌத்தர்கள் பலருக்குப் பிடிப்பதில்லை. ஒரு பௌத்த துறவி சண்டித்தனத்தில் ஈடுபடக்கூடாது என்பது அவர்களின் கருத்தாக இருந்தபோதிலும் தமிழரோ, முஸ்லிம்களோ சிங்களவர்களுக்கு எதிராக அல்லது பௌத்த மதத்துக்கு எதிராகச் செயற்பட முனைகின்றபோது 'இதுக்கு ஞானசாரர் தான் சரி' என்று கூறுகின்ற அல்லது அவரது போக்கை ஏற்றுக்கொள்ளுகின்ற நிலையும் இல்லாமலில்லை. அத்தோடு தற்போதுள்ள சூழலில் ஞானசாரரா? அல்லது திருமதி சந்தியா எக்னெலிகொடவா? என்று பார்த்தால், ஞானசாரரின் பக்கமே பௌத்த சிங்களவரின் செல்வாக்கு அதிகமாகவிருக்கும்.

இதைவிட அம்பாறை மாவட்டத்தில் தமிழருக்கு எதிரான முஸ்லிம்களின் நடவடிக்கைகளுக்குத் தமிழ் மக்களால் முகம்கொடுக்க முடியாத நிலையில் பல தமிழர்கள் ஞானசாரரை நேரில் சந்தித்து அவரது உதவிகளையும் பெற்றிருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு எதிரான முஸ்லிம்களின் அத்துமீறல்களுக்கு தமிழ் அரசியல்வாதிகள் களமிறங்குவதைவிட ஞானசாரரின் ஆதரவாளர்களும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியும் பல விடயங்களில் களமிறங்கியுள்ளனர். அத்தோடு அத்தே ஞானசாரரின் வில்பத்துக் காடுகளை அழிக்கிறார்கள், பௌத்த மதத்தை அழிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்குள் இந்துக்களோ, கிறிஸ்தவர்களோ அகப்பட்டிருக்கவில்லை.

**ஞானசாரர் கோத்தபாய ராஜபக்ச**

2004ஆம் ஆண்டில் ஓமல்கே சோபித தேரரால் உருவாக்கப்பட்டதே ஜாதிக ஹெல உறுமய என்ற அமைப்பு. இந்த அமைப்பிலேயே ஞானசாரரும் இருந்தார் பின்னர் 2012ஆம் ஆண்டில் ஞானசாரரும் திலந்த விதானகே என்பவரும் இணைந்து பொதுபலசேன அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பின் அலுவலகத்தை முன்னை நாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவே திறந்து வைத்தார்.

இத்தகைய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பௌத்த அமைப்பு எப்போதும் ஆட்சியாளருக்குத் தேவைப்படும் என்றிருக்கிற நிலையிலேயே பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியாவைப் பேசியதற்காக நீதிமன்றம் ஞானசாரருக்குத் தண்டனை கொடுத்துள்ளது. தண்டனை கொடுத்தே ஆகவேண்டும் எனும் நெருக்கடியால் ஓராண்டு கடூழியச் சிறைத்தண்டனையை ஆறு மாதங்களாகச் சுருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

**தமக்காகக் குரல் கொடுத்தவர்**
**தமிழர்களால் கைவிடப்பட்டார்**

சந்தியா எக்னெலிகொட தன்னை ஞானசாரர் பேசியதைப் பெண்களுக்கு எதிரான செயற்பாடாகக் குறிப்பிட்டு வழக்குத் தொடர்ந்தார். தனது கணவரைத்தேடும் வேலைத்திட்டத்தில் அவர் திறம்படச் செயற்பட்டத்காக 2017ஆம் ஆண்டில் 'பன்னாட்டு ஓர்மம் உள்ள பெண்' என்ற விருதும் வழங்கப்பட்டது. பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் ஞானசாரர் நீதிமன்றத்தில் வைத்துப் பேசியதை பெண்களுக்கு எதிரான பௌத்த துறவி ஒருவரின் வன்முறையாக வெளிக்காட்டினர். இது விடயத்தில் நல்ல தீர்ப்பு ஒன்றை வழங்கவேண்டிய கட்டாயம் நீதித்துறைக்கும் அரசுக்கும் ஏற்பட்டது. அதனால் தீர்ப்புக் கொடுத்ததாகவும் காட்டி ஒரு வருடத் தண்டனையை ஆறு மாதங்களுக்குள் கழிக்கலாம் எனும் நிலையும் ஏற்பட்டது.

காணாமலாக்கப்பட்ட அவருடைய கணவர் சிங்கள பௌத்தர்களைப் பொறுத்தவரை ஒரு 'கறுப்பு ஆடாகவே' பார்க்கப்படுகிறார். தேதுன்ன என்ற சிங்களப் பத்திரிகையை (புலிகளின் பரப்புரைப் பத்திரிகை) வெளியிட்டது, இறுதிப்போரில் இராணுவம் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதா? என்பதைத் தேடியது போன்ற காரணங்களால் புலிகளுடன் சேர்த்துமுத்திரை குத்தப்பட்டார். ஆனால் சந்தியாவுக்கு புலம்பெயர்ந்துவாழும்தமிழர்களால்கூட உதவிகள்கிடைப்பதாகத் தெரியவில்லை. சந்தியாவும் இங்குள்ள ஏராளம் தமிழர்கள் போலவே காணாமலாக்கப்பட்ட தனது கணவனுக்குநீதிகோரித் தனி ஒரு மனுசியாகப் போராடி வருகிறார். அதில் அவர் போராடுகின்ற தமிழ் மக்களிலும் பார்க்கச் சிறிதுபடியாவது முன்னேறியிருக்கிறார். இளம் பிக்குகளின் நாயகனாகவும், போரின்போது நாட்டைக் காப்பாற்றிய இராணுவச் சிப்பாய்களின் காவலனாகவும் செயற்படுகின்ற ஞானசாரரை விட தமிழருக்காகக் குரல்கொடுத்த எக்னலிகொடவோ அவரது மனைவியான சந்தியாவோ சிங்கள மக்களால் போற்றப்படப்பாவதில்லை. 'உன்னுடைய கணவன் ஒரு புலி' என்று சாடிய ஞானசாரருக்கே சிங்கள சமூகத்தில் அதிகம் வரவேற்புண்டு. எக்னெலிகொட கம்கரு மாவத்த பத்திரிகையை விற்றசிங்களவரின் நிலையில்தான் இருக்கமுடியும். எப்படியிருப்பினும் ஞானாசாரர் உண்மைப் பௌத்த சமூகத்தில் பெரும் கறுப்புப் புள்ளியாக ஆகியுள்ளது.



# ட்ரம்ப் தரும் அதிர்ச்சிகள்

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றது முதல் ஒன்றன் பின்னர் ஒன்றாக பல்வேறு அதிர்ச்சி வைத்தியங்களைத் தந்துகொண்டிருக்கிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். அமெரிக்காவின் முன்னைய அதிபர்களில் இருந்து வேறுபட்டவராகவே ட்ரம்ப் தெரிகிறார்.

கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க அதிபருக்கான தேர்தலின் போது தனது பரப்புரைகளின் மூலம் தனது போட்டியாளரான ஹிலாரியிடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டினார் ட்ரம்ப். மெக்சிக்கோ எல்லையில் சுவர், அகதிகள் புறக்கணிப்பு, இஸ்ரேலுடன் இன்னும் இணக்கம், இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம், பொருளாதார கட்டமைப்பு என்று ட்ரம்ப் முன்வைத்த திட்டங்களில் பெரும்பாலானவை நடைமுறைச் சாத்தியம் அல்லாதவை என்றே அப்போது கருதப்பட்டன. ஆனால் தான் தெரிவித்த அனைத்தையும் ஒன்றன் பின்னர் ஒன்றாக நடைமுறைப்படுத்தி வருகிறார் ட்ரம்ப்.

மெக்சிக்கோவில் எல்லைச் சுவர் அமைக்கப்பட்டாயிற்று, அகதிகள் அமெரிக்காவுக்குள் உட்பிரவேசிக்க முற்றுமுழுதாகத் தடை விதிக்கப்பட்டாயிற்று, இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப்பட்டு அங்கு அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டாயிற்று, சிரியாவில் இருந்து அமெரிக்க இராணுவம் குறைக்கப்பட்டா யிற்று, பொருளாதாரக் கட்டமைப்புக்கான நகர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன்படி அமெரிக்கா – சீனா, அமெரிக்கா – ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இடையில் பெரும் வர்த்தகப் போரே நடந்து கொண்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்காவின் மிகப்பெரும் எதிரியான வடகொரியாவின் அதிபரையும் ட்ரம்ப் சந்தித்துள்ளார். இந்த வரிசையில் மற்றொரு அதிர்ச்சியையும் அவர் தூக்கிப் போட்டுள்ளார். மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா விலகிய விடயமே அது.

அகதிகளின் விவகாரம், இஸ்ரேல் விவகாரம் ஆகியவற்றில் அமெரிக்காவுக்கும் மனித உரிமைகள் சபைக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இருந்து வருகிறது. இதையடுத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையை கபட நாடகம் நடத்தும் அமைப்பு என்று கடுமையாக விமர்சித்த அமெரிக்கா அதிலிருந்து விலகியுள்ளது. இதுவும்கூட அமெரிக்காவின் முன்னாள் அதிபர் எவரும் செய்யாத செய்யத் துணியாத செயல்தான். ஆக, ஒன்றன் பின்னர் ஒன்றாக அடுத்தடுத்து அதிர்ச்சிகளை ட்ரம்ப் தந்துகொண்டிருக்கிறார். அவற்றில் இன்ப அதிச்சிகள் சில, துன்ப அதிர்ச்சிகள் பல.

**'அமெரிக்காவெண்டாலே அப்பிடித்தானே பாருங்கோ...'**

## ரவுண்ட் தவேள்ட்



# திருட்டா...?
## அப்பிடியென்றால்


ருமேனியாவின் பானட் மலைத்தொடர்களில் இருக்கிறது அழகான எபின்தல் கிராமம். இங்கே செக் இன மக்கள் வாழ்கிறார்கள். உலகிலேயே திருட்டு நடைபெறாத இடமாக இந்தக் கிராமம் திகழ்கிறது! இங்கே பொலிஸ் நிலையம் கிடையாது. இங்கு குற்றங்களே பெரும்பாலும் நடைபெறுவதில்லை. அதிலும் திருட்டுக் குற்றம் என்றால் என்னவென்றே இவர்களுக்குத் தெரியாது! இங்குள்ள மக்கள் அமைதிக்கும் மரியாதைக்கும் பெயர் பெற்றவர்கள். கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வேலி, சுவர், தந்திக் கம்பம் போன்றவற்றில் பைகளும் பணமும் வைக்கப்படுகின்றன.

ரொட்டி கொண்டு வருபவர் பையில் உள்ள குறிப்பைப் படித்து, தேவையான ரொட்டிகளை வைத்துவிட்டு, பணத்தை எடுத்துக்கொள்வார். மீதிப் பணம் கொடுக்க வேண்டியிருந்தால் அந்தப் பையிலேயே போட்டு விடுவார். வீட்டின் உரிமையாளர்கள் வீடு திரும்பும்போது ரொட்டிகளை எடுத்துக் கொள்கிறார்கள். '1989ஆம் ஆண்டு எங்கள் கிராமத்தில் இருந்த ரொட்டிக் கடை மூடப்பட்டது. அதனால் நாங்கள் 20 கி.மீ. தொலைவில் இருக்கும் நகரத்துக்குச் சென்றுதான் ரொட்டி வாங்கிக் கொண்டிருந்தோம். 1996ம் ஆண்டு நகரிலிருந்து ரொட்டிகளை வரவழைக்கும் திட்டத்தை ஆரம்பித்தோம். அன்று முதல் பையில் பணத்தையும் குறிப்பையும் போட்டு வாசலில் வைத்துவிடுவோம்.

ரொட்டிக் கடைக்காரர் தேவையான ரொட்டிகளை வைத்துவிடுவார். கடந்த 22 ஆண்டுகளாக இந்த நடைமுறை இருக்கிறது. இதுவரை ரொட்டியோ, பணமோ திருடு போனதே இல்லை. இங்கு வசிக்கும் மக்களிடத்தில் பொருளாதாரத்தில் வேறுபாடு இருந்தாலும் நற்பண்புகளில் எல்லோரும் ஒரே மாதிரிதான் இருக்கிறோம். எல்லோரும் உழைக்கிறோம். அவரவர் உழைப்புக்கு ஏற்ற வருமானத்தைப் பெறுகிறோம். நிம்மதியாக வாழ்கிறோம். அனுமதியின்றி இன்னொருவர் வீட்டுக்கோ, விளைநிலத்துக்கோ யாரும் செல்ல மாட்டார்கள். சொந்தம் இல்லாத ஒரு பொருள் எவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தாலும் அதை யாரும் எடுக்க மாட்டார்கள். எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே இங்கே உயர்ந்த கலாசாரம் இருக்கிறது' என்கிறார் 75 வயது எபின்தல் கிராமவாசி ஒருவர்.

**உலகின் அதிசய கிராமம்**

சீனாவில் நாய்க்கறி திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது.




# தலிபான்கள் தாண்டவம்

ரமழான் பண்டிகையின் போது ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலிலும் ஏனைய பல மாகாணங்களிலும் பரவலாக நடைபெற்ற ஒரு சம்பவம் உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருந்தது. ஆப்கானிஸ்தான் இராணுவமும் தலிபான்களும் இணைந்து செல்பி எடுத்திருந்த சம்பவமே அது.

முன்னெப்போதும் நடைபெறாத வகையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் தலிபான்களை சமரசத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தார் ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானி. எனினும் இந்த அழைப்பை நிராகரித்த தலிபான்கள் மீண்டும் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். கடந்த புதன்கிழமை தலிபான்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 55 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். தலிபான்களுக்கு அரசியல் கட்சியாக அனுமதி, சட்ட ரீதியான அங்கீகாரம், கைதாகி சிறையில் உள்ள தலி பான் கள் விடுதலை என்று ஏகப்பட்ட சலுகைகளை அரசு அறி வித்துள்ள போதிலும் அந்த அமைப்பு இணக்கத் துக்குச் செல்லாதமை துயரமே.



**'அழுதுகொண்டுதான் உள்ளது ஆப்கானிஸ்தான்...'**



# பூமிக்கு அப்பால்

அமெரிக்க இராணுவத்தில் ஆறாவது பிரிவாக விண்வெளிப்ப டையை உருவாக்கப்படவுள்ளது. அமெரிக்க இராணுவத்தில் தரைப்படை, கடற்படை, கப்பல்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, வானூர்திப் படை என்று ஐந்து பிரிவுகள் ஏற்கனவே உள்ளன. இந்த நிலையில் ஆறாவது பிரிவாக விண்வெளிப்படையை அமைக்குமாறு அண்மையில் உத்தரவிட்டார் ட்ரம்ப்.

பூமிக்கு வெளியில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த முற்படுவது காலாகாலமாகத் தெரிந்த விடயம்தான். இந்த நிலையில் ட்ரம்பின் இந்த வெளிப்படை அறிவிப்பானது உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தவே செய்யும். அவ்வாறே ஏற்படுத்தியுமுள்ளது. ட்ரம்பின் அறிவிப்புக்கு ரஷ்யா முதல் நாடாகக் கண்டனம் தெரிவித்துள்ளது. "அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் செவ்வாயில் கடும் சண்டை..."

**இவ்வாறான செய்திகளைக் கேட்ட கனகாலம் இல்லைப்போல....**

அறிவியல்

# எதிரொலி எனும் ஒற்றன்

வினோஜா நாதரூபன்

'வெளவால்களும் எதிரொலியால் இடமறிதலும்' எனும் கடந்த வாரத்துக்கு முந்தைய வாரக் கட்டுரையில் 'எதிரொலி இடமாக்கம்' பற்றிப் பார்த்திருந்தோம். அதில் வெளவால்கள் வெறும் மூன்று மில்லி விநாடிகளே எதிரொலிக்கும் ஓர் ஓசையை எழுப்புகின்றன என்று பார்த்திருந்தோம். ஏன் வெறும் மூன்று விநாடிகளே அவை அந்த ஓசையை எழுப்புகின்றன?

**பார்வையற்ற ஐவரும் ஒரு யானையும்**

பார்வையற்ற ஐந்துபேர் வாழ்கிற ஓர் ஊருக்கு ஒரு யானை வந்தது. அவர்கள் யானை பற்றி முன்பு கேள்விப்பட்டதில்லை. ஒவ்வொருவரும் சென்று யானையின் வெவ்வேறு அங்கங்களைத் தொட்டுப் பார்த்தனர். யானையின் கால்களைத் தொட்டவன் சொன்னான் "யானை கோயில் தூணைப் போன்றது" என்று. காதுகளைத் தொட்டவன் சொன்னான் "யானை பெரிய விசிறி போன்றது" என்று. இவ்வாறு ஐவரும் தாம் தொடுகிற யானையின் அங்கங்களைக் கொண்டு தம்முள் வாதிட்டுக் கொண்டனர். இங்கு பார்வையற்றவர்கள் வெவ்வேறு மதங்களையும், யானை உண்மையையும் குறிக்கின்றது என நினைக்கிறேன்.

அந்த யானை வெளவால் முன் நின்றிருந்தால், எதிரொலி மூலம் யானையைத் தொட்டு, அதன் மூலம் தான் யானையின் வடிவத்தை வெளவால் புரிந்துகொள்ளும். ஓர் எதிரொலி என்பது ஒரு முறை தொடுவதற்கு சமன்.

எத்தனை தடவைகள் யானையில் எதிரொலி பட்டுத் தெறிக்கிறதோ, எத்தனை வெவ்வேறு அங்கங்களில் பட்டுத் தெறிக்கிறதோ அத்தனை தெளிவாக வெளவாலால் யானையின் வடிவத்தைக் கிரகிக்க முடியும். ஆனால், வெளவால் வேட்டையாடுவதோ யானை போன்று மெதுவாக அசையும் விலங்குகளை அல்ல. வேகமாக அசையும் பூச்சிகளை. எனவே குறைந்த நேரத்தில் அதிக தடவைகள் ஓசையை எழுப்பி, அதிக தடவைகள் எதிரொலிகளைப் பெறவேண்டும். எனவேதான் வெறும் மூன்று விநாடிகளில் அந்த ஓசையை எழுப்பி விடுகிறது.

**அலைத்தெறிப்பைப் பயன்படுத்தும் கருவிகள்**


துப்பாக்கி திரைப்படத்தில் 'அந்தாட்டிக்கா வெண் பணியிலே...' என்ற பாடலில் வருகிற வரிகளை முதலில் பார்ப்போம்.

***அடி பெண்ணே என்***
***மனது எங்கே***
***ரேடார் விளக்குமா?***

***அடி என் காதல்***
***ஆழம் என்ன?***
***சோனார் அளக்குமா?***

'சோனார்' என்பது கப்பல்களிலும், நீர்மூழ்கிக் கப்பல்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கருவி எதிரொலியை வைத்துக்கொண்டு கடலுக்குள் உள்ளவற்றின் தூரம் வடிவம் என்பவற்றைக் காட்டும். 'ரேடார்' (கதிரலைக் கும்பா) குறிப்பாக வான்போக்குவரத்தை முறைப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. 'ரேடார்' ஒலிஅலைகளின் தெறிப்பால் உருவாகும் எதிரொலி அலைகளைப் பயன்படுத்துவதில்லை. மாறாக வானொலி அலைகளின் தெறிப்பைப் பயன்படுத்துகின்றது.

இரண்டும் ஒன்றுதானே என யோசிக்கிறீர்களா? அதுதான் இல்லை. ஒலி அலைகள் பயணிக்கக் காற்று மூலக்கூறுகள் வேண்டும். ஆனால் வானொலி அலைகள் பயணிக்க எதுவும் தேவையில்லை. இதை இன்னொரு விதமாகச் சொன்னால் ஒலி அலைகள் இயந்திர அலைகள் ஆகும், வானொலி அலைகள் மின்காந்த அலைகள் ஆகும். வானொலி நிலையத்திலிருந்து வானொலி அலைகளாகப் பாடல் பயணிக்கின்றது. அந்த வானொலி அலைகளை உங்கள் வானொலி பெற்று ஒலி அலைகளாக மாற்றித் தருகின்றது. வானொலி இல்லாத நேரத்திலும் வானொலி அலைகள் இருக்கும், ஆனால் அவற்றைக் கேட்க முடியாது.



இந்தப் பாடலில் 'ரேடாரையும், சோனாரையும்' பயன்படுத்திய மதன் கார்க்கி முக்கியமாகப் பயன்படுத்தியிருக்க வேண்டிய 'மீயொலி நோட்டத்தைப்' பயன்படுத்தவில்லையே என்பது வருத்தம்தான். காரணம் காதல் இன்னொரு தாய்மை, தாயின் வயிற்றில் இருக்கும் கருவின் வளர்ச்சியைப் பார்க்க உதவுவது இந்த மீயொலி நோட்டம்.

**இருபதிலிருந்து இருபதாயிரம் வரை**

இதுவும் ஒலி அலைகளைத்தான் பயன்படுத்துகின்றது. ஆனால் மீயொலி அல்லது கழியொலி எனப்படுவது எம்மால் கேட்க முடியாத ஒலியாகும். முந்தைய கட்டுரையில் அலையின் ஓர் இயல்பான மீடிறன் பற்றிப் பார்த்திருந்தோம். மீடிறன் என்றால் ஒரு விநாடியில் எத்தனை அலைச்சுழற்சிகள் இடம்பெறுகின்றன என்பதாகும். இன்னொரு விதமாக இந்த மீடிறனைப் பார்த்தால், அலையானது கவிழ்ந்த 'எஸ்'க்களைத் (ஆங்கில எழுத்து) தொடுத்தது போல் அமைகின்றது. ஒரு விநாடிக்குள் எத்தனை அத்தகைய 'எஸ்' வடிவங்கள் இடம்பெறுகின்றன என்பதே மீடிறன் ஆகும். மனிதர்களால் இருபதிலிருந்து இருபதாயிரம் 'ஹேர்ட்ஸ்'சுக்குள் உட்பட்ட ஒலிகளையே கேட்கமுடியும். மீயொலி என்பது இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மீடிறன் கொண்ட ஒலியாகும்.



சோனாரோ பலவகையான மீடிறன்க ளைக் கொண்ட ஒலி அலைகளையும் பயன்படுத்தும். அதனால் சிலவேளைகளில் சோனாரைக் கேட்க முடியும். ஆனால், மருத்துவமனையில் நீங்கள் மீயோலி நோட்டத்தைப் பயன்படுத்தும்போது எந்தச் சத்தமும் கேட்காது. கருவைப் பார்ப்பதற்கு மட்டும் அல்ல. வேறு பல சந்தர்ப்பங்களிலும் இது பயன்படுத்தப்படுகின்றது. இவை மட்டும் இல்லாது அலைத்தெறிப்பைப் பயன்படுத்தி நிலவுக்ககான தூரத்தையும் மற்றும் கோள்களுக்கான தூரங்களையும் அளக்க முடியும். குறிப்பாகப் பிற முறைகள் கடினமாக அமையும்போது. இந்த முறை மிகவும் பயனுள்ளதாகத் திகழ்கின்றது. உதாரணமாகச் சொன்னால், மிகுந்த வெப்பத்தையும், அழுத்தத்தையும் கொண்ட வளிமண்டலத்தைக் கொண்டதுடன், சல்பூரிக் அமிலத்தலான முகில்களையும் கொண்டிருப்பதால், (புவியின் முகில்கள் நீராவியால் ஆனவை) வெள்ளிக் கோளின் நிலப்பரப்பைக் காணமுடியாது போகிறது. ஆனால், 'ரேடார்' முறைகொண்டுவெள்ளிக் கிரகத்தின் நிலப்பரப்பை வரைவதால் நாம் அங்கு தரையிறங்கும் தேவையில்லாமல் போயுள்ளது.

**உயிரோடு இருப்பது மாத்திரம் முக்கியமல்ல**

பிறந்து ஒரு வருடத்தில் புற்றுநோய் காரணமாக அந்தக் குழந்தையின் கண்கள் அகற்றப்படுகின்றன. பார்வை இல்லை என்பதால் அந்தக் குழந்தையை அதன் பெற்றோர்கள் வித்தியாசமாக நடத்தவில்லை. அவன் தன் நம்பிக்கையை அவனிடம் இருந்து பறித்துவிடவில்லை. வேண்டிய உதவிகள் செய்தனர். அவன் வாழ்க்கையில் வேர் ஊன்றி நிற்க மட்டும் அல்ல, நடந்து திரியவும், ஏன் மலைகள் மேல் ஏறவும் அவனுக்கு வேர்போல் துணையாக நின்றனர். அந்தக் குழந்தை நாம் எழுதப் படிக்கக் கற்பதுபோல் சிறுவயதிலேயே எதிரொலியை வைத்து வெளவால்களைப்போல் நடமாடக் கற்றுக்கொண்டது. இன்று அந்தக் குழந்தைக்கு ஐம்பத்தியிரண்டு வயதுகள்!

இதுவரை ஐந்நூறுக்கும் மேற்பட்ட பார்வையற்றவர்களுக்குத் தனது இரகசிய வித்தையைக் கற்றுக்கொடுத்துள்ளள்ளார். இன்று நடக்க மட்டும் அல்ல, மலை ஏறவும், துவிச்சக்கரவண்டி ஓட்டவும்கூட அவரால் முடியும். அவரின் பெயர் 'டானியல் கிஷ்'. அமெரிக்காவைச் சேர்ந்தவர். ஆனால் திமிங்கலங்களைப்போல் மனிதர்களால் எதிரொலியை வைத்து மனக்கண்ணில் தெளிவான உருவத்தை உருவாக்க முடியாது.


டானியல் கிஷ்ஷிடமிருந்து தன்னம்பிக்கையைக் கற்றுக்கொள்ளும் அதே நேரம் அவரின் பெற்றோர்களிடம் இருந்து நாம் கற்க வேண்டிய மிகமுக்கியமான ஒரு விடயம் உண்டு. எம்து குழந்தைகளைப் பாதுகாக்க நினைப்பது நியாயம்தான் ஆனால் பொத்திப் பொத்தி வைத்து அவர்களை ஊனம் ஆக்கிவிடக்கூடாது. நாம் அளிக்கும் பாதுகாப்பு அரணாக இருக்கவேண்டும். கல்லறையாக மாறிவிடக்கூடாது. உயிரோடு இருப்பது மட்டும் முக்கியமில்லை எம் வாழ்க்கையும் உயிரோட்டமாக இருக்கவேண்டும்.


**எதிரொலியும் எதிர் முழக்கமும்**

'டானியல் கிஷ்' பற்றிச் சொன்னபோது உங்களுக்கு ஒரு சந்தேகம் உருவாகியிருக்கவேண்டும். கடந்த கட்டுரையில் எதிரொலியை உணர வேண்டும் என்றால் ஒலி பட்டுத் தெறிக்கும் அந்தச் சுவர் அல்லது பொருள் குறைந்தது 17.2 மீற்றர்களில் இருக்கவேண்டும் என்று பார்த்தோம். இல்லாவிட்டால் மூல ஒலியையும் எதிரொலியையும் எம்மால் பிரித்துணர முடியாது. கேள்வி என்னவென்றால் டானியல் கிஷ் நடந்துசெல்லம் பாதையில் அருகில் உள்ள பொருள்கள் பற்றி அவர் அறிய வேண்டும். ஆனால் அருகில் உள்ள பொருள்களில் இருந்து வரும் எதிரொலியை நாம் பிரித்து அறியமாட்டோம்.

**இது முரண் ஆகவுள்ளதே?**

உண்மையில் அவர் எதிரொலியைப் பயன்படுத்தவில்லை, எதிர்முழக்கத்தையே பயன்படுத்துகிறார். எதிர்முழக்கம் என்பது அந்த 17.2 மீற்றர்களுக்குட்பட்ட பொருள்களில் பட்டுத் தெறிப்படைந்து எமை அடையும் ஒலி. இது மூல ஒலியோடு இணைந்து நீண்ட ஒலியாகக் கேட்குமே தவிர தனித்துத் திகழாது. நீங்கள் குளியலறையில் பாடும்போது கேட்பது உண்மையில் எதிர்முழக்கம். பார்வை இல்லாதவர் எவ்வளவை அறிந்து செயலாற்றுகிறார். ஆனால், நமது கண்களுக்கு 'பிக் பாஸ்', 'சீரியல்'களை விட்டால் வேறு எதுவும் தெரியாது. வாயையும் அப்படி ஆக்கிவிடாமல் காத்திரமானவற்றை வாசிக்கப் பயன்படுத்துவோம்.





தொடர்

தாஸ் மாஸ்ரர்

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்? 3

சேர்ட்டைக் கழற்றச் சொன்னார்கள். கழற்றினேன் அடிப்பார்களோ என்று யோசித்தேன்.
ஒவ்வொருவராக உள்ளே கூப்பிடப்பட்டனர். நான்காவதோ அல்லது ஐந்தாவதோ நபராக நான் உள்ளே சென்றேன். எனது பெயர், வயது, முகவரி, திருமணமானவரா? உடலிலுள்ள நிரந்தர அடையாளங்கள் எல்லாம் கேட்டு எழுதினார்கள்.
ஓர் அலுவலர் எழுத, ஒரு பாட்டிக்காரன் (குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட கைதி) என்னிடம் அவற்றைக் கேட்டு அந்த அதிகாரிக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். "பள்ளிக்கூடம் போயிருக்கிறாயா?" என்று ஒரு மட்டமாகச் சிங்கள மொழியில் கேட்டார். நான் ஒரு பட்டதாரி என்று சொன்னபோது எழுதிக் கொண்டிருந்த அலுவலர் உடனே நிறுத்திவிட்டு அந்தப் பாட்டிக்காரனிடம் சொன்னார் ஒரு 'ஸ்ரூல்' எடுத்து வரும்படி.
'ஸ்ரூல்' கொண்டு வந்தபின் தனக்கு அருகில் என்னை இருத்தி எனது விடயங்களை அறிந்த பின் "குறையாக எடுத்துக்கொள்ள வேண்டாம், இங்கு வருபவர்களில் பலர் அடிக்கடி சிறைக்குள் வந்து எமக்குத் தொல்லை கொடுப்பவர்கள், எமக்கு அலுத்தே விட்டது. இவர்களுடன் இந்த விதமாகக் கதைத்து நாங்களும் பழகி விட்டோம்" என்றார்.
எனக்கு என்ன தேவையென்றாலும் சொல்லச் சொன்னார். எனக்குச் சிறைச்சாலையில் இலக்கமும் பதிவு செய்யப்பட்டது. அந்தத் தருணத்தில் நான் நினைத்திருக்கவில்லை அந்த இலக்கத்துடன் இரண்டு வருடங்களைப் பல சிறைகளில் நான் கழிக்க நேரிடும் என்று.

000

பின்னர் சிறைச்சாலை மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்று உடலில் உள்ள காயங்கள், வேறு நோய்கள் இருக்கின்றனவா? என்று ஒரு பெண் வைத்தியர் பதிவு செய்தார். அதன் பின்னர் உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகரிடம் அழைத்துச் சென்றார்கள்."ஆங்கிலம் பேசுவாயா? " என்று அவர் கேட்டார்.
"ஆம்" என்றேன். பின்னர் விவரம் கேட்டார். முழங்கைகள் இரண்டையும் காட்டுமாறு கேட்டார். காட்டினேன் போகச் சொன்னார். ஆயுதப் பயிற்சி எடுத்தவர்களுக்கு முழங்கையில் கண்டல் காயங்கள் அல்லது அடையாளங்கள் இருக்கும் என்பதைப் பொலிஸ் விசாரணையின்போது பார்ப்பார்கள். அதே விடயத்தை அவரும் கேட்டது ஆச்சரியமாக இருந்தது. (தப்பியோடக்கூடியவனா? அல்லது துப்பாக்கியால் சுடக்கூடியவனா? என்பதை அனுமானிப்பதற்காக) பின்னர் சிறைச்சாலை அத்தியட்சகரின் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அவரும் விவரம் கேட்டுவிட்டு, "இப்போது அடைத்து வைத்திருக்கும் அறை பிரச்சினை இல்லையா? அங்கு ஏற்கனவே இருப்பவர்களால் தொல்லை எதுவும் உண்டா?" என்று கேட்டார்.
"இல்லை" என்றேன்.
"ஏனெனில் உங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு" என்றார்.
மீண்டும் முதலில் பதிவு செய்த பகுதிக்குத் திரும்பவும் அழைத்துச் சென்றார்கள்.
அங்கிருந்த சிறை அதிகாரி எனது கோவையைப் பார்த்து, விட்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பதால் குறைந்தது ஒன்றரை வருடமாவது சிறைக்குள் இருக்க வேண்டிவரும்" என்றார். அவர் எந்த அடிப்படையில் அவ்வாறு சொல்கிறார் என்று யோசித்தேன். அவர் குறிப்பிட்ட காலப்பகுதியைத் தாண்டித் தான் நான் விடுதலையானேன். அவர் பல தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துப் போவதால் நீண்ட தவணைகள் போடப்படுவதை அவதானித்திருக்க முடியும்.

000

எல்லோரிடமும் போய்விட்டு மீண்டும் 'டி' பிரத்தியேகப் பிரிவுக்குத் திரும்பும்போது முற்பகல் 11மணி ஆகிவிட்டது. இறுதியாகச் சிறை அதிகாரியின் அறையில் கதைத்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சுவர் மணிக்கூட்டில் இந்த நேரத்தை அவதானிக்க முடிந்தது.
சிறைச்சாலைக்குள் மணிக்கூடு வைத்திருக்க அனுமதியில்லை. அதற்கு மூன்று காரணங்கள் இருக்கலாம். இது எனது அனுபவத்தில் உணர்ந்தது.

1. கடிகாரம் உள்ளே இருந்தால் தப்பியோடுவதற்கான திட்டம் ஒன்றை நுணுக்கமாகத் திட்டமிட உதவும்.
2. மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் ஒரு கைதியின் மனநிலையில் ஒரு நிமிடமும் கழிவது பற்றிய சிந்தையே இருக்கும் என்பது.
3. ஏதாவது கள்ள வேலைகள் செய்யும்போது அதிகாரிகள் வேலை மாறும் நேரத்தை அறிந்து அந்த நேரம் தயாராக இருந்துவிட முடியும். முற்பகல் 11மணியளவில் உள்ளே வந்தபோது எனது அறையில் இருந்த நண்பர்கள் கேட்டார்கள் "சிறைச்சாலை இலக்கம் என்ன?"
என்று, நான் சொன்னேன் "இனி இதுதான் உங்களுக்கு மிகவும் அவசியமானது மறந்து விடக்கூடாது"
என்றார்.
இதில் மறுப்பதற்கு என்ன இருக்கிறது? சிறைக்குள் எல்லாம புதிதாக அச்சுறுத்துவதாகவும் தலையில் ஆணி அடிப்பதுபோல ஆழமாக ஞாபகம் இருந்தன.
வெளிச்சூழலை நினைக்கின்றபோது தலை விறைப்பது போன்று இருந்தது.

000

பகல் சாப்பாடு தருவதற்கு முன்பு எனது சிறை அறை நண்பர்கள் குளிக்கச் சொன்னார்கள். குளித்தேன். பிற்பகல் 12.30 மணியளவில் பகல் சாப்பாடு தயார் என்றவுடன் மணியடிக்கும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கடமையில் இருந்த ஊழியர் ஒருவர் கதவுகளை வேகமாகத் திறந்து கொண்டே போனார். எல்லோரும்
காய வைத்த உடுப்புகளையும், வெளியில் கிடந்த வாளிகள் போன்றவற்றை அறைக்குள் எடுத்து வைத்தார்கள்.
ஒவ்வொரு மணியும் கைதிகளுக்கு நன்கு பழக்கப்பட்டவை. அடிக்கப்படும் மணிச்சத்தம் எத்தனை மணிக்கு அடிக்கிறார்கள் எனவும், எதற்காக அடிக்கிறார்கள் எனவும் அதற்கு தாம் எவ்வாறு தயாராக வேண்டும் என்பதிலும் பழக்கப்பட்டவர்களாக இருந்தார்கள்.

சாப்பாடு கொண்டு வந்ததும் வ்ரிசையாக நின்று அலுமினியக் கோப்பைகளில் வாங்கினோம். சாப்பிட்டு ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் உண்டேன். சாப்பாடு தந்து 15நிமிட இடைவெளிக்குள் மீண்டும் 'போலின்' என்று சத்தம் போட்டார்கள். மீண்டும் அறைக்குள் பூட்டப்பட்டோம்.
பிற்பகல் 2 மணியளவில் ஒரு பாட்டிக்காரன் சீனி கொண்டு வந்தார். ஒரு பலகைப் பெட்டிக்குள் கொஞ்சச் சீனி இருந்தது. ஒரு வட்டமான கரண்டியால் (அந்த வடிவத்தில் வெளியில் நான் எங்கும் கரண்டியைக் கண்டதில்லை) ஒரு கைதிக்கு ஒரு கரண்டி என்ற அடிப்படையில் தந்தார். பூட்டிய அறைக்குள் இருந்த ஒரு பிளாஸ்ரிக் போத்தலை நீட்ட அவர் அதற்குள் போட்டுவிட்டுப் போனார்.
பின்பான காலங்களில் அறிந்தேன். அவர் சீனி அளந்து போடும்போது அவர் மூலமாகச் சில பொருள்கள், காசு பரிமாறிக்கொள்வார்கள். அல்லது நண்பர்கள் வேறு பகுதிக்குள் பூட்டப்பட்டிருந்தால் இந்த சீனிக்காரன் மூலம் தகவல்களை வழங்குவர். இதைச் சிறை அலுவலர்கள் பரிசோதித்துப் பிடித்துவிட்டால் அவனுக்கு அடிப்பார்கள். அதேவேளை அந்த வேலைக்கு அவனைக் குறிப்பிட்ட நாள்கள் வரையே அனுமதிப்பார்கள். கடூழியச் சிறைத் தண்டனை பெற்ற கைதிகள் 5தொடக்கம் 175 வருடங்கள் வரை தண்டனை பெற்றிருந்தார்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு என அவர்களுடைய குற்றங்கள் இருந்தன.

000

சிறைச்சாலைகளில் அலுவல்களைக் கவனிப்பதற்கு அங்குள்ள ஊழியர்கள் தொகை போதாது. இதனால் இவ்வாறான தண்டனை விதிக்கப்பட்டவர்களை (அச்சுக்காரர் என்று சிங்களத்தில் கூறுவார்கள்). அங்கு வேலைகளுக்காகக் குறித்து ஒதுக்குவார்கள்.
இந்தக் கைதிகளுக்கு தண்டனை கொடுத்த மறுநாளே அவரது படிப்பு, ஏற்கனவே அவர் செய்த தொழில், ஏனைய அனுபவங்களை மையமாக வைத்து ஏற்ற துறைக்கு மாற்றப்படுகிறார்கள். அவர்களையும் ஏனைய கைதிகளைப் போலவே பூட்டித் திறக்கிறார்கள் எனினும் அலுவலகங்களிலும், சமயல் பகுதியில் வேலை செய்பவர்களும் நீண்ட நேரம் வெளியில் நின்று வேலை செய்ய வேண்டியிருக்கும்.
குற்றம் தீர்க்கப்பட்ட கைதி எந்தக் குழுவில் வேலை செய்கிறானோ அதைக் கொண்டே அழைக்கப்படுவான். உதாரணமாக ரெயிலர்பாட்டி, குசினி, லோன்றி, தச்சுவேலை, நெசவு, பின்னல் வேலை,
அலுவலகம், அதிலும் ஒவ்வொரு உயர் அதிகாரிகளின் அலுவலகங்களில் பணிபுரிவோர் அவர்களின் அதிகாரிகளின் பதவி நிலையுடன் இணைத்துப் பெயர்சூட்டப்படுவதுண்டு.
இவர்களது தண்டனைக் காலம் முடிவதற்கு 2மாத காலம் குறைவாக இருக்கும்போது வெளி வேலைகளுக்காகச் சிறைச்சா லைக்கு வெளியில் கூட்டிச் செல்லப்படுவர். உயர் அதிகாரிகளின் வீட்டு வேலைகள், பொருள்களை வாங்க, மூட்டைகளைத் தூக்குவதற்கு, சிறைச்சாலை களின் வெளி மதில்களைத் திருத்தம் செய்ய, வெள்ளை அடிப்பதுபோன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுவர். அதிக காலம் சிறையில் இருக்க வேண்டியவர்களை வெளியில் கொண்டு போனால் அவர் தப்பியோடுவதற்கு வாய்ப்புண்டு.

000

பிற்கபல் 2.30 மணிக்கு மீண்டும் அறைக் கதவுகளைத் திறந்தனர். போகம்பரயில் 'டி' கதவுகள் மரத்தால் செய்யப்பட்டுள்ளன. 3இஞ்சி அளவான சிலாகைகளைக் கொண்டு 1அடி இடைவெளியில் அந்தக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன.
இவை யாவும் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளைத் தூக்கில் இடுவதற்கு முன்னர் பூட்டி வைத்திருப்பதற்காகத் தயாரிக்கப்பட்டவை. அறைக்குள் கல்லில் பொழியப்பட்ட தலையணை ஒன்று சுவர் ஓரமாகக் கட்டப்பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் சிறிய கழிப்பறை மேடை ஒன்று உள்ளது. அது கழிப்பறை வடிவத்தில். திட்டாக ஒன்றரை அடி உயரத்தடன் அமைக்கப்பட்டுள்ளது. அது 6அங்குல விட்ட முடையது. மலம் கழிக்கின்ற வாளியை வெளியே எடுக்கக் கூடிய துவாரம் உண்டு. கதவின் கீழ்ப் பாகத்தின் நிலத்தடியில் 1அடி நீளமும் 3 அங்குல அகலமும் கொண்ட நீள்சதுர இடைவெளி உண்டு. அதன் ஊடாக உணவுக் கோப்பைகளை நிலத்துடன் உராய்ந்து தள்ளி உள்ளே அனுப்பவும், வெளியே எடுக்கவும் முடியும். இதைவிட வேறு எந்த வசதிகளும் இல்லை. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி வெளியே வர வாய்ப்பில்லை.
இவ்வாறு அடைத்து வைக்கப்படும் கைதிகள் வாரத்துக்கு ஒரு தடைவை அறைகள் மாற்றப்பட்டுத் தூக்கில் தொங்க விடப்படும் அறையை நோக்கி நகர்த்தப்படுவார்களாம். தூக்குப்பீடமுள்ள அறைக்குப் பக்கத்து அறைக்குள் பூட்டப்பட்டால் மறுநாள் அந்தக் கைதி தூக்கிடப்படுவான். இந்த விவரங்களைப் பின்னாள்களில் சிறை அதிகாரிகள் மூலமாகவும் வயதான கைதிகள் சிலர் ஊடாகவும் அறிந்து கொண்டேன்.
(தற்போது தூக்கில் யாரும் இடப்படுவதில்லை)

000

பிற்பகல் 2.30 மணிக்குக் கதவைத் திறந்தவுடன் மீண்டும் அறைகளைப் பூட்டிவிட்டார்கள். சிலர் குளித்தார்கள். சிலர் கரம், செஸ், டாம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். சிலர் பேப்பர் படித்தனர். (முக்கிய வழக்குகள், கைதிகள் தப்பியோட்டம். சிறைச்சாலைக் கலவரங்கள் போன்ற சிறை - கைதிகள் சார்ந்த செய்திகளை நீக்கிய பின்னரே கைதிகள் வாசிப்பதற்காகப் பத்திரிகைகள் வழங்கப்படும்).
நான் முன்பகுதியில் நடந்து திரிந்தேன். போகம்பரச் சிறை ஒரு நங்கூர வடிவில் கட்டப்பட்டதாகும். மேலே இரண்டு மாடிகள். அவற்றின் தளங்கள் உறுதியான பலகையால் போடப்பட்டுள்ளன.
அந்த மாடிச் சிறைகளைத் திறக்கும்போது பலகையில் கைதிகள் நடக்கும் சத்தம் பெரிதாகக் கேட்கும். சில வேலைகளில் மேற்பகுதியில் உள்ள சிறுநீர், தண்ணீர் ஊற்றும் வாளிகள் தட்டுப்பட்டுவிட்டால், கீழே உள்ள அறைகளில் சொட்டுச் சொட்டாக ஒழுகும். ஒவ்வொரு துளிக்கும் கீழே இருப்பவர்கள் தூசணத்தில் திட்டித் தொலைப்பார்கள். ஆரம்ப நாள்களில் இவற்றைப் புரிந்து கொள்வதே ஒரு புது அனுபவாக இருந்தது.
நான் நடந்து திரிந்த வேளை சில சிங்களக் கைதிகள் வந்தார்கள். அவர்களில் ஒருவர் கிருசாந்தி பாலியல் வன்புணர்வில் குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ச. ஒரு பிரபல கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட இன்னொருவர் என்னிடம் வந்து 'சிகரெட் பத்துவியா?' என்று கேட்டர்.

(தொடரும்)

சிரிப்பு

# கருமமே கண்

செ.செல்வராஜா

சமயோசிதம் வேறு, புத்திசாலித்தனம் வேறு. அரச சார்பற்ற நிறுவன மொன்றில் என்னுடன் கூடப்பணியாற்றிய தருமலிங்கம் பயங்கரக் கெட்டிக்காரன். அன்று பணி நிமித்தம் கொழும்புக்குச் செல்ல வேண்டும். மூன்று வாகனங்கள். சாரதிகள் உட்பட பதினைந்து பேர். அதில் எட்டுப்பேர் வரை பெண்கள். காலை ஏழு மணிக்கு வன்னியிலிருந்து பயணப் புறப்பாடு. அவசரம் அவசரமாக முழுகியபோது காதுக்குள் நீர் போய்விட்டது. ஒரு வகை நமைச்சல், குமைச்சல். அந்த அவசரத்திலும் காதுக்குள் 'இயர் பட்' டைச் செலுத்தித் துப்புரவு செய்துகொண்டிருக்கவும், பயணத்துக்கு ஆயத்தமாகத் தருமலிங்கம் வந்து சேரவும் சரியாக இருந்தது நேரம். "என்ன வலு 'கூலாக' காதைக் கிண்டுறீர்? நேரமெல்லே போச்சுது" என அவசரப்படுத்தினார்.

"காதிலை கை வைக்கிறதெண்டால் ஆறுதலாக பொறுமையாகத்தான் கை வைக்க வேண்டும். உங்கடை அவசரத்துக்குக் காதைப் பழுதாக்க ஏலாது" என்றவாறே, துடைத்த 'இயர் பட்'டை எறியச் சென்றேன்.

"உது என்னப்பா? காதோ? குப்பைக்கிடங்கோ?" என்று 'இயர் பட்' நுனியில் சேர்ந்திருந்த அழுக்கைப் பார்த்துவிட்டுக் கேட்டார் தருமர். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், "அண்டைக்கு நாங்கள் சாப்பிட்ட' சிக்கன் கிறேவி' கறியிலிருந்த அந்தக் காற்பாகத்து எலும்பு இணைப்புத் துண்டுமாதிரி இருக்குது உமது காதுக்குள்போய் வந்த 'இயர் பட்'" என்று நக்கல் வேறு.

++++

அவசரம் அவசரமாப் புறப்பட்டு மதியச் சாப்பாட்டுக்கு அநுராதபுரத்துக்கு அப்பால் நல்ல ஒரு சாப்பாட்டுக் கடையில் வாகனங்கள் தரித்தன. நான்கு மேசைகளைப் பிடித்து, ஒரு மேசைக்கு நான்கு பேரென அமர்ந்து கொண்டோம்.

தருமருக்கு எதிர் மேசையில் பாதுகாப்பாக அமர்ந்துகொண்டேன். எனது மேசையில் என்னைச் சூழ எங்களுடன் வந்த மேலும் மூவர். அன்று வெள்ளியோ, செவ்வாயோ இல்லாதபடியால் வழமைபோல சோற்றுடன் கோழிக்கறிக்கு 'ஓடர்' கொடுத்தார் தருமர். சோறு வருவதற்கு முன்னரே கறி சிறுசிறு கிண்ணங்களில் பரிமாறப்பட்டது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறு கிண்ணத்தில் கோழிக்கறி அவ்வாறே ஏனைய கறிகள் தனித் தனியாக. கோழிக் கறியின் வாசனை மூக்கைத் துளைத்தது. நீண்ட பயணம். எல்லோருக்கும் பசி வேறு. ஆவலுடன் சோற்றையும் ஏனைய தட்டுக்களையும் எதிர்பார்த்து இருக்கையில், எதிரேயிருந்த தருமரிடம், எனது காதைக் குடைந்து காட்டி எத்தனை என்று கேட்டேன். அவர் கோழிக் கறித் தட்டை எடுத்துச் சோதித்துவிட்டு, 'இயர்பட்' வடித்ததிலிருந்த கோழிக்கால் இணைப்புப் பாகத்தை எடுத்து சுவைத்துக் கடித்தவாறு கோழிக்கறித் தட்டை ஆராய்ந்தார். பின்னர் நான்கு எனச் சைகைசெய்து கையால் காட்டி, எனக்கு எத்தனை என்றவாறாகக் கைப் பாஷையைத் திருப்பிவிட்டார். அப்போது ஏனைய தட்டுக்களும் சோறும் கொண்டுவந்து மேசையில் வைக்கப்பட்டு விட்டது. முகத்தைத் தொங்கப் போட்டவாறே ஒன்றே ஒன்று என்றவாறாகக் காண்பித்தேன்.

++++


சோற்றைத் தமது தட்டில் இட்டுக் கறியை ஊற்றிச் சாப்பிடத் தொடங்கினர் அனைவரும். ஆனாலும் நாம் கதைத்த பரிபாஷையை விளங்கிக் கொள்ள வேண்டுமென்கின்ற ஆவல் அவர்களை உந்தித் தள்ளியது. என்னிடம் கேட்பதற்கு அவர்களுக்கு ஒருவித தயக்கம், தருமரிடமே கேட்டனர்.

"அது பிள்ளையள் சாப்பிடேக்கை சொல்லக் கூடாது. பேசாமல் சாப்பிடுங்கோ" என்றார். அவ்வாறு கூறியதும் அவர்களது ஆவல் மேலும் அதிகரித்தது.

"சொல்லுங்கோ சேர்? இல்லாட்டிச் சாப்பிட மாட்டம்" என அடம்பிடித்தனர்.

"சொல்லாட்டிலும் சாப்பிட மாட்டியள், சொன்னாலும் சாப்பிட மாட்டியள், பேசாமல் சாப்பிடுங்கோ" என்றவாறே சிறிதளவான சோற்றைத் தனது தட்டில் இட்டார் தருமர். இவ்வாறு அவர் கூறியதும் அவர்களது ஆவல் மேலும் அதிகரித்தது.

அவர்கள் விடாப்பிடியாக் கேட்கவே,



"அதுபிள்ளையள் சாப்பாடு 'ரேஸ்றாக' வாறதுக்காக ஒவ்வொரு இடத்திலை ஒவ்வொரு முறையைக் கையாளுவினம். அதைப் 'பாகம்' எண்டு சொல்லுறது. அதுன்ரை இரகசியத்தை வெளியிட மாட்டார்கள்.

இப்ப நாங்கள் குடிக்கிற கோக்கா கோலாவில என்னென்ன 'பாகம்' சேர்க்கிறதெண்டு, அங்கை வேலை செய்யிற ஒருத்தர் ரெண்டு பேருக்குத்தான் தெரியும். அந்தச் 'சீக்கிரட்டை' வெளிவிட மாட்டினம்" எனக் கூறி ஆவலை மேலும் அதிகரிக்கச் செய்தார்.


பின்னர், "இந்தக் கடையிலை 'சிக்கின்' கறி ஏன் வலு 'ரேஸ்றாக' வாறதெண்டு தெரியுமோ...? எங்கையெல்லாமோ அலைஞ்சு, திரிஞ்சு காதைச் சுத்தமாக்கிற அந்த 'இயர் பட்டை' 'கலெக்ற்' பண்ணிக்கொண்டுவந்து, குழம்புக் கறியிலை சேர்ப்பினம். சுவைக்காகவும் மணத்துக்காகவும்தான்" எனக் கூறியவாறெ 'இயர் பட்'போல இருந்த கோழியின் பாகத்தை எடுத்துச் சுவைக்கத் தொடங்கினார். சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் மெல்லவும் முடியாமல், துப்பவும் முடியாமல், ஓங்காளம் வருகின்ற நிலையில், கோழிக்கறிக் கிண்ணத்தைத் தள்ளி வைத்தனர்.

"ஐயோ, அதெல்லாம் காசு, இங்கை கொண்டு வாங்கோ" என அவற்றையெடுத்துத் தனது தட்டில் இட்டார் தருமர். எட்டி வந்து எனது தட்டிலும் இரண்டு, மூன்று கிண்ணக் கறியை ஊற்றினார். இதைத்தான் நான் சைகையால்ஒன்று என்று காண்பித்திருந்தேன்.

+++++

வலு ஆறுதலாக உண்டவாறே, 'இப்பிடித்தான் பிள்ளையள், இந்தியாவிலை, அந்தக் காலத்திலை, ஒரு வகைப் பிறண்டியோ ஏதோ ஒரு வகை குடிபானம் தயாரிக்கத் தொழு நோயாளர்களைத் தொட்டி ஒண்டுக்கை இறங்கிக் குளிக்கவிட்டு, அந்தத் தண்ணியிலைதான் அந்தக் குடிபானத்தைத் தயாரிக்கிறவை. அந்தத் தண்ணியிலை இருந்து வாற வாசமும், 'ரேஸ்றும்' தான் அந்த குடிபானத்தைக் குடிக்க மக்களைத் தூண்டுகிறது' என்று தனது அறிவை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார் தருமர்.

'பயோ' படிச்சிட்டு, 'மெடிசினுக்கு' இரண்டு மூன்று புள்ளிகள் குறைவடைந்து விவசாயம் படிச்சு முடிச்சு எங்களது நிறுவனத்திலை இணைந்த சிவானுஜாவைத் தவிர ஏனையோர் உணவை ஒருவித வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். நானும் தருமரும், அனைத்துக் கோழிக்கறிக் கிண்ணங்களையும் வழித்துண்ணும் கருமத்தில் கண்ணாயிருந்தோம். ■



# சோபையிழந்த தேசம்

கவிதை

மாதவி உமாசுதசர்மா

பறவைகள் கூடு கட்டாத
எம் நிலங்களின் தேக்கமெங்கும்
அரங்கேறுகிறது நிதம் கூத்து

மழைபெய்து நிரம்பாத கிணறுகளில்
கல்பெயர்த்து முளைத்த சிறு மரங்களில்
படிகிறது எச்சிலின் துளி

உறைந்த நீரெனச் சரியும்
காதலின் முற்றத்தில்
நீலம் குடித்த மலர்கள்
இறுதியில் மகுடியில் சாய்ந்திட
வஞ்சிக்கப்பட்ட அன்பு
இடுக்குகளிலிருந்து முகிழ்ந்து
மூச்சுத் திணறுகிறது

பிரியும் கணம் தாழாது
புதைந்த கண்ணிவெடியென
பதறுகின்றது உணர்வுகளின் வெப்பம்

இடம்பெயரும் நிலவு
கோடையின் சுழலாய் மேலெழும்ப
உயிர்கள் எப்போதோ உருகியிருந்தன

ஒரு துன்பியல் சித்திரமென
தாழைக் காட்டின் வாசனையோடு
சிதறுகிறது பூமிப் பிஞ்சு

இறுதி முத்தங்களின் சப்தம் தொலைந்திட
இன்னும் பெய்யவில்லை வெளிச்சம்
மனிதர்கள் கடந்துசெல்லும் நிலங்களில்
அடைக்க அடைக்கப் பீறிடுகின்றன
துயரத்தின் ஊற்றுகள்...

சிறுகதை

# வாழ்க்கை என்றால்...

சு. தர்மலிங்கம்

> தன்னுடைய தந்தை உயர் கல்விக்குத் தன்னை அனுமதிக்கவில்லையே என்ற குறையைப் போக்குவதற்காகத் தன்னுடைய ஒரே மகன் கோகிலனை பிரபல்ய யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றிலே, அதன் விடுதியிலே தங்கியபடி ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தார். விடுமுறை நாள்களில் வீட்டுக்கு வருபவன் தந்தைக்குத் தகுந்த தனயனாக நின்று தோட்ட வேலைகளுக்கு உதவி செய்தான்.

"இந்தப் பொம்பிளையில என்னடா குறை, குற்றம் கண்டனி..? ஞாபகத்தில வைச்சுக்கொள். டேய் தம்பி! கோகிலன், உதோடை முப்பத்தைஞ்சாவது குறிப்புப் பொருத்தமும் பொம்பிளை பாக்கிறதும். உன்ர மனதுக்கேத்த பொம்பிளை தேடிக் களைச்சுப் போனன். உனக்கு ஆரேனும் விருப்பமிருந்தால், அதையாவது சொல்கிறாய் இல்லையே?" என்று கேட்டுச் சலித்துக் கொண்டார் தரகர்.

மேற்கூர்வாழ் கைலாசத்தின் மகன் கோகிலன். அவருடைய மனைவி கோகுலம். அடுக்களையிலிருந்தவாறே,"உனக்கு வயது முப்பத்தைந்தாகிறது. பொம்பிளை தேடி உன்னுடைய கொப்பரும் காசை கரியாக்கிறதுதான் மிச்சம். இப்ப பாக்கிறதையும் வேண்டமெண்டு சொல்லிப் போடாதை. எங்களுக்கும் வயசாகுது. செத்துக்கித்துப் போனால் நீ தனிக்கட்டையாகத் தான் வாழ வேணும்" கோகிலனுக்குக் கேட்கக் கூடியதாக உரத்த குரலில் பொரிந்து கத்தினாள் கோகுலம்.

கைலாசத்தின் தந்தை செல்லையா, மகனுக்கு மேலே படிக்கவேண்டுமென கொள்ளை ஆசை இருந்தாலும், அவனைத் தனது தோட்ட வேலைகளுக்கு ஒத்தாசை புரிவதற்காக அரை குறைக் கல்வியுடன் இடை நிறுத்தி விட்டார். ஆனால், கைலாசம் ஓரளவுக்கு கல்வியறிவும் பட்டறிவும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

000

அன்று மாலை வேளை.

புகையிலைத் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார். அருகில் உள்ள அம்மன் கோயிலில் கும்பாபிஷேகத் திருவிழா. ஒலி பெருக்கி அலறிக் கொண்டிருக்கிறது.

'கரடு முரடான பாறைக் கற்கள், இலந்தை, நெருஞ்சி, காரைப் பத்தைகள் நிரம்பிய நிலத்தைப் பண்படுத்தி விவசாயத்துக்குப் பயன்படுத்தினாலும், கரடு முரடான நெஞ்சங் கொண்ட நய வஞ்சக மனிதர்களை எத்தனை கோயில்களைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தாலும் பண்படுத்த முடிய வில்லையே...?


ஒவ்வொரு நாளும் பத்திரிகையைப் புரட்டினால், கொலை, களவு, கற்பழிப்பு மலிந்து கிடக்கிறதே..?' அவர் மனம் ஆதங்கப்பட்டது.

தன்னுடைய தந்தை உயர் கல்விக்குத் தன்னை அனுமதிக்கவில்லையே என்ற குறையைப் போக்குவதற்காகத் தன்னுடைய ஒரே மகன் கோகிலனை பிரபல்ய யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றிலே, அதன் விடுதியிலே தங்கியபடி ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தார். விடுமுறை நாள்களில் வீட்டுக்கு வருபவன் தந்தைக்குத் தகுந்த தனயனாக நின்று தோட்ட வேலைகளுக்கு உதவி செய்தான். நாள் காட்டியிலே நாள்கள் ஒவ்வொன்றாகக் கிழிக்கப்படுகின்றன. நாள்கள் உருண்டோடி மாதம், வருடமாகியது. மேல் நிலைக் கல்வி கற்ற கோகிலன் கணிதத்திலே தேசிய நிலையிலே முதல் இடத்தைத் தக்க வைத்தான்: நில அளவையாளர் பரீட்சையில் சித்தி பெற்று தியத்தலாவைப் பிரதேசத்தில் இரண்டு வருடப் பயிற்சியை நிறைவு செய்து நில அளவையாளராக அரச சேவையில் இணைந்து கொண்டான். நிலத்தைத் துல்லியமாக அளவிடும் தன்மை கொண்டவன். அதேபோல் ஒருவருடைய முக பாவத்தையும், ஆடை அணிகலன்களையும் கணிப்பீடு செய்து ஒருவர் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கணிப்பதில் வல்லவனாகத் திகழ்ந்தான். பெண் பார்க்கும் படலத்தில் பல அழகு சுந்தரிகளைப் புறந் தள்ளியதற்கும் காரணம் இவையாக இருக்கலாம்.

கொடிகட்டிப் பறக்கும் மருத்துவ நிபுணர்களால், வியாபார நோக்கில் இயக்கப்படும் தனியார் மருத்துவமனைகள் நோய்களால் துடித்து வரும் நோயாளர்களிடமிருந்து மனிதாபமற்ற முறையில் பணத்தைக் கறப்பதுபோல் இவனும் 'பிறைவேற் பிறக்ரிஸ்' மூலம் பல கோடிகள் சம்பாதிக்கலாம். ஆனால் போதுமென்ற மனமே பொன் சொரியும் என்ற கொள்கையாளன். ஓய்வு நேரங்களில் தந்தையாருக்குத் தோட்டத்தில் உதவி செய்வதிலும், கோயில் தொண்டு செய்வதிலும் அவன் நேரம் கழிந்தது. பார்க்கிற பெண்களையெல்லாம் புறந்தள்ளியது, 'அவன் ஆண்மை அற்றவனா?' என்று கூடப் பெற்றோரைச் சந்தேகம் கொள்ள வைத்தது. வாழ்க்கை என்ற ஓடத்தை என்றோ ஒரு நாள் விதி என்ற சுழல் காற்று ஆழ்த்திவிடுமோ என்று அவன் எப்போதும் எண்ணியிருக்கவில்லை.

000

முப்பத்தைந்து வயதாகிறது. தாய் தந்தையாரின் நெரிசல் ஒருபுறம் தனக்கு வயதாகிறதே, பூலோக வாழ்வில் திருமண பந்தம் ஒரு முக்கிய அம்சம் அதற்குத் தான் விதிவிலக்கானவனல்ல என்பது மறுபுறம். அவன் ஆழ் மனம் உறுத்தியது. ஏற்கனவே பொருந்தி வந்த குறிப்பு ஒன்றையெட்டி, பெண் பார்க்கும் திகதியும் குறிக்கப்பட்டது. அன்று மாலை வாடகைக் காரிலே கோகிலனும் பெற்றோரும் கிடைத்த அறிவித்தலுக்கு அமைவாகக் கண்ணகை அம்மன் கோயில் வாசலைச் சென்றடைந்தனர். அங்கு நின்ற ஒருவரிடம் வீட்டை விசாரிக்கிறார்கள். "கார்த்திகேசா...? அவரைக் காந்தார் எண்டால்தான் எல்லோருக்கும் தெரியும். நல்ல மனிசன் தானும் தன்ரை பாடும். மற்றவர்களோடு பழகுறதுக்குத் தங்க



மானவர். அவருக்கு ஒரு மகள்தான் அவள்..." என்று இழுத்தவர் வீட்டைக் காண்பிக்கிறார்.

'இந்தச் சம்பந்தத்தையும் மகன் என்ன சொல்லப் போகிறானோ?' கைலாசத்தின் மனதிலே எழுந்த அச்ச உணர்வு, அம்மன் ஆலய முன் திசையில் அமைந்த கிரசர் வீதியால்போய் 300மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள கார்த்திகேசாவின் வீட்டை அடைய மாலையளவாகி விட்டது. வீட்டின் கிழக்குப் பக்கமாக ஒரு பெரிய தென்னந் தோப்பு. மத்தியிலே நடுத்தர வர்க்கத்தினருக்கே உரித்தான வீடு. வீதிக்கும் வீட்டுக்கும் இடைப்பட்ட பகுதியிலே மா, பலா கமுகுகள். மாரி காலத்தில் ஒட்டி வைத்து விற்பனை செய்வதற்கு நாற்றிடப்பட்டிருந்தன. தோப்புக்குக் கிழக்காகக் காய்கறித் தோட்டம். கிரவல் வீதி முடிகின்ற கையோடு தெற்குப் பக்கமாக இரு மருங்கிலும் மணல் திட்டுக்கள், திருட்டு மணல் ஏற்றும் உழவு இயந்திரங்களின் பெரும் இரைச்சல், கண்ணுக்கெட்டிய தூரம் நீண்டு பரந்து விரிந்த கச்சாய்-கிலாலிக் கடல், பொன் நிறம் பரப்பிய வண்ணம் சூரியன் மறையும் காட்சி. அந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்த கோகிலன் ஒரு கணம் தன்னையே மறந்து பிரமித்துப் போய்விட்டான். வீட்டுக்குள் வரும்படி பெண்வீட்டார் அழைத்தபோதும் அந்தக் காட்சியிலேயே லயித்துப்போய் நின்றுவிட்டான். 'நான் எவ்வளவு பாக்கியம் செய்தனான். இயற்கைச் சூழல், பழந் தமிழர் வகுத்த நெய்தல் நிலம் ஒருபுறம் மருதம் மறுபுறம். அதன் மத்தியிலே அமைந்த வீடு...' இதையெல்லாம் எண்ணியவாறு வீட்டுக்குள் நுழைகிறான்.

000

அடக்க ஒடுக்கமான பெண்ணாகத் தாயின் கையைப் பற்றியவாறே கோகிலனும் பெற்றோரும் அமர்ந்திருக்கும் வரவேற்பறையை நோக்கி வருகின்றனர் காயத்திரியும் தாயும். அப்பொழுது தான் துயில் எழுப்பிய வதனம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அச்சம், நாணம், மடம் மிக்க கிராமப்புற பெண்ணாகத் திகழ்ந்தாள். பூ சூடிய இரட்டைப் பின்னல், பொது நிறம், சுமாரான உடல் அமைப்பு, ஏற்ற உயரம்... அவன் சம்மதம் தெரிவிக்கிறான். அவன் சம்மதித்தது கோகிலனின் பெற்றோருக்கும் பெண் வீட்டாருக்கும் ஒரே குதூகலம். கோகிலன் ஒரே மகன் திருமணச் சடங்கைக் கோலாகலமாகச் செய்ய வேண்டுமென்று அவனுடைய பெற்றோர் திட்டம் தீட்டினர். ஆனால் பெண்வீட்டார் சம்மதிக்கவில்லை. அந்தத் திருமண நிகழ்வை எளிமையாக நடத்த வேண்டுமென்று அடம்பிடித்தனர். அவர்களின் குல தெய்வக் கோயிலிலே மிக எளிமையாகப் பிள்ளையார் பூசையுடன் திருமணம் நடந்தேறியது. மணப்பெண் மணவறையிலே ஏதோ ஒன்றை இழந்தது போல் முக மலர்ச்சியின்றி அமர்ந்திருந்ததைக் கோகிலன் அவதானிக்கத் தவறவில்லை. கல்யாணம் நடந்த கையோடு மணப் பெண்ணின் தாயார், "எனது மகள் காயத்திரி பயந்த சுபாவம் கொண்டவள். செல்லமாக வளர்ந்தவள். எல்லாத்துக்கும் நான் பக்கத்தில நிக்கவேணும். கால் மாறிய கையோடு நாலாஞ்சடங்கு வரைக்கும் பொம்பிளை உங்கட வீட்டிலதான் இருப்பாள். அதுவரை நானும் அவளோடதான் இருக்கவேணும். நாலாம் சடங்கு முடிந்த கையோடு மாப்பிளையையும் பொம்பிளையையும் எங்கட வீட்டுக்கு அழைச்சுக் கொண்டு போவம்" என்று கூறினாள். அவள் என்ன காரணத்தைப் பின்னணியாக வைத்துக்கொண்டு கூறுகிறாள் என்று கோகிலன் வீட்டுக்காரருக்கு அப்பொழுது புரியவில்லை. "இதிலென்ன இருக்கிறது?" என்று சம்மதித்தாள் கோகிலனின் தாய்.

000

முதல் நாளிரவு.

கோகிலனின் எதிர்பார்ப்புக்கள் அதிகம். திருமண ஆடை அணிகலன்களைக் களைந்தவள் மாப்பிள்ளை வீட்டார் கொடுத்த பால் பழத்தை அருந்திவிட்டுக் கணவனைக் கண்டும் காணாததுபோல் "தூக்கம் வருகுது" என்று படுக்கையிலே சாய்ந்து விட்டாள். கோகிலன் அவள் பால் பச்சதாபம் கொண்டான். பாவம் கலியாண நிகழ்வுகளில் களைச்சுப் போயிருப்பாள். படுக்கட்டும் என்று அவளைத் தன்பாட்டியேலே விட்டு விட்டான். பகல் வேளைகளிலும் தனக்கு அசதியாக இருக்கிறது என்று கூறிக் கொண்டே அவனை நெருங்க விடாமல் படுத்துவிடுவாள். அவளுக்கு எங்கிருந்துதான் நித்திரை வருகுது என்று ஆச்சரியப்பட்டான். பல இரவுகள் நித்திரையிலே கழிந்தன. தான் படித்த ஆங்கில நாவலில் 100வருடங்கள் தூங்கிய அழகிய இளவரசியைப்போல் தன்னுடைய மனைவியும் தூங்குகிறாளோ? என்று அவன் மனம் வலையில் அகப்பட்ட மீனைப்போல் துடித்தது. ஓர் இரவு அவன் மனம் இருப்புக் கொள்ளவில்லை. அவள் நல்ல தூக்கத்தில் கையைப் பற்றி, துயிலும் பெண்ணின் கையைப் பற்றிப் பள்ளி எழ இழுக்கிறான். அவள் நித்திரை மயக்கத்தில் அனுங்கியவாறே அவனின் கையைத் தட்டிவிட்டு "என்னைப் படுக்க விடுங்கோ" என்றுவிட்டு மறுபக்கம் புரண்டு படுத்துவிட்டாள். அவளை அணுக எடுக்கிற முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. ஆண்டவன் படைப்பு வினோதமானது. ஆணையும் பெண்ணையும் படைத்தவன் ஒருவரை ஒருவரோடு கவர்ந்திழுக்கும் தன்மையையும் சிருஷ்டித்திருக்கிறான். ஆனால் தன் மனைவி இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவளாக இருக்கிறாளே?

சிந்தனைகளை மெல்லவோ, விழுங்கவோ முடியாத நிலை அவனுக்கு. படுக்கை அறை இரகசியத்தை ஒருவரிடமும் பகிர முடியாத நிலை. இல்லற வாழ்வு என்ற போர்வையில் பாழ் கிணற்றில் தள்ளிவிழுத்தப்பட்டு விட்டேன். இக்கட்டான நிலையில் அகப்பட்டு விட்டேனே. தான் கட்டிய தாலி தன் கையிலே பூட்டிய விலங்கானதோ...? அவன் மனம் வேதனையால் துடித்தது. அவள் ஏதோ ஒரு நோயால் அவஸ்தைப்படுகிறாள் என்று சந்தேகம் கொள்கிறான். மலையிலே தோன்றி, நெளிந்து, வளைந்து நெடுதூரம் பயணிக்கும் ஆறு கடைசியில் கடலில் சங்கமிக்கிறது. அதேபோல் சந்தேகங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வரத்தான் செய்யும்.


43

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்



# சர்வாதிகாரத்தைக் கோரும் துறவறம்



அண்மையில் இடம்பெற்ற முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பிறந்த தினத்துக்கு வாழ்த்துத் தெரிவித்த அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர், "இன்று எமது நாட்டுக்கு ஒரு சர்வாதிகார ஆட்சியே பொருத்தமானது" எனவும், 'ஹிட்லரைப்போன்ற வீரமும், துணிவும் கொண்ட கோத்தபாய ராஜபக்சவே அதற்கு முற்றிலும் பொருத்தமானவர்' எனவும் தெரிவித்திருந்தார்.

இப்படியொரு கருத்து ஓர் உயர்மட்டப் பௌத்த பிக்குவிடமிருந்து வெளிப்படுவதோ அல்லது ஒரு பௌத்த பீடத்திடமிருந்தோ வெளிப்படுவதோ இலங்கையைப் பொறுத்தவரை ஆச்சரியப்படும் செயலல்ல.

நான்கு கோடி உயிர்களைக் கொன்று குவித்த இரண்டாம் உலகப் போரின் நாயகன் ஹிட்லர். பலகோடி மக்களின் உயிரிழப்பு மட்டுமின்றி, ஏராளமான ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் பேரழிவுகளைச் சந்தித்தன. எல்லாவற்றுக்கும் மேலாக யூதர்கள் என்ற ஒரேயொரு காரணத்துக்காக 60இலட்சம் யூதர்களைக் கொடும் வதை முகாம்களிலும், நச்சுப் புகைக் கூண்டுகளி லும் தள்ளி ஈன இரக்கமற்று அவர்களைக் கொன்று குவித்தமையை உலகத்தால் என்றுமே மறந்துவிட முடியாது.

ஓர் இழிவுக்குரிய மனித குல விரோதியாக அடையாளப்படுத்தப்பட்ட ஹிட்லரை இலங்கையிலுள்ள பௌத்த குருமார் புகழ்ந்து போற்றுகிறார்கள் என்றால், தங்கள் ஆதர்ச வழிகாட்டியாக அதை முன்னிலைப்படுத்துகிறார்கள் என்றால், இவர்களின் மனப் போக்கும், சிந்தனையும் எவ்வளவு கொடூரமானவை என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். இவர்களின் இதயங்களில் எவ்வளவு குருதி வெறி தேங்கிக் கிடக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

**கோத்தபாய கிட்டத்தட்ட ஹிட்லர்தான்**

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை ஒரு ஹிட்லராக எதிர்பார்ப்பதில் தவறு இருக்கமுடியாது. ஹிட்லர் எவ்வாறு ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதிலும், ஏனைய மக்களைக் கொன்று குவிப்பதிலும் எந்தவித மனித குல விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும் துணிந்து செயலாற்றினாரோ அவ்வாறே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிப்பதிலும், தமிழ் மக்கள் மீது இனப்படு கொலைப் போரைக் கட்டவிழ்த்து விடவும் கோத்தபாய தயங்கியிருக்கவில்லை.

இந்த ஆக்கிரமிப்புப் போர் வெறிக்குத் தனது மக்களையே படைவீரராக ஹிட்லர் இலட்சக் கணக்கில் பலி கொடுத்தான். இலங்கையிலும் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போரில் அறுபதாயிரம் சிங்களப் படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அந்தப் படைவீர்ர்களின் பெற்றோர்களின், உறவுகளின், வாழ்க்கைத் துணைகளின் உணர்வுகளைப் பற்றியோ, துயரங்களைப் பற்றியோ எந்தவித கவலையுமின்றியே அந்த நாள் பாதுகாப்புச் செயலாளர் எனும் பெயர் தாங்கிக் கோத்தபாய ராஜபச்ச இன அழிப்புப் போரை நடத்தினார்.

**ஆசையே அனைத்துக்கும் காரணம்**

புத்த பெருமானின் போதனைகளில் மிகவும் முக்கியமானது இது. எல்லாப் பாவங்களுக்கும் ஆசையே காரணமென்றும் முதலில் நாம் பாவங்களிலிருந்து விடுபட ஆசையைத் துறக்க வேண்டுமென்றும் அவர் கூறியிருந்தார். அத்துடன் அவரின் 'பஞ்சீலம்' எனப்படும் ஐந்து கோட்பாடுகளில் பொய் பேசாமை, களவு செய்யாமை, உயிர்களிடத்தில் அன்பு, பிறன்மனை நாடாமை, மது உண்ணாமை என்பன முக்கியமாகப் பின்பற்றப்படவேண்டிய கோட்பாடுகளாக வலியுறுத்தப்படுகின்றன. சாதாரண சமூக வாழ்வில் இணைந்திருக்கும் போது இந்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுவது கடினம் என்பதால் தனது சிஷ்யர்களைத் துறவிகளாக்கிச் சங்கங்கள் அமைத்துத் தனியான அமைப்புக்களாக உருவாக்கினார். இந்தத் துறவிகளுக்கு பௌத்த தர்மத்தை மக்களிடம் போதித்து மக்களின் சமூக வாழ்வையும், ஒழுக்கநெறியையும் மேம்படுத்துவதும் கடமையாக்கப்பட்டது. ஆனால் புத்தபெருமானின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இந்த விகாரைகளும், விகராதிபதிகளும் பௌத்த தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான அன்பு, காருண்யம் என்பவற்றைப் பின்பற்றுகிறார்களா என்பதே இப்போது எழும் கேள்வி!

அன்பையும் கருணையையும் போதிப்பதற்காகவெனப் புத்த பெருமானால் உருவாக்கப்பட்ட சீடர்கள், கொலை வெறியைக் கொள்கையாகக் கொண்ட ஹிட்லரை எப்படி விரும்ப முடியும்? தங்கள் தலைவர் கோத்தபாய ஹிட்லர் மாதிரி இருக்க வேண்டுமென எப்படி ஆசைப்படமுடியும்.

**நல்லதை எதிர்க்கின்ற பிக்குகளின் குணம்**

கடந்த காலத்தில் நடந்த சில சம்பவங்களை மீள் பரிசீலனை செய்வோமாயின் பௌத்த குருமார், புத்த பெருமானின் போதனைகளுக்கு நேர் விரோதமாகவே நடந்து வந்துள்ளனர் என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். அவர்கள் இதயத்துக்குள் புத்த பகவானைவிட, ஹிட்லரே மேலாதிக்கம் செலுத்திநிற்பதையும் எம்மால் கண்டு கொள்ளமுடியும். 1956ஆம் ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது முன்னாள் தலைமை அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க தொழிலாளர்கள், விவசாயிகள், கிராமிய வைத்தியர்கள், சுயமொழி ஆசிரியர்கள் ஆகிய சுதேசிய சக்திகளை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசை உருவாக்கினார். அதுவரை ஆட்சியிலிருந்த ஏகாதிபத்தியம் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி வீழ்த்தப்பட்டது. நாடு சுய தேவைப் பூர்த்திப் பொருளாதாரப் பாதையில் முன்னேற ஆரம்பித்தது. அது மட்டுமின்றி இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வாக பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும் உருவாக்கினார்.

அதற்கு எதிராகப் புத்த பிக்குகள் அறவழிப் போராட்டத்தை நடத்தினர். தமிழருக்கு எதிரான இன அழிப்புக் கலவரம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது. 1959ஆம் ஆண்டு செப்ரெம்பரில் எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவும் சோமராம தேரர் என்ற புத்த பிக்குவால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறே இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் அதை எதிர்த்துக் குழப்பியடிப்பதில் பௌத்த மத குருமார் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர்.


**சிறுபான்மையினருக்கு எதிரான மனோநிலை**

முஸ்லிம்களின் மசூதிகளை இடிப்பதிலும், வர்த்தக நிலையங்களை எரிப்பதிலும் பொதுபல சேன முன்னிற்பதைக் காணமுடியும். தற்சமயம்கூட 18வரையான புத்த பிக்குகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பாலியல் வன்புணர்வு, தன்னினச் சேர்க்கை, புதையல் தோண்டுதல், போதைப் பொருள் பாவனை, வன்முறை என பௌத்த தர்மத்தால் தவிர்க்கப்படவேண்டியு குற்றங்களைச் செய்தமைக்காகவே சிறை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், இவர்களை இன்னும் சிங்கள மக்கள் நம்புகிறார்கள் என்பதுதான் மிகப் பெரும் பரிதாபமாகும். இவர்களோ பௌத்த மதத்தைவிட வன்முறைகளிலேயே கூடுதல் நம்பிக்கை கொண்டுள்ளனர். புத்தத்தைவிடக் கோத்தபாய போன்றவர்களையே நம்புகின்றனர். எனவேதான் இவர்களால் ஹிட்லரைத் தங்கள் வழிகாட்டியாகப் போற்ற முடிகிறது. ஆனால், வரலாறு ஹிட்லருக்குச் சரியான பாடத்தையே கற்றுக் கொடுத்தது. ஹிட்லரின் அன்பர்களும் அப்படித்தான். வரலாறு வழங்கும் தீர்ப்பி லிருந்து தப்பிவிட முடியாது.


> முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை ஒரு ஹிட்லராக எதிர்பார்ப்பதில் தவறு இருக்க முடியாது. ஹிட்லர் எவ்வாறு ஏனைய நாடுகளை ஆக்கிர மிப்பதிலும், ஏனைய மக்களைக் கொன்று குவிப்ப லும் எந்தவித மனித குல விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும் துணிந்து செயலாற்றினாரோ அவ்வாறே தமிழ் மக்களின் விடு தலைப் போராட்டத்தை அழிப்பதிலும், தமிழ் மக்கள் மீது இனப் படு கொலைப் போரைக் கட்ட விழ்த்துவிடவும் கோத்தபாய தயங்கியிருக்கவில்லை.





# பசி தீர்க்கிற பயிர்




கட்டுரை

ஜெ.காயா

## கணபதியர் வீட்டு உள்ளிப்பாரைச் சுற்றி மலையளவு குவியல். அவ்வளவும் தேங்காய்ப் பொச்சுக்கள்!

அந்த உள்ளிப்பாரால் தேங்காய்ப் பொச்சைப் பாளம் பாளமாக உரித்தெடுக்கும் வித்தை அவருக்குக் கைவந்த கலை. உரித்த மட்டைகளைக் கணபதியர் அப்படியே விட்டு விடப் போவதில்லை. குவியல் பெருத்து வருகின்ற சமயம்பார்த்து, அதை அப்படியே அள்ளிக் கொண்டுபோய், தனக்குத் தந்த தனது காணித் தென்னைகளுக்குக் கீழேயே அவ்வளைவையும் புதைத்து விடுவார். இனி அவர் வீட்டுத் தென்னைகள் மூசிக் காய்க்கும். காலம் காலமாகக் கணபதியரின் காணியில் இதுவே சுற்றோட்டம். கணபதியர் ஒன்றும் கற்பனைப் பாத்திரம் அல்ல. கச்சாயைச் சேர்ந்தவர். இது சாவச்சேரிக் குட்பட்ட ஒரு கிராமம்.

கணபதியரைப்போலவே அங்குள்ள பலருக்கும் தேங்காய்ப் பொச்சின் மகத்துவம் நன்றாகத் தெரிகிறது. அது தருகிற பசளையும், நீரை உறிஞ்சித் தென்னையை வறட்சியிலிருந்து காக்கின்ற உத்தியையும்கூடத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். கச்சாய்க் கிராமத்தில் மாத்திரமல்ல, தென்னைகள் நிறைந்த யாழ்ப்பாணம்-தென்மராட்சிக் கிராமங்கள் எங்கிலுமுள்ள மக்கள் அதனால்தான் அவரைப்போலவே செயலாற்றுகிறார்கள். அத்துடன் நின்றுவிடாமல், இன்னும்பல வழிகளிலும் தென்னம்பொச்சால் பயன்பெறவும் செய்கிறார்கள். சிறு கைத்தொழில் வடிவமாக, வாழ்வாதாரமாகவும் கூட.

கணவனை இழந்த சரசுவுக்கு இவை கைகொடுத்த கதையும் இதில் ஒன்றுதான்.

■ ■ ■

சரசுவுக்கு மூன்று பெண் பிள்ளைகள், நான்காவதாக ஓர் ஆண். அதற்கு மூன்று வயதிருக்கும். மூத்த பிள்ளைக்குப் பத்து வயது. மற்றைய இரண்டும் இவை இரண்டுக்கும் இடையில் பிறந்தவை. பிள்ளைகளின் படிப்பும், வளர்ப்பும் சரசுவுக்குச் சாவளவு வேதனையைக் கொடுத்தன. பல வேலைகளைச்செய்தும் சரசால் குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியவில்லை. ஒரு கட்டத்தில் பொச்சு மட்டைகளே அவளுக்கு வாழ்வளித்தன. மட்டை ஒன்று சதமளவில் விலை போனது (உலராத மட்டை). கடனுக்கே முதலில் வாங்குவாள். கடற்கரையில் குழிதோண்டி இரண்டுநாள்கள் வரை புதைத்து வைப்பாள். பின்னர் எடுத்து, நிழல் பார்த்து அமர்வாள். உப்பு நீரில் ஊறிய மட்டைகளை ஒவ்வொன்றாகக் குற்றி ஒன்றில் வைத்துக் கொட்டன் தடி கொண்டு அடித்துத் தும்பாக்குவாள். உலர விடுவாள். தும்பைச் சூர்ந்து, துப்புரவு செய்வாள். மூத்த புதல்விக்கும் இது பழக்கமாகிப் போயிற்று. ஆனாலும் புதல்வி அத்தோடு நிற்கவில்லை. துப்புரவு செய்த தும்பைத் திரட்டி, கைக்கு அடக்கமான உருண்டைகளாக்குவாள். தாயோடு சேர்ந்து கயிறு விடவும் கற்றுக்கொண்டாள். பக்கத்து வீட்டுப் பூபதியின் மிசினைத் தஞ்சம்கோரி ஆரம்பித்த சரசுவின் கயிறுதிரிக்கும் தொழில் காலப் போக்கில் கயிறு திரிக்கும் மிசின்கள் இரண்டைச் சொந்தமாக்கும் அளவுக்குத் தேறியிருந்ததையும் ஒரு தடவை தனது கதையோடு கதையாக அவளே சொல்லியிருக்கிறாள். பிறகு அதுவே அவளுக்கு வாழ்வாதாரமாகவும் ஆகிவிட்டது. வயிற்றுப் பசி அறியாமல் அதனால் தான் அவள் குடும்பமும் வளர்ந்தது. பிள்ளைகளும் படித்து ஆளாக முடிந்தது. இதுவும் கற்பனையல்ல.

'தேங்காய்ப் பொச்சுத்தானே' என்றிருந்த ஒரு வகை அற்பமான மனவோட்டம் இப்போது உங்களுக்குள் உயர்ந்திருக்கலாம்(?)

■ ■ ■

கணபதியாரைப்போலவே பலர், குறிப்பாகப் பழையோர் தென்னம் பொச்சைப் பசளையாக்கி வருகிறார்கள். அதனால் தான் அவர்கள் வீட்டுத் தென்னங் குலைகளில் கனம் தாங்க முடியாத அளவுக்குத் தேங்காய்கள் காய்த்துக் குலுங்குகின்றன. ஆனால், கணபதியர் தரவளிக்கு ஒரு பிரச்சினை. தென்னம் பொச்சுக்கள் குவியலாகக் கிடப்பதால் (சேர விடுவதால்) இப்போது சுகாதாரப் பிரச்சினைகள் பல தலையெடுத்திருக்கின்றன. குறிப்பாக 'டெங்குப் புலனாய்வினரின்' தொல்லை அதிகரித்துவிட்டது. கணபதியருக்கும் இவர்களோடு மல்லுக்கட்டுவதில் பிடிப்பில்லை. அதனால், போறைணைகளுக்குப் பொச்சைக் கொள்வனவு செய்ய வருவோருக்கும், வெளிமாவட்டத்திலிருந்து வந்து பொச்சு எடுப்பவர்களுக்கும், கொடுத்தனுப்பி விடுகிறார். தொல்லையிலிருந்து தொலைவாகிவிட்டாலும். அவருடைய மனதில் ஒருவகைப் பாரம் இருக்கவே செய்கிறது. காரணம் அன்றே ஔவை சொன்னதுதான்.

***நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி என்று தருங்கொல்? என வேண்டா நின்று தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்***

தென்னைமரத்துக்கு நாம் தரையில் இடுகின்ற (கால்களில்) நீரை அது உள் வாங்கி; உண்டு, அதைத் திரும்பவும் எங்களுக்குத் தனது தலையால் (இளநீராகத்) தருகிறது. தண்ணீர் பாய்ச்சி வளர்த்துவிட்டாலும் தென்னை ஒருதடவையுடன் தான் தருவதை நிறுத்துவதில்லை. அது தொடர்வதைப்போல் கணபதியராலும் தனது உபகாரத்தைத் தொடர முடியாதது பாரமில்லையா?

காலம் மாறிவிட்டது. காற்றுச் சுழற்றியடிக்கிறது. வெயிலும் விளாசி ஓய்ந்து வருகிறது. இதற்கிடையில் தேங்காய் விலை ஏறிப் பின் விழுந்தெழும்பித் தொடர்கிறது. தென்மராட்சிதான் ஒப்பீட்டளவில் யாப்பாணத்தில் தென்னைப் பயிர் அதிகமாகவிருக்கும் இடம். தென்மராட்சிக் கிராமங்கள் எங்கும் தென்னந்தோப்புக்கள் அதிகம். வீட்டுக்கு வீடாகப் பரம்பரை முதுசொங்களாக நெடுங்காலம் நின்று வருமானம் தந்து நிற்பவை தென்னைகள். நிறைவாகச் சாவகச்சேரி, கொடிகாமச் சந்தைகளில் அறுவடைக் காய்களாக அவை குவியும். அரிசி விலையும் தேங்காய் விலையும் அதிகரிக்கிற காலங்களிலும், இடர்கள், போர் நெருக்கடிக் காலங்களிலும், பஞ்சமும், பட்டினியும் தலையெடுக்கிற பருவங்களிலும் வயல் நிலமும், தென்னந்தோப்பும் கைவசமிருந்த மக்கள் பசி போக்கி உயிர் வாழ்ந்தமை தனிக் கதை.

"நெல்லும் தேங்காயும் வீட்டுக்கை கிடந்தால் பஞ்சம் ஏதப்பா" இப்போதும் கணபதியர் தனது மனைவிக்குச் சொல்வது இதைத்தான்.

■

# பிள்ளையளின்ர பாதிப்புக்குப் பெரிதும் துணை நிற்பது பெற்றோரா! இல்லை ஆசிரியர்களா!



அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

எங்கட ஆக்களுக்கு எப்பவுமே ஞானம் சுடலையிலை அல்லது அதையுங் கடந்துதான் பிறக்கிறது. எந்த விசயமெண்டெல்லாம் கிடையாது. அரசியலாகட்டும் கோயிலிலை நிர்வாகம் தெரியிறதாகட்டும் பிள்ளையளின்ர படிப்பாகட்டும் எதையுமே ஆழ, அகலமா தூரநோக்கத்தோட யோசிக்கிறதில்லை. போகிறபோக்கிலை அள்ளுப்பட்டுப் போறது தானே பாருங்கோ வழமையாகிப்போச்சு. பிழையைக் கண்டுபிடிக்கிறதுக்கும் அதை உரிய இடங்களிலை போட்டுத் தீர்வு காணுறதுக்கும் ஆரையன்தான் நம்புறது. அதுவும் முதல்ல நம்பாத ஆக்கள்தான் பிறகு பிறகு கடவுளாகிறதுகூட. பல விசயங்களிலை உது நடந்திருக்கல்லே?

எல்லாரும் போனால் ஏன் எதுக்கெண்டு ஒண்டையும் பாராமல் பின்னாலை அள்ளுப்படுகிறது. பிறகு கவிண்டு கொட்டுப்படுகிறது. இது எல்லாம் சகயம்தானே. பிள்ளையளின்ர படிப்பு விசயங்களிலையும் இதுதான்


நடக்குதுபாருங்கோ. தங்கட பிள்ளையின்ர எதிர்காலத்தைத் தங்கட விருப்பத்துக்கேத்த மாதிரி யோசிக்கிறதும் அதுக்காக அதுகளைப்போட்டுப் புழியிறதும்தான் நடக்குது எண்டதை ஆராலும் மறுக்க ஏலுமெண்டா வாங்கோ. ஆதாரத்தோட விளக்கம்தர நான்தயார்.

0000

சின்னனிலை ஊருலகத்தைக் காட்டுறதில்லை. போனால் பள்ளிக்கூடம் வந்தால் ரியூசனெண்டு நன்மை, தீமையை அறியவிடாமல் சொந்த பந்தங்களோட கலந்துறவாட விடாமல் படிப்பைப் போட்டுத் திணிச்சு, அதுகளை அடைச்சு 'புறொயிலர்' வளர்ப்பேல்லோ வளக்கிறம். பிறகு அதுகள் என்ன, ஏதெண்டு ஒண்டும் விளங்காமப் போதையிலை விழுகிறதும், அடிதடியிலை போறதுமல்லே நடக்குது.

இதுக்குப் பெற்றோரோட சேந்து பிள்ளையளைச் சில வாத்திமாருமல்லே சோதினை, சோதினையெண்டு பிள்ளையளுக்குக் கேள்வியையும் குடுத்து விடையையும் குடுத்துப் பாடமாக்கச் சொல்லுகினம். சோதினைப் பேப்பரைத் தயாரிக்கிறவையும் அவைதானே?

பேந்தென்ன அவையாலை பாடப் புத்தகத்திலையிருந்து எடுத்துக் கேள்வியை எடுத்து விடையையும் குடுத்தால் அந்தப் பிள்ளைக்குக் கூடுதல் மார்க்ஸ் வரும்தானே? அந்த வாத்தியாற்றை படிப்பித்தல்முறை திறமோ இல்லையோ? பெற்றாருக்குப் பிள்ளைக்கு அறிவு, ஆளுமை, சிந்தனைத் திறன் எண்டுற் விசயங்கள் தேவையெண்டது தெரியாமல் பிள்ளையளை கிளிப்பிள்ளையள் மாதிரி உருவாக்கிறதிலையல்லே கவனமாயிருக்குதுகள். வாத்திமாருக்கும் புத்தகத்துக்கு வெளிலை ஓர் உலகம் பரந்து விரிஞ்சு கிடக்கெண்டது தெரியாது. அதிகாரியளுக்கு அடுத்த பதவியுயர் வெண்டதும் அதுக்கு ஆராரைப் பிடிச்சாச் சரிவரும் எண்டது மட்டுந்தான் தெரியும். சிறுவர் உரிமை அது இது வெண்டு கூப்பாடு போடுறவைக்குத் தண்டனை, கண்டிப்பு எண்டு சீரான சமூகமொண்டு உருவாகிறதிலை எந்தவிதமான உடன்பாடுமில்லை. எல்லாருமாச் சேந்து செய்யிற ஒரே வேலை மேல்நாடுகளிலை கழிச்சுக் கனகாலமாகிப் போன விசயங்களை இஞ்சகொண்டுவந்து கவிட்டுக்கொட்டுகிறதுதான். இல்லையெண்டு ஏதாலுமொண்டைச் சொல்லுங்கோ பாப்பம்?



000

பழுதாகிறது எங்கட பிள்ளையளின்ர வாழ்கை மட்டுமில்லை எங்கடை இனத்தின்ர இருப்பும்தான் எண்டது எத்தினை பேருக்கு உறைச்சிருக்குச் சொல்லுங்கோ? எங்கட கல்வி முறை? அதைப்பற்றி கதைச்சா ரத்தக்கொதிப்புத்தான் வரும். ஆரும் கவலைப்படுகிறதாத் தெரியாத விசயம்.

இப்ப நான் சொல்ல வந்தது பெற்றாரும் ஆசியர்மாருமாச் சேந்து ஊட்டி வளக்கிறதா நினைச்சு அழிக்கப்படுகிற பிஞ்சுகளின்ர வாழ்க்கையைப் பற்றித்தான். ஆசிரியருக்கு (அடைவுவீதம், பெற்றாருக்கு பெருமை). பெரியாக்கள் தங்கட பேருக்கும் புகழுக்குமாய் பிள்ளையளை போட்டுப் புத்தகப் புழுக்களாய் ஆக்கிற கொடுமை எப்ப முடியுமோ தெரியாது?

இப்பிடியான கூடின புள்ளி பெறுகிற பெற்றோர் மாரின்ரை வெறியும் சமூகத்துக்கு உதவாத புறநடையான வாத்திமாரின்ர காமவெறியும் சின்னப்பிள்ளையளின்ர வாழ்க்கையிலை விளையாடின கதைதானே பிந்தினகதை. குறிப்பிட்ட வாத்திப்பெடி பற்றி அவனோட பொடியளைத் தனிய விடுகிறதே பயம் எண்டுற அபிப்பிராயம் பரவலாயிருந்தது எண்டு கொண்டோடிச்சுப்பர் சொன்னதை வட்டுக்கோட்டை மணியத்தாரும் ஆமோதிச்சவர். உண்மை பொய் எண்டுறது இருக்க கதையொண்டு இருந்திருக்குது. அவன் தொடர்பான முறைப்பாடுகளும் உரிய உரிய இடங்களுக்குச் சரியாப் போயிருக்கு எண்டதை கந்தையர் திட்வட்டமாச் சொல்லிப்போட்டு இரகசியமாய் சிலதைச் சொன்னார். அதை என்னண்டு எழுதுறதெண்டு விளங்கேல்லை. அதுகள் பெரிய இடங்களில்ல இருக்கிற பலவீனங்கள்.

கூடின புள்ளி எடுக்கவேணுமெண்டா போட்டியளிலை பங்குபற்ற வேணுமெண்டா அந்த ரியூட்டறிக்கு போனால்தான் நடக்கும் எண்டுறமாதிரியான அபிப்பிராயமொண்டும் அவனாலை உண்டாக்கப் பட்டிருக்காமெண்டும் செல்லம்மாக்கா சொல்லி, தன்ர பேத்தியையும் அங்கதான் படிப்பிச்சதெண்டு இப்ப புலம்பித் திரியிறா? என்ன பிரயோசனம்? பிள்ளையளோட எதிர்காலமெண்டிறதிலை உண்மையான அக்கறையிருந்தா இப்பிடி நடந்திருக்குமோ?

பெற்றாரிலையும் பிழை நிறைய இருக்கெண்டும் சுப்பர் கொதிக்கிறதிலை பிழையொண்டுமில்லையெண்டு நினைக்கிறன். என்ர நினைப்புப் பிழையோ?

ஊராற்றை கதையை நம்பி அவையோட வம்பளக்கிறதை விட்டுப்போட்டு பெத்த பிள்ளையளின்ர கதையளைக் கேக்கிறதுக்கு நேரமொதுக்காட்டி இப்பிடிக் கனக்க பிழையள் தொடரும். பொம்பிளைப் பிள்ளையளோட ஒளிவு மறைவில்லாமத் தாய்மார் நிறைய விசயங்களைப் பேசவேணும் கண்டியளோ? அதுக்காக ஆம்பிளையளை பேயாயும் காமுகராயும் காட்டுற அவலமும் நடக்கலாம். ஆனால் அது பிழை. சரியானதைச் சரியான வழியிலை சொல்ல வேணும்.

அதோடை கண்டுபிடிச்சிருக்கிற பிரச்சனையளை பொதுவாய் ஆண்வாத்திவர்க்கத்தின்ர தலையிலை போடுறதை விட்டுப்போட்டுப் பிழையான ஆக்களுக்கு உச்சமான தண்டனையள் கிடைக்கிறதுக்காக றோட்டுக்கு இறங்கிப் போராடவும் வேணும். கூடிக் கதைக்கிறதாலை ஒண்டும் நடவாது கண்டியளோ?




கவிதைகள்

எஸ்.தர்சி

## கதவுகள் சொல்லும் கதைகள்....!

இங்கு ஒவ்வொரு அறைகளும் வெறும்
அறைகள் மட்டுமில்லை
இவை கதைகளும்
நிறைந்தவை...

அறையின் கதவின்
இடுக்குகளின் வழியே
கசிந்துகொண்டிருக்கிறது
கதைக்கான வார்த்தைகள்...

ஒருசில அறைகளில்
ஒரு பிறப்பையோ....
ஓர் இறப்பையோ....
தீர்மானிக்கிறது காலம்...

அனுபவத்துக்கும்
பிராத்தனைக்குமான
இடைவெளியில்
அடைத்தும் திறந்தும்
ஆடிக் கொண்டிருக்கிறது
மருத்துவமனையின்
அறைக் கதவு...

## மனிதமும் கடவுளும்

ஒவ்வொரு வருடமும்
எந்தவொரு
மாற்றமும் இல்லாமல்
நடத்தப்படுகின்றன
ஊர்த் திருவிழாக்கள்

முகத்திலும் முதுகிலுமாய்
வேல் குத்தியபடி
அங்குமிங்கும் ஆடும் மனிதர்களை
மிரண்டுபோய்ப் பார்க்கின்றன குழந்தைகள்

அடிக்கும் உடுக்கையொலி
கூடக்கூட
கூச்சல் போட்டபடி
ஆடத் தொடங்குகின்றனர்
சில பெண்கள்.

தன் சாவுக்குத்தான்
என்று தெரியாமலே
தலையாட்டி
சம்மதம் சொல்கிறது ஆடு
ஓங்கி இறக்கிய
அரிவாளின் வேகத்தில்
உடலை விட்டுத் தனியே
உருண்டோடுகிறது தலை

சீறிப் பாயும்
குருதியைப் பார்த்ததும்
பூரண திருப்தியாய்
கூச்சலிடுகிறது கூட்டம்

அவர்கள் கைகூப்பும் திசையில்
குலைநடுங்கிப் போய்
கருவறைக்குள்
பதுங்கியிருக்கிறார்
கடவுள்.



## தூக்கிட்டுக் கொல்லும் துரோகங்கள்

கவிதை

வேலணையூர் தனு



வாழ்க்கையில் எத்தனை
வளைவுகள், நெளிவுகள்
நேற்றுப்போல் இன்று இல்லை
இன்றுபோலும் நாளை
இல்லைதான் இருந்தும்....,
நேற்றைய காற்றை மட்டுமே
நெஞ்சுக்கூடு சுவாசிக்கிறது

போலியான நேசங்கள்
பொய்பூசிய புகழ்ச்சிகள்
சந்தர்ப்பச் சமாளிப்புகள்
எதிர்பாரா ஏமாற்றங்கள்
ஏக்கங்கள் நட்பில் கூடவா
நாடகங்கள் அரங்கேறும்...?

'எதிர்பாராமை' என்கிறார்கள்
ஏற்றால்போல் நழுவுகிறார்கள்
வார்த்தை என்னவோ இலகுவானது
வாழ்க்கையில் அது வலிமையானது
தோழமையால் தோள் கொடுத்து
துரோகியாய் மாறிவிட்ட
பின்னரும் துடிக்கிறது மனது
தேடித் தொலைகின்றது நினைவு
தேவைகள் தீர்ந்த பின்
தேடலாகும் உறவு எனின் அது
தேவையில்லை
எல்லையில்லாப் பயணம்
என்றோ ஒரு நாள் முடியும்
அதுவரை நினைவுகளோடு....
நிஜங்கள்.

---

அறிந்த மிருகம் — அறியாத கதை

# நாடுகளெங்கும் நரியார்

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்



நாயின் குடும்பத்தில் வந்தவை நரிகள் என்றாலும். இவற்றால் குரைக்க முடிவதில்லை, தங்களுக்குள் ஒருவரையொருவர் எச்சரிக்க. நரைப்பதுபோன்ற ஒலியை எழுப்பினாலும். ாய்கள் குரைப்பதுபோல் இது ஒலிப்பதில்லை, அதே சமயம் நரிகளால் 20வேறுபட்ட ஒலிகளை எழுப்ப முடியும் என்று சொல்லப்படுகின்றது.

காகத்தின் வாயிலிருந்து வடையைத் தட்டிப் பறிக்க முயன்ற காலத்திலிருந்து குழந்தைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை நரியாரை நன்கறிவார்கள். இந்த நரியில்லாத நாடும் இல்லை. காகத்தைப்போல. நரி என்பது நாய்க் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்குதான்! இதில் 30க்கு மேற்பட்ட இனங்கள் இருக்கின்றன என்பதை நம்மில் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இதில் பெரிய இனந்தான் செந்நரி! ஏனைய இனங்களில் அனேகமானவை தோற்றத்தில் சிறியவையாகவே இருக்கின்றன. தென் துருவத்தில் கூட நரிகள் வாழ்கின்றன. ஆஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட நரிகள் இப்பொழுது வேண்டப்படாதவைகளாக மாறியுள்ளன. எந்தச் சூழலுக்கும் ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு வாழுந் திறன் செந்நிற நரிகளுக்கே அதிகமுண்டு என்கிறார்கள். மக்கள் குடியிருப்புகளை அண்மித்தே இவை தமது இருப்பிடங்களை அமைத்துக் கொள்கின்றன.

**நாளைய உணவுக்காக இன்றைய தேடல்**

இவை தனியனாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ வாழ்ந்து வருகின்றன. தனித்து வேட்டையாடும் திறன் கொண்டவை. ஒரு மானைத் தனியாளாகத் துரத்தி, அதே வேகத்தில் ஓடி, அதன் குரல்வளையில் கடித்துக் கொல்லும் பலம் இதற்குண்டு. தன்னுடைய பின்னாள் உணவுக்காகக் கொன்ற இரையைப் புதைத்து வைக்கும் இதன் சுபாவம் நம்மை ஆச்சரியப்பட வைக்கும். தந்திரசாலிகள் என்று சொல்லப்படும் இந்த விலங்குகள் பொதுவாக கூர்மையான புத்திசாலிகளாக இருப்பதுடன், எதையும் அறிந்து கொள்ளும் துடிப்போடும் காணப்படும் காட்டு விலங்குகளாகும்.

**'வள் வள்' என்று குரைப்பதில்லை**

நாயின் குடும்பத்தில் வந்தவை நரிகள் என்றாலும், இவற்றால் குரைக்க முடிவதில்லை. தங்களுக்குள் ஒருவரையொருவர் எச்சரிக்க, குரைப்பதுபோன்ற ஒலியை எழுப்பினாலும், நாய்கள் குரைப்பதுபோல் இது ஒலிப்பதில்லை. அதே சமயம் நரிகளால் 20வேறுபட்ட ஒலிகளை எழுப்ப முடியும் என்று சொல்லப்படுகின்றது. இது சந்தோஷத்தில் எழுப்பும் குரல், குழந்தை அழுவதுபோல் இருப்பதுண்டு. இரவில் இது எழுப்பும் கர்ண கொடூரமான ஊளைச் சத்தம் கேட்போர் மனதில் கிலியை ஏற்படுத்த வல்லது. இவை சண்டையிடும் போது அல்லது விளையாடும்போது எழுப்பும் ஒரு வகை ஒலி நரிகளிடையே வெகு பிரசித்தமானது. பொதுவாகவே பரபரப்போடு இருக்கும் சுபாவம் கொண்ட இந்த நரிகள், அப்படியான சமயங்களில் இதே மாதிரியான ஒலியை எழுப்புவதுண்டு. நரிக் குட்டிகள் சண்டை பிடித்து விளையாடுவதோடு, இந்த வினோத ஒலியையும் எழுப்புவது, மணிக் கணக்காகத் தொடரலாம். அல்லது இன்னொரு அந்நிய மிருகம் தனது இருப்பிடத்தை முற்றுகையிட்டால், அதை அங்கிருந்து விரட்டும்வரை, பெண் நரி, இருப்பிட வாயிலில் நின்று இப்படியான சப்தத்தை எழுப்புவதுண்டு.

**நரியாரின் குடும்பம்**

இவை ஒரு குடும்பமாகப் பின்னிப் பிணைந்து வாழும் மிருகங்கள் அல்ல. செந்நரி இனத்தில், ஒரு சிறு குடும்பத்தில், ஒரு ஜோடியும், இரண்டு தொடக்கம் ஐந்து வரையான வேறு நரிகளும் இருக்கும். பொதுவாக இவை இந்த நரிகளின் வளர்ந்து வரும் குட்டிகளாக இருக்கும். ஓநாய்களைப்போல, தலைமை வகிக்கும் பெண் நரிதான் குட்டிகளைக் கொண்டிருக்கும். ஏனைய நரிகள் இந்தக் குட்டிகளை வளர்ப்பதில் தமது



பங்களிப்பை வழங்கும். தாய் நரி இறந்துவிட்டால். ஆண் நரி தான் அந்தக் குட்டியை வளர்க்கும் பொறுப்பைத் தனியாக ஏற்றுக் கொள்ளும். இது மிக அரிதாக நடப்பதுண்டு. குட்டிகள் பிறக்கப்போகும் தருணத்தில், நரிகள் இட வசதி கொண்ட குழிகளை உருவாக்கித் தயார்ப்படுத்துகின்றன. 3 மாத காலத்துக்குக் குட்டிகளை இவை கூட்டாகப் பராமரிக்கின்றன.

ஏனைய காலங்களில் இவை பரந்த வெளிகளிலேயே வாழ்கின்றன. திறந்த வெளிகளை தமது வசதிக்கேற்றவாறு தமது படுக்கையாக்கிக் கொள்கின்றன.

**ஒற்றுமையாக உணவுத் தேடல்**

குட்டிகள் வளர்ந்து 10தொடக்கம் 18மாதங்களாகும்போது. தமது குடும்பத்தை விட்டு விலகும். அல்லது ஆயுள் முழுவதும் அந்தக் குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டு வாழும் இயல்புள்ளன. அப்படி ஒட்டிக் கொள்ளும் பட்சத்தில், இவை குடும்ப பந்தத்தில் நுழைவதில்லை. பெற்றோருக்கு உதவியாக அடுத்த தலைமுறைக்கான குட்டிகளைப் பராமரிப்பதில் இவற்றின் காலம் செலவிடப்படுகின்றது. தாய், தந்தை, வளர்ந்த குட்டிகள் என்று எல்லாமே சேர்ந்து, புதிதாகப் பிறக்கும் குட்டிகளுக்கு உணவு தேடிக் கொண்டு வருவதுண்டு. பொதுவாக நரிகள் தனியனாக வாழ்கின்றன என்ற கருதப்பட்டாலும், சில அப்படி வாழ்ந்தாலும், உணவு வேட்டைக்காகப் பரந்து சென்று விடுவது மாத்திரமல்ல தனியனாகவே வேட்டையையும் நடாத்துகின்றன. இதன் காரணமாக இவை தனித்தே வாழ்வதாகப் பலர் நம்புகிறார்கள்.

**செல்லப் பிராணிகளாகும் வெள்ளி நரிகள்**

நரிகளை சாதுவான வீட்டு மிருகங்களாக மாற்றுகிற. ஒருசில பரிசோதனைகளில் வெற்றி கண்டிருக்கிறார்கள். உரோமங்களுக்காக வளர்க்கப்பட்ட மிருகங்களிலேயே இந்தப் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கின்றது. இதை ரஷ்யாவில் தான் பரிசோதித்துப் பார்த்தார்கள். ஒன்றிலிருந்து இன்னொன்று அதிலிருந்து மற்றொன்று என்று உருவாக்கியபோது, மனிதர்களிடம் வாலைக் குழையும் சாதுவான இனம் தோற்றுவிக்கப்பட்டது. தட்டிக் கொடுக்கும்போது குதூகலம் அடையும் அளவுக்கு நரிகள் சாதுவானவைகளாக மாறியிருந்தன. இந்த ஆய்வுக்கான நிதியம் நிறுத்தப்பட்டமையால். இப்பொழுது இங்கு செல்லப் பிராணிகளாக செந்நரிகள் விற்பனைக்கு விடப்படுகின்றன. இவை 'வெள்ளி நரிகள்' என்று அழைக்கப்படுகின்றன. இந்த இன நரிகள் பலருக்கு ரஷ்யாவில் ஓர் அற்புதமான செல்லப்பிராணியாக மாறியுள்ளது என்கிறார்கள்.

கட்டுரை

பா.குமுதன்

# வவுனியா மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரழிக்கும் யானைகள்






வவுனியாப் பகுதியில் காட்டைவிட்டு மக்களின்வாழ்விடங்களைநோக்கி யானைகள் வருவதைப்போலவே அண்மையில் கிளிநொச்சி-அம்பாள்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் சிறுத்தை ஒன்று புகுந்திருந்தது. அது 11 பேரை தாக்கிக் காயப்படுத்திய சம்பவமும், மக்கள் ஒன்றுகூடி அதைக் கொன்றதும் நிகழ்ந்திருந்தது. குடியிருப்புக்களை நோக்கிய யானைகளின் படையெடுப்புக்களானவை அனைத்து அரச நிர்வாகத் தரப்புகளுடனும் சவால் விடுகிற பெரும் பிரச்சினையாகவே இன்றைக்கு இருக்கிறது. ஒவ்வொருநாளும் அவற்றால் ஏற்படும் அழிவுகளும், இழப்புகளும் கணக்கில் அடங்காத வண்ணம் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. நாடளாவிய ரீதியில் அதன் தாக்கம் வியாபித்துக் காணப்பட்டாலும், வடக்கு, கிழக்குப் பகுதிகளே அண்மைக்காலங்களாக இந்தப் பிரச்சினையால் அதிகம் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. அதிலும் வவுனியா மாவட்டம் முதன்மை பெற்ற பகுதியாகத் திகழ்கிறது. பரந்தளவிலான காட்டைத் தனது எல்லைப் பகுதியாகக் கொண்டுள்ள வவுனியா மாவட்டம், யானைகளின் நடமாட்டத்தால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசமாகத் திகழ்கிறது. அநுராதபுர மாவட்டத்தின் எல்லைப் பகுதியாக இருப்பதாலும், வில்பத்துக் காட்டுப்பகுதியுடன் நிலத்தொடர்பை கொண்டுள்ளமையாலும் யானைகளின்நடமாட்டம்வவுனியா மாவட்டத்தையும் விட்டு வைக்கவில்லை. அநேகமாக மாவட்டத்தின் எல்லைப்புறப் பகுதிகளே அதிக பாதிப்புள்ளாகி வருகின்றன. பொருளாதார அழிவுகளோடு உயிரழிவுகளையும் சுமந்து நிற்கின்றன.

## பாதிப்புக் கூடிய பிரதேசங்கள்

வவுனியா மாவட்டத்தின் 4பிரதேச செயலர் பிரிவுகளிலும் குறித்த பிரச்சினை பரவலாகக் காணப்படுகிறது. செட்டிகுளம் மற்றும் வவுனியா வடக்குப் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. செட்டிகுளம் பகுதியில் ஊருக்குள் புகும் யானைகளால் பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. யானைகளுக்கும் மனிதர்களுக்குமான போர் அடிக்கடி நிகழும் பிரதேசமாகவும் இது காணப்படுகிறது. இதனால் பலர் தமது உடல் அங்கங்களை இழந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கப்பாச்சி, இரண்டாம் பண்ணை, கிறிஸ்தவகுளம், மினிக்பாம், நீலியாமோட்டை ஆகிய கிராமங்களில் ஒவ்வொரு நாளும் யானைகளால் பல பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.



கிராமத்துக்குள் புகும் யானைகள் காய்க்கும் நிலையில் உள்ள தென்னை, பப்பாசி, உழுந்துபோன்ற வாழ்வாதாரப் பயிர்களை அழித்து நாசமாக்கி விட்டுச் செல்கின்றமை தொடர்கதையாகிவிட்டது. வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்கள் அதிகமாக வாழும் இந்தப் பகுதியினர் கூலித்தொழிலை மட்டும் நம்பியே வாழ்வைக் கொண்டு நடாத்தி வருகிறார்கள். உப வாழ்வாதாரங்களாகச் சிறுதானியம் மற்றும் தென்னைபோன்ற பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றை யானைகள் அழித்துச் செல்வதால் வறுமையின் பிடியில் இருந்து மீள முடியாத நிலைமைக்கு அவர்களின் வாழ்வு தள்ளப்படுகிறது. அதுபோலவே வவுனியா வடக்கு, நெடுங்கேணி பரதேச செயலகத்துக்கு உட்பட்ட புளியங்குளம், நொச்சிகுளம், சேனைப்பிளவு, நைநாமடு ஆகிய பகுதிகள் யானைகளின் வாடிக்கைக்குரிய இடங்களாக மாறிவிட்டன. மாலை 4மணியளவில் முதன்மை வீதிக்கு வரும் யானைக் கூட்டங்கள் அந்த வழியால் செல்பவர்களைத் துரத்தித் தாக்கவும் முயல்கின்றன. இதனால் உயிழப்புகள் முதல், பொருள் சேதங்கள், பயிர் அழிவுகள் எனப் பல பாதிப்புகளை வவுனியா மக்கள் சந்தித்த வண்ணம் இருக்கின்றனர்.

## யானைகளின் வருகை

கடந்த 5வருட காலப்பகுதிக்குள் யானைகளின் வருகை மிகவும் அதிகரித்து காணப்படுகிறது. நகரமயமாக்கலின் காரணமாக காடுகள் அழிக்கப்பட்டு அங்கு மனிதன் குடியேறுகிறான். இதனால் தமது வாழ்விடங்களை இழந்த யானைகள் இடம்பெயர்வதற்குக் கட்டாயப்படுத்தப்படுகின்றன. மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் செல்கின்றன.

அத்துடன் வனப்பகுதியில் ஏற்படும் வறட்சி மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள நீர், மற்றும் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் இவை இடப்பெயர்வுகளைச் சந்திக்கவேண்டிய நிலை உருவாகி விடுகிறது. ஒரு யானை ஒரு நாளைக்குச் சராசரியாக 250கிலோ அளவிலான உணவை உட்கொள்ளவேண்டி இருக்கிறது. அதற்காக 16மணித்தியாலங்களைச் செலவிடுகிறது. இதனால் நீண்டதூரம் பயணித்தே தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. காடுகளால் அதை வழங்க முடியாதபோது அதற்கு இரையாகிவிடுகின்றன பல கிராமங்கள். போருக்கு முந்திய காலப்பகுதியில் வன்னிப்பகுதியைப் பொறுத்தவரை யானைகளின் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. பல வருடங்களாக யானையின் பாதம்படாத கிராமங்கள் கூட இன்று அதன் பிரதிபலனை அனுபவித்து வருகின்ற அளவுக்கு நிலமை மாறிவிட்டது. போருக்கு முன்னைய காலப் பகுதியில் வன்னிப் பகுதியின் பெருங்காடுகளில் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு முகாம்களை அமைத்து இருந்தமையால் யானைகள் ஊருக்குள் வருவதில்லை. ஆனால் இன்றோ நிலமை வேறு.

## அரசுகளின் அச மந்தம்

இலங்கையில் வனஜீவராசிகள் திணைக்களம் காட்டு விலங்குகளோடு தொடர்புடைய விடயங்களை அணுகுவதற்காக அரசால் அமைக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களால் வன விலங்குகளுக்கு ஆபத்து நேர்ந்தால் மாத்திரமே இவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பார்கள். மாறாக விலங்குகளால் மனிதருக்கு ஏற்படும் ஆபத்துத் தொடர்பில் அவர்களுக்கு எந்தவித கரிசனையும் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு அரசின் நடவடிக்கைகளும் காரணமாக அமைந்திருப்பதை மறுக்க முடியாது.

இலங்கைமுழுவதுமேஒவ்வொருஆண்டும்800கிலோ மீற்றர்கள் நீளமுடைய யானைப் பாதுகாப்பு வேலியை அமைப்பதற்கே அரசால் நிதி ஒதுக்கப்படு கிறது. பிரச்சினையின் தீவிரத் தன்மையோடு ஒப்பிடுகையில் இந்த ஒதுக்கீடு மிகவும் சொற்பமனதாகவே இருக்கிறது. வவுனியா மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 500கிலோ மீற்றர்களுக்கும் அதிக நீளமுடைய பகுதியில் யானைப் பாதுகாப்பு வேலி அமைக்கவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் குறித்த தொகையானது 'யானைப் பசிக்குச் சோளப்பொரி' என்ற பழமொழியையே நினைவுபடுத்தி நிற்கிறது. வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளில் யானைப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருந்தாலும் அவை தேவையான அளவில் 10விகிதமாகவே காணப்படுகின்றன. கிராம மக்களின் வாழ்வாதார விடயத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கின்றமையானது அரசின் அசமந்தப்போக்கே. பொதுமக்கள் தாமாகவே முன்வந்து பாதுகாப்பற்ற முறையில் யானை வேலிகளை அமைக்கின்றனர். இதனால் மின்சார சபையினர் பலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலையும் இருக்கிறது. ஒரு சில மாதங்களுக்கு முன்பாக நீலியாமோட்டைப் பகுதி விவசாயி ஒருவரால் யானைப் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழந்தமை அந்தப் பகுதியிலே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

## எல்லைக் கிராமங்களின் அவலநிலை

வவுனியாவைப் பொறுத்த வரை இந்த யானைகள் மூலம் ஏற்படுகிற பாதிப்புகளை அதிகம் சந்தித்து நிற்பது எல்லைக் கிராமங்களே. காடுகளோடு தொடர்புபட்டுள்ள எல்லைக் கிராமங்கள் யானைகள் தினமும் போக்குவரத்துச் செய்கிற நிரந்தர வழித் தடமாக மாறியுள்ளன. இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் ஒவ்வொரு நாள்களும் உயிர் அச்சுறுத்தலுடனேயே தமது வாழ்வை நகர்த்துகிறார்கள். முன்னர் பயிர்களை மட்டுமே அழித்த யானைகள் தற்பொழுது இருப்பிடங்களையும் தாக்குகின்றன. இதேவேளையில் வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள பல சிங்கள குடியேற்ற கிராமங்க ளுக்கு இரண்டடுக்கு யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இது அரசினுடைய பாகுபாட்டு மனப்பான்மையே வெளிக்காட்டி நிற்கின்றது. நெடுங்கேணிப் பிரதேசக் கிழக்குப் பகுதியில் மனிதர்களே வசிக்க முடியாத பெருங்காட்டுப்பகுதிகளில் எல்லாம் யானை பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ள னர். ஆனால் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களைப் பற்றி எள்ளவும் சிந்திக்க மறுக்கிறது அரசு.

தமிழர்களை எல்லைக் கிராமங்களில் இருந்து புறந்தள்ளிவிட்டால் அந்தப் பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவிவிடலாம் என்று பேரினவாத அரசுக்கு இருக்கிற மனோநிலையையும் மறுப்பதற்கில்லை.

பல வருட போரால் பல அழிவுகளைச் சந்தித்தமக்கள் அதிலிருந்து மீண்டுவந்து ஏதோ ஒரு வகையில் தமது வாழ்வாதாரங்களை அமைத்துகொள்ளும் நிலையில் 'மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல' இன்று யானைகளின் தொல்லை காணப்படுகிறது. சிறுகச் சேர்த்த பணத்தைக் கொண்டும், கடன் பெற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராமப் புறங்களை நோக்கி ஒரே இரவில் வருகின்ற யானைக்கூட்டங்கள் அனைத்தையும் அழித்து செல்கின்ற நிலமை இன்னும் எத்தனை காலங்களுக்குத் தொடரப் போகின்றது? இது எதிர்காலத்தில் மிகவும் பெரிய அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்தி நிற்கும் என்பதில் ஐயம் இல்லை. எனவே பொறுப்புள்ள தரப்பினர் யானைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விரைந்து செயற்பட்டு கிராம மக்களின் பொருளாதாரத்தையும், அவர்தம் உயிரையும் பேணி பாதுகாக்க முன்வரவேண்டும்.

தொடர்கதை

# நின்னைச் சரணடைந்தேன்

கே.எஸ்.ஆனந்தன்

அத்தியாயம் 19

"அக்கா வந்தவர் யார்? அப்படி என்ன அவ்சரமாம்?உங்களுக்குப் பதிலாக வேலை செய்பவர்களில்லையா?" என்றாள் நிவேதா.

"ஒருவர் 'சீவ் கிளாக்' மற்றவர் 'பிளானிங் ஒவ்பீஸர்' இந்தச் 'சீவ்' பயந்த ஆள். எதுக்கும் என்னிடமே வந்து நிற்பார்" என்றாள் சுவேதா.

"அப்படியில்லை நிவேதா. அந்தச் 'சீவ்' விடம் கொஞ்சம் நரிக்குணம் இருக்கு. அது பிடிபட்டால் சுவேதா மேடம் பிச்சு உதறிவிடுவா. அதற்குப் பயந்து தான் அந்தாள் ஓடிவந்திருப்பார்" என்று கூறிச் சிரித்தான் ரவிசங்கர்.

"என்ன ரவி! அந்த மனிசன் ஓர் அப்பாவி. அந்த மனிசனைப்போய் இப்படிச் சொல்லி விட்டீங்கள்" என்று சிணுங்கினாள்.

"சுவேதா நான் சொல்வதை நம்பாவிட்டால் பரவாயில்லை. என்றைக்கோ ஒரு நாள் நீயே வந்து அவரைப் பற்றிய திருவிளையாடல்களைச் சொல்லத்தான் போகிறாய். அதுவரை பொறுத்திருப்போம்"என்று கூறிச் சிரித்தான். எல்லோரும் சேர்ந்து சிரித்தனர். செல்லம்மா வந்து மகனைக் கடிந்து கொண்டாள்.

"இப்ப என்னம்மா சொல்லிப் போட்டான். மருமகளைச் சிறுகுறை கூறவும் விடமாட்டா மாமியார். என்ன நிவேதா உங்கள் மாமியார் எப்படி? மகனுக்குச் சப்போட்டோ உங்களுக்கு சப்போட்டா?" என்றான்.

"அதையேன் கேட்கிறீர்கள். மகன்மார் தவறு செய்தாலும் எங்களைத்தான் வறுத்துக்கொட்டுவா மாமி. அக்கா கொடுத்து வைத்தவள்" என்றாள் யசோ.

"நீங்கள் எப்ப பார்த்தாலும் தமாஷாப் பேசுறீர்கள் நீங்கள் சுவேதாவுடன் கண்டிப்பாகப் பேசுவதில்லையா?" என்றாள் நிவேதா. அத்துடன்

"அத்தை இடியப்பமும் பாற்சொதியும் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு. எனக்கு இன்னும் ரெண்டு இடியப்பம் வைத்துச் சொதியும் விடுங்கள்"என்றாள்.

"நானே போடுறன்" என்று மூன்று இடியப்பங்களை எடுத்துப் போட்டாள் சுவோதா.

"யசோ கேட்டு வாங்கிச் சாப்பிட மாட்டாள். அத்தை இவளுக்கும் கொஞ்சம் சொதி ஊற்றுங்கள்"என்று கூறி அவளுடைய கோப்பையிலும் இடியப்பம் வைத்தாள் சுவேதா.

"போதும் அக்கா. ஒன்று மட்டும் மற்றதை நீ போட்டுக் கொள்" என்று சுவேதாவின் கோப்பையில் மீதியை வைத்து விட்டுச் செல்லம்மாவிடம் சொதியை வாங்கித் தானே ஊற்றினாள்.

அவர்களுடைய செயற்பாட்டைப் பார்த்த சுந்தரமூர்த்தியின் கண்கள் கலங்கின. ஒரு மணித்தியாலயத்துக்கு முன்பு சுவேதாவும் சகோதரிகளும் ஒருவரை ஒருவர் குறை கூறியதும், பிரச்சினைப் படப்போகிறார்களோ எனப் பயந்து அவர் கலங்கினார். இப்போது அதை மறந்து, திருமணத்துக்கு முன்பு ஒருவரை ஒருவர் எப்படி அடிபட்டு உணவு உண்டார்களோ அப்படி ஒரு காட்சி. அதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சிந்தினார். அவர்களது விளையாட்டைப் பார்த்துச் ரசித்துச் சிரித்தான் ரவி.

"நிவேதா அத்தான் எங்களைப் பார்த்து சிரிக்கிறார்" என்றாள் சுவேதா.

"ஏன் சிரிக்கிறன் தெரியுமா? அக்கா, தங்கைகள் போட்டி போட்டுச் சாப்பிடுகின்றீர்கள் நானும் ஒருவன் இருப்பதை மறந்து விட்டீர்களே" என்றான்.

'உங்களுக்கு இடியப்பம் போட்டால், அத்தைக்கு அந்த அம்மாவுக்கும் பாண் வாங்க வேண்டி வரும். அதனால் தான் அக்காவுடன் நிறுத்திவிட்டோம்" என்று யசோ கூற எல்லோரும் சேர்ந்து சிரித்தனர்.

"இப்படி ஒரு காட்சியைப் பார்க்க அம்மா கொடுத்து வைக்கவில்லையே. அந்த ஆதங்கத்தில்தான் காலையில் உங்களைக் கடிந்து பேசி விட்டேன். மன்னித்து விடு யசேதா"என்று கண்கலங்கினாள் சுவேதா.

"அக்கா! நீ எதையும் நேருக்கு நேராகச் பேசுகின்றாய். எங்களால் அப்படிப் பேச முடியவில்லை. அதனால் நாங்களும் அப்படி நடந்து கொண்டோம். மன்னித்து விடுங்கள் ஆறுதலாகக் கதைப்போம்" என்று சுவேதாவைக் கட்டியணைத்துக் கொண்டு யசோதாவும் கண்கலங்கினாள்.

"சரி சரி ஆறுதாலாகக் கதைக்கலாம். வாருங்கள் என்று கூறிவிட்டு எழுந்து சென்றார் சுந்தமூர்த்தி. அவரைப் பின் தொடர்ந்து மற்றவர்களும் ஹோலுக்கு வந்தனர்.

அவர்கள் ஹேலுக்கு வந்தபோது சுவேதாவுக்கு வந்த பயில்கட்டுக்களை ரவிசங்கர் பார்த்துக்கொண்டிருந்தான்.

"இது என்ன புறம்பாக வைத்திருக்கின்றீர்கள்?" என்று அந்தக் கோவைகளை எடுத்துத் திறந்து பார்த்தாள்.

"இவை இரண்டும்தான் நான் சொன்ன நரிக்குணத்தின் வெளிப்பாடு. இவற்றில் நீ சைன் பண்ணினால் விசுவலிங்கத்தாருக்கு நன்மையுண்டு. அதனால் தான் கஸ்ரம் பாராமல் இங்கே வந்தார்" என்று சொல்லிச் சிரித்தான்.

"அப்படி இல்லை ரவி! அந்த மனிசன் பயத்திலை தான் இங்கே கொண்டு வந்தவர்"

"சரி இந்த லெட்டரைப் பிறிப்பயர் பண்ணினது யார்? அவர் தானே?"

"ஓம்"

"சைன் பண்ணப் போறது யார்? நீர் தானே?"

'ஓம்"

"இதன் விளைவு எப்படி வரும் என்று தெரியுமா?"

"நீங்கள் சொல்வது சரிதான். அதனால்தான் அந்த மனிசன் என் பார்வைக்கு வந்தார். நான் சைன் பண்ணி விட்டால் அவர்களுக்கு ஏதாவது சொல்லிச் சமாளிப்பார். தானாக எதுவும் செய்யமாட்டார்"

"உன் நம்பிக்கையை நான் கெடுக்கவில்லை. என்றைக்கோ ஒருநாள் உன் பெயருக்கு அவரால் களங்கம் ஏற்படும். அப்பதான் நீ உணர்வாய். சுரேஸின் பைல்கள் எவ்வளவு கிளியராய் இருக்குது பாரும். அவர் ஜென்டில் மென்" என்று கூறி அந்தப் பயில்களையும் அவள் முன் போட்டான்.

"ரவி நீங்கள் சோதிடம் ஏதும் படிச்சனிங்களா?"

"ஏன் சுவேதா யாருக்காவது பலன் கேட்க வேணுமா?"

"அதுக்கில்லை. சில விடயங்களில் எதையும் கேட்காமல் நீங்களே சொல்கிறீர்கள். அது சரியாயிருக்கும். அதனால் எல்லாம் அப்படியிருக்காது. அதில் தான் உங்களுக்கும் எனக்கும் வித்தியாமிருக்குது" என்றாள்.

"சுவேதா நான் எதையும் அவசரப்பட்டுத் தீர்மானிக்க மாட்டேன் என்பது உனக்கே தெரியும். 'வேஸ்றீடிஸ்' என்றால், ஒருவருடைய முகத்தைப் பார்த்து அவரது மன உணர்வுகளை அறிந்துகொள்வது. இதுவும் ஒரு வகையில் சைக்கோலஜி தான். யோகா, தியானம்போல" என்றான்.

"சொல்லுங்கள். நாங்களும் கொஞ்சமாவது அறிந்து வைத்திருந்தால் நல்லது"என்றாள் நிவேதா.

"நான் சொன்னால் சுவேதா என்னை மட்டம் தட்டி ஏதாவது சொல்லும். ஆகவே இதுபற்றி இப்ப நான் கூறவில்லை. ஆறுதலாகச் சொல்லுகின்றேன்" என்று கூறிவிட்டுத் தாயாரை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல முயன்றான்.

"நீங்கள் வெளியே போகும்போது இவற்றை ஒவ்பீசில் ஒப்படைத்து விட்டு போகின்றீர்களா?" என்றாள் சுவேதா.

"ஜெஸ் மேடம்"என்று கூறிச் சிரித்துக் கொண்டே சென்றான்.

பயில்களைச் சரி பார்த்து முடிக்கும் தருணம் ரவிசங்கர் புறப்பட்டு வந்தான். அவனிடம் எல்லாவற்றையும் கொடுத்தனுப்பி விட்டுத் திரும்பி வந்து உட்கார்ந்தாள். ரவிசங்கரின் அம்மா வந்து சுவேதாவை அழைத்து மதிய உணவு பற்றிக் கதைத்தார்.

"அத்தை கறிச் சாமான் எல்லாம் இருக்குத்தானே அதைச் செய்யலாம் தானே. உங்கள் கைப்பக்குவத்தைத் தங்கையாள்களும் சுவைக்கட்டும்" என்றாள்.

"எதற்கும் தங்கைகளையும் ஒருதடவை கேட்கலாமே..." என்றிழுத்தால் செல்லம்மா.

"அத்தை! அம்மாவுக்கு அம்மாவாக உங்கள் சமையலையாவது சாப்பிடுவோம். எங்களை என்ன கேட்பது நீங்கள் செய்வதை நாங்கள் மகிழ்ச்சியோடு உண்போம்" என்றாள் யசோதா. நிவேதாவும் அப்படியே கூறினாள். அதற்கிடையில் தொலைபேசி மணி ஒலித்தது சுவேதாவே எடுத்தாள்.

"குட்மோனிங் மேடம் நான் விசாலி பேசுறன்"

"விசாலி. இன்று நீ வேலை லீவா?"

"மேடம் உங்கள் வீட்டில் இண்டைக்கு மதியச் சமையல் செய்ய வேண்டாம் நான் கொண்டு....."

"விசாலி! ஏன் நீ கஸ்ரப்பகிறாய். ஓவ்பீஸ் போகாமல் இது தேவையா?"

"உங்களுக்குச் செய்யாமல் வேறு யாருக்கு செய்வது? என்னுடைய கணவர் தான் சொன்னார்"

"விசாலி. என்னுடைய சிஸ்டர்ஸ் வந்திருக்கினம்"

தெரியும் மேடம். உங்களுடைய மிஸ்ரர் சொன்னதாக என்னுடைய மிஸ்ரர் கூறினார்'

"சரி விசாலி. அத்தை இப்ப தான் சமையலுக்கு ஆயத்தம் செய்தார்கள். தாங்ஸ் விசாலி"

"இதற்கு எல்லாம் தாங்ஸ் எதற்கு? வைக்கின்றேன்" என்று கூறி நிறுத்தினாள்.

"யார் சுவேதா"' என்றாள் செல்லம்மா.


"ஒவ்பீசில் வேலை செய்பவள். ரவி சொல்லியிருப்பாரே புருஷன் டிவோஸ் எடுத்த கதை"

"ஓ... அந்தப் பிள்ளையா?"

"அவள் தான் அத்தை"

"சரி அவள் ஆசையாய்ச் செல்வதை ஏன் தடுக்க வேணும்"

"நான் தடுக்கவில்லை அத்தை. சரி எண்டு சொல்லிப் போட்டன். நீங்கள் ஓய்வாயிருங்கள். அவள் மதியம் சாப்பாடு கொண்டு வருவாள்" "இது தான் எங்கஎின்ரை பண்பாடு. அதைத்தான் அவள் செய்கிறாள். எங்கள் ஊருக்குள் இப்படியான இறப்புக்கள் ஏதும் நடந்தால் அந்த மாதத்தில் சமைக்க விடமாட்டார்கள். அயலவர்கள் உறவுகள் இப்படித்தான் செய்வார்கள். இப்ப வர வர எங்கடை சனமும் இதுகளை எல்லாம் கைவிட்டு விட்டது" என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டாள் செல்லம்மா. *(தொடரும்)*



> "சுவேதா நான் எதையும் அவசரப்பட்டு தீர்மானிக்க மாட்டேன் என்பது உனக்கே தெரியும். 'வேஸ்றீடிஸ்' என்றால், ஒருவருடைய முகத்தைப் பார்த்து அவரது மன உணர்வுகளை அறிந்துகொள்வது. இதுவும் ஒரு வகையில் சைக்கோலஜி தான். யோகா, தியானம்போல" என்றான்.



# கண்ணீர் பெருகிட காரணம் என்ன?

கவிதை

வயலூர் முருகன்

கண்ணீர் பெருகிட
காரணம் பலவுள
கவனமாகக் கேளும்
அவைகளுள் இவை சில!

கவலை மிகுந்தால்
கண்ணீர் பெருகிடும் !
காரம் மிகுந்தாலும்
கண்ணீர் பெருகிடும் !

உளநெகிழ்ச்சியிலும்
பெருகிடும் கண்ணீர் !
உள மகிழ்ச்சியிலும்
பெருகிடும் கண்ணீர் !

விழியினுள் தூசு
வீழினும் பெருகிடும் !
விழிகளில் நோயேதும்
காணினும் பெருகிடும் !

ஆற்றாமையினும்
பெருகிடும் கண்ணீர் !
தேற்றா(து) நிலையிலும்
பெருகிடும் கண்ணீர் !

இயலாத நிலையிலும்
விழிநீர் பெருகும் !
இறைவன் முன்னிலையிலும்
விழிநீர் பெருகிடும் !
அடுத்தவர் துயர் கண்டும்
பெருகிடும் கண்ணீர் !
அடுத்தவர் பிரிவிலும்
பெருகிடும் கண்ணீர் !

ஆனந்த நிலையிலும்
பெருகிடும் விழி நீர் !
ஆவேச நிலையிலும்
பெருகிடும் விழிநீர் !

கையறு நிலையிலும்
கண்ணீர் பெருகிடும் !
மெய் மறந்த நிலையிலும்
கண்ணீர் பெருகிடும்!

கண்ணீர் பெருகிட
காரணம் இவை சில
கண்ணீர் பெருகிட
காரணம் இன்னுமுள!

# கவிக்குள் நான்

கவிதை

பீ.மேரிசிந்துஜா



கவியே நான் உன்னை நேசித்தேன்
காரணம் ஏனென்று தெரியவில்லை
உன்னை எழுத முதன் முறை
உத்வேகத்துடன் பேனாவைப் பிடித்து
முயன்று பார்த்தேன் ஏனோ
வரிகள் வர மறுத்தன

சில்லறையாய்ச் சிதறிய என் மனம்
சிறிதும் துவண்டு விடவில்லை
வெள்ளைத் தாளில் என் மனவோட்ட வரிகளுடன்
என் பெயரைத்தாங்கி நீ
வெளிவந்த முதல் நிமிடந்தனில்
நானடைந்த ஆனந்த வெள்ளந்தனை
யாரறிவர்?

பரீட்சை எப்போது முடியுமென்று
பார்த்து உன்னில் இடம்பதிக்க
ஏங்கிய கணங்கள்
எப்போதும் மறக்காத
எண்ணோட்டங்களாகச் சுழல்கின்றன.

14

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள்

தொகுப்பு

செ.மகேஷ்



**1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.**

அந்த நாள்களில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபராகவிருந்த நா.க. சண்முகநாதபிள்ளையின் நினைவில் மிதந்த ஒரு சுவையான சம்பவம் இது. இதை அவர் விளக்கு சஞ்சிகையில் தனது அனுபவப் பகிர்வாக வெளியிட்டிருந்தார். அது இன்றைய எமது ஆசிரிய சமூகத்தின் விழிப்புணர்வுமிக்க சிந்தனைக்கு வலுவூட்டும் என நம்புகிறேன்.

## ஆசிரியர் ஓய்வு அறை

அது ஒரு கிராமப்புறப் பாடசாலை. அங்கு புதிதாகக் கட்டப்பெற்ற பாடசாலைக் கட்டடத்தில் அமைந்த ஆசிரியர்கள் தங்கும் அறை அழகானது. ஏதாவது நல்ல சிந்தனையை, ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக இருக்கக் கூடிய பொன்மொழியொன்றை அங்கே எழுதி வைக்க வேண்டுமென ஆசிரிய சங்கம் முடிவு செய்து அந்தப் பொறுப்பைப் பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தது.

அடுத்தநாள் 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்' என்ற ஔவைப்பாட்டியின் பொன் மொழியை அதிபர் அங்கே எழுதி வைத்தார். ஆசிரியர்களிற் சிலருக்கு இது பெரிய சங்கடமான நிலையை ஏற்படுத்தியது.

அந்த அறையிலே இருப்புக்கொள்ள முடியாத நிலையைச் சிலருக்கு ஏற்படுத்திவிட்டது. வில்லங்கத்தை விலைக்கு வாங்கிய நிலையாகிவிட்டது போன்றதோர் உணர்வு அவர்களிடம் இருந்தது.

அன்றைய நாள் முழுவதும் எல்லோரும் ஏதோ ஒரு வகுப்பில் கற்பித்துக் கொண்டே இருந்தார்கள். மறுநாள் காலை ஆசிரியர் தங்கும் அறையைப் பார்த்த அதிபரை வேறொரு பொன் மொழி எதிர் கொண்டழைத்தது.

'ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்' முந்திய பொன் மொழியின் கீழ் அழகாக அது எழுதப்பட்டிருந்தது. அதிபர் ஒருவரையும் சினந்து கொள்ளவில்லை. எழுதியவரின் மதினுட்பத்தையும் இலக்கிய நயத்தையும் தனக்குள் பாராட்டிக் கொண்டார். 'வல்வினைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்' எனப் புன்முறுவலுடன் கூறிவிட்டு அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டார்.

## நகைச்சுவை நிகழ்ச்சிகள்

காலப்போக்கில் எழுத்துக்கள் மங்கத் தொடங்கியபோதிலும் ஆசிரியர் மத்தியில் அவை ஏற்படுத்திய நல்விளைவுகள்தொடர்ந்துஒளிவிட்டுக்கொண்டே இருந்தன. கடமை உணர்ச்சியுடன் அவர்கள் கற்பித்தலை மேற்கொண்டனர். அதிபர்-ஆசிரியர்களுக்கிடையே சுமுகமான உறவு தொடர்ந்தது.

இந்தச் சம்பவம் பலருக்கும் பயன் தரும் சிந்தனையாக அமைய வேண்டும் என்ற நோக்குடன் விளக்கு சஞ்சிகையில் இந்தக் கட்டுரை பதிப்பாகியது. வாசகர்கள் பலருக்கு இந்த நிகழ்ச்சி நகைச்சுவையுடன் கலந்து ஆசிரிய வாண்மைக்கு உதவியமையை இங்கு குறிப்பிடலாம். இவைபோன்ற அனுபவப் பகிர்வுகளுடன் விளக்கு சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவந்தமை ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல விளக்கு சஞ்சிகையை வாசிக்கும் அனைவரிடத்திலும் இலக்கிய உணர்வுடன் கூடிய ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது.

## ஆசிரியர்களின் வாசிப்பு

ஆசிரியர்கள் பல்வேறு துறைசார்ந்த நூல்களை வாசிக்கும் வாசகர்களாகவும் புதிய ஆக்கங்களுக்குத் தம்மை முன்னெடுக்கும் எழுத்தாளர்களாகவும் இருக்கின்றபோது தான் சிறந்த ஆசிரியர்களாகப் பிரகாசிக்க முடியும்.

# ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

இன்றைய பரீட்சை வினாத்தாள்களும் அவற்றுக்கு விடை எழுதுவதன் மூலம் கல்விப் பெறுபேறுகளைக் கணிப்பிடும் முறையும் மாணவர்களின் சுயசிந்தனையை எல்லைப்படுத்தியே வைத்துள்ளது எனலாம். இந்த எல்லைப்படுத்துதலை உடைத்து ஒவ்வொரு ஆசிரியனும் புதியன காண முந்துதல் வேண்டும். இத்தகைய சிறப்பான எதிர்பார்ப்புடனேயே அன்றைய கல்விக் கழகத்தின் செயற்பாடுகளுக்குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திப் பணிபுரிந்த இளங்குமரனின் பொதுநோக்கம் இருந்தது.



நா.க.சண்முகநாதபிள்ளை

அவரது சேகரிப்புக்குள் நிறைந்த புத்தக அலுமாரியும் அவருக்கிருந்த தேடல் நிரம்பிய தமிழறிவும் எம்மவர் பலருக்கும் அவரது ஆளுமையை வெளிப்படுத்தின. ஆசிரியர்கள் வாசிக்கவும் அவர்தம் சிந்தனையில் விரியும் எண்ணங்களையும், ஏக்கங்களையும் எழுத்தாக்கி அச்சிடுவதற்கும் ஆசிரியர்களை வழிப்படுத்தும் ஒரு மாத சஞ்சிகை அவசியம் என்பதை உணர்த்தினார். அத்தகைய ஒரு சஞ்சிகை வெளிவர வேண்டுமென்ற துணிச்சலோடு விளக்கு சஞ்சிகையின் வெளிவருகைக்கு அவர் உந்து சக்தியானார். இதன் நிமித்தம் மாணவசக்திக்கு வலுவூட்டுகின்ற ஆசிரியவாண்மை விருத்திக்கு அவசியமான வாசிப்பு ஏடாக ஈழத்தின் முதலாவது ஆசிரிய சஞ்சிகையாக விளக்கு வெளியானது.

(தொடரும்)

தொகுப்பு
அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து





## குதூகலப் பெருநாள்

தென்கிழக்கின் முக்கிய பிரதேசங்களில் புனித நோன்புப் பெரு நாள் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டதுடன், பெருநாளை ஒட்டிய நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றும் வருகின்றன. இந்தமுறை பலவேறு பிரதேசங்களிலும், திறந்த வெளிகளிலும், மைதானங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்ட நோன்புப் பெருநாள் தொழுகையில் பெருமளவிலான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கொழும்பு மற்றும் வெளிமாவட்டங்களில் கடமை யாற்றிவரும் அரச ஊழியர்கள், வியாபாரிகள், உயர்கல்வி கற்கும் மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சமூகமளித்து குடும்பத்தினருடன் பெருநாள் கொண்டாடிய பின்னர் மீண்டும் உரிய இடங்களுக்குப் பயணமாகியும் வருகின்றனர்.

*ஈகையின் சிறப்புமிக்க பெருநாள் அல்லவா இது!*

## அவசர விபத்துச்சேவை!

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அவசர விபத்துச் சேவைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ், பிரதி சுகாதார அமைச்சர் எம்.பைசால்காசிம் ஆகியோர் எடுத்த பெரும் முயற்சியின் பயனாக இந்த வைத்தியசாலையில் குறித்த அவசர விபத்துச் சேவைப்பிரிவுக்கென 200மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் ஆறுமாடிகளைக் கொண்டபுதிய கட்டடத்தொகுதி ஒன்றும் நிர்மாணிக்கப்படவிருக்கின்றது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன இந்தக்கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை வைபவரீதியாக இந்தவாரம் நாட்டிவைத்தார்.

250மில்லியன் ரூபா பெறுமதியான மேற்படி அவசர விபத்துச் சேவைப் பிரிவுக்குரிய மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. இது பெரிய அபிவிருத்தியேதான்!



## சிகிச்சை முகாம்!

"கிராமத்துக்குப் பொலிஸ்" எனும் பொலிஸ்மா அதிபரின் திட்டத்துக்கு அமைய அட்டப்பள்ளம் பிரதேசத்தில் இயங்கும் நடமாடும் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில், பிரதேச மக்களின் நலன்கருதி இலவச வைத்திய சிகிச்சை முகாம் ஒன்று நடைபெற்றது.

அட்டப்பள்ளம் பன்னாட்டு சமாதான கிராம மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் சிகிச்சை முகாமில், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் சிகிச்சை அளித்ததுடன் இலவசமாக மருந்துவகைகளும் வழங்கப்பட்டன. சுமார் 500ரூபாயில் முச்சக்கர வண்டிகளுக்குக் கட்டணங்களைக் கொடுத்து வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெற வேண்டிய நிலையிலுள்ள இந்தப்பிரதேச மக்களுக்கு இந்த சிகிச்சை முகாம் பெரும் பயனைக் கொடுத்தது.

*"மக்களின் மனங்களை வெல்வோம், துயர் துடைப்போம்!"*




## ஒழியுமா இத்தொல்லை?

கல்முனை மாநகரசபையின் கீழுள்ள கல்முனை மாநகரில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

கல்முனை மாநகர சபையின் புதிய மேயராக சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பதவியேற்றதும் அண்மையில் இந்தக்கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை ஒழிக்கநடவடிக்கைமுன்னெடுத்ததோடு



இதற்கெனச் செயலணி ஒன்றையும் உருவாக்கினார். ஆனால் இன்னும் அந்தத்தொல்லை நீங்கியதாக இல்லை. கல்முனை பொதுசந்தைப் பகுதியில் கட்டாக்காலிமாடுகள் சாதாரணமாகத் திரிவதை தினமும் காணக்கூடியதாகவேயுள்ளது.

*என்றுதான் ஒழியுமோ இத்தொல்லை!*


## றம்புட்டான் சீஸன்!

அம்பாறை மாவட்டத்தில் றம்புட்டான்பழ விற்பனை ஆரம்பமாகியுள்ளது.

தினமும் கொழும்பு மற்றும் றம்புட்டானுக்குப் பெயர்பெற்ற மள்வானை ஆகிய பிரதேசங்களிலிருந்து பெருமளவு றம்புட்டான் பழங்களை வாகனங்களில் கொண்டுவந்து வியாபாரிகள் விற்பனை செய்துவருகின்றனர்.

நூறு ரூபாவுக்கு 15பழங்கள் வீதம் வியாபாரிகள் விற்பனை செய்கின்ற நிலையில் விற்பனையும் அமோகமாக இடம்பெற்று வருகின்றது.

*றம்புட்டான் பழங்கள் தனித்துவமான ருசியைக் கொண்டவை அல்லவா?*



## காணிமத்தியஸ்தசபை!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் விசேட காணிமத்தியஸ்தசபைகளை ஸ்தாபிக்கும் திட்டத்தின் கீழ்அம்பாறை மாவட்டத்திற்கென விசேட காணிமத்தியஸ்த சபை ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது.

மத்தியஸ்தசபைகள் ஆணைக்குழு இதற்கென நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதன்படி அம்பாறை மாவட்டத்துக்கென விசேட காணி மத்தியஸ்த சபையில் மத்தியஸ்தர்களாக சேவையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன. ஜூலை 30ஆம் திகதிவரை விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரின் கூற்றும், அதிர்வலைகளும்!



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பாலியல் இலஞ்சம் கோரப்படுவதாக உயர்கல்வி அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல், தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அரசியல்வாதிகள் புத்திஜீவிகள் போன்றோர் அமைச்சரின் இக்கூற்று குறித்துக் கண்டனங்களையும், விமர்சனங்களையும் வெளியிட்ட வண்ணமுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவர் மாமனிதர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் எண்ணக்கருவில் உருவான தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு இப்படியொரு இழுக்கு ஏற்படுத்தப்படுகிறதா? எனவும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

*தென்கிழக்குப் பல்கலைக் கழகம் வளர்ந்து வருவது கசக்கிறதோ?*

கட்டுரை

ராஜேஸ்மணாளன்



# ஆட்டிக் பிரதேச வாழ்வியல்

நமது சமுதாயத்தில் பால் பேதத்தைச் சுட்டுவதாக இருக்கிற பொன்னம்மா-பொன்னையா போன்றதான பெயர்கள் இவர்கள் கலாச்சாரத்தில் கிடையாது. இறுதியாக இறந்த ஓர் உறவின் பெயரையே புதிதாகப் பிறந்த பிள்ளைக்குக் கொடுத்து விடுகிறார்கள். இங்கு பெயர்கள் சாகாவரம் பெற்று விடுகின்றன.

அது அதுவாகவே இருக்கும்வரை, இது இதுவாகவே இருக்கும். ஆனால் இன்றைய உலகம் அன்றைய உலகமாயில்லை. காலநிலைநிலை தொடக்கம், மனிதப் பழக்க வழக்கங்கள் வரை எல்லாமே கடுகதி வேகத்தில் மாறிக் கொண்டு வருகின்றன. எதுவும்அதுவாக இல்லை. ஆகவே பாதகங்கள் தொற்றிக்கொள்கின்றன.

**'இனுவிட்' என்பவர்கள் பற்றி அறிந்திருக்கிறீர்களா?**

உலகம் அபரிதமான வளர்ச்சியைக் கண்டுவிட்டபோதிலும், தமது வாழ்க்கை முறையை மாற்றாது, அதைத் தொடரும் பல இனத்தவர்களை இன்றும் உலகெங்கும் பரவலாகக் காணமுடியும். இயற்கையை நம்பி வாழ்பவர்கள் இவர்கள். இயற்கை பொய்த்தால், இவர்கள் வாழ்க்கை சிதறடிக்கப்பட்டு விடுகின்றது. இதற்கு 'இனுவிட்' மக்கள் நல்லதோர் உதாரணம். ஆர்ட்டிக் துருவப்பகுதியில் வாழும் தொல்குடி மக்கள் இவர்கள்.! இங்கு மட்டுமல்ல கனடா, டென்மார்க், கிரீன்லாந்து, ரஷ்யா, சைபீரியா, அலாஸ்கா, கனடாவின் லாபிரடோர் பகுதி, கனடாவின் குபெத் மாநிலம் என்று பரவலாக இவர்கள் காணப்படுகிறார்கள். இவர்கள் பேசும் மொழி 'இனுக்டிடூட்' என்று அழைக்கப்படுகிறது.

**காட்டு வாழ்க்கையும் கற்பிதங்களும்**

'மார்ட்டின் ஷிவாக்' என்பவர் இனுவிட் இனத்தைச் சேர்ந்தவர்! நவீன வசதிகளோடு வாழ்ந்தாலும் இவர், இன்னமும் பொறிவைத்து மிருகங்களைப் பிடித்தல், துப்பாக்கி கொண்டு பறவைகளை வேட்டையாடுதல் போன்றவற்றையே செய்து வருகிறார். சமையலுக்கு எப்படி விறகு சேர்ப்பது, வேட்டையாடுவது, மீன்பிடிப்பது என்பதைத் தனது மகனுக்கும் கற்றுக் கொடுக்கிறார்.

இவர் கனடாவின் லப்றடோர் பிரதேசத்தின் காட்டுப்பகுதியை நம்பி வாழ்ந்த சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தவர். தன்னுடன் தன் இனம் அழிந்து விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கிறார். ஆனால் அதற்கான காலம் போதுமா என்ற பயம் அவருக்கு எழுந்துள்ளது. லப்றடோர் பிராந்தியத்தின் கரையோரப் பகுதிகள், நினைத்துப் பார்க்க முடியாத அளவு வேகத்தில் சூடேறிக் கொண்டுவருகின்றன. காலமாற்றம் என்பது தங்கள் பிரதேசத்தை அதிகம் தாக்கிவருவதால், பழைய வாழ்வுக்கான சூழல் இனிச் சாத்தியப்படுமா? என்ற சந்தேகம் அவருக்கு எழ ஆரம்பித்திருக்கின்றது.

**காலநிலையை மாற்றி வாழ்வோர்...!**

கனடாவின் ஆட்டிக் பிரதேச மக்களை 'எஸ்கிமோ'க்கள் என்று அழைக்கிறார்கள். இதன் பொருள் பச்சை இறைச்சி உண்பவர்கள் என்பதே. இப்பொழுது அலுவலக்ரீதியாக 'மக்கள்' என்ற பொருள்படும் 'இனுவிட்' என்றே குறிப்பிடப்பட்டு வருகிறார்கள். எந்த மோசமான காலநிலையையும் தமக்குச் சாதகமாக மாற்றிவிடுவதில் வல்லவர்களான இவர்கள் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக இங்கே வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்ந்த சூழலுக்கு ஏற்ப, இனம் பெயரிடப்பட்டுள்ளது. உதாரணமாக செம்பு என்கிற உலோகத்தை அகழக்கூடிய பிரதேசத்தில் இருந்தவர்களை 'செம்பு இனுவிட்' என்றும், 'கறிபோன்' என்ற ஒரு பெரிய மானின் இறைச்சி, தோலைத் தமது தேவைக்காகப் பயன்படுத்தியவர்கள் இந்த மானின் பெயராலேயும் குறிப்பிடப்படுகிறார்கள்.

**திருமணம் தெரிவல்ல; கட்டாயமானது**

இவர்களின் கலாசாரத்தில், திருமணம் என்பது இவர்கள் தெரிவாக இல்லாமல், கட்டாயமாக இருக்கின்றது. கணவனும் மனைவியுமாக இணைந்து, சிரமங்கள் நிறைந்த வாழ்க்கைச் சூழலை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கின்றது. காரணம் ஒவ்வொரு தனிநபரும், தான் 'தப்பிப் பிழைக்க' தன் இணையையே நம்பி இருக்க வேண்டிய நிலை. இதன் எதிரொலியாகவே திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டு விடுகின்றன. இவர்கள் சமுதாயத்தில் காதல் திருமணங்கள், அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் மிக அரிதாகவே இடம்பெறுவதுண்டு. ஒரு பெண் பூப்பெய்தினால் திருமணத்துக்குத் தகுதியானவள் என்று இனம் காணப்படுகிறாள். ஆண் தன்னால் நன்றாக வேட்டையாட முடியும், குடும்பத்தைப் பாராமரிக்க முடியும் என்று நிரூபித்த பின்னரே, திருமணம் செய்யும் தகுதியைப் பெறுகிறான்.

திருமணங்கள் மிக எளிமையாகவே நடாத்தப்படுகின்றன. ஒருவருக்குப் பல தாரங்கள் என்பது அரிது. காரணம் ஓர் ஆண் ஒரு பெண்ணை வைத்துக் குடும்பம் நடத்துவதே இங்கு பெரிய சவால்! திருமணத்துக்கு முன்பு பரிசுகளை ஆணும் பெண்ணும் கைமாறிக் கொள்வதுண்டு. ஆனால், சீதனம் என்ற கதை அங்கே இல்லை. பெண்ணால் விவாகரத்துக் கோரமுடியும். சில சமயங்களில் பண்டமாற்றுப்போல, மனைவிமார் மாறுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில், பெண்களும் தங்கள் விருப்பு வெறுப்புகளைப் பகிர முடியும். இந்த வழியில் விவாகரத்து என்பதும் தவிர்க்கப்படுகிறது.

**தொழில்கள் - உணவு தேடுதல்**

வேட்டையாடுதலும், மீன்பிடித்தலும்தான் இவர்கள் உணவுக்கு வழிதேடிக் கொடுக்கும் தொழில்கள். பரம்பரை பரம்பரையாக இதை ஆண்களே பொறுப்பெடுத்து வருகின்றார்கள். உணவு விடயத்தில் பெண்களின் பங்களிப்பு முட்டைகள், பெரி பழங்களைச் சேகரிப்பதும், களையோடு வீடுதிரும்பும் வேட்டைக்காரர்களுக்கு உணவு சமைத்துப் பரிமாறுவதுமாக இருக்கின்றது. உணவையோ அல்லது வேறு பொருள்களையோ சமூகத்தினரோடு பகிர்ந்து கொள்ளவும் இவர்கள் பின்வாங்குவதில்லை. உணவுத் தேடுதலுக்காக, காலத்துக்குக் காலம் இவர்கள் இடம்பெயர்வதுண்டு.

**பன்னிரண்டு வயதில் பணிகள் ஆரம்பம்**

சமையலோடு, பெண்களுக்குள்ள முக்கிய பணி குழந்தை வளர்ப்பு! பிள்ளைகளை அன்போடு வளர்த்து, சமுதாயத்துக்குப் பயனளிக்கும் வகையில், வேலைகளைப் பழக்கிக் கொடுக்கிறார்கள். இந்தப் பணி 12வயதில் ஆரம்பமாகி விடுகின்றது. பெரி பழம் பொறுக்குவது, சிறு மிருகங்களை வேட்டையாடுவது, தோல் ஆடைகளைத் தைப்பது போன்ற வேலைகளை, இவர்கள் உன்னிப்பாகக் கவனித்துப் பழகும்படி, தாய் வழிநடத்துகிறாள்.

இவர்கள் தாமாகவே வேட்டையாடவோ, தைக்கவோ அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் ஆண்கள் வேட்டைக்குச் செல்லும்போதோ அல்லது பெண்கள் தையல் வேலைகளைச் செய்யும் போதோ, கூடவே இருந்து பார்த்துப் பழகுவது முக்கியமானதாக இருக்கின்றது. ஆண்கள் வேட்டைத் தொழிலையும், பெண்கள் தையல் தொழிலையும் பெற்றோரிடமிருந்து கற்கிறார்கள். பிள்ளைகளுக்கு பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுப்திலோ அல்லது வேலைகளைப் பழக்குவதிலோ பெற்றோர் கண்டிப்பாக இருப்பதில்லை. மறந்தும் எவரையேனும் தண்டிப்பதுமில்லை. வாழ்வோடு இயைந்ததாக, பிள்ளைக்கும் வயது வந்தவருக்கும் இடையில் ஒரு கூட்டு ஒப்பந்தம் போலஎல்லாமேசீராகச்சம்பவிக்கின்றன. பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்ப்பது இங்கு பரவலாகக் காணக்கூடிய ஒன்று. தமக்கு தேவையற்ற குழந்தைகள் அல்லது ஒரு குடும்பத்தால் பராமரிக்க முடியாத குழந்தைகளை வேறு குடும்பங்கள் பொறுப்பெடுக்கும்.

**ஆட்டிக் குளிருக்கு அவசியப்படும் ஆடைகள்**

ஆட்டிக் பகுதிக் குளிர் பற்றி எழுத்தில் வர்ணிக்கத் தேவையில்லை. இந்தக் குளிரை விரட்டியடிக்க, நல்ல தடித்த ஆடைகள் அணிவது அசியம். தந்தத்தாலான ஊசிகளின் உதவியுடன் மிருகங்களின் தோல், உரோமம் கொண்டு இந்த ஆடைகளைப் பெண்கள் மிகக் கவனமாகத் தைக்கின்றார்கள். இந்தத் தையல் வேல்லை மிகவும் சவாலான பணி!

பிள்ளை வளர்ப்பு, சமையல், வயதாளிகளைப் பராமரிப்பது, ஆடை தைப்பது என்று பெண்களுக்கு நீளும் பணிகளோடு, 'இக்லு' எனும் பனி வீடுகளை அமைப்பதிலும், கூடாரங்கள் அடிப்பதிலும் ஆண்களுக்குக் கைகொடுக்க வேண்டியுள்ளது. வேட்டையாடுவதை தங்கள் முழுப்பொறுப்பாக ஆண்கள் எடுத்துக் கொண்டுள்ளார்கள். அதற்காக இங்குள் பெண்கள் வேட்டையாடுதலை அடியோடு செய்வதில்லை என்று சொல்லிவிட முடியாது. பொதுவாக இவர்கள் பால்பேதமின்றி தமக்குரிய வேலைகளை வசதிப்படி செய்து கொள்கிறார்கள்.

**சமுதாயத்தில் பெண்களின் செல்வாக்கு**

இந்தச் சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் சமனாகவே கணிக்கப்பட்டாலும், பெண்களுக்கான அதிகாரம் ஆண்களை விடக் குறைவாகவே இருக்கிறது. குறிப்பாக எந்தக் காலத்தில் இடம் மாறுவது, எங்கு செல்வது என்பதையெல்லாம் தீர்மானிக்கும் அதிகாரம் ஆண்களுக்கு மாத்திரமே உண்டு. பல முடிவுகளை எடுக்கும் குழுக்களின் முழு அங்கத்தவர்களுமாக ஆண்களே இருக்கிறார்கள். இதன் காரணமாக இந்தச் சமுதாயத்தில் எடுக்கப்படும் முக்கியமான தீர்மானங்களுக்கு, பெண்களால் குரல் கொடுக்க முடிவதில்லை. பிள்ளை களைத் தத்தெடுத்து வளர்ப்பது, திருமணங்களை ஒழுங்கு செய்வது போன்ற விடயங்களில், ஆணின் தீர்மானமே முடிவாகின்றது. தமது வீடுகளில் முழு அதிகாரத்தையும் பெண்களே கொண்டிருந்தாலும், வெளிவேலைகளில் ஆண்களின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது.

**புதிய கலாசார வாழ்க்கை**

புதிதாக முளைக்கும் ஆட்டிக் பிரதேச நகரங்களில் இவர்கள் வாழத் தலைப்பட்டிருக்கின்றார்கள். அரச திணைக்களங்களில் பணிபுரிய ஆரம்பித்துள்ளார்கள். நாகரிக உடைகள் அணிய ஆரம்பித்து விட்டார்கள். வ்ாகனங்களில் பயணிக்கிறார்கள். வீடுகள் கட்டுகிறார்கள். என்றாலும் குறைவான கல்வியறிவு, இவர்கள் தம் வேலையைத் தக்க வைத்துக் கொள்ளவோ, அல்லது புதிய வேலைகளைத் தேடவோ தடையாக இருந்து வருகின்றது. பெண்கள் இந்த விடயத்தில் ஆண்களை விட ஒரு படி மேலே போயிருக்கிறார்கள் என்றே தெரிகின்றது.

வீட்டுப் பணியாள்களாக, களஞ்சிய லிகிதர்களாக, மருத்துவமனை உதவியாளர்களாக, வகுப்பறை உதவியாளர்களாக, என்று வேறுபட்ட வேலைகளைச் செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். ஆண்களை விட அதிகம் பெண்கள் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். பல கல்லூரிகளில் 'இனுவிட்' மக்களுக்கெனப் பிரத்தியேகக் கல்வி நிகழ்வுகளை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு அதிகம் பெண்களே செல்கிறார்கள். இந்தக் கல்வியறிவு பெண்களே அதிகம் உழைப்பவர்கள் என்ற நிலைக்கு மாற்ற, ஆண்கள் பரம்பரையாகப் பெண்கள் செய்துவந்த பெண்களின் வீட்டுப் பணிகளைத் தாங்கள் பொறுப்பேற்கும் மாற்றம் தலையெடுத்திருக்கின்றது. வீட்டுத் தலைவன் என்றிருந்த எமது பொறுப்பு, இன்று பெண்களுக்கு மாறிவருகிறதே என்ற ஆதங்கம் இங்குள்ள ஆண்களை வாட்ட ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக இவர்கள் மது அருந்த ஆரம்பித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. கனடாவின் சுகாதார அமைச்சராக இந்த இனப் பெண் ஒருவர் பதவியேற்கும் அளவுக்குப் பெண்களின் வாழ்வு மாற்றம் கண்டுள்ளது.

**பாதிக்கப்படும் உடல்நிலை**

ஒரு முன்னேற்றம் சில பின்னடைவு களையும் சந்திப்பதுண்டு. இந்த இன மக்கள் விடயத்திலும் அப்படித்தான். நவீன யுகத்தில் பெண்கள் முன்னேறுகிறார்கள். அவர்களின் சமூக மதிப்பு மாறி வருகின்றது என்று சொல்லப்பட்டாலும், அவர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறை சிதைந்து போயிருக்கின்றது. உடலை வருத்தி அன்று உழைத்தார்கள். இன்று வாழ்க்கை முறை அடியோடு மாறி வருகின்றது. இதனால் குறிப்பாகப் பெண்களுக்கு நீரழிவு நோய் தொடக்கம் பல நோய்களின் தாக்கங்கள் வந்து சேர்ந்துள்ளன.

கொழுப்பின் அளவு அதிகரிப்பு, இதய நோய்கள் என்று ஆண்களும் பல பிரச்சினை களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். அதிக மாமிசம் சாப்பிடுவதும், குறைந்த மரக்கறி வகைகள் உண்பதும் இதற்கு முக்கிய காரணிகள். முன்பெல்லாம் வேட்டை, படகோட்டுதல் என்ற பல வெளிவேலைகள் இருக்கும். இப்பொழுது அவை குறைந்து வருவது இந்த ஆரோக்கிய மாற்றத்துக்குக் காரணம்! இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை வாழ்ந்தவர்களது கோலம் அடியோடு மாறிப்போயிருக்கின்றது. மாறிக் கொண்டிருக்கின்றது. அதன் சாதகங்களும் பாதகங்களும் வெளிப்படையாக இந்தச் சமுதாயத்தில் தெரியத் தொடங்கியுள்ளன.



கவிதை

வேலணையூர் தாஸ்

# அச்சாப்பிள்ளை

இந்தக் கடலின் அலைகளை
பிடித்துத் தருகிறேன்
இந்தா பிடி
நீ உடனே சாப்பிடவேண்டும்
இல்லை என்றால் ஜிம்ம்மிக்குக்
கொடுத்து விடுவேன்

ம்..ம்... நிலவும் வருகிறது
வீட்டுக்கு அழைத்துப் போகலாம்
கேட்டுப் பார் அது வருகிறதா என்று?
இப்போது 'ஆக்' காட்டு (?)
ம்... அச்சாப்பிள்ளை!

சரி
சில சிப்பிகளைப் பொறுக்கிக்
கொள்
கால்தடத்தால் கரையில் படம்
கீறு
இந்தா... கையோடு இதையும்
சாப்பிடு

நான் உனக்காகப் பாடுவேன்
உன் அண்ணன்மாரின்
வீரத்தை கேட்டபடி என் செல்லம்
நீயும் தூங்கலாம்

சரி இந்தக் கடலின் குளிர்
மண்ணைப் பைகளிலே
அள்ளு
வீடுசென்று உனக்கொரு
வீடு செய்யலாம்
காலையில் சூரியன்
வந்ததும்
உன் புது வீட்டைக்
காட்டலாம்
சரி இப்போது சாப்பிடு
இதுதான் இறுதிக்
குழையல்...!

கட்டுரை

சுபஸ்ரீ

# அன்னியமாகிப் போய்விட்ட கூட்டுக் குடும்ப வாழ்க்கை

**அந்தக் காலத்தில் எமது மூதாதையர்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தார்கள். ஒரே வீட்டில் மாமன் மாமி, மச்சான் மார், மச்சாள்மார், ஆச்சி, அப்பு, சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா என எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். எல்லா வேலைகளையும் மனம் கோணாமல் செய்தார்கள்.**

"குடும்பத்தை உருவாக்கச் சொன்னால் ஒரு கிராமத்தை உருவாக்கித் தந்தார் எங்கப்பா. எல்லோரும் இந்த நாட்டு மன்னர். அந்த விசயத்தில் எங்கப்பா மன்னாதி மன்னர்" என்றொரு தென்னிந்தியத் திரைப்படப் பாடல் 80களின் பிற்பகுதியில் வெளியாகியிருந்தது. விஜயகாந்த்-அம்பிகா நடித்திருந்த அந்தத் திரைப்படத்தில் அவர்களின் பிள்ளைகள் மேற்படிப் பாடலைப் பாடுவதாகக் காட்சி அமைத்திருந்தார் இயக்குநர் ஆர். சுந்தரராஜன். இந்தப் பாடல் வரிகளை இங்கிலாந்து நாட்டின் தம்பதியொன்று நிஜமாக்கியிருக்கிறது. ஆம்! 47வயதான கணவனும் 43வயதான மனைவியும் தமது 21ஆவது குழந்தையின் வரவுக்காகக் காத்திருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்கனவே 20குழந்தைகள் உள்ள நிலையில் 21ஆவது குழந்தையைப் பெற்றெடுக்க உள்ளனர். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் தமது 20ஆவது குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர் இனிமேல் குழந்தை பெற்றுக் கொள்வதில்லை என்று தீர்மானித்திருந்த போதிலும் தான் மீண்டும் கருவுற்றிருப்பதாக 43 வயதான அந்தப் பெண்மணி தெரிவித்திருக்கிறார்.

**எமது மூதாதையர்களும் அதிக பிள்ளைகள் பெற்றிருந்தார்கள்!**

சுமார் ஐந்து தசாப்த காலங்களுக்கு முன்னர் எமது மூதாதையர்களும் பத்து, பன்னிரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து, வளர்த்து, ஆளாக்கியிருந்தார்கள். அப்போதெல்லாம் ஒரு குடும்பமே பெரும் குடும்பமாக இருந்தது. அத்தோடு அவர்கள் அன்றைக்குக் கூட்டுக்குடும்ப வாழ்க்கையே வாழ்ந்தார்கள். அப்போது அது இன்னமும் அதிகரித்த நபர்களைக்கொண்ட குடும்பமாக இருந்தது. ஆனபோதும் இப்போது நம்மவர்கள் "நாம் இருவர் நமக்கு இருவர்" என்ற கோட்பாட்டையே அதிகளவில் கடைப்பிடித்து வருகின்றனர். அவ்வாறு பெற்றெடுத்த இரண்டு குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்குவதற்கே பல பெற்றோரின்பாடு பெரும்பாடாக உள்ளது. இதனால், குடும்பம் சிறுத்தது. அத்தோடு கூட்டுக்குடும்பம் என்பதையும் விடுத்தது.

**காலத்தைக் காரணம் சொல்லுகிறார்கள்**

இந்த அவசர உலகத்தில் கணவனும் மனைவியும் தொழில் செய்து கொண்டு குழந்தைகளையும் பராமரிப்பது என்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல என்று கூறுகின்ற பெற்றோர்களும் நம்மத்தியில் இருக்கின்றனர். தொழிலுக்குச் செல்லும் பெற்றோர் தினமும் அதிகாலையில் எழுந்து தேநீர், காலை உணவு, மதிய உணவு என்பதைத் தயாரிப்பது முதற்கொண்டு ஏனைய வேலைகளையும் முடித்துக்கொண்டு, பிள்ளைகளை உறக்கத்திலிருந்து எழுப்பி, அவர்களைப் பாடசாலை செல்வதற்குத் தயார்ப்படுத்தி, பாடசாலைக்கு அனுப்பி வைத்துவிட்டுத் தாமும் அவசரமாக ஆயத்தமாகிக் காலை 7மணிக்கு வீட்டை விட்டுப் புறப்டுவதே பெரிய சாதனை என்றாகிவிட்டது. நம் நாட்டுப் பெற்றோரின் நிலை.

எம்மவர்களின் நிலை இவ்வாறு இருக்கையில் 21ஆவது குழந்தையின் வரவுக்காக மகிழ்ச்சியுடன் காத்திருப்பதாகக் கூறுகின்றனர் அந்த இங்கிலாந்து நாட்டின் தம்பதியர். தனது 14ஆவது வயதில் தமது முதல் குழந்தையைப் பெற்றெடுத்ததாகக் கூறும் அந்தப் பெண்மணி 29வருடங்களில் 20குழந்தைகளைப் பெற்றெடுத்ததாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார். அந்த 20குழந்தைகளில் 11குழந்தைகள் ஆண் குழந்தைகள். 9குழந்தைகள் பெண் குழந்தைகள்.

**நம்மவர்களின் பலவீனம்**

இரண்டு, மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்து விட்டு இங்கு எம்மவர்களில் பலரும் குழந்தையைப் பராமரிப்பதைச் சுமை என்கிறார்கள். குழந்



தைகள் என்றால் சுட்டித்தனம் மிகுந்தவர்களாகவே இருப்பார்கள். அதிலும் மேலைத்தேய நாடுகளின் குழந்தைகள் மகா சுட்டிகளாக இருக்கின்றபோது அவர்களைக் கவனிப்பது சுலபமானதல்ல. உணவு, உடை, விளையாட்டு என ஒவ்வொரு விடயங்களிலும் ஒவ்வொரு குழந்தைகளும் தமது சுய விருப்பத்தை முன்னிறுத்தும்போது அவர்களைச் சமாதானப்படுத்தி எல்லாக் குழந்தைகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். காலையில் ஆரம்பித்து இரவு உறக்கத்துக்குப் போகும்வரையில் அவர்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவது இலேசுப்பட்ட விடயமல்ல. ஆனாலும் தமது குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோசமாக இருப்பதாகக் கூறும் அவர்கள் வருடத்தில் ஒருதடவை சுற்றுலா சென்று வருவதாகவும் குழந்தைகளுக்கு எந்தக் குறையும் வைப்பதில்லை எனவும் கூறுகின்றனர். ஆனால் நாங்கள் இங்கே இரண்டு குழந்தை களுடன் தினமும் அல்லாடுவது பற்றி அவர்கள் அறிந்து கொண்டால் எங்களை எண்ணி நகையாடுவார்கள்.

**கூட்டுக்குடும்பமாக இல்லாமையே காரணம்**

இந்த விடயம் குறித்து எனது உறவுக்காரர் ஒருவரிடம் நான் ஒரு கேள்வி கேட்டேன். நவீன வசதிகள் எதுவுமில்லாத அந்தக் காலத்தில் எங்களுடைய மூதாதையர்கள் ஒரு 'டசின்' குழந்தை களைப் பெற்றெடுத்து ஆளாக்கினார்களே, ஆனால் இப்போது எம்மால் இரண்டு குழந்தைகளைப் பராமரிப்பதே பெரிய வேலையாக இருக்கிறதே. அதற்கான காரணம் என்ன? இதுதான் நான் அவரிடம் கேட்ட கேள்வி. அதற்கு அவர் நீண்டதொரு பிரசங்கமே செய்துவிட்டார்.

அந்தக் காலத்தில் எமது மூதாதையர்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தார்கள். ஒரே வீட்டில் மாமன் மாமி, மச்சான்மார், மச்சாள்மார், ஆச்சி, அப்பு, சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா என எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். எல்லா வேலைகளையும் மனம் கோணாமல் செய்தார்கள். சமையல் முதற்கொண்டு சடங்குகள் வரை எல்லோரின் பங்களிப்பும் இருக்கும். அதனால் எந்த வேலையும் கஷ்டமாக இருக்கவில்லை, நேரமும் மீதமாக இருந்தது. பொழுதுகளையும் இனிமையாகக் கழித்தார்கள். ஆனால் இந்த நவீன யுகத்தில் தனிக்குடும்பம், தனிவீடு, தனிஅறை, தனிவாகனம் என்று எல்லாம் தனியாகி அவர்களும் தனித்துப் போய்விட்டார்கள் என்றார் சற்றுக் கோபத்துடன். இதைக்கேட்ட என்னால் பதில்கூற முடியவில்லை. நானும் மௌனமாக இருந்து கொண்டேன். கூட்டுக்குடும்பம் இல்லாமல்போனமை குழந்தைக் குறைப்புக்கு மாத்திரமல்ல, இப்படியான பல விடயங்களுக்குப் பின்னணியாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன்.

கட்டுரை
கந்தர்மடம் அ.அஜந்தன்

# மாஸ்லோவின் தேவைக்கூம்பு

மனிதன் இந்தப் புவியில் வாழ்வதற்கு அடிப்படையான தேவைகள் முழுமை செய்யப்படவேண்டி உள்ளன. இனம், மதம், மொழிகளுக்கும் அப்பாற்பட்டு மனிதன் கட்டுண்டு கிடப்பது இந்த அடிப்படைத் தேவைகளால்தான். பல சந்தர்ப்பங்களில் மனிதனது நடத்தையைத் தீர்மானிப்பதும் இந்தத் தேவைகளே. வசதி வாய்ப்புக்களின் அடிப்படையில் இந்தத் தேவைகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களும் அளவுகளும் மாறுபடுகின்றபொழுது அது அவனது நடத்தையில் மாற்றத்தைத் தோற்றுவிக்கின்றன.

மனிதனது தேவைகளை 5 வகைகளுக்குள் அடக்குகிறார் மாஸ்லோ.

1. உடலியல் தேவை
2. பாதுகாப்புத் தேவை
3. அன்பு, அரவணைப்புத் தேவை அல்லது சமூகத் தேவை
4. கணிப்புத் தேவை
5. சுயதிறன் நிறைவுத் தேவை

இவை ஒன்றையொன்று ஆட்சி செய்ய வல்லவையாகவும், ஒன்றின் பின் ஒன்றாக ஒவ்வொரு தேவையும் ஓரளவேனும் முழுமையாக்கப்படும் பட்சத்திலேயே அடுத்த தேவைக்கு நகரும் விதத்திலும் அமைந்துள்ளன. உதாரணமாக உடலியல் தேவையின் ஒரு பகுதியைத் தாண்டுகையிலேயே பாதுகாப்புத் தேவை தலைதூக்கும் அதன் பின்பு அன்பு, உறவுகளின் தேவை இப்படியாகவே தேவைகள் நகர்கின்றன.

## உயிர்வாழும் செயலுக்குத் தடை ஏற்படும்

உடலியல் தேவைகள் மனிதனின் உயிர்வாழ்தலுக்கு அவசியமான காற்று, உணவு, நீர், தங்குமிடம், ஆடை, வெப்பநிலை, பாலியல் தேவை மற்றும் தூக்கம் என்பவற்றை உள்ளடக்கி உள்ளன. இந்தத் தேவைகள் முழுமையாக்கப்பட்டால் மனிதனது உடலில் உயிர்வாழும் செயல் திறம்பட நடைபெறாது. இவை அத்தியாவசியமானவையாக இருப்பினும் நபருக்கு நபர் வேறுபட்ட சுவை இரசனைகளுடன் கூடிய தேவைகளாக அமையலாம். இந்தத் தேவைகளுக்கான போராட்டங்கள் இன்னமும் இடம் பெற்றவண்ணமே உள்ளன. உணவு, நீர், ஆடை என்பன அவரவர் இயலுமைக்கேற்ப பெறப்படுகின்றன. வெப்பமும், காற்றும் இயல்பாகக் கிடைக்கப்பெறுகிறது. பருவம் எய்திய பின்பு மனிதன் பாலியல் நடத்தைகளில் நாட்டம் காண்கின்றான்.

## ஓய்வும் அவசியம்

பொருள் தேடுதல் துரிதமாக இடம்பெறும்பொழுது ஓய்வென்பதுபலருக்கும் எட்டாக் கனியாகவே மாறிவிடுகிறது. இருப்பினும் சிறிதளவேனும் ஓய்வு அவசியம் என்பதை மனிதன்மறந்துவிடக்கூடாது. இவற்றில் ஓரளவேனும் நிறைவேற்றம் காணாமல் அடுத்த தேவையை மனம் நாடாது. மனிதனின் உயிர்வாழும் நிலை உறுதி செய்யப்படும் பொழுது அல்லது உடலியல் தேவையில் சிறு திருப்தி ஏற்படுகிறபொழுது பாதுகாப்புத் தேவை எழுகின்றது.

## பாதுகாப்புக்கள் பல வழிகளில்...

மனிதனது செயல்கள் பாதுகாப்பை நோக்கி அல்லது உறுதிப்படுத்தப்படக்கூடிய முறையில் அமையப்பெறவேண்டுமென்ற எண்ணம் தோற்றம்பெறும். இதுசுயபாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு, சுகாதாரமும் நன்நிலைக்குமான பாதுகாப்பு மற்றும் விபத்து, நோய்நிலை ஏனைய பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் நிலையென விரிவடைந்து செல்கிறது. இதில் சட்டம், ஒழுங்கு உறுதிப்பாடு என்பன செல்வாக்குச் செலுத்தும். தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான முனைப்புடன் மனிதன் செயற்படத் தொடங்கிவிடுவான், பொருளீட்டுவதன் மூலம் தனது பொருளாதார நிலையின் உறுதித்தன்மையை நிலைநாட்ட முயற்சிப்பான், உற்சாகமாக செயற்படுவதற்கும் தனது ஆயுள் நீள்வ தற்கும்ஆதாரமான சுகாதாரத்தின் மீதும் தனது உடல் நிலை மீதுமான ஆர்வம் தலைதூக்கும், தற்காப்பு அவசியம் என்பதை உணர்ந்து தனக்கு ஆபத்துக்கள் நிகழாத வண்ணம் சட்ட ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வாழத் தலைப்படுவான்.






## அன்பும் உறவுகளும் அல்லது சமூகத் தேவை

பாதுகாப்புத் தேவையில் ஓரளவு நகர்ந்தபின் உலகஇயக்கத்தின் அச்சாணியாகத் திகழக்கூடிய ஒரு தேவையாக நாம் அன்பும் உறவுகளையும் பார்க்கமுடியும். மனிதன் ஒருசமூகப் பிராணி ஆதலால் அன்பு அரவணைப்பின்றி தனித்து வாழ்வது கடினம். குடும்பம், உறவினர், நண்பர்கள், சகபணியாளர்கள் என்று எவ்வகையிலாவது அன்பின் பிடியிலும் உணர்வுகளின் உயிரோட்டத்திலும் சமூகமாக மனிதன வாழ்கின்றான். மனிதனது நடத்தையில் தேவைகள் பெரும் பங்காற்றினாலும் அன்பு உறவுகளில் அவனது நடத்தை தங்கியிருப்பது கவனத்துக்குரியது. உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளல், அன்பு செலுத்துதல், பிறரைவரவேற்றல், புரிந்துகொள்ளல், ஊக்குவித்தல், ஏற்றுக்கொள்ளல், நம்பிக்கைவைத்தல், ஆதரவளித்தல் போன்ற பண்புகளை இந்தத் தேவை கொண்டுள்ளது. மனிதனுக்குப் பிரச்சினை எழுகின்றபோது பிறரிடத்தில் ஆறுதல் பெறுவது, ஆதரவைத் தேடிக்கொள்வது, பிறரால் உற்சாகப்படுத்தப்படுவது, நெருக்கமான ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது இன்றியமையாத தேவையாக அமைகிறது.

## கணிப்புத் தேவை

நான்காவதாக ஏற்படக்கூடிய ஒரு தேவை கணிப்பு. சுய மதிப்பு, சாதனை, பெறுமதி, புகழ், தன்நம்பிக்கை, பிறரால் மதிக்கப்படல், நிபுணத்துவம், சுதந்திரம், தகுதியைக் காண்பித்தல்போன்ற அம்சங்களை இந்தத் தேவை கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் மரியாதை, புகழ் என்பதை மனம்நாடியிருக்கும் பின்பு ஓர் உண்மையான சுய மரியாதையை நோக்கிய எதிர்பார்ப்பும் தேவையும் எழும். இதை இரண்டு பிரிவுகளாக நாம் பார்க்கலாம்.1.சுயமாக ஏற்படுத்திக்கொள்ளும் கணிப்பு (சுய மரியாதை, சாதனை, நிபுணத்துவம், தன்னம்பிக்கை, சுதந்திரம்) 2.பிறரால் ஏற்படுத்திக்கொள்ளும் கணிப்பு (புகழ், மரியாதை,கௌரவம், பெறுமதி).

மனிதன் தான் செய்கின்ற காரியங்களில் அல்லது அவன் வகிக்கும் பதவிகளில் ஒரு கணிப்பை எதிர்பார்க்கின்றான். பிறருக்கு நன்மை செய்கின்றபோது, சாதனைகளைப் படைக்கின்ற பொழுது சமூகம் தன்னை மெச்சும் அல்லது ஒரு அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தேவையாக மாறுகின்றது.

## சுயதிறன் நிறைவுத்தேவை

குடும்பத்தில் உள்ளவர்கள் தனது பொறுப்புக்களை எப்படிக் கணிக்கின்றனர், சமூகம் தனது செயலை எப்படிக்கணிக்கின்றது, பணியிடங்களில் தனது சேவை எப்படிக் கணிக்கப்படுகின்றது என்ற ஏக்கத்துடன் கூடிய தேவை எமதுசெயற்பாடுகளை உந்திக்கொண்டிருக்கும்.

> உடலியல் தேவைகள் மனிதனின் உயிர்வாழ்தலுக்கு அவசியமான காற்று, உணவு, நீர், தங்குமிடம், ஆடை, வெப்பநிலை, பாலியல் தேவை மற்றும் தூக்கம் என்பவற்றை உள்ளடக்கி உள்ளன. இந்தத் தேவைகள் முழுமையாகாவிட்டால் மனிதனது உடலில் உயிர்வாழும் செயல் திறம்பட நடைபெறாது. இவை அத்தியாவசியமானவையாக இருப்பினும் நபருக்கு நபர் வேறுபட்ட சுவை இரசனைகளுடன் கூடிய தேவைகளாக அமையலாம். இந்தத் தேவைகளுக்கான போராட்டங்கள் இன்னமும் இடம் பெற்றவண்ணமே உள்ளன.

சுயதிறன் நிறைவுத்தேவை என்பது மாஸ்லோவின் தேவைக் கூம்பில் 5ஆவது உயர் தேவையாக இனங் காணப்பட்டுள்ளது. மனிதன் தனது உச்ச அனுபவத்தை தேடும் ஒரு தேவையாக இது அமையும். மனிதர்கள் தமது முழுத்திறமைகளையும் ஒரு மனிதனாக இருந்து அடையவேண்டும் என்பதையும் அவர் குறிப்பிடுகின்றார். இந்தத் தேவை ஒரு மனிதன் எப்படி இருக்கவேண்டு.ம் எப்படி இருக்க முடியும் ? என்பதையும் உணர்த்த வல்லது. திறமைகள், சாத்தியப்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்தும்அல்லது முயற்சிக்கும் தேவை இதில் காணப்படுகிறது. தமது திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தும் மனிதர்கள் தம்மால் அதிகபட்சம் செய்யக்கூடியவற்றைச் சிறப்பாகச் செய்ய முயல்வர். 'எமக்கு இருக்கும் திறன்களுக்கு அமைவாக எமதுசெயல்கள் அமையாவிட்டால் ஒரு திருப்தியற்ற வாழ்வையே நாம் கொண்டிருப்போம்' என்பது மாஸ்லோவின்கருத்து. சுய திறன் நிறைவோடு வாழ்ந்தவர்கள் அல்லது வாழ்பவர்கள் மிகச் சிலரே. ஆனால் பல சாதனையாளர்கள் இந்தத் தேவையின் தூண்டலால் சாதித்தவர்களாகவே உள்ளனர்.

ஆற்றல்களை வெளிக்காட்டுவதற்கான சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தும் நிலையை இந்தத் தேவை உருவாக்கும். இது வளர்ச்சி, விருத்தி, சுய திருப்தி, அறிவு, சமூக சேவை, படைப்பாற்றல் மற்றும் அழகியல் ஆகியவற்றையும் உள்ளடக்கிய தேவையாக அமையும்.

இந்தத் தேவை எழும்பொழுது சுய விழிப்புணர்வும் தமது திறன்களை பயன்படுத்தும் ஆர்வமும் மேலோங்கியிருக்கும். உண்மையான, நீதியான, மெய்யறிவு மற்றும் அர்த்தம் புதைந்த வாழ்வை இந்தத் தேவைஏற்படுத்தும். சுயதிறன் நிறைவை எட்டியவர்கள் சிறந்த உள நலத்துடனும், அடிப்படைத் தேவைகளில் திருப்தி கண்டவர்களாகவும்,முழுமையாகத் திறமைகளைப் பயன்டுத்துபவர்களாகவும், மதிப்புக்களால் உந்தப்பட்டவர்களாகவும், உச்ச அனுபவங்களைக்கொண்டவர்களாகவும், சுய ஏற்புடையவர்களாகவும், பிரச்சினைகளை தீர்க்கும் திறனுடையவர்களாகவும், தன்னாட்சிமிக்க சுய நினைவுள்ளவர்களாகவும், தனியுரிமையை அனுபவிப்பவர்களாகவும், தன்னிச்சையாகச் செயற்படும் ஆற்றல் மிக்கவராகவும் மற்றும் வாழ்க்கைப் பயணத்தை முழுமையாக அனுபவிக்கும் நபர்களாகவும் இருப்பர்.



# டிக்: டிக்: டிக்



ஒரு விண்கல்லால் பூமியில் உள்ள 4கோடி பேர் இறக்கக்கூடும் என்ற ஆபத்து நெருங்க, அதை எதிர்கொள்ளும் விதமே 'டிக்:டிக்:டிக்'.

**கதை**

200தொன் எடை கொண்ட விண்கல் இந்தியாவை அழிக்கப்போவதை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிந்து அதிர்ச்சியடைகிறது. அதை முறியடிக்க விண்வெளி வீரர்களைத் தயார் செய்யும் முனைப்பில் இறங்குகிறது. ஏவுகணை ஒன்றைக் கொண்டு விண்கல்லை உடைக்கலாம் என்று முடிவெடுத்து, அந்த ஏவுகணைய இன்னோர் இடத்திலிருந்து திருட ஒரு நபரைத் தேடுகிறது. புத்திசாலித் திருடன் ஜெயம் ரவி தன்னுடைய மகனுக்காக அந்த வேலையைச் செய்ய உடன்படுகிறார். அந்த வேலை அவ்வளவு சுலபமில்லை என்பது ரவிக்குப் புரிகிறது. இதனிடையே ஏவுகணையத் திருடி என்னிடம் தந்தால் மட்டுமே உன் மகன் உயிரோடு கிடைப்பான் என்று மறுபுறத்தில் வில்லன் மிரட்டுகிறார். ஏவுகணையைத் திருட முடிந்ததா, 4கோடி மக்களா? மகனா? காப்பாற்றப்பட்டது என்பதே மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

ஜெயம் ரவி, கதாபாத்திரம் உணர்ந்து தன்னை இயக்குரிடம் ஒப்படைத்திருக்கிறார். மகன் மீதான பாசம், தேசப்பற்று குறித்த விளக்கம், தவறு செய்யாத இளைஞனுக்காகச் சிறை சென்றாலும் கவலைப்படாமல் தண்டனை அனுபவிப்பது, முயற்சியைக்கைவிடாமல் புத்திசாலித்தனமாகச் செயல்படுவது என நல்ல நடிப்பை வழங்கியிருக்கிறார். நிவேதா பெத்துராஜ் படம் முழுக்க வருகிறார். விண்வெளியில் மிதப்பது குறித்து செய்முறைப் பயிற்சி அளிப்பது, விண்வெளி வீரருக்கான அடிப்படைகளை கற்றுக்கொடுப்பது, ஏவுகணை குறித்த செயல்பாடுகளில் தனது இருப்பைப் பதிவு செய்கிறார். ரமேஷ் திலக், அர்ஜுனன் ஆகிய இருவரும் சிரிக்க வைக்கிறார்கள். ஜெயம் ரவியுடன் இணைந்து படம் அலுப்புத் தட்டாமல் இருக்க உறுதுணை புரிகிறார்கள். ஜெயப்பிரகாஷ் வழக்கமான நடிப்பைக் குறையில்லாமல் கொடுத்திருக்கிறார். ரித்திகா சீனிவாஸ், பாலாஜி வேணுகோபால், வின்செண்ட் அசோகன் ஆகியோர் பொருத்தமான பாத்திர வார்ப்புகள்.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித்தொகுப்பு**

ஜெயம் ரவி தனது மகன் ஆரவ் ரவிக்குப் பெருமை சேர்க்க நினைத்திருக்கிறார். அதற்கு குறும்பா பாடலைப் பரிசளித்திருக்கிறார். வெங்கடேஷின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம் சேர்க்கிறது. இமானின் 100ஆவது படம் இது. பின்னணி இசையிலும், குறும்பா, டிக் டிக் டிக் பாடலிலும் அதற்கான உழைப்புத் தெரிகிறது.

**பலமும் பலவீனமும்**

தந்தை - மகன் உறவு, விண்கல்லை உடைக்க வேண்டிய சூழல் என்ற இரண்டு கருக்கள் படத்தில் உள்ளன. மகனைக் காப்பாற்ற வேண்டி, விண்கல்லை உடைக்க வேண்டி, தயார்படுத்தும் ஏவுகணையை வில்லனிடம் ஒப்படைக்க வேண்டிய சிக்கலான சூழல் ஏற்படுகிறது. அதை எப்படி ஜெயம் ரவி கையாள்கிறார் என்பது திரைக்கதை யின் முக்கிய முடிச்சு. அதைக் கையாண்ட விதம் நன்று. பாதுகாப்புக் கோட்டைத் தாண்டிச் செல்வது குறித்து விண்வெளியில் இருக்கும் வீரர்கள் பூமியில் இருக்கும் குழுவுக்குத் தகவல் சொல்கிறார்கள். அதை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் தலைமை நிர்வாகி உடனடியாக நம்பிவிடுவது பார்ப்பதற்கு நம்பும்படியாக இல்லை. விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் போதிய அனுபவமும், திறமையும் உள்ளவர்களுக்குக் கூட தெரியாத ஏவுகணை குறித்த செயல்பாட்டை ஜெயம் ரவி மட்டும் எப்படி அறிந்துகொள்ள முடிகிறது. அதுவும் கண்ணாடி, கறுப்புப் பகுதியை வைத்து ஏவுகணையை மறைப்பதாக நாடகமாடிப் பிறகு ஏவுகணையைத் திருடுவதாகக் காட்சிப்படுத்தி இருப்பதிலும் நம்பகத்தன்மை இல்லை.

இன்னொரு நாட்டின் ஏவுகணையத் திருடி அவர்கள் நாட்டையே அழிக்கக் குறிவைப்பதாகச் சொல்லும்போது, அதுகுறித்த பதற்றமோ, மீட்டெடுக்கும் ஆர்வமோ இல்லாமல், அந்த நாட்டு விண்வெளிப் படையினர் ஏவுகணை தொலைந்துபோவதாகத் தமது நாட்டுக்கு இரகசியக் குறிப்பு அனுப்புவதும் அபத்தம். அத்தோடு அந்த விண்கல்லை ஈர்ப்புசக்தி இல்லாத இடத்தில் அசாதாரணமாக ஜெயம் ரவி தூக்கிச் சரிக்கிறார். இப்படிஏகப்பட்ட ஜெகத்தாளங்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஊகிக்கக்கூடிய அளவுக்கே வில்லன் பாத்திரத்தை இயக்குநர் கட்டமைத்திருக்கிறார். அதிலும் சுவாரஸ்யம் இல்லாமல் போய்விடுகிறது. விண்வெளியை மையப்படுத்தி ஒரு முழுப் படத்தைக் கொடுத்திருக்கும் இயக்குநர் சக்தி சௌந்தர்ராஜனின் முயற்சியைப் பாராட்டலாம். காதல், டூயட் என்று மசாலாத்தனங்களைக் கலக்காமல் கதைக்குத் தேவையான அம்சங்களில் மட்டும் இயக்குநர் கவனம் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த முயற்சி முழுமையடையாமை குறையே.

# 'ரேஸ்' 3

***பாலிவூட்டின் வெற்றிகரமான தொடர் சினிமாக்க ளில் ஒன்றான 'றேஸ்' பட வரிசையில் 3ஆவது படம் வெளியாகியிருக்கிறது. முந்தைய இரண்டு பாகங்களிலும் நாயகன் சாயிப் அலிகான். ஆனால், இதில், சல்மான் கான். முந்தைய இரண்டு படங்களையும் அப்பாஸ் மஸ்தான் கூட்டணி இயக்கியிருந்தது. இதை ரெமோ டி சௌஸா இயக்கியிருக்கிறார். மூன்று படங்களிலிலும் அனில் கபூர் நடித்திருக்கிறார் என்பது மாத்திரம் ஒற்றுமை.***

**கதை**

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் சட்டவிரோத ஆயுதத் தொழில் ஈடுபட்டிருக்கும் மிகப் பெரிய பணக்காரர் ஷம்ஷேர் சிங்கின் (அனில் கபூர்) அண்ணன் மகன் சிக்கந்தர் சிங் (சல்மான் கான்). ஷம்ஷேர் சிங்கின் மகன் சூரஜ், மகள் சஞ்சனா (சகீப் சலீம், டெய்ஸி ஷா). அவரது சொத்தின் பெரும் பகுதி சிக்கந்தர் சிங்குக்கே எதிர்காலத்தில் உரித்தாகும் என்று எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. இதனால், சூரஜும் சஞ்சனாவும் கோபத்தில் இருக்கிறார்கள். இதற்கிடையில், இந்திய அரசியல்வாதிகளின் பாலியல் லீலைகள் காட்டும் காணொலிக் காட்சிகளைக் கொண்ட கணினி வன்பொருள் ஒன்றை வைத்து, பெரும் பணம் திரட்ட முடிவுசெய்கிறார் ஷம்ஷேர் சிங். அது ஒரு வங்கி லொக்கருக்குள் இருக்கிறது. சிக்கந்தர், சூரஜ், சஞ்சனா ஆகியோர் சென்று எடுத்துவருகின்றனர். இதற்கிடையில், ஜெஸ்ஸிகா என்ற பெண் இவர்களுக்கு நடுவில் வருகிறாள். இறுதியில், ஷம்ஷேர் சிங் எல்லோருக்கும் எதிரியாகிவிட, சிக்கந்தர், சூரஜ், சஞ்சனா ஆகியோர் அவரைப் பெரிய துரத்தலுக்குப் பிறகு முறியடிக்கிறார்கள்.

**பலவீனமான கதையும் பாத்திரங்களும்**

முந்தைய இரண்டு படங்களோடு ஒப்பிட்டால் மிகவும் பலவீனமான கதை. தாறுமாறாகப் பயணிக்கிறது. ஒரு மாபெரும் ஆயுதத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு பணக்காரர், அரசியல்வாதிகளின் பாலியல் காணொலிகளை வைத்து மிரட்டுவது, அவர்கள் எல்லோரையும் தான் இருக்கும் இடத்துக்கே வரவழைப்பது ஆகியவை அபத்தம். படம் முழுதும் விலை உயர்ந்த கார்களை வைத்து நடக்கும் சண்டைக் காட்சிகள் ஒரு கட்டத்துக்கு மேல் அலுப்பூட்டுகின்றன. 2.45 மணி நேரம் ஓடும் இந்த நீளமான படத்தில் சற்றேனும் ஈடுபாட்டோடு நடித்திருப்பவர் அனில் கபூர். ஜாக்குலின் பெர்ணான்டஸ் சில காட்சிகளில் பரவாயில்லை. மற்ற அனைவருமே ஒரு திகைப்புடனேயே வந்துபோவதைப்போல இருக்கிறார்கள்.

சல்மான்கானின் படத்தைப் பார்க்க வருகிறவர்கள், அவரது சட்டையில்லாத உடலைப் பார்க்க மட்டுமே வருகிறார்கள் என்ற எண்ணத்தை அவர் இப்போதைக்கு மாற்றிக்கொள்வதாக இல்லை போலிருக்கிறது. அதனால், இந்தப் படத்திலும் சட்டை இல்லாமல் நீண்ட சண்டைக் காட்சி உண்டு. மற்றபடி, எந்த உணர்ச்சிகளையும் முகத்தில் காட்டாமல் நடித்துவிட்டுப் போகிறார் மனிதர். இவரைப் பார்த்து பாபி தேவலும் சட்டையைக் கழற்றியிருக்கிறார். ஒரு காட்சியில் ஒரு பெரிய படைப்பிரிவே சல்மான்கானைத் துரத்துகிறது. சுட்டுத்தள்ளுகிறது. மனுசன் சிறு காயங்களோடு தப்புகிறார். மற்றொரு காட்சியில் சல்மான்கான் செல்லும் வண்டி மலை உச்சியில் இருந்து விழுகிறது. சல்மான்கான் பறக்க ஆரம்பித்துவிடுகிறார். நமக்கு விவேகம் அஜித் நினைவுக்கு வருவார். படத்தில் உள்ள இரண்டு நாயகிகளும் நிறைய பார்ட்டிகளுக்குச் செல்கிறார்கள். ஷாம்பெய்ன் குடிக்கிறார்கள். கவர்ச்சியாகச் சண்டையிடுகிறார்கள். இதையெல்லாம் விட பெரிய பலவீனம் இந்தப் படத்தின் வில்லன். ராணா (ஃப்ரெட்டி தருவாலா) என்ற பெயரில் வரும் இந்த வில்லன் கடைசிவரை வில்லத்தனம் எதுவுமே செய்வதில்லை. படத்தில் பாராட்டும்படி இருப்பது அயனாங்கா போஸின் ஒளிப்பதிவும், அனல் அரசுவின் சண்டைக் காட்சிகளும்தான். சல்மான்கான் இரசிகர்கள் மட்டும் இந்த முப்பரிமாணப் படத்தை சற்றுச் சிரமப்பட்டு ரசிக்கலாம். ஆனால், அடுத்த பாகம் வேறு வரவிருப்பதால் அச்சம் நீளும்.



# வீட்டுத்தோட்டம் வீட்டுக்கு உதவும்



அபிநயாவின் வீட்டின் பின்புறத்தில் அதிகளவான நிலம் வெறுமனேதான் கிடக்கின்றது. லஷ்மி கட்டப்பட்டிருக்கும் கொட்டகையைத் தவிர, அங்கொரு மூலையில் கோழிக் கொட்டிலும் இருக்கிறது.

பாடசாலையில் அன்றைக்கு, வீட்டுத் தோட்டம் பற்றிப் படித்துவிட்டு வந்தவை அவள் நினைவிலிருந்து நீங்காமல் இருந்தன. லஷ்மியின் சாணத்தைத் தினமும் அள்ளுகிற பாட்டி, அதை ஓரிடத்தில் குவித்து வருவது வழமை. அது அப்படியே கிடந்து மக்கிப்போவதும் வழமை. இப்போது தனது பள்ளிப் படிப்புடன் அதைக் கவனித்த அபிநயாவுக்கு எண்ணங்கள் சிறகடித்தன. பள்ளியில் படித்ததுபோலவே வீட்டுத்தோட்டம் செய்வதற்குரிய வசதிகள் அனைத்தும் தனது வீட்டில் இருக்கின்றன. பசளையும் கைவசமிருக்கிறது. வீட்டுத்தோட்டம் செய்தால் என்ன? என எண்ணினாள். அத்தோடு நிற்காமல் வேலையிலும் இறங்கினாள். ஞாயிற்றுக் கிழமை என்பதால் அவளுடைய வேலை கச்சிதமாக முடிந்தது.

நிலத்தைப் பண்படுத்தினாள். சிறிய தூர இடைவெளிகளில் சாணத்தை இட்டு மண்ணோடு சேர்த்தாள். நீர் பாய்ச்சி ஈரமாக்கினாள். பாட்டியும் உதவி புரிந்தார். அத்துடன் பக்குவமாக வேலை செய்கிற வழிகளையும் சொல்லிக் கொடுத்து வழிகாட்டினார்.

தாயின் கைவசமிருந்த செத்தல் மிளகாய் விதைகளே தற்சமயம் அவளுக்குக் கிடைத்தன. அவற்றை நாற்றுமேடையில் நட்டு வைத்துச் சிலகாலங்கள் நீர் தெளித்து வந்தாள். அதிகாலையில் பல்துலக்கியவாறே அந்த வேலையையும் அவள் செய்துவிடுவாள். சில காலங்களில் அவை முளைவிட்டன. அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பாட்டியின் வழிகாட்டலில் அவற்றை உரிய இடத்தில் நட்டு, தினமும் நீர் ஊற்றத் தொடங்கினாள். மெல்ல மெல்ல வளர்ந்து வந்த மிளகாய்ச் செடிகள், பூக்கத் தொடங்கின. அபிநயா பூரிப்படைந்தாள். சில காலங்களில் காய்க்கவும் தொடங்கின. இப்போது அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தினமும் எழுந்து முதல் வேலையாக மிளகாய்க் கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுவாள். அத்தோடு அவற்றுடன் கதையும்பேசுவாள். அவை அவளுடன் அளவளாவுவது அவளால் மாத்திரமே உணரக்கூடியது. பத்துச் செடிகள் என்றாலும் பக்குவமாக வளர்த்தால் பயன் கிடைக்கும் என்பதை அபிநயா அறிந்து கொண்டாள். அந்த மிளகாய்ச் செடிகள் நன்றாகக் காய்த்துக் குலுங்கின.



கெ.டிலானி,
தரம் - 3,
இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



ஆர்.சிபேன்,
தரம் - 5 பி,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## ஈழத்துப் படைப்பாளர் வரிசையில்...

### செ.கதிர்காமநாதன்

1942ஆம் ஆண்டில் பிறந்த செ.கதிர்காமநாதன் ஈழத்து எழுத்தாளர்களில் ஒருவர். சிறுகதைகள், மொழிபெயர்ப்பு, அறிமுகங்கள், இலக்கியக் குறிப்புக்கள் போன்ற பலவற்றை எழுதியவர்.


யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்தவர். வேதாரணியேசுவரர் வித்தியாலயத்திலும், விக்னேசுவராக் கல்லூரியிலும் கல்வி கற்று 1963ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். சில காலம் ஆசிரியராகப் பணிபுரிந்ததுடன் 1966 இலிருந்து 6 வருடங்கள் வீரகேசரி, மித்திரன் ஆகிய பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1971 இல் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்தார். பின்னர் கமச்செய்கைத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பதவி வகித்தார்.

இவரது முதற் சிறுகதைத் தொகுதி 'கொட்டும்பனி' 1968ஆம் ஆண்டில் வெளிவந்தது. அந்த ஆண்டுக்கான இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு இதற்குக் கிடைத்தது. 1942ஆம் ஆண்டில் வங்காளத்தில் நிலவிய கொடிய பஞ்சத்தின் பின்னணியில் கிருஷ்ணசந்தரால் எழுதப்பட்ட உருது மொழி நாவலை கதிர்காமநாதன் 'நான் சாக மாட்டேன்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார். இது வீரகேசரி பதிப்பாக வெளியிடப்பட்டது.

'மூவர் கதைகள்' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். இவர் சுயமாகவும் மொழிபெயர்ப்பாகவும் பல ஆக்கங்களைத் தந்துள்ளார். இவரது படைப்புக்களில் பெரும்பகுதி இவர் பத்திரிகைத் துறையில் இருந்த காலத்தில் படைக்கப்பட்டவை.

1959ஆம் ஆண்டில் எழுத ஆரம்பித்த இவரது முதலாவது சிறுகதை 'சவலை' ஆகும். இவரது சிறுகதைகளில் பெரும்பாலானவை யாழ்ப்பாண வாழ்வியலைச் சித்தரிக்கின்றன. இவர் தனது 18ஆவது வயதில் எல்லாம் 'உனக்காக' என்ற சிறுகதை மூலம் 'கலைச்செல்வி'யினூடாக சிறுகதை உலகில் பிரவேசித்தார். தொடர்ந்து இளங்கதிர், தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார். இவர் 'கொட்டும் பனி', 'தாய்', 'யாழ்ப்பாணம் இங்கே வாழ்கிறது', 'நிந்தனை' உட்படப் பல சிறுகதை களைத் தனது 35வருட காலத்துக்குள் எழுதினார். 1972ஆம் ஆண்டில் இறையெய்தினார்.

## வழிகாட்டுவோம்



## மழைப் பூச்சி



பட்டுப்பூச்சி பட்டுப்பூச்சி - நீ
எங்கிருந்து வந்தாயே
நல்ல மழை நாளில்
வானிருந்து வீழ்ந்தாயோ
வீழ்ந்ததாலே சிவந்து - ரோஜா
இதழ்போல் ஆனாயோ
சிறார்கள் எங்களோடு மகிழ்ந்து
விளையாடிச் செல்வாயோ?

*பி.சலோமி, தரம் - 3,*
*கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.*

# இன்றைய நாள்

**மேடம்:** உறவினரிடம் கருத்துவேறுபாடு உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**இடபம்:** அன்பால் அனைவரையும் அரவணைப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதி அடைபடும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழிலில் இடையூறுகளை சரிசெய்ய முயல்வீர்கள். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு உயரும். புத்திரரின் செயல்பாடு கண்டு பெருமிதம் உண்டாகும்.

**சிங்கம்:** உற்சாகமுடன் செயல்பட்டு வருவீர்கள். இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பாராட்டு வெகுமதி பெறுவர்.

**கன்னி:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய ஆடம்பர பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** முன்யோசனையுடன் இருப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணவரவுக்கேற்ப செலவும் உயரும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**விருச்சிகம்:** சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. தொழிலில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். அரச வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**தனுசு:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றங்களைச் செய்வீர்கள். வருமானம் திருப்தியளிக்கும்.

**மீனம்:** பேச்சில் புத்துணர்வு வெளிப்படும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். லாபம் பன்மடங்கு உயரும். கடன் தொல்லை மறையும்.



# படப்பிடிப்பில் காயம் அடைந்தார் தனுஷ்

தனுஷ் நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் 'மாரி 2'. பாலாஜி மோகன் இயக்கத்தில் உருவாகி வரும் இந்தப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடித்து வருகிறார். மேலும் வரலட்சுமி, வித்யா, கிருஷ்ணா, டோவினோ தாமஸ் உள்ளிட்ட பலரும் நடித்து வருகிறார்கள்.

இதில் டோவினோ தோமஸ் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இவருக்கும் தனுஷுக்கும் இடையேயான சண்டைக்காட்சிகள் படமாக்கப்பட்டது. அப்போது, எதிர்பாராத விதமாக வலது காலிலும், இடது கையிலும் தனுஷுக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக அறியவருகிறது.



அதிகம் பதம் பார்ப்பது அன்பெனும் வன்முறையே...


## twitter

JKK @iamkarthikeyank

"மூடிட்டு போங்கடா"
இப்படிக்கு
#தண்ணீர்_குழாய்

காளையன்..@Giri47436512

"வாங்கி"கட்டி
கொண்டேதான் இருக்கிறோம்
வங்கிகளிடம்!!!...







தியானத்தால் பெற்றது பெரிதாக ஒன்றுமில்லை. ஆனால்

## இழந்தவைகள்

1. சினம்
2. பதற்றம் (Anxiety)
3. மனச் சோர்வு (Depression)
4. பாதுகாப்பில்லாதது போன்ற உணர்வு (Sense of insecurity)
5. மூப்பு (Old age)

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 8 | | 7 | |
| 6 | | | | 1 | | 9 | | |
| 4 | | | | 2 | | 3 | 1 | 5 |
| | | 5 | | | | | | 1 |
| | | | 2 | 6 | 3 | | | |
| 2 | | | | | | 7 | | |
| 7 | 2 | 6 | | 8 | | | | 9 |
| | | 1 | | 5 | | | | 6 |
| | 9 | | 6 | | | | | 7 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 1 | 2 | 4 | 5 | 8 | 6 | 9 |
| 2 | 8 | 6 | 1 | 9 | 3 | 4 | 7 | 5 |
| 4 | 9 | 5 | 6 | 7 | 8 | 3 | 1 | 2 |
| 7 | 1 | 3 | 9 | 8 | 2 | 6 | 5 | 4 |
| 8 | 6 | 2 | 5 | 3 | 4 | 7 | 9 | 1 |
| 9 | 5 | 4 | 7 | 6 | 1 | 2 | 3 | 8 |
| 1 | 3 | 9 | 4 | 2 | 7 | 5 | 8 | 6 |
| 6 | 2 | 7 | 8 | 5 | 9 | 1 | 4 | 3 |
| 5 | 4 | 8 | 3 | 1 | 6 | 9 | 2 | 7 |

நேற்றைய விடை

வளர்ச்சியால் கிழிந்தது



வறுமையால் கிழிந்தது



சிலர் விட்டுப் போன வெற்றிடங்களை எவராலும் நிரந்தரமாக நிரப்ப முடிவதில்லை...

நாள்களை இனிமையாக ஆரம்பிக்க வானம் திறப்பதற்காக காத்திருக்க வேண்டியதில்லை. இனிய புன்னகைகள் போதும்!

கவலையற்று இருப்பதற்கான ஒரு எளிய வழி. கவலைப்படுவதற்கு அவகாசம் வழங்காமல் இருப்பது.

## சிந்திக்க...

- நாம் ஆசைகளைச் சிந்திப்பதில்லை. அதனால் கடன்!
- நாம் உண்ணும் உணவு முறைகளைச் சிந்திப்பதில்லை. அதனால் நோய்!
- நாம் உறவுகளைச் சிந்திப்பதில்லை. அதனால் பிரச்சனைகள்!
- நாம் வாழ்க்கையைச் சிந்திப்பதில்லை. அதனால் துன்பம்.
- நாம் கடவுளைச் சிந்திப்பதில்லை. அதனால் மீண்டும் மறுபிறவி!

# ஆரோக்கியத்துக்கு ஆழ்ந்த தூக்கம் அவசியம்

தினமும் கிட்டத்தட்ட ஒரே அளவு நேரத்தை தூக்கத்துக்காக எடுத்துக் கொள்ளுங்கள் ஒரு நாள் 8 மணி, ஒருநாள் 10 மணி, லீவுநாள்களில் 12 மணி என்று தூக்கம் கொள்ள வேண்டாம். தொடர்ந்து ஆரோக்கியம் நிலைக்க வேண்டும் என்றால் தினமும் ஆழ்ந்த தூக்கம் இருக்க வேண்டும். ஆழ்ந்த தூக்கத்தில் சுரக்கும் ஹார்மோன்கள் கல்லீரலை சுத்தம் செய்கின்றன. செல்களைப் புதுப்பிக்கின்றன. தசைகளை வலுப்படுத்துகின்றன. கொழுப்பினை உடைக்கின்றன. குருதியில் சர்க்கரை அளவினை சீர் செய்கின்றன. எனவே தினமும் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்கப் பழகுங்கள். அத்துடன் தினமும் 8-10 மணி நேரம் தூங்குங்கள். தூக்கம் வரவில்லை எனில் ஒரு நல்ல புத்தகத்தைப் படியுங்கள். விரைவில் தூங்கி விடுவீர்கள்.



- இரவு உணவினை சீக்கிரம் முடித்து விடுங்கள் என்ற அறிவுரையினை மருத்துவ உலகம் கூறுகின்றது. 7 மணிக்குள் உணவினை முடித்துக் கொண்டால் 9 மணிக்கு ஏதேனும் சாப்பிட வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றது என பலர் கூறுகின்றனர். ஏதேனும் புரதமாக சிறிதளவு எடுத்துக் கொள்வது வயிறு நிறைவினை தரும். ஆரோக்யத்தினையும் அளிக்கும். சிறிதளவு பன்னீர் அல்லது சில பாதாம் கொட்டைகள் இவையே போதும். மாவு சத்து, சர்க்கரை சேர்ந்த உணவு கண்டிப்பாக வேண்டாம்.
- தூங்குவதற்கு முன்னால் சில எளிய யோகாசனங்கள் செய்யலாம்.
- குடல், உணவுப் பாதை நன்கு இருந்தால் உடல் சிறந்த ஆரோக்கியம் பெறும். எனவே அன்றாட உணவில் கொழுப்பில்லாத தயிர், மோர் இவற்றினை எடுத்துக் கொள்வதும் தூக்கத்திற்கு உதவும்.
- கல்சியம், மக்னீசியம் இவை தேவையான அளவு உங்கள் உடலில் உள்ளதா என்பதை உங்கள் மருத்துவர் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.
- வெந்நீரில் 1/2 எலுமிச்சை பிழிந்து சாப்பிடுவது இரவில் உடலினை அசிட் தன்மை இல்லாது வைக்கும். அசிட் தன்மை இல்லாது இருந்தாலே உடல் தொந்தரவின்றி இருக்கும்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 500 | 500 |
| கணவாய் | 800 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 1000 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 500 | 400 |
| விளை | 600 | 450 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 300 | 400 |
| திருக்கை | 380 | 300 | 400 | 400 |
| மதனம் | 250 | 300 | 250 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 160 | 120 | 120 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 180 | 200 | 160 |
| பாகல் | 200 | 250 | 300 | 280 |
| க.கிழங்கு | 100 | 80 | 100 | 180 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 110 | 100 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 160 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 280 | 250 | 270 | 220 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 | 80 |
| கீரை | 40 | 50 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 30 |
| ப.மிளகாய் | 200 | 250 | 350 | 140 |
| புடோல் | 100 | 120 | 120 | 80 |
| கோவா | 120 | 180 | 160 | 140 |
| வெண்டி | 100 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 320 | 240 | 360 | 200 |
| லீக்ஸ் | 240 | 300 | 360 | 280 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| தேசிக்காய் | 240 | 150 | 100 | 240 |
| வல்லாரை | 20 | 35 | 20 | 20 |
| கறிமிளகாய் | 160 | 120 | 280 | 180 |
| கரட் | 280 | 300 | 360 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 400 | 480 |

# சர்க்கரை நோயாளிகளுக்கான ஆரோக்கிய மருந்து 'துளசி'



அருமருந்தான துளசியை தினமும் உட்கொண்டு வந்தால் குடல், வயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகளிலிருந்து வாழ்நாள் முழுவதும் விடுபடலாம்.

சமிபாட்டுச் சக்தியும், புத்துணர்ச்சியையும் துளசி இலை மூலம் பெறலாம், எமது உடலுக்கான கிருமி நாசினியாக துளசியை உட்கொள்ளலாம்.

துளசிச் செடி அதிக அளவில் வளரும் இடங்களில் காற்றில் இருக்கும் புகை கிருமிகள் போன்ற மாசுகள் அழிந்து காற்று மண்டலம் தூய்மை அடையும்.

- ★ துளசி இலையுடன் சீரகம் சேர்த்து நீரில் கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வந்தால் உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கும்.
- ★ அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கும், வெயில் மற்றும், மழைக்காலங்களில் அலைந்து திரிபவர்களுக்கு துளசி குடிநீர் அருமருந்தாகும். இது உடற்சூடு, பித்தம் போன்றவற்றைத் தணிக்கக் கூடியது.
- ★ அதுமட்டுமின்றி சக்கரை நோய், மஞ்சள்காமாலை, மலேரியா, காலரா நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.
- ★ தொண்டைச்சளி, வறட்டு இருமல், புகைச்சல், தலையில் நீர் கோர்த்தல், அடிக்கடி தும்மல், போன்றவற்றைப் போக்கும்.
- ★ குருதியில் உள்ள சளியை நீக்கி குருதியைச் சுத்தப்படுத்தும்.
- ★ துளசி இலையைப் போட்டு ஊற வைத்த நீரை தொடர்ந்து பருகி வந்தால் நீரிழிவு எனப்படும் சர்க்கரை வியாதி எம்மை நாடாது.
- ★ கோடை காலத்தில் வியர்வை நாற்றமும் கூடவே வந்துவிடும். அதனைத் தவிர்க்க குளிக்கும் நீரில் முந்தைய நாளே கொஞ்சம் துளசி இலையைப் போட்டு வைத்து அதில் குளித்தால் உடல் மணக்கும்.
- ★ துளசி இலையை எலுமிச்சை சாறு விட்டு நன்கு மை போல் அரைத்து அந்த விழுதை தோலில் தடவி வந்தால் படை சொறி இருந்த இடம் தெரியாமல் மறையும்.
- ★ சர்க்கரை நோய் வந்தவர்களும் துளசி இலையை மென்று உண்ணலாம். இதனைச் செய்து வந்தால் சர்க்கரையின் அளவு கட்டுப்படும்.
- ★ துளசி இலையை இடித்துப் பிழிந்த சாற்றுடன் சிறிதளவு கற்பூரம் கலந்து பல் வலியுள்ள இடத்தில் பூசி வர வலி குறையும்.
- ★ வெட்டுக் காயங்களுக்கு துளசி இலைச் சாற்றை பூசி வந்தால் அவை விரைவில் குணமாகும்.



## இது புதுசு

பெண்களுக்கான கைக்கடிகார வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# உளுந்தங் கீரை வடை



**தேவையான பொருள்கள்**

உளுந்தம்பருப்பு - 200 கிராம்
முளைக்கீரை - கைப்பிடி அளவு
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 2
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

உளுத்தம்பருப்பை நன்றாகக் கழுவி ஒரு மணி நேரம் ஊற வைத்து, தண்ணீர் விடாமல் கெட்டியாக அரைத்து கொள்ளவும்.

வெங்காயம், ப.மிளகாயை சிறு துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.

முளைக்கீரையை நன்றாக சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

அரைத்த மாவில் நறுக்கிய கீரை, உப்பு, வெங்காயம், ப.மிளகாய் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும்.

சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் பிசைந்து வைத்திருக்கும் மாவை வடைகளாகத் தட்டிப் போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

சூப்பரான உளுந்தங் கீரை வடை தயார்.

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

# வாழ்க்கை என்றால் ...

ஒரு நாள் இரவு குளியலறையில் கை, கால் கழுவிய பின்னர் பூசை அறைக்குச் செல்லும் நோக்கில் சாப்பாட்டறையைக் கடக்க முற்பட்டவேளை காயத்திரியின் தாய் சில மாத்திரைகளைப் பாலுடன் விழுங்குவதற்கு அவளிடம் கொடுப்பதைக் கண்டு விட்டான். அவனுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. தன்னுடைய மனைவி ஏதோவொரு நோயால் அவஸ்தைப்படுகிறாள் என்பது நிரூபணமாகியது. படுக்கையறையிலே மனைவி நல்ல தூக்கத்தில் இருக்க, அவன் அந்த அறையைச் சல்லடை போடுகிறான். துணிமணி, பெட்டி – படுக்கைகள் ஒன்றுவிடாமல் துலாவுகின்றான். கடைசியாக யாழ். போதனா வைத்தியசாலையின் பெயர் பொறிக்கப்பட்ட 'கிளினிக் கொப்பி' அவன் கையில் சிக்குகிறது. கே. காயத்திரி, வயது 22, கண்ணகை அம்மன் கோயில் வீதி என்று விலாசமிடப்பட்டிருந்தது. முதிர்ச்சியான நிலையில் மன நோய். அதற்குரிய மருந்துகள், தூக்க மாத்திரைகள் போன்ற மருந்து வகைகள் வழங்கப்பட்ட குறிப்புக்கள் இருந்தன. நாள்கள் தவறாது இரவில் மருந்து பாவிக்கப்பட வேண்டுமென்றும் ஒவ்வொரு மாதமும் கடைசிப் புதன் கிழமைகளில் வைத்திய பரிசோதனைக்காகச் சமூகம் கொடுக்க வேண்டுமென்றும் மன நோய் வைத்திய நிபுணரால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. பூட்டிய இருட்டறையிலே வாழ்ந்த இல்லற வாழ்வில், வெளிச்சத்துக்காகத் திறந்து விடப்பட்ட ஜன்னல்களாகக் கிளினிக் கொப்பி அவனுக்குத் துலங்கியது.

தலை சுற்றியது. தலையிலே இடி விழுந்ததுபோன்ற உணர்வு. கட்டிலிலே அமர்ந்தவன் அப்படியே சாய்ந்து விட்டான். உறக்கம் வந்தால்தானே.

விடியற்காலையானவுடன் அடுக்களையிலே நின்றிருந்த மாமியாரை அணுகி, "இப்படியான நோயிருக்கென்று சொல்லிக் கொள்ளாமலே கலியாணத்தை முடிச்சுப் போட்டியள் நீங்கள் கெட்டிக்காரர்தான். காயத்திரியை இந்த நோயை இல்லாதொழிக்க ஒரு வைத்தியரிடம் காட்டினாலென்ன?" என்று கேட்கிறான். அவன் வார்த்தைகளைக் கேட்டவுடன் வாயடைத்துப்போய் அப்படியே நின்றவள், ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொள்கிறாள். சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையாட்டினாள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்து மருத்துவமனைக்கு மாதம் ஒருமுறை வருகை தரும் மனநோய் மருத்துவச் சிறப்பு நிபுணரிடம் அவளைக் காட்டுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து தாயாருடன் அவளை அழைத்துச் சென்றான். அவளை நன்கு பரிசோதனைக்கு உட்படுத்திய மருத்துவ நிபுணர் மாற்ற முடியாத முதிர்ச்சி நிலையிலுள்ள மன நோய் இது என்றும், அந்த மருந்துகளைத் தொடர்ந்தும் பாவிக்க வேண்டுமென்றும் கோகிலனிடம் கூறுகிறார். அவரைப் பார்த்து, "திருமண வாழ்வு எப்படியமையும்?" என்று வினாவுகிறான்.

"மூளை நரம்புகள் மன நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குச் சிகிச்சையளிக்க வழங்கப்படும் மருந்துகளால் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வகையிலான சுரப்பிகள், கலன்கள் பாதிக்கப்பட்டுச் செயலிழந்துவிட்டன. அந்த மாத்திரைகளைத் தொடர்ந்து பாவிக்காமல் விட்டால் நோயாளி தனக்குத் தானே தீங்கிழைப்பது மாத்திரமல்ல அயலவர்களுக்கும் தீங்கிழைக்க நேரிடும். இல்லற வாழ்வு ஒரு கேள்விக் குறிதான்" என்று கூறி முடித்தார். என்ன செய்வதென்று புரியாத கோகிலன் துன்பம் சுமந்தவனாக வீடு வந்து சேர்ந்தான். அடுத்த நாள் பெற்றோரின் இல்லத்துக்குச் சென்று நடந்த எல்லா நிகழ்வுகளையும் கூறுகிறான். அவர்கள் அதிர்ந்து போனார்கள். தாய் தலையிலே கை வைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். "எங்களை ஏமாத்திப் போட்டாங்களே" என்று மனதிலே எண்ணிய கைலாசம், கலியாணத் தரகர் கந்தசாமியிடம் செல்கிறார். "நீயும் அவங்களோட சேர்ந்து எங்கள ஏமாத்தி ஒரு விசர்ப் பெட்டையை என்ரை மகன்ர தலையில கட்டி வைச்சுட்டியே" என்று திட்டித் தீர்க்கிறார்.

"எனக்கு இப்பிடி ஒரு நோயிருக்கு என்று தெரியாது. அவர்கள் அதை மூடி மறைச்சுப் போட்டாங்கள். கலியாணம் பேசேக்கையே நான் சொன்னான் உங்களுக்கு. பொம்பிளையையும் அவளின்ர தாய், தகப்பனையும் நல்லா விசாரிக்கச் சொல்லி. அது உங்களப் பொறுத்தது" என்று சொல்கிறார் தரகர்.

வீடு வந்த கைலாசம் ஆத்திரம் தாங்காது "ரெண்டில் ஒண்டு பார்க்கிறன்" என்று கூறி மனைவியையும் அழைத்துக் கொண்டு சம்பந்தி வீட்டுக்குச் செல்கிறார். "என்ன கைங்கரியம் செய்து போட்டியள்? எங்களை ஏமாத்தி, ஒரு சுகமில்லாத பெட்டையைக் கட்டி வைச்சு விட்டிங்களே?" என்று உரத்த குரலில் சத்தம் போடுகிறார். மனைவியும் தன்னுடைய தலையிலும் நெஞ்சிலும் அடித்தவாறு " ஏமாத்திப் போட்டியளே ஏமாத்திப் போட்டியளே" என்று பல தடவைகள் கூறிக் கொண்டே ஒப்பாரி வைத்தாள். "கொஞ்சம் பொறுதியாய் இருங்கோ நாங்கள் சொல்லுறதையும் கொஞ்சம் கேளுங்கோ. என்னுடைய மகளுக்கு நோய் கண்டவுடன் வைத்தியரை அணுகினோம். அவர் மருந்து மாத்திரைகளைத் தந்து கலியாணம் செய்வது நல்லதல்ல என்று கூறியது உண்மைதான். ஆனால் எங்கட ஊரில இருக்கிற ரெண்டு சாத்திரிமாரிட்டை மகளின்ர குறிப்பைக் கொடுத்துப் பார்த்த போது, திருமணம் செய்து பிள்ளை பிறந்தால் இந்த நோய் முற்றாக அகலுமெண்டு அந்த ரெண்டு சாத்திரியளும் ஒருமிக்கக் கூறினார்கள். அதன்படி அவளுக்கு கலியாணம் கட்டி வைச்சம்" என்று கூறினார். குடும்ப இரகசியத்தைச் சந்திக்குக் கொண்டுவர விரும்பாத இரண்டு வீட்டாரும் பிரிந்தனர்.

000

இரவுப் படுக்கையிலே ஆழ்ந்த யோசனையில் கோகிலன்.

பெண்ணுக்கு மாங்கல்யம் எவ்வளவு மகத்தானதோ ஆண்களுக்கும் அதைப் பேணிப் பாதுகாக்கும் கடப்பாடு உண்டென்பது அவன் மனதை உறுத்தியது. எத்தனையோ பெண்களைப் பெண் பார்த்து அலட்சியப்படுத்தியிருக்கிறேன். அந்தப் பெண் பாவம் பொல்லாதது. அவர்களின் சாபந்தான் தன்னை இவ்வாறு பாதிக்கிறது என்று கூட அவன் எண்ணத் தலைப்பட்டான். மனைவியின் வைத்திய அறிக்கையை ஆதாரமாக வைத்து விவாகரத்துக் கோருவதற்கு அவன் மனம் எண்ணங்கொள்ளவில்லை. திருமணமாகியும் பிரமச்சாரிதான். தாரமும் குருவும் தலைவிதிப்படிதான் என்று எண்ணியவாறு நில அளவைத் திணைக்களத்தை நோக்கி மோட்டார் சைக்கிளிலே வழமைபோல் வேலைக்குப் போகிறான்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 528

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..........................................................
கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. சம்மதம் தெரிவித்தல்
4. வடக்கு கைத்தொழிலில் பெரும் பங்கு வகிப்பது
6. சீமான்
7. கடல்
9. பலர் விரும்பி உண்ணும் சத்து நிறைந்த இலை உணவு
11. நடு இடம்
12. சமையல் அறைக்கருவி. தேவை குறைந்து விட்டது. சிலருக்கு தெரியாமல் இருப்பது
13. தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது
14. இதன் வளர்ப்பு வருவாய் அள்ளித் தரும்
16. அன்பு வைத்திருப்பவன்
18. கடுமையானது என்பதைக் குறிக்கும் சொல்
19. பழுத்தல்
21. பெருங்காற்று
22. காப்பியம்

### மேலிருந்து கீழ்

1. தமிழனின் குணத்தில் இதுவும் உண்டு
2. ஓர் இராசி
3. நாள்
4. கவலையால் ஏற்படுவது
5. வதந்தி
8. கீழான செயல் செய்பவன்
10. இது இல்லையேல் ஆரோக்கியம் இல்லை
12. பன்னிரண்டு அங்குலம்
13. சிரசு
15. சிங்கம்
16. பண்டைய போர்களின் போது இதுவும் ஓர் ஆயுதமே
17. சூரிய வெளிச்சம் கிடைக்கும் வேளை
18. மனிதனுக்கு வாழ்வில் இது மிக அவசியமானது
20. முறையற்ற

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 526 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பிரதமர் (4)பாதி (6)கதி (7)அலரி (8)மாதர் (10) வரம்பு (11)தரித்திரம் (13)தரகு (15)கல்வி (16)அதிதி (18)சுரி (19)யமன் (20) பயணம் (21)புயம்

**மேலிருந்து கீழ்**
(1)பிரமாதம் (2)தகர்த்தல் (3)மதி (4)பாலம் (5)திரிபுரா (7)அரம் (9) தரி (10)வரகு (12)திரவியம் (14)ஆதி (15)கரிய (16)அன்பு (17)திடம் (18)சுப

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் பேர்ட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.528**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (04.07.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 526 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திருமதி பா.சறோஜினிதேவி,
இல.352, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
மு.கந்தையா,
தபாலக வீதி, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
அ. கனகரெத்தினம்,
இல.232/3 செபஸ்தியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
ந.போலிங்கம்,
இல. 82/4ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
ஞா.இம்மனுவல்,
இல.85/4 கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

ஸ்ரீ.மயூலக்ஷன்,
பழங்கிணற்றுப்பிள்ளையார்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

சிவகுரு-தர்மகுலராசா,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

நா.சிவதாசன்
114,கிராம விஸ்தரிப்புத்திட்டம்,
திருநெல்வேலி, கோப்பாய்.

சொற்சிலம்பம் போட்டி இல.528 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 08.07.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 526 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**24.06.2018 முதல் 30.06.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன், சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை ஏற்படும். உங்கள் செயல்களில் நேர்த்தி அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வாகனப்பயணம் இனிய அனுபவம் தரும். பூர்வ சொத்து பராமரிப்பில் அதிக கவனம் வேண்டும். பிள்ளைகள் விரும்பிய பொருள் கேட்டுபிடிவாதம் செய்வர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் நற்செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வதால் வளர்ச்சி கூடும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து செயல்பட வேண்டும். பெண்கள், உறவினர் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## இடபம்

ராகு, சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். உங்கள் மனதின் உற்சாகம் செயல்களில் வெளிப்படும். நண்பர், உறவினரின் வகையில் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தும் சூழ்நிலை உருவாகும். பொது விவகாரங்களில் அமைதி காக்கவும். வாகனப் பயணங்கள் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். எதிரி தொல்லை விலகும். மனைவி வழி உறவினர்கள் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உருவாகும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்பர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் ஆர்வமுடன் பயில்வர்

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். மனதில் இருந்த குழப்பம் விலகும். பணவரவு அதிகம் பெற அனுகூலம் உருவாகும். புதிய வீடு வாங்குபவர்கள் ஆவணங்களை கவனமுடன் சரி பார்க்கவும். பிள்ளைகளின் செயல் அறிவுப்பூர்வமாக அமைந்திடும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் ஏற்படும். மனைவி உங்களின் நல்ல குணத்தை உணர்ந்து பாராட்டுவார். அரசாங்க உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை கூடுதல் உழைப்பால் சீராகும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் செயல்படுவர். பெண்கள் பணவசதிக்கேற்ப ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற புதிய அணுகுமுறையை பின்பற்றுவர்

## கடகம்

சுக்கிரன், சனீஸ்வரர் தாராள நன்மையை தருவர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும் புகழும் தேடி வரும். வாகன பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெற புதிய வழி பிறக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் நல்ல முடிவு கிடைக்கும். மனைவி ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். அதிக உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.

## சிங்கம்

பெரும்பான்மை கிரகங்களால் வியத்தகு நற்பலன் கிடைக்கும். மனதில் புத்துணர்வு மேம்படும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தாய் வழி உறவினர்களிடம் அன்பு மலரும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். பிள்ளைகள் நேர்மறை எண்ணங்களுடன் செயல்படுவர். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். மனைவியின் நற்செயல்களை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் நன்றாக படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## கன்னி

சூரியன், புதன், குரு, சுக்கிரன், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூகநிகழ்வுகளால் மனதில் நல்ல மாற்றம் உருவாகும். புதிய வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. பிள்ளைகள் மனதில் ஆன்மிக எண்ணம் வளரும். படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேறுவர். வெளியூர் பயணம் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும். ஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் அதிர்ஷ்டம் நற்பலன்களை தரும். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவால் வளர்ச்சி பெறும். பணியாளர்களுக்கு பணியிடத்தில் நற்பெயர் உண்டாகும். பெண்கள் தாய் வீட்டுக்கு இயன்ற அளவில் உதவுவர்.

## துலாம்

சனீஸ்வரர், சந்திரன் நற்பலன் தருவர். அன்றாட வாழ்வில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட பணிகளை புதிய யுக்தியுடன் செயல்படுத்துவீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதல்களை முழு மனதுடன் ஏற்பர். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். சீரான ஓய்வு ஆரோக்கியத்தை பாதுகாக்கும். மனைவியின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் உணர்ந்து செயல்பட வேண்டும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் உரிய பயிற்சி பெறுவர்.

## விருச்சிகம்

புதன், சுக்கிரன், செவ்வாய், கேது ஆதாயபலன் தருவர். உங்கள் மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகளின் விருப்பங்களை தாராள பணச்செலவில் நிறை வேற்றுவீர்கள். உறவினர் நல்ல ஆலோசனை சொல்வர். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். மனைவி சிறு விஷயங்களிலும் ஆர்வமுடன் உதவுவார். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும். பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் கணவரின் பாசத்தில் சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறப்பான தேர்ச்சி பெறுவர்.

## தனுசு

சுக்கிரன், குரு, சந்திரன் நற்பலன் வழங்குவர். எதிர்பார்த்த நன்மை எளிதாக கிடைக்கும். உடன்பிறந்தவர் உங்கள் நலனில் அக்கறை கொள்வர். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி அதிக பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனத்துடன் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி சலுகை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் நன்றாக படித்து பரிசு பெறுவர்.

## மகரம்

சூரியன், புதன், சந்திரன் அதிகளவில் நற்பலன் தருவர். முக்கியமான பணி இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். அன்றாட வாழ்வியல் நடைமுறை சிறப்பாக இருக்கும். நண்பர் கேட்ட உதவியை செய்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள உறவினர் அழைப்பர். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலன்களை கருத்தில் கொள்வர்.

## கும்பம்

ராகு, குரு, சனீஸ்வரரால் அளப்பரிய நன்மை கிடைக்கும். மனதில் இருந்த குழப்பம் விலகும். புத்துணர்வுடன் பணியில் ஈடுபடுவீர்கள். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் ஏற்படும். வாகனத்தில் பராமரிப்பு பயணமுறையை எளிதாக்கும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை ஏற்று செயல்படுவர். ஆரோக்கியம் சீராக இருக்கும். பகைவர் சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழிலில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என செயல்படுவீர்கள். இயந்திரப்பிரிவு பணியாளர் பாதுகாப்பில் கவனம் வேண்டும். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற நண்பர்களின் உதவி கிடைக்கும்.

## மீனம்

செவ்வாய், கேது, புதன், சுக்கிரன் ஆதாய பலன் தருவர். உங்கள் பேச்சில் ஆன்மிக கருத்து மிகுந்திருக்கும். அன்றாட பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர்களுடன் இனிய சந்திப்பு ஏற்படும். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகள் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் வளரும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு பணியிடத்தில் சுமுக சூழல் இருக்கும். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவி செய்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## இந்தவாரக் கருத்தாளர்

# சிறுகதை எனும் புனைவிலக்கியம்



எழுத்தாளர்
**க.சட்டநாதன்**

சிறுகதை மேற்கிலிருந்து நம்மை வந்தடைந்த ஒரு கலை வடிவமாகும். சிறுகதையின் தந்தை என 'எட்கர் அலன் போவை'க் கூறுவார்கள். வ.வே.சு.ஐயரின் 'குளத்தாங்கரை அரசமரத்'துடன்தான் தமிழுக்குச் சிறுகதை வந்து சேர்ந்தது. ஐயருக்கு முன்னதாக வடிவப் பிரக்ஞை பற்றிய போதமமில்லாமல் பாரதியும், மாதவையாவும் கதை சொல்லி இருக்கிறார்கள். சிறுகதை ஒரு கலை வடிவமாகத் தமிழில் இனங்காணப்பட்டது என்னவோ புதுமைப்பித்தனுடைய வருகையுடன் தான். அவரது பிரக்ஞை பூர்வமான கதைகள் தமிழ்மொழிக்குக் கிடைத்த அரிய செல்வங்கள்.

அவரை அடுத்துப் பல சாதனையாளர்கள் தமிழில் தோன்றினார்கள்: குறிப்பாகக் கு.ப.ரா., லா.ச.ரா., அழகிரிசாமி, தி.ஜானகிராமன், சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், ஜெயமோகன் ஆகியோர் தமிழுக்கு அருமந்த கதைகளைத் தந்துள்ளார்கள். இன்னும் இன்னும் பலருண்டு. விரிவஞ்சிப் பட்டியலைத் தவிர்த்தும் கொள்கிறேன். ஏலவே குறிப்பிட்டவர்களில் ஒரு சிலர், சென்ற நூற்றாண்டின் முப்பதுகளில் புகழ் மிகுந்திருந்த சிற்றிதழான 'மணிக்கொடி'யில் எழுதியிருக்கிறார்கள்.

சிறுகதை - கவிதைபோல சொற்செட்டுடன் கூடிய ஒன்றாகும். சிறுகதை சிருஷ்டியாளனிடம் கோரி நிற்பதெல்லாம் கடின உழைப்பு, சொற் சடைவில்லாத மொழி, குறுகிய கால நிர்ணயம், மௌன இடைவெளிகள் என்பவையாகும். சிறுகதையின் சிறப்பே சொல்ல வந்ததை, விரும்பிய விதத்தில் ஒரு குறிப்பிட்ட கால எல்லையினுள் சொல்லிவிட முடியும் என்பதுதான்.

'கொன்ஸ்ரன்ரின் வ்வெடின்' என்ற (Konstantin fedin) ரஷ்ய நாவலாசிரியர் கூறுவார்: 'படைப்பிலக்கியம் சொற்களின் அழகு' (creative literature is the art of words) என்று. படைப்புகள் அனைத்திலும் இது உண்டு. சிறுகதை இலக்கியத்துக்கும் இது பொருந்தும். இந்தக் கூற்றில் சொற்களின் முதன்மை சுட்டப்படுகின்றது.

இங்கு கூறியவற்றைச் சிறுகதையாளர்கள் மனதிருத்தித் தமது படைப்புகளைத் தரும்போது, நல்ல தமிழ்ச் சிறுகதைகள் கிடைத்துவிடுவது சாத்தியமே.

இலக்கியம் பற்றிக்கூற வரும் சுந்தரராமசாமி, "வாழ்க்கையின் சிக்கல்கள், சலனங்கள் எல்லாம் வாழ்க்கையை எதிர்கொள்வதான ஒரு சூழலையும் தயாரிப்பையும் உருவாக்குகின்றன. இலக்கியம் இந்தக் காரியத்தைத்தான் செய்கிறது. மற்றுமொரு விதத்தில் இலக்கியம் வாழ்க்கையின் நிதர்சனத்தைக் கவனப்படுத்துகின்றது. இதன்மூலம் உங்களுக்கும் வாழ்க்கைக்குமான உறவை ஒழுங்கு செய்கிறது" என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறிப்பு பொதுவாக இலக்கியம் பற்றிப் பேசினாலும் சிறுகதை இலக்கியத்துக்கும் பொருந்திவரக்கூடியதுதான்.

இன்னும் 'றொபேர்ட் மேகீ' கூறுவார்: "எல்லா மனிதர்களுக்கும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. ஆனால், யதார்த்தம் நிர்தாட்சண்யமானது. ஈவு இரக்கமற்றது. எதிர்பார்ப்புக்களுக்கும் யதார்த்தத்துக்கும் இடையே நிகழும் போராட்டம்தான் வாழ்க்கை"

இந்தப் பண்புகளை அடியொற்றிப் பின்னப்பட்ட பல சிறுகதைகளையும் நாம் பார்த்துள்ளோம். படைப்புகளில் யதார்த்தப் பொலிவுக்கு மேலாக ஒரு மெல்லிய திரையாக, போர்வைபோல மனோரதியக் கசிவு, கதைகளுக்கு அழகுக்கு அழகு சேர்ப்பதை நாம் அறிவோம். ஜெயகாந்தனும், தி.ஜானகிராமனும், ஜெயமோகனும் இவ்வகை எழுத்தைத் தமதாக்கிக் கொண்டவர்கள். யதார்த்தத்தை இறுக்கமாகப் பற்றி நிற்பவர்களில் முதன்மையானவர் புதுமைப்பித்தன். ஈழத்து எழுத்தாளர்களில் குந்தவை இந்த ரகத்தவர்.

யதார்த்தப்போக்குக்கு மாறாகச் சில பரிசோதனைகளும் சிறுகதைப் பரப்பில் நடைபெறவே செய்கின்றன. இந்த வகை எழுத்துக்களில் யதார்த்தப் பிடிமானம் தளர்ச்சி அடைந்து, மிகு கற்பனைப் பாங்கான (fantasy) மற்றும் மாய யதார்த்தப் பண்புகள் (magical realism) மலிந்த கதைகளும் வருகின்றன. இந்த வகைக் கதைகள் வாசகப் புரிதலுக்குச் சிரமம் தருவதாக இருந்தாலும் படைக்கப்படுகின்றன. எழுத்தாளர் கோணங்கியின் கதைகள் இத்தகைய தன்மைகளைக் கொண்டுள்ளன.

ஈழத்திலும் திரேசா, இராகவன்போன்றோர் புதுத்தன்மையுடைய கதைகளை எழுதுகிறார்கள்; இவர்களைப் போல இன்னும் சிலரும்.

இத்தகைய பின்புல அறிவுடன் நவீன தமிழ்ச் சிறுகதைகளை அணுகுபவர்கள் செறிவான பயனைப்பெறுவது உறுதி.

கட்டுரை
சியாமளா கத்ஸ்

# அகதிகளை அணுகுதல்!

தொடர் மாடிக் கட்டடம் ஒன்றில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் துணிச்சலுடன் காப்பாற்றிய மாலியைச் சேர்ந்த அகதி மமவுது கஸாமாவுக்குக் குடியுரிமை. அத்துடன் அரச பணியும். நடந்தது கனடாவில். ஒருதடவை அனைவரும் கரகோசம் செய்யலாம். கைதட்டிக் கொண்டாடலாம். இவை அந்த நாட்டு அதிபருக்கும் சேரும்.

கடந்த வாரமளவில் ஸ்பெய்ன் அரசு நடுக்கடலில் தத்தளித்த அகதிகளைப் படகு ஒன்றில் ஏற்றிச் சென்று தனது நாட்டில் தரையிறக்கியிருக்கிறது. அரவணைத்திருக்கிறது. மத்திய கிழக்கை அண்மித்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் சிலவும், நோர்வே, பின்லாந்துபோல வடதுருவத்தை அண்மித்திருக்கும் நாடுகள் சிலவும்கூட அகதிகளை அணுகும் விதம் அபாரமானது. ஆஸ்திரேலியாவையும் இதற்குள் அடக்கலாம் ஆனால், அது அகதிகளை மட்டுப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. அந்த நாட்டு அரசின் அண்மைக்கால அறிவிப்புக்கள் இதை உணர்த்துவன. ஆனால், அமெரிக்கா இந்த நிலையில்கூட இல்லை. அதுபோல பல நாடுகள் அகதிகளைக் கையாள்வதில் மனிதாபிமானமற்றுச் செயற்படுகின்றன. பொருளாதாரத்தை நோக்கிய பாய்ச்சலுக்குத் தடை, குடிமக்களுக்கும் அகதிகளுக்குமிடையிலான எதிர்காலப் பாகுபாடுகள் எனப் பலவற்றை எதிர்கொள்ளவேண்டியதாலேயே இது நிகழ்கிறது. அதனால், அனைவரும் வாழவேண்டியவர்கள் என்கிற சமதர்மத்துக்கு இடமில்லாது போகிறது. அமெரிக்கா மட்டுமன்றி மியன்மாரும், பங்களாதேசும்கூட அகதிகளை அலைக்கழித்த கதை இன்னமும் முடிந்தபாடில்லை. இந்தியாவில் தஞ்சமடைந்த ஈழத் தமிழ் அகதிகளின் நிலையும் இதேபோலத்தான் பரிதாபத்துக்குரியது.

### சிரியா முதலிடத்தில்

தமது தாய்நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் தஞ்சமடைபவர்களின் எண்ணிக்கை, முன்பு எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது. போர்ச் சூழல் மற்றும் பாதுகாப்பின்மை காரணமாகத் தினமும் சராசரியாக தங்கள் நாட்டைவிட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை 28ஆயிரத்து 300. தற்போது பன்னாட்டு அளவில் சுமார் 7கோடி மக்கள் அகதிகளாக உள்ளனர். அவர்களில் அரைவாசிப்பேர் 18வயதுக்கு உட்பட்டவர்கள். மிக அதிக அளவிலான மக்கள் அகதிகளாக வெளியேறுவதில் சிரியாதான் முதலிடத்தில் உள்ளது. அங்கு கடந்த 7ஆண்டுகளாக நடைபெறும் உள்நாட்டுப் போரால் 4இலட்சத்துக்கும் அதிகமானோர் இறந்திருக்கிறார்கள். 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்திருக்கிறார்கள். அந்த நாட்டுக்கு உள்ளேயே இடம்பெயர்பவர்கள் 63இலட்சம்பேர். அயல்நாடுகளுக்கு குடிபெயர்ந்தவர்கள் 40இலட்சத்துக்கும் அதிகம். சிரியா மக்களில் பலர் லெபனான், ஜோர்தான், எகிப்து, ஈராக் ஆகிய நாடுகளில் தஞ்சம் அடைகிறார்கள். அதிக அளவு அகதிகளை உருவாக்கும் அடுத்த நாடாக துருக்கி உள்ளது.

### அமெரிக்காவும் முதலிடத்தில்

போர் ஒருபுறம் இருக்க, வெள்ளம், நிலநடுக்கம், புயல், நிலச்சரிவு ஆகிய காரணங்களால் இடம் பெயர்பவர்களும் உண்டு. இவர்களில் பலரும் தங்கள் நாட்டுக்குள்ளேயே உள்ள வேறு பகுதிக்கு இடம் பெயர்வதுதான் வழக்கம். என்றாலும் வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்வதும் அதிகரித்து வருகிறது - முக்கியமாக சிறிய நாடுகளிலிருந்து பெரிய நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர்.

அகதிகளை அணுகுவதில் முறையற்றுச் செயற்பட்டதில் அமெரிக்காவே முதலிடத்தில் இருக்கிறது. அண்மைய சம்பவம் ஒன்றுதான் இதற்கு இன்னமும் வலுச்சேர்த்திருக்கிறத. தனது நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழையும் அகதிகளிடம் இருந்து அவர்களின் குழந்தைகளைப் பிரித்துக் காப்பகத்தில் தங்கவைப்பதாகத் தான் கொண்டுவந்த திட்டத்தை அந்த நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் அண்மையில் இல்லாமல் ஆக்கியிருந்தார். அகிதிகளின் குழந்தைகளைப் பெற்றோரிடம் இருந்து பிரிப்பது மிகக் கொடுமையான செயல் என்று அவரது மனைவி மெலேனியா டிரம்ப், முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் மனைவி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்தே இது நடந்திருப்பதாகவும் தகவல்கள். ஆனால், அங்கு அகதிகளுக்கு அதிக துன்பங்கள் இழைக்கப்படுவதும் உறுதியாகியுள்ளது. அமெரிக்காவின் சட்டப்படி சட்டவிரோதக் குடியேற்றத்தில் குழந்தைகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதால், குழந்தைகள் பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கப்படுகின்றனர். பெற்றோர் துன்புறுத்தப்படுகின்ற னர்.

அகதிகள் பரிதாபமானவர்கள். சொந்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டவர்கள் அல்லது விரட்டப்படும் சூழலுக்கு ஆளானவர்கள். இப்படிப்பட்டவர்களை அனைவரும் ஆதரிக்க வேண்டும்.



அகதிகளின் உயிருக்குப் பாதுகாப்பு என்பதோடு நின்றுவிடாமல் அவர்களுக்கு வேறு சில வசதிகளையும் செய்துதர வேண்டும். அதாவது அந்த நாட்டில் சட்டபூர்வமாகக் குடியேறி இருக்கும் பிற நாட்டு மக்களுக்கு சமமாக அகதிகளையும் நடத்த வேண்டும். அகதிகளுக்கு மருத்துவம், கல்வி, பணியாற்றும் உரிமை ஆகியவற்றை வழங்க வேண்டும்.

உடை கட்டுப்பாடு, வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மறுப்பு ஆகிய காரணத்துக்காக ஒரு பெண் தனது நாட்டிலிருந்து வேறு நாட்டுக்கு தஞ்சமடைந்தாலும் அவரை அகதியாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும். அகதிகளும் எந்த நாட்டில் தஞ்சமடைகிறார்களோ அந்த நாட்டின் சட்டத்திட்டங்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.



குறும்படப்பார்வை


சி.ப.வேந்தன்





# ‘மை சூஸ்’, ‘லைவ்ப்’ மற்றும் ‘சால்க்’

## (my shoes; Life and chalk)



தங்கர் பச்சான் குறிப்பிடுவது போன்று. எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் ஒரு அலைக்கழிப்பை நிகழ்த்த வேண்டும். கிளர்ச்சி, வெடிப்பு என்பவற்றை நிகழ்த்தி மாற்றங்களுக்கான முதல் புள்ளியாகப் படைப்புக்கள் இருக்க வேண்டும். உலகில் உருவான, உருவாகிக்கொண்டிருக்கின்ற பல படைப்புக்கள் தனி மனித ஆளுமையிலும் சரி சமூகக் குழுவிலும் சரி மிகப்பெரிய மாறுதல்களை ஏற்படுத்திப் புதிய ஒழுங்குகளை உண்டாக்கியிருக்கின்றன.

படைப்பு என்பதும் ஒரு கூர்மையான ஆயுதத்துக்கு ஒப்பானதே. போருக்கேற்பவும் சூழலுக்கேற்பவும் தன்னுடைய ஆயுத வடிவத்தைப் படைப்புக்கள் தோற்றுவிக்கின்றன. ஒரு படைப்பு அதன் அளவுகளால் மதிப்பிடப்படுவதில்லை. அது கொண்டிருக்கும் உள்ளீட்டின் வீரியமே அதன் மதிப்பைத் தோற்றுவிக்கின்றது.

சினிமா என்பது பொதுவாக, குறிப்பிட்ட அளவுகளாலும், குறிப்பிட்ட மணித்தியாலங்களாலும் கட்டுப்பட்டவை என்பது வெறும் மாயத்தோற்றம் எனக் கொள்ளலாம். ஒவ்வொரு சினிமாவும் தத்தம் வடிவங்களுக்கேற்ப சில மணித்தியால வரைவுகளைக் கொண்டிருந்தாலும் அவை முடிந்தமுடிபன்று. முழு நீளப்படத்தை தொன்னூறு நிமிடங்க ளிலும் எடுத்துவிட முடியும் நான்கரை மணிநேரங்களிலும் எடுத்துவிட முடியும்.

குறும்படங்களை முப்பது நிமிடங்களைத் தாண்டியும், சில இரண்டு நிமிடங்களுக்குள்ளாகவும்கூட எடுத்துக்கொள்ள முடியும். தத்தம் வசதிகளுக்கேற்ப படைப்பாளிகள் உருவாக்குகின்றார்கள். ஆனால், ஒரு படைப்பு வெறும் மணிநேரத்தால் இட்டுநிரப்பப்படவேண்டியது அல்ல என்பது இப்போதெல்லாம் ஒரு சாதாரண சினிமா இரசிகனுக்குக்கூடப் புரிந்திருக்கிறது. ஆக தென்னிந்திய மாநில சினிமாக்க ளின் தோற்றங்களோடு ஆறு பாட்டுக்கள், மூன்று சண்டைக் காட்சிகள், ஒரு குத்தாட்டம், நகைச்சுவைப் பகுதி எனப் பல பிரிவுகளின் இடைவெளிகளை நிரப்பி ஓர் அட்டவணைக்குள் சினிமாவை அடக்கும் அபத்தத்திலிருந்து புதிய சினிமா உருவாக்கிகள் வெளிப்படவேண்டும்.

வெறும் இரண்டு நிமிடங்களுக்குள் மாபெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய பல குறுஞ்சித்திரங்களை பல சினிமா மேதாவிகள் உருவாக்கியிருக்கிறார்கள். ஓர் ஒளிப்படத்தின் மூலம் உலக ஒழுங்கை மாற்றிய பல சம்பவங்கள்கூட நடந்திருக்கின்றன. ஒரு நீண்ட கவிதை ஏற்படுத்தாத சிலிர்ப்பை, பரவசத்தை ஒரு ஹைக்கூ கவிதையால் எப்படி நிகழ்த்திவிட முடிகிறதோ அப்படி மிகச்சிறிய அளவிலான பல குறும்படைப்புக்கள் உயிரில் அலைக்கழிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. அப்படி அலைக்கழிப்பை ஏற்படுத்திய வெறும் இரண்டே நிமிடங்களாலான மூன்று குறுஞ்சித்திரங்கள்தான் மேற்குறிப்பிடப்பட்டவை.

> “ஒரு திரைப்படம் என்றில்லை எந்தப் படைப்பாக இருந்தாலும் ஒரு தாக்கத்தை உருவாக்க வேண்டும். இரண்டு மூன்று நாள்களாவது ஒரு அலைக்கழிப்பை உருவாக்கவேண்டும். உலகின் சிறந்த படைப்புக்கள் அதைத்தான் செய்கின்றன. நானும் அவ்வாறான திரைப்படங்களையே திட்டமிட்டு உருவாக்குகின்றேன்". - தங்கர் பச்சான்(தென்னிந்தியத் திரைப்பட இயக்குனர்).



## அலைக்கழிப்பை ஏற்படுத்தும் மூன்று குறுஞ்சினிமாக்கள்

**கடுகின் காரம் - ‘மை சூஸ்’**

ஒரு பூங்காவில் உள்ள நீளமான வாங்கில் சிறுவன் ஒருவன் அமர்ந்திருக்கிறான். பின்னணியில் பலரது சந்தோசமான பேச்சுக் குரல்கள் கேட்கின்றன. சிறுவனது உடை கிழிந்தும் அழுக்காயும் இருக்கிறது. அவனது காலணியும் கிழிந்துபோய் அதன் இடைவெளிகளால் அவனது கால்கள் வெளித்தெரிகின்றன. அவன் கால்களை ஆட்டியவாறே யோசித்துக் கொண்டு இருக்கின்றான். பின்னர் எழுந்து அப்பால் சென்று சிறியபாலம் ஒன்றின்மேல் நின்று நீரை வெறித்தபடி பார்க்கின்றான். பின்னர் நடந்து செல்கின்றான். சற்றுத்தள்ளி வேறொரு நீளமானவாங்கில்வேறொரு சிறுவன் மிக அழகாக உடையணிந்து புதிய காலணிகளை அணிந்து கொண்டு பூங்காவின் சூழலை இரசித்துக் கொண்டிருக்கின்றான். அப்போது அங்கே வரும் முதலாம் சிறுவன் அவனுக்கு அருகில் சென்று அமர்கின்றான். அவனுடைய அழகான உடையையும் புதிய காலணிகளையும் ஏக்கத்தோடு பார்க்கின்றான். அப்போது அந்தச் சிறுவன் இவனைநோக்கி சினேகமாகப் புன்னகைக்கின்றான். முதலாம் சிறுவன் முகத்தை ‘உம்’மென்று வைத்தவாறு வெடுக்கென்று எழுந்து அப்பால் சென்று ஒரு மரத்தடியில் அமர்கின்றான். தன்னுடைய நிலையை எண்ணி வருந்தியவாறு கண்களை மூடிக் கடவுளிடம் தன்னை அந்தச் சிறுவனாக மாற்றும்படி வேண்டுகின்றான்.

அதிசயமாகத் திடீரென்று அவன் மற்றச் சிறுவனாகவே மாறிவிடுகின்றான். அவன் தன்னுடைய புதிய உடையையும் புதிய காலணிகளையும் பார்த்து சந்தோசப்பட்டுக் கொண்டிருக்கையில் அவனைச் சக்கர நாற்காலியுடன் ஒரு பெண்மணி வந்து அழைக்கிறாள். சற்றுத்தூரமாக இவனாக மாற்றப்பட்ட மற்றச் சிறுவன் கிழந்துபோன உடையுடனும் கிழிந்த காலணியுடனும் மிகுந்த மகிழ்ச்சியுடன் மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடி விளையாடிக்கொண்டிருக்கிறான். இவன் அவனைப் பார்த்தவாறே கண்கலங்கியவாறு சக்கரநாற்காலியில் செல்வதோடு படம் நிறைவடைகின்றது. வெறும் இரண்டே நிமிடங்களில் உயிரின் ஆழத்தை இந்தச் சினிமா ஊடுருவிச் சென்றுவிடுகிறது.

**‘லைவ்ப்’**

மழை பெய்து வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் வருகின்றான் தன்னுடைய நீளக்காற்சட்டையை மடித்துவிட்டு வெள்ளத்தில் கால்களை நனைத்தவாறு அப்பால் கடந்து போகின்றான். வேறோர் இளைஞனும் அவனைப்போன்றே வெள்ளத்தில் கால்கள் நனையும்படியாக அந்த இடத்தைக் கடந்து போகிறான். மேலும் சிலர் அவ்வாறே போகின்றனர்.

பாடசாலைச் சிறுவன் ஒருவன் அந்த வழியே வருகின்றான். வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தைப் பார்க்கின்றான் பின்னார் நிதானமாக யோசித்துவிட்டு சூழலில் இருக்கின்ற சில கற்களை எடுத்து ஓரளவான இடைவெளிகள் விட்டு அவற்றை அடுக்கிவிட்டு அதன்மேல் கால்களை ஊன்றியவாறு கால்கள் வெள்ளத்தில் நனையாமல் மிக நிதானமாகக் கடந்து செல்கின்றான்.

படம் முடியும்போது ‘அட’ என்று தோன்றும் மனநிலையைக் கடக்காமல் எவராலும் இருந்திருக்க முடியாது எனும் அளவுக்கு சிறு கரு புத்தியில் உதைக்கிறது. இதை வார்த்தைகளால் வடிக்காத கவிதை என்றே கொள்ளலாம்.

**‘ஷால்க்’**

ஒரு சிறுவர் காப்பகம். ஐந்து வயதும் நிரம்பாத ஆண்குழந்தை ஒன்று தனது சிறிய கால்களால் வகுப்பறைகள் வழியாக ஓடிவருகிறது. ஒவ்வொரு அறையாகத் தேடிவரும் அந்தக் குழந்தை இறுதியில் தான் தேடியது கிடைத்த சந்தோசத்தில் புன்னகைத்தவாறு ஓடிச்சென்று சிறிய மேசையொன்றின் லாச்சியைத் திறந்து அதனுள் இருக்கும் நிறக்கட்டிகளை(சோக்) எடுத்துக்கொண்டு வெளியே ஓடி வருகின்றது. அங்கே பல குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கின்றன. அவர்களைத் தாண்டி ஓடிச்செல்லும் அவன் சற்றுத் தள்ளி இருக்கும் அறையின் நிலப்பகுதியில்(சீமெந்துத் தரை) தான்கொண்டுவந்த நிறக்கட்டிகளால் பெரிய பெண் உருவம் ஒன்றை வரைந்து அதன் வயிற்றுப்பகுதியில் கால்களை மடக்கிச் சோகமாகப் படுத்திருப்பதோடு படம் நிறைவடைகிறது.

இறுதிக்காட்சி கொடுக்கும் கனம், ஈரம், மனதைப் பிழியும். அந்தக் காட்சிப்படியும் ஒரு முழுநீளப் படத்தின் பரவசத்தை, சிலிர்பை பார்வையாளனுக்குக் கொடுத்திருப்பதில் சற்றும் சளைக்கவில்லை. மேற்கூறிய மூன்று குறுஞ்சித்திரங்களும் துளி அளவேனும் எந்தவொரு சினிமாவுக்கும் குறைந்ததான உணர்ச்சிப் பிரவாகத்தைப் பார்வையாளனுக்கு கொடுத்திருக்குமெனக் கூற முடியாது. இந்தப் படைப்புக்களின் வீரியம் என்பது பல நல்ல சினிமாக்களுக்கான சக்தியைக் கொடுக்கவல்லது. ஒவ்வொன்றும் கொண்டிருக்கும் கருவின் பெறுமதி வியக்கத்தக்கது. சிறிய விடயம் எனக் கடந்துபோக முடியாதது.

ஒரு படைப்பு நீள, அகலங்களாலும், விளம்பரங்களாலும் வெற்றுச் சோடனைகளாலும் உருவாக்கப்படவோ அல்லது அந்த அடிப்படையில் வைத்து நோக்கவோ தேவையற்ற ஒன்று.

எது ஒரு மனிதனை மலைக்க வைக்கிறதோ, எது அவனைச் சிலிர்க்கவும் சிந்திக்கவும் வைக்கிறதோ, எந்தப் படைப்பு ஒருவனுள் மாபெரும் மாற்றங்களை உருவாக்க வல்லதோ, எந்தப் படைப்பால் ஒருவனது மனம் அலைக்கழிக்கப்படுகிறதோ அந்தப் படைப்பு நிச்சயமகா சிறந்த கலைப்பெறுமானத்தையும் நல்லதொரு கருவையும் கொண்டிருக்கும்.

# கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் குழு16 இற்கு அனுமதியில்லை

## மகிந்தவை தலைமை அமைச்சராக்க மைத்திரி உடன்பட வேண்டும்- மகிந்த அணி

அரசிலிருந்து வெளியேறியுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16பேர் அணிக்குக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு இடமளிக்க முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16பேர் அணி கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு விருப்பமாக இருக்குமாயின், முன்னாள் அரச தலைவர் மகிந்தவை தலைமை அமைச்சராக்குவதற்கு, அரச தலை வர் மைத்திரிபால சிறிசேனவை உடன்படச்செய்ய வேண்டும் என்று மகிந்த அணி தெரிவித்தது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் இளைஞர் முன்னணி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை பத்திரமுல்லையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு எதிர்க்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக எவராவது குறிப்பிடுவார்களாயின் அது வெறும் கவனவாகும். ஏனெனில் கூட்டு எதிர்க்கட்சிக்குள் எந்தவொரு பிளவும் இல்லை. எமது அணி நாளுக்கு நாள் விரிவடைந்து பலமடைந்துகொண்டு வருகிறது. எதிர்காலத்திலும் கூட்டு எதிர்க்கட்சி மென்மேலும் பலமடைந்து நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றும் சக்தியாக முன்னேறும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மோகமும் எமக்கில்லை. நாம் தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கே எதிர்பார்த்துள்ளோம்.

மாறாக அரசிலுள்ள கட்சிகளுக்கிடையில் பிளவு ஏற்பட்டுள்ளது. அரச தரப்பிலிருந்து விலகி எமது அணியிலும் சிலர் இணைந்து கொண்டனர். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படுகின்றனர். கூட்டு எதிர்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு 16பேர் அணிக்குஅழைப்பு விடுக்கப்பட்டதாகவும், அந்தக் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் அந்த அணி அறிவித்திருந்தது. கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதானால் மகிந்தவின் தலைமையை மாத்திரம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்பவர்களே கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும் - என்றார். (5,31)




# சிறுத்தைக் கொலைக்கு எதிராக பன்னாட்டு அமைப்புக்கு மனு


கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் சிறுத்தை அடித்துக் கொல்லப்பட்டமை தொடர்பில் உலக வனஜீவராசிகள் நிதியத்துக்கு இலங்கையிலிருந்து மனு அனுப்பும் நடவடிக்கை இணையத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இணையத்தளத்தின் ஊடாக 15 ஆயிரம் பேரின் ஒப்புதலுடன் இந்த மனு தென்னிலங்கையைச் சேர்ந்த வன உயிரினங்கள் ஆர்வலர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு ஒரு மணி நேரத்தில் 12 ஆயிரம் பேர் ஒப்புதலளித்தனர்.

கிளிநொச்சியில் வன உயிரினமான சிறுத்தையை அடித்துக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் தலையீடு செய்து நடவடிக்கை எடுக்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த சிறுத்தை ஒன்று பதினொரு பேரைத்தாக்கியது. அதில் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவார். இந்தச் சம்பவம் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றது.

மக்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் வெளியேறியதை யடுத்து, சிறுத்தையைச் சிலர் அடித்துக் கொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறுத்தையைக் கொலை செய்தோரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.01.1944

உதிர்வு 05.07.2017

### இராசையா ஸ்ரீரங்கநாதன்

திதி : 24.06.2018

ஆண்டொன்று சென்றதோ! ஆறவில்லை அப்பா
உங்கள் துயரம் தூக்கமின்றி எம்மையெல்லாம்
காத்து நின்றீர்கள் இடையூறு அத்தனையும்
எதிர்த்து நின்றீர்கள்
பேதமற்ற பாசத்தையும் பகிர்ந்து தந்து
ஊக்கமுடன் கல்வியையும் ஊட்டிவிட்டு
நன்மதிகளாய் எம்மை வளர்த்துவிட்டு
எங்கேதான் நீங்களும் மறைந்தீர்கள்
வண்ணை ஸ்ரீ பார்வதி சமேத சிவனது தொண்டரும்
ஊரில் எல்லோருக்கும் நல்ல நண்பருமான
நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல் போனதென்ன?!
உங்கள் பசுமையான நினைவுகளும் உருவமும்
உயிர் உள்ளவரை மனதை விட்டு என்றும் நீங்காது...

23, பிளெச்சஸ் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(பாடசாலை அருகில்)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்








விளையாட்டு

பிரகாஸ்

# மெஸ்ஸிக்கு எதிர்ப்பலை!

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் ரஷ்யாவில் நடைபெற்று வருகிறது. ஆர்ஜென்ரீனா அணியின் மிகப்பெரும் தடுமாற்றங்களை அடுத்து அந்த அணியின் தலைவரான மெஸ்ஸி கடும் வசைமொழிகளை வாங்கிக் குவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதிபெறுவதே ஆர்ஜென்ரீன அணிக்குப் பெரும் சிக்கலாக இருந்தது. இறுதியில் தட்டித்தடுமாறி ஒருவாறாக உலகக்கிண்ணத் தொடருக்குள் நுழைந்தது ஆர்ஜென்ரீன அணி. உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிக்கும் முன்னர் கருத்துத் தெரிவித்த மெஸ்ஸி, "ஆர்ஜென்ரீன அணி உலகக்கிண்ணம் வெல்லும் என்று எதிர்பார்க்கப்படும் அணிகளில் ஒன்று. அதைச் செய்து காட்டுவோம்" என்று தெரிவித்திருந்தார். அத்துடன் "உலகக்கிண்ணத் தொடர்தான் தனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்" என்றும் தெரிவித்திருந்தார். இதனால் ஆர்ஜென்ரீனா அணியின் மீதும் அதன் தலைவர் மெஸ்ஸியின் மீதும் எதிர்பார்ப்பு எகிறியது. ஆனால் சட்டென்று வசைமொழிகளை வாங்கிக் குவித்துள்ளது ஆர்ஜென்ரீன அணி.

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் 1:1 என்ற கோல் கணக்கில் ஐஸ்லாந்தைச் சமன்செய்தது ஆர்ஜென்ரீனா. இந்த முடிவு ஆர்ஜென்ரீன அணியின் ரசிகர்களுக்குப் பேரதிர்ச்சியாக அமைந்தது. இதையடுத்து கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் குரோசியாவிடம் 0:3 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீன அணி தோல்வியடைந்தது. 16 அணிகள் விளையாடும் சுற்றுக்கு முன்னேற வேண்டுமாயின் ஆர்ஜென்ரீன அணி எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் நைஜீரியாவுக்கு எதிரான ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற நெருக்கடி உள்ளது. அந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீன அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டாலும் தனிப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் மெஸ்ஸிக்குக் கிடைத்தது படுதோல்வி மட்டுமே.



## எங்கே ஒளிவது?

இங்கிலாந்துக்கு எதிராக எங்கு சென்று ஒளிந்துகொள்வது? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர் பின்ஞ்.

இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரில் அந்த அணியைப் போட்டு புரட்டியெடுக்கிறது. இதையடுத்து இங்கிலாந்தின் அதிரடி ஆட்டத்தைப் பார்த்து மெச்சுகிறார் பின்ஞ்.

முதலில் துடுப்பெடுத்தாடுமாறு இங்கிலாந்தை அழைத்தால் ஸ்கோர் 500 பக்கம் செல்கிறது. சரி நாம் முதலில் துடுப்பெடுத்தாடுவோம் என்று முடிவெடுத்து 310 ஓட்டங்களை அடித்தாலும் இங்கிலாந்து 45 பந்துப்பரிமாற்றங்களில் அந்த இலக்கை ஊதித்தள்ளுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு என்னதான் வழியிருக்கிறது என்று வருத்தம் தெரிவித்துள்ளாராம் பின்ஞ்.

## கோக்லி 'ரெடி'



தோள்பட்டையில் காயமடைந்திருந்த இந்திய அணியின் தலைவர் கோக்லி தற்போது முழுவதுமாக நலம் பெற்றுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான இந்திய அணி நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றது. அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே தான் முழு உடற்தகுதியுடன் உள்ளார் என்று குறிப்பிட்டார் அவர்.

கோக்லி இங்கிலாந்து ஆடுகளங்களில் இதுவரை பெரியளவில் சாதிக்கவில்லை என்கிற ஒரு குறை உள்ளது. இந்த வருடத் தொடரைப் பயன்படுத்தி அந்தக் குறையை அவர் நிவர்த்தி செய்வாரா என்பதைப் பார்க்கலாம்.

# ரொனால்டோ –மெஸ்ஸி

## இமாலய இடைவெளி




ரொனால்டோ - மெஸ்ஸி இவர்களில் எவர் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர்? என்பது இன்று கால்பந்தாட்ட உலகில் உள்ள மிகப்பெரும் வாதம். இந்தக் கேள்விக்கான பதிலை தனக்குச் சாதகமாக மாற்றியுள்ளார் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ.

கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற ஸ்பெய்னுக்கு எதிரான ஆட்டத்தை 3:3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடித்திருந்தது போர்த்துக்கல். போர்த்துக்கலின் சார்பாகப் பதிவான அனைத்துக் கோல்களையும் ரொனால்டோவே பதிவுசெய்தார். அதன் பின்னர் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் மொராக்கோவை எதிர்த்து விளையாடியது போர்த்துக்கல். 1:0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வென்றது. அந்தக் கோலையும் ரொனால்டோவே பதிவுசெய்தார்.

ஆக இதுவரை போர்த்துக்கலின் சார்பாக பதிவான அனைத்துக் கோல்களையும்ரொனால்டோவேபதிவுசெய்துள்ளார். ஆனால்மெஸ்ஸியோ இன்னமும் தனது கோல் கணக்கை ஆரம்பிக்கவேயில்லை. எனின் இருவருக்கும் இடையில் இருப்பது இமாலய இடைவெளிதானே?

கட்டுரை

ந.லோகதயாளன்



வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என ஓர் உடல்சார் மருத்துவப் பழமொழி கூறுவர். அதே போன்று வாய் விட்டுப் பேசினால் பகைமை அல்லது பிரச்சினைகள் தீரும் என்பது உளச்சார்புப் பழமொழியாக உள்ளது. இந்தப் பழமொழிகள் இரண்டின் கனதித் தன்மையைப் பரீட்சிப்பதாகவும் வரலாற்றில் முக்கிய தீர்ப்பு எழுதும் நாளாகவுமே இன்றைய நாள் பார்க்கப்படுகின்றது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில செயற்பாட்டினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கூட்டமைப்பின் பாதையில் இருந்து நழுவி கூட்டமைப்பின் எதிர்வினைகாரர்களால் இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர், கூட்டமைப்பின் பக்கம் இனித் திரும்பியே பார்த்து விடக் கூடாது என்பதற்காகவும் கூட்டமைப்பின் தலைமைகளை நாடி இடையில் இடம்பெற்றவை தொடர்பில் கேட்டறிந்துவிடக்கூடாது என்பதற்காகவும் சிலர் அரண்போடுகின்றனர்.

இத்தகையதொரு பின்னணியிலேயே ‘முதலமைச்சர் பேசுகின்றார்’ என்கிற புத்தக வெளியீடு இன்று இடம் பெறுகின்றது. புத்தகத்தின் தலைப்பு ‘முதலமைச்சர் பேசுகின்றார்’ என்பதாக அமைந்துள்ளது. ஆனால் முதல்வரோ பல நேரங்களில் பலருடன் பேச வேண்டியதைப் பேசவில்லை. பல விடயங்களை பேசத் தேவையற்றவர்களிடம் பேசிவிட்டார் என்பது பொதுவான கருத்து.

**முதல்வர் -தலைவர் சந்திப்பு**

இன்று புத்தகத்தில் மட்டும் முதலமைச்சர் பேசவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்



# ‘முதலமைச்சர் பேசுகிறார்’ எனில் சம்பந்தரும் பேசத்தான் செய்வார்

இரா.சம்பந்தனோடும் பேசுகின்றார். இதன் காரணமாகத்தான் ‘முதலமைச்சர் பேசுகின்றார்’ என்றதலைப்புஅமைந்துள்ளதோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இன்று வெளிவரும் முதலமைச்சரது உரைத் தொகுப்பானது முதல் இரண்டு ஆண்டுகளின் தொகுப்பு மட்டுமே. இதில் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் வரையில் முதலமைச்சர் கூட்டமைப்பின் தலைமைகளோடு எங்கேயும் முரண்பட்டது கிடையாது. அதன்பின் நாடு திரும்பிய காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலோடே கூட்டமைப்புக்கும் முதல்வருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது என்பது பரகசியம். இந்த இடைவெளியைப் பயன்படுத்தி முதல்வரைத் தம்பக்கம் இழுத்துச் செல்ல பல தரப்புகள் கங்கணம் கட்டி நிற்கின்றன. இதனால் பதிலளிக்கவும் இவர்களின் பணிக்காகவும் பெரும் நேரத்தைச் செலவு செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆனால் முதல்வரின் நிலையோ இன்று இரண்டும் கெட்டான் நிலைதான்.

அதாவது தமது கட்சியோடு கொண்டு செல்வோம் என முனைந்தவர்களுக்கு அது நடக்காது எனத் தெரிந்தவுடன் முதலமைச்சர் தமது கட்சியில் இணையாது விட்டாலும் கூட்டமைப்போடு இருந்துவிடக்கூடாது என்ற விடயத்தில் மிகக் கவனமாக உள்ளனர். இதனால் மாகாண சபையின் ஆட்சி முடிவுறும் தறுவாயில் தனியாக ஒரு கட்சியை முதலமைச்சர் மூலம் உருவாக்க கடும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அதற்காக முதலமைச்சர் முழுமையான சம்மதத்தை வழங்காதபோதும் அரை மனத்தில் உள்ள நிலைப்பாட்டைப் பயன்படுத்துவதற்கே சகல ஏற்பாடுகளும் தீவிரம் பெற்றுள்ளன. இங்கேயும் கூட்டமைப்புக்கு எதிர்சார்பு அணிகள் அனைத்தும் மறுகதவால் ஒன்று சேரும் வியூகமே இடம்பெறும்.

**மனக்கசப்பு முடிவுறுமா, வலுக்குமா?**

இவ்வாறான பின்னணியிலேயே இன்றைய புத்தக வெளியீட்டுக்குக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அழைத்து உரையாற்ற வைப்பதோடு இறுதியில் இருவரையும் பேச வைப்பதன் மூலம் நீண்ட மனக் கசப்புக்கு முடிவுகட்ட முடியும் எனச் சிலர் எண்ணினர். இதற்காகக் கடந்த மே மாதம் பிற்பகுதியில் முதலமைச்சர் கூட்டமைப்பின் தலைவருக்கு மின்னஞ்சல் மூலம் புத்தக வெளியீட்டுக்கான அழைப்பை விடுத்தார். இருப்பினும் அதற்கான பதில் அப்போது முதலமைச்சருக்குக் கிட்டவில்லை. பின்னர் முதல்வர் மேற்கொண்ட அலைபேசி உரையாடலின்போது. குறித்த திகதியில் நாட்டில் நிற்பது சந்தேகம் என்ற அடிப்படையில் ஆரம்பத்தில் சம்பந்தர் வெளியீட்டுக்கு வர மறுத்துவிட்டார். இந்த நிலையில் புத்தக வெளியீட்டுக்கான அழைப்பிதழும் அச்சிடும் பணியும் ஆரம்பமானது. இருப்பினும் முயற்சியாளர்கள் பணி தொடர்ந்தது அதற்கான முயற்சில் மேலும் பலர் இணைந்தனர். இறுதியில் வெற்றி கிட்டியது. சில கூற்றுக்களோடு சம்பந்தரும் இணங்கிக் கொண்டார். இவற்றின் அடிப்படையில் கூட்டமைப்பின் தலைவரின் மேடைப் பேச்சு சற்றுக் கனதியாகவும் சிலதை இடித்துரைப்பதாகவும் இருக்கும் என்பது தெரியவருகின்றது.

இதனால் இருவரின் சந்திப்புக்கான முயற்சிகளும் தற்போதுவரை தொடர்வதாகவே தெரிகின்றது. எனவே குறித்த சந்திப்பின் பெறுபேற்றின் அடிப்படையிலேயே முதலமைச்சரின் தனிக் கட்சி அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் இன்றைய தினம் இரண்டு தலைவர்களும் ஒரே மேடையில் சந்திப்பதே இறுதிச் சந்திப்பாகவும் இதன் பின்னர் இரண்டு அணிகளாக சிதறுவதற்கே வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகவும் தெரிகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட அணியினரும் முதல்வரின் கூட்டுக்குள் சங்கமிப்பதற்கான ஏற்பாடுகளும் தீவிரம் பெற்று வருகின்றதோடு ஏறக்குறைய அதன் பணியும் முழுமை பெற்றுவிட்டதாகவே தெரிகின்றது.

ஆகமொத்தம் அடுக்கடுக்கான பிரிவுகளுடன் மற்றுமோர் கட்சி உருவாக்கத்துக்கு முதல்வர் தயாராகிவிட்டார். அது எந்த மட்டில் உள்ளது என்பது இன்று தெரியவரலாம்.



# இலங்கை, தேயிலை, தமிழர்கள், உலகம்!

தேயிலைத் தூள் அடங்கிய 'ரீ பேக்'ஐ வெந்நீரில் அமிழ்த்திக் கொஞ்சம் பாலும் சர்க்கரையும் சேர்த்து ஒரு கோப்பைத் தேநீர் தயாரிக்கும் எண்ணம்இருந்தால்,அதைமெரில்பெர்னாண்டோவுக்குப் பரிமாறிவிடாதீர்கள்.

'ரீ பேக்'கை சுடு நீருக்குள் போட்ட பின்னர், தேநீர்க் கோப்பையை ஒருமூடியால்மூடிமூன்று அல்லது ஐந்து நிமிடங்கள் வரை வைத்திருங்கள். அதன் நறுமணம் வெளியேறாமல்இருக்கும்.நினைவில்வைத்திருங்கள், 'சிறந்த தேநீர் என்பது பாலோ சர்க்கரையோ கலக்காமல் தயாரிக்கப் படுவதுதான்' என்கிறார் கண்டிப்பான தொனியுடன். இலங்கையின் புகழ்பெற்ற தேநீர் நிறுவனமான 'தில்மா'வை நிறுவியரும் அந்த நிறுவனத்தின் தலைவருமான மெரில் பெர்னாண்டோவே.

என் கையில் இருக்கும் தேநீர்க் கோப்பையின் நறுமணம் அவரது வாதத்தை நிரூபிக்கிறது. இந்த நறுமணம், ஏறத்தாழ 100நாடுகள் வரை பரவியிருக்கிறது.சிட்னியின்நட்சத்திர விடுதிகள் முதல் மொஸ்கோவின் உணவகங்கள் வரை, புடாபெஸ்ட் நகரின் தேநீர் விடுதிகள் முதல் மேற்காசிய விமானங்களின் உணவுத் தட்டுவரை!



**கொழும்பில் சந்திப்பு**

87வயதான பெர்னாண்டோவை, கொழும்புவின் புறநகரான பேலிய கொடையில்உள்ளதில்மாநிறுவனத்தின் தலைமையகத்தில் சந்தித்தேன். தினமும் காலை சரியாக 8.30 மணிக்கு வந்துவிடுகிறார். முழுக் கைச் சட்டையும் சாம்பல் நிறக் கால் சட்டையும் அணிந்திருக்கிறார். 'ஜெல்' பூசி பின்னோக்கி அழுத்திவாரப்பட்ட தலைமுடி, பழைய பாணி தொழிலதிபர்கள் தலைமுறையைச் சேர்ந்தவர். பேரார்வம், கடும் உழைப்பு, துணிச்சலானமுடிவுகள்நிறைந்தகதைஅவருடையது. தனது 20வயதில் பிரிட்டனுக்குச் சென்றதை நினைவு கூர்கிறார். 'இலங்கையின் தேநீருக்குப் பிரிட்டனில் இருந்த 'பிராண்டிங்'கையும் சந்தையையும் பார்த்து அசந்துபோனேன். மட்டமான தேயிலைத் தூள்களைக் கலந்து 'சிலோன் ரீ' என்று விற்றுவந்தனர். அந்தக் காலகட்டத்தில் அவற்றின் விலை அதிகம். நுகர்வோர் ஏமாற்றப்படுவதாக எனக்குத் தோன்றியது' என்கிறார். தேயிலை ஏற்றுமதிசெய்யும் நாடு என்பதைத் தாண்டி, இலங்கையைப்பிரிட்டன்வணிகர்கள்மதிக்கவில்லை. பெர்னாண்டோவுக்கு அப்போது வயது 24. உலகின் எல்லா 'பிராண்ட்' தேநீரும் வணிகர்களுக்குச் சொந்தமானவையாக இருந்தன என்றும், மிக மலிவான விலைக்குத்தேயிலையைவாங்கி,தேயிலைஉற்பத்தியாளர்களை ஏமாற்றிய வணிகர்கள், மிக மட்டமான தேநீரை விற்று நுகர்வோரை ஏமாற்றினர். 'தேநீர் மீதான மதிப்பே குலைந்துவிட்டது' என்கிறார் பெர்னாண்டோ.

**பயிரிட்டு உற்பத்தியில் ஈடுபட்டார்**

இலங்கை திரும்பிய பின்னர், சிறிய அளவில் தேயிலை பயிரிடத் தொடங்கினார் பெர்னாண்டோ. ஆங்கிலேயக் குடும்பத்துக்குச்சொந்தமானநிறுவனத்தில்சில ஆண்டுகள் பணிபுரிந்தார். பணியில் அவர் காட்டிய ஈடுபாட்டால் கவரப்பட்ட நிர்வாகம், இயக்குநர் குழுவில் அவரை நியமித்தது. தேயிலைமுழுவிநியோகத்தில்வெற்றிகரமாக ஈடுபட்டார். அதேசமயம், இலங்கையின் தேயிலை அதன் தூய்மையான வடிவிலேயே நுகர்வோருக்கு நேரடியாக விற்கப்பட வேண்டும் எனும் தனது கனவை விட்டுவிடவில்லை. 'நானே சுயமாக ஒரு 'பிராண்டை' உருவாக்க வேண்டும் எனும் எண்ணம் என்னை ஆட்கொண்டது' என்கிறார்.

இலங்கையிலிருந்து தேயிலையை வாங்கும் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டிபோட வேண்டியிருக்கும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். கடினமான விடயம்தான். எனினும், ஏதோ ஒரு சக்தி தன்னை இயக்கியதாகச் சொல்கிறார் அவர். அப்போது அவருக்கு வயது 34 தான். 1988ஆம் ஆண்டில் 'தில்மா' நிறுவனத்தைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 58. ஆரம்ப விழா ஆஸ்திரேலியாவில் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் என்று நம்பகமானவர்கள் புடைசூழ நடந்தது. அவர்களில் பலர் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தவர்கள்.

**பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி**

'பணம்பற்றாக்குறையாகஇருந்தது.ஒருசிறுஎறும்பைப் போன்ற நான், பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டும் என்றால் வித்தியாசமான சிந்தனை தேவையாக இருந்தது' என்கிறார். தனது மகன்கள் தில்ஹான், மாலிக் ஆகியோரின் பெயர்களை இணைத்து 'தில்மா' என்று தனது நிறுவனத்துக்குப் பெயரிட்டிருந்தார். முதலில், 300சொச்சம் ஏக்கரில் தொடங்கிய தில்மாநிறுவனம்,தற்போதுஇலங்கையின்மலையகப் பகுதியில்50ஆயிரம்ஏக்கர்பரப்பளவில்தேயிலையைப் பயிரிடுகிறது. பெரும்பான்மையான நிலங்கள் மத்திய மாகாணத்தில் உள்ளன. கிட்டத்தட்ட 20ஆயிரம் ஊழியர்கள்பணிபுரியும்இந்தநிறுவனம், ஆண்டுக்கு15மில்லியன் கிலோ தேயிலையை உற்பத்திசெய்கிறது. மதிப்புக் கூட்டல் தொடர்பான பணிகளையும் அந்த நிறுவனமேமேற்கொள்கிறது. 90களில்,தேயிலைத்தோட்டத் துறையைத் தனியார் மயமாக்குவதில் இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகளும் பெருமளவுக்குச் சாதகமாக அமைந்தன. தேசிய மயமாக்கப்பட்டிருந்த தேயிலைத் தயாரிப்பு நிறுவனங்களைத் தனியாருக்கு இலங்கை அரசு வழங்கியது. இலாபம் தொடர்பான தகவல்களை தில்மா வெளியிடுவதில்லை என்றாலும், நிறுவனத்தின் வர்த்தக மதிப்பு 500 மில்லியன் டொலர் என்கிறார் நிறுவனத்தின்தலைமைச்செயல்அதிகாரியானதில்ஹான்.

**மலையகத் தொழிலாளர்களின் உழைப்பு**

தேயிலைத் தோட்டம் தொடர்பான சமூக வரலாறு பற்றிய சுருக்கமான அறிமுகத்தைத் தருகிறார் இந்த நிறுவனத்தைச் சேர்ந்தபெர்னாடுஹோல்சிங்கர். "19ஆம் நூற்றாண்டில் இந்தியத் தொழிலாளர்களை பிரிட்டிஷார் அழைத்துவந்தபோது, பாறைகள் சூழ்ந்த இந்தப் பகுதியை, கனமான கருவிகள் கொண்டு உடைத்தார்கள்" என்கிறார் அவர். "மலையகத்தமிழர்கள்" என்று அழைக்கப்படும் இந்தச் சமூகத்தினர்தான் இன்றைக்கும் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் அதிக எண்ணிக்கையில் பணிபுரிகிறார்கள். தேயிலை பறித்தல், அடுக்குதல் ஆகிய பணிகளுடன், ஆலைகளிலும் வேலை செய் கிறார்கள். காலனிய காலம் முதல் சுதந்திரத்துக்குப் பிறகான காலகட்டம் வரையில் பல்வேறு உழைப்புச் சுரண்டல்களை எதிர்கொண்ட மலையகத் தமிழர்கள்இலங்கைக்குக்கணிசமானஅந்நியச் செலாவணியைப் பெற்றுத்தருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். 'டங்க்ஹெல்ட் எஸ்டேட்டில்' உள்ளமழலையர்பள்ளிக்கும்,மருந்தகத்துக்கும் என்னை அழைத்துச் சென்றனர். 'நிறுவனத்தின் உற்பத்திக்கு, இங்குள்ள பெண் தொழிலாளர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். அவர்களுக்குத் துணை நிற்கும் வகையில் இதுபோன்ற வசதிகளைச் செய்துதருகிறோம்' என்கிறார் எஸ்டேட் மேலாளர் மார்லன் டிலா ஹார்ப்.

**கலப்படமாக்கி ஏன் தரம் குறைக்கவேண்டும்?**

கடந்த ஆண்டு, சிலோன் தேநீரின் 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது இலங்கை. தற்போது, ஆன்மபரிசோதனையில்ஈடுபட்டிருக்கிறதுஇலங்கைத் தேயிலை உற்பத்தித் துறை. தேயிலை மொத்த இறக்குமதியைத் தாராளமயப்படுத்த வேண்டும் என்று பெரிய அளவில் சிலர் 'லாபி' செய்துவரும் நிலையில், அதை ஒற்றை ஆளாக நின்று எதிர்த்துவருகிறார் பெர்னாண்டோ. மலிவு விலையில் தேயிலையை இறக்குமதி செய்வது என்பது கொழும்பில் ஏல விலையைக் கடுமையாகக் குறைத்துவிடும் என்று அவர் கவலைப்படுகிறார்.'சிலோன்தேநீர்என்பதுஸ்காட்ச்விஸ்கியைப்போல் தனிச்சிறப்புமிக்கது எனும்போது, மலிவான பொருள்களைச்சேர்த்துஅதைஏன்நீர்த்துப்போகச்செய்யவேண்டும்?' என்று அண்மையில் ஒரு வணிக இதழில் எழுதியிருந்தார்.

தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு இது உதவி செய்யும்என்பதுபிறவணிகர்களின்வாதம். உலகத் தேயிலை உற்பத்தியில் இலங்கையின் பங்கு 2000ஆம்ஆண்டுகளில்10.5சதவீதமாகஇருந்தது, 2016ஆம் ஆண்டில் 6சதவீதமாகச் சரிந்துவிட்டது என்றும், உலக அளவில் ஏற்றுமதியைப் பொறுத்தவரை2000ஆம்ஆண்டில்21சதவீதமாகஇருந்தது, 2016அம்ஆண்டில்6சதவீதமாகக்குறைந்துவிட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால், பெர்னாண்டோகுடும்பத்தினர்அதைமறுக்கிறார்கள். வணிகம் என்பது நற்பெயரையும் தரத்தையும் பொறுத்ததுதான் என்பது 'தில்மா' நிறுவனத்தின் வாதம்.'ஒருவர்பிறரைவிடக்குறைவாகத்தேநீருக்கு விலை வைத்து விற்கலாம். ஆனால், பிறரின் தரத்தைப் பிரதியெடுத்துவிட முடியாது' என்கிறார் பெர்னாண்டோ உறுதியுடன்!



*நன்றி 'தி இந்து' ஆங்கிலம், தமிழில் சுருக்கமாக: வெ.சந்திரமோகன்*

# மிகச் சிறப்பாக நடைபெற்ற பாப்பரசர் தினம்



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பாப்பரசர் தினம் கடந்த 17ஆம் திகதியன்று உலகெங்கும் கொண்டாடப்பட்டது. இலங்கையிலும் திருத்தந்தையர் தினம் கொண்டாடப்பட்டமை பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது. அத்துடன் இந்த வருடம் பாப்பரசர் பிரான்ஸின் தனது பணிக்காலத்தின் ஐந்தாவது ஆண்டை நிறைவு செய்கிறார். அதுகுறித்து நோக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது.

**சகல பங்குகளிலும் பாப்பரசர் தினம்**

இலங்கையில் கொழும்பில் அமைந்துள்ள பாப்பிறை மறைபரப்பு சபை என்ற அமைப்பு இலங்கையின் சகல மறைமாவட்டங்களின் சகல பங்குகளிலும் பாப்பரசர் தினம் (போப்ஸ் டே) சிறப்பாக கொண்டாடப்படும் வகையில் பனர்கள் ஆயத்த வழிகாட்டல் குறிப்புக்கள் என்பவற்றை அனுப்பி இந்தத் தினத்தை இலங்கை முழுவதிலும் சிறப்பாக கொண்டாட வழி செய்திருந்தது.

**யாழ். மறைமாவட்டத்தில் பாப்பரசர் தினம்**

இலங்கை முழுவதிலும் சிறப்பாக கொண்டாடப்பட்ட திருத்தந்தை தினம் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் எல்லா பங்கு ஆலயங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலி வழிபாடு மறையுரை விசுவாசிகள் மன்றாட்டு என்பன எல்லாம் தயாரித்து அனுப்பப்பட்டபடி சிறப்பாக நடத்தப்பட்டது. திருத்தந்தைக்கு இறையாசீர் வேண்டும் பழைய பராம்பரிய பாடலான எங்கள் ஞானத் தந்தையர்க்கே இறைவனே ஆசீர் அருள்குவிரே என்ற பாடல் திருப்பலியின் இறுதியில் எல்லோராலும் வானதிரப்பாடப்பட்டமை சிறப்பு முக்கியத்துவத்துடன் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

**நல்லிணக்கத்தின் அடையாளம் நீரே என்னும் தலைப்பு**

பாப்பரசரின் தினம் ஜூன் மாதம் 17ஆம் திகதி "நல்லிணக்கத்தின் அடையாளம் நீரே" என்னும் தலைப்பில் இலங்கையில் கொண்டாடப்பட்டமை இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். இலங்கையில் நல்லிணக்க அரசு ஒன்று உருவாகி என்றுமில்லாதவாறு இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உருவாக்கப்பட்டு ஓரளவு என்றாலும் செயற்படுத்த முயல்கின்ற வேளை பாப்பரசரின் தின கருப்பொருளாக "நல்லிணக்கத்தின் அடையாளம் நீரே" என்ற கருப்பொருள் தெரியப்பட்டமை சிறப்பானதே.

பாப்பரசரும் உலகம் முழுவதிலும் வாழும் மக்களை இனம் மதம், மொழி, நிறம், நாடு, கண்டம், கலாசாரம் என்ற வேறுபாடுகளைத் தாண்டி இணைத்து உலகளாவிய ரீதியில் எல்லா மக்கள் மத்தியிலும் நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என உழைப்பவர். சமயத்தலைவராக இருந்தாலும் சமய வரம்பு என்ற எல்லையைத் தாண்டி மனிதம் என்ற அன்புப் பிணைப்பில் அனைவரையும் இணைக்கவும் மனிதர் என்று அனைவரையும் அணைக்கவும் துடிப்பவர்.



பாப்பரசர் பிரான்சிஸ் 2013ஆம் ஆண்டு பணிப் பொறுப்பை ஏற்று மிகவும் வித்தியாசமான முறையில் அனைவரையும் கவரும் விதமாக நடத்தி வருகிறார். அனைவரையும் அன்பு செய்தல் அனைவரையும் ஏற்றுக்கொள்ளல் அனைவரையும் புரிந்து கொள்ளல் அனைவருக்கும் விட்டுக்கொடுத்தல் என்ற நற்பண்புகளோடு எப்போதும் மனிதாபிமானமாகச் செயற்படல் போன்ற நோக்குடன் செயற்படுவதால் உலகின் கவனம் அவர்மீதே உள்ளது.

**தனித்துவமான நகரின் தனித்துவமான தலைவர்**

வத்திக்கான் நகரின் அரசியல் தலைவரும் உரோமை நகரின் ஆயரும் உலகெங்கும் பரந்து வாழும் 1.2 பில்லியன் கத்தோலிக்க மக்களின் ஆனமிகத் தலைவரும் திருத்தந்தை பிரான்சிஸ் ஆவர். 108.7 ஏக்கர் பரப்பளவு கொண்ட வத்திக்கான் நகர் இத்தாலி நாட்டின் உரோமை நகரிலுள்ள ஒரு தன்னாட்சியுடைய ஒரு சுதந்திரப் பகுதியாகும். வத்திக்கான் நகர் உலகின் மிகச் சிறிய நாடு ஆகும். உலக கத்தோலிக்க மதத்தின் தலைமை மையமான வத்திக்கான் நகரில் பாப்பரசரின் அதிகாரப்பூர்வ உறைவிடம் திருத்தூதரக அரண்மனை என்ற பெயரில் அமைந்துள்ளது.

பாப்பரசரின் இயற்பெயர் கோர்கே மாரியோ பெர்கோலியோ என்பதாகும். 2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபையின் 266ஆவது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென் அமெரிக்காவின் முதல் திருத்தந்தை இயேசு சபையின் முதல் திருத்தந்தை ஐரோப்பாவுக்கு வெளியே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை என்ற சிறப்புக்கள் இவருக்கு உண்டு. பாப்பரசரின் 20ஆவது வயதில் அவருக்கு ஏற்பட்ட நோய் காரணமாக அவரின் ஒரு நுரையீரல் செயல்பாடு இழந்து ஒரு நுரையீரலுடனேயே இன்றும் பணியாற்றுகிறார் என்பது இங்கு நோக்கப்பட வேண்டும்.

**பாப்பரசரின் ஆட்சியின் ஆரம்ப நாள்கள்**

பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அவர், திருச்சபையின் ஆட்சி அமைப்பிலும் செயல்பாட்டிலும் சிந்தனைப் போக்கிலும் அடிப்படையான சில மாற்றங்களைக் கொண்டு வரப் போவதற்கான அறிகுறிகளைத் காட்டினார். ஆரம்பம் முதலே ஏழைகள் ஒதுக்கப்பட்டவர் வருத்தத்தில் இருப்போர் என்பவர் மட்டில் கரிசனை உடையவராய் இருந்த கர்தினால் பெர்கோலியோ தனது பெயராக பிரான்சிஸ் என்ற பெயரை புனித பிரான்சிஸ் அசிசியாரை மனதில் வைத்துத் தெரிந்து கொண்டார். பிரான்சிஸ் என்ற பெயரை திருத்தந்தை ஒருவர் தனது பெயராக தெரிந்தெடுத்தது இதுவே முதல் தடவையாகும். இவர் முதலாம் பிரான்சிஸ் அல்ல. அதே வேளை பின்னொரு காலத்தில் திருத்தந்தை ஒருவர் இரண்டாம் பிரான்சிஸ் என்ற பெயரை எடுத்தால் இவர் முதலாம் பிரான்சிஸ் என அழைக்கப்படுவார்.

> “ இலங்கை முழுவதிலும் சிறப்பாக கொண்டாடப்பட்ட திருத்தந்தை தினம் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் எல்லா பங்கு ஆலயங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலி வழிபாடு மறையுரை விசுவாசிகள் மன்றாட்டு என்பன எல்லாம் தயாரித்து அனுப்பப்பட்டபடி சிறப்பாக நடத்தப்பட்டது. திருத்தந்தைக்கு இறையாசீர் வேண்டும் பழைய பராம்பரிய பாடலான “எங்கள் ஞானத் தந்தையர்க்கே இறைவனே ஆசீர் அருள்குவிரே” என்ற பாடல் திருப்பலியின் இறுதியில் எல்லோராலும் வானதிரப்பாடப்பட்டமை சிறப்பு முக்கியத்துவத்துடன் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

**புனித பிரான்சிஸ் அசிசியார்**

நடுத்தர வணிக குடும்பத்தில் பிறந்த இவர் உயர்தர பணக்கார வாழ்வு வாழ்ந்தவர். பெருஜியா அசிசி நகர் போரில் சிறைப்படுத்தப்பட்டு ஓராண்டு சிறை வாழ்வை அனுபவித்தவர். அதன் பின்னர் அவர் வாழ்வு மாற்றம் பெற்றது. அன்பு பரிவு பாசம் போன்ற நற்பண்புகள் நிறைந்தவராக கத்தோலிக்கத்தை பரப்பும் வாழ்வு வாழத்தொடங்கினார். பிரான்சிசின் தந்தை தம் மகன் மனம்போன போக்கில் போவதாக உணர்ந்ததால் தமியானோ கோவிலில் அவரைச் சந்தித்து உடனடியாக வீட்டுக்குத் திரும்பும்படி பணித்தார். தாம் சொன்னதுபோல் செய்யாவிட்டால் பிரான்சிஸ் தம் வாரிசுச் சொத்து அனைத்தையும் இழக்க வேண்டிவரும் என்று மிரட்டினார். அதோடு தம்மிடமிருந்து எடுத்துக்கொண்ட பணத்தையும் திருப்பித் தர வேண்டும் என்று கேட்டார். அதற்குப் பதில்மொழியாக பிரான்சிஸ் தமக்குத் தந்தையின் சொத்து தேவையில்லை என்று கூறவே நகர அதிகாரிகளுக்கு முன்னிலையில் நீதிமன்றத்திடம் கொண்டுபோவதாகத் தந்தை கூறினார். ஆனால் பிரான்சிஸ் தமது சொத்தைத் துறந்துவிட்டு தம்மைக் கடவுளின் பணிக்கு அர்ப்பணித்துவிட்டதால் நகர அதிகாரிகளுக்கு முன் போக முடியாது என்று மறுத்துவிட்டார். எனவே வழக்கு அசிசி ஆயரின் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டது. அசிசி நகரின் ஆயர் குயிதோ பிரான்சீசிடம் தந்தைக்குரிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கூறினார். பிரான்சிஸ் பணத்தைத் தந்தையிடம் தீருப்பிக் கொடுத்து தாம் உடுத்திருந்த ஆடையைக் களைந்து தம் தந்தையின் முன்னிலையில்•அதை வைத்து இதுவரை நான் பியேட்ரோ பெர்னார்டோனே என்பவரை அப்பா என்று அழைத்து வந்தேன். இன்றிலிருந்து எனக்கு அப்பா வானகத்திலிருக்கும் தந்தையே என்றார். அனைவர் முன்னிலையிலும் அவர் நிர்வாணமாக நின்றமையால் ஆயர் குயிதோ தம் மேலாடையை எடுத்துப் பிரான்சிசிடம் கொடுத்துப் போர்த்திக்கொள்ளச் சொன்னார். பின்னர் சாதாரண ஒரு ஆடை பிரான்சிசுக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அதை வாங்கி அதில் சிலுவை அடையாளத்தை வரைந்து போர்த்திக் கொண்டார்.




தம் உடை உட்பட அனைத்தையும் துறந்த ஒரு புனிதரை தம் வாழ்வின் பாதுகாவலாகவும் மேல்வரிச்சட்டமாகவும் கொண்ட பாப்பரசர். பணி வாழ்வையும் பிரான்சீஸ் அசிசியாரின் பாதையிலேயே அமைத்து வருகிறார் என்பதற்கு அவரின் அன்றாட பணி வாழ்வே சாட்சி.

# போதைப்பாவனைக்கு எதிராக வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

கொழும்பு, ஜூன்24
போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு எதிராக பன்னாட்டு தினத்தை முன்னிட்டு, நாடளாவியரீதியில் போதைப்பொருள் பாவனைநிவாரணதேசியவாரத்திற்குள் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறு உள்ளகமருந்தககட்டுப்பாட்டு தேசிய சபையின் தவிசாளர் கலாநிதி சமன் அபேசிங்க தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற நேற்றைய ஊடக செயலமர்வின்போதே தவிசாளர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு எதிராக பன்னாட்டு தினம் 26 ஆம் திகதி. இதனை முன்னிட்டு போதைப்பொருள் பாவனைநிவாரண தேசிய வாரம் இம்மாதம் 26ஆம்திகதி முதல் அடுத்த மாதம் ஜூலை02 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது.
பாடசாலைச் சிறார்கள், இளைஞர்கள், பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் போன்ற செயல்திட்டங்களைமேற்கொள்ளவுள்ளோம்.
இந்த வாரதத்தில் அனைத்து அரசநிறுவனங்களிலும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்வதற்காக அரச தலைவர் செயலர் மூலம் சுற்று நிரூபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில், அரச தலைவரின் செயலருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு இலங்கையில் பல்வேறு வகையிலான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.
பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர் பரம்பரையை அதில் இருந்து விடுதலைபெறச் செய்து கட்டிஎழுப்புவதற்கான தேசிய பொறுப்புக்குரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சகலருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும். என்றார்.
(ப.ரி2)


VACANCY
Receptionists Needed With English Knowledge Send Your CV'S To hr@thethinnai.com
The Thinnai 86, Palaly Road, Jaffna. 021 203 0400

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3047 திகதி: 2018.06.23 சனிக்கிழமை
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 23 59 64 68 P
போனஸ் இலக்கம்: 40
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 47,856,790/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது நிரந்த அழைப்பு - 0114 824 824, 0112 333 776

சංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 154
சீட்டிழுப்பு திகதி ▶23.06.2018 இளஞ்சிவப்பு
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 31 53 58
விதி எண்: 06
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 30, 498, 836/=
2018.06.28 ம் திகதி வியாழக் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk


## படைக் குறைப்பு...

வெளியான செய்திகளை நிராகரித் துள்ள இராணுவம், இந்த ஆண்டில், சுமார் 13 ஆயிரத்து 193 படையினர் ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக இராணுவத் தலைமையகத்தினால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
அதில், வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தின் பல பிரிவுகள் விலக்கிக் கொள்ளும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு வெளியான செய்திகள் தவறாகும். பொதுமக்களை தவறாக வழி நடத்த முயற்சிக்கும் அதிருப்தி அரசியல் குழுக்களின் செயற்பாடே இது.
வடக்கு கிழக்கில், எந்தவொரு இராணுவ முகாமையும் மூடாமல், இணைப்பு செயல்முறைகளை தொடர்ந்து வருகிறது.
போருக்குத் தயார் நிலையில் இருப்பதையும், எல்லா நேரத்துக்கும் உகந்த மூலோபாய மற்றும் நடவடிக்கை செயற்பாட்டு மட்டத்தை குறைய விடாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையிலும் இந்த இணைப்பு செயல் முறை முன்னெடுக்கப்படுகிறது.
உண்மை என்னவெனில் சிவில் சமூகத்தில் உள்ள பலருக்கு, இணைப்பு, போர்த்திறன் போன்ற சில இராணுவ ரீதியான மொழிப் பிரயோகங்களின் அர்த்தம் புரிவதில்லை.
இராணுவம் தற்போது, ஆண்டு ஆள் சேர்ப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இந்த ஆண்டில், 213 அதிகாரிகள் மற்றும் 8 ஆயிரத்து 631 ஏனைய தரங்களைச் சேர்ந்தவர்களை நிரந்தரப் படைப்பிரிவுக்கும், 97 அதிகாரிகள் மற்றும் 4 ஆயிரத்து 252 படையினரை தொண்டர் படைப்பிரிவுக்கும் சேர்த்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது, என்றும் கூறப்பட்டுள்ளது.
மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர, வடக்கு கிழக்கில் படைகுறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக முன்வைத்த குற்றச்சாட்டுக்கு, இராணுவ ஊடகப் பேச்சாளர் பதிலளித்தமைக்கு மேலதிகமாக, இராணுவத் தலைமையகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. (5)

## புதிய...


கொழும்பு, ஜூன் 24
புதிய அரசமைப்பு முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில் அது மக்களிடையே மேலும் பிரிவினையை உருவாக்கும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
இலங்கை வந்துள்ள நோர்வேயின் அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்க செயலர் ஜென்ப்ரோலிச்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவுக்கும் இடையில் நாடாளுமன்றிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் பணியகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
சந்திப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,
புதிய அரசமைப்புக்கான சந்தர்ப்பத்தை உதாசீனம் செய்ய முடியாது. இந்த முயற்சி தோல்வியுற்றால் அது மக்களிடையே பிரிவினையை உருவாக்கும். புதிய அரசமைப்பு உருவாகுவதற்கான சாத்தியமில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கான கடந்த கால தாமதங்கள் தொடர்பில் திருப்தியடைய முடியாது. உண்மையான அர்ப்பணிப்பும் அரசியல் உத்வேகமும் இருந்தால் கடந்த காலங்களில் செய்யத் தவறியவற்றை இந்த அரசால் நிறைவேற்ற முடியும்.
தமிழ் மக்கள் தமது விருப்பத்துக்கும் சம்மதத்துக்கும் எதிராக ஆளப்படுகின்றனர். 1956ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டின் அரச கட்டமைப்பில் மாற்றத்தை வேண்டி தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வாக்களித்து வந்துள்ளனர். இந்த ஜனநாயகக் கோரிக்கையானது தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு மறுக்கப்பட்டுள்ளது.
அதிகாரப் பகிர்வு தொடர்பிலான எமது கோரிக்கைகள் பன்னாட்டுச் சட்டங்களுக்கும் நியமங்களுக்கும் அமைவாகவே இருக்கின்றது.
புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் 1988ஆம் ஆண்டிலிருந்தே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அரசும் இது தொடர்பில் கருமங்களை முன்னெடுத்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற தாமதங்களை இனிமேலும் ஏற்க முடியாது. புதிய அரசமைப்பு நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட பின்னர் அது பொது வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)


# சிறுநீரகம் தேவை

**இரு பிள்ளைகளின் தாயாருக்கு சிறுநீரகம் உடன்தேவை.**
**41 வயதுடைய O + குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு சிறுநீரகம் உடன் தேவை.**
**வழங்குவோருக்கு உடன் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**
தொடர்புகளுக்கு - 077 167 5782, 076 713 1310


## மரண அறிவித்தல்

### அருளானந்தம் நவரட்ணராஜா



கோண்டாவில் மேற்கு, கலட்டி வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா வை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் நவரட்ணராஜா நேற்று (23.06.2018) சனிக்கிழமை கோண்டாவிலில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா அன்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் பரமேஸ்வரி (மலர்) யின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற அரசகுமார் மற்றும் மல்லிகாதேவி (கோண்டாவில்), லோகநாதன் (லண்டன்), பத்மநாதன் (ஜேர்மனி), வசந்தராதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் நிர்மலராஜா ( நிமலன், கனடா), ஸ்ரீரஞ்சினி (கனடா), ஜெயந்தினி (லண்டன்) ஸ்ரீஸ்கந்தராஜா (பாபு, கனடா), ஸ்ரீவித்தியா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 221 5176**
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 08 . 1916



இறப்பு
23 . 06 . 2018

### திருமதி சின்னம்மா நாகமுத்து

தென்மராட்சி அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா நாகமுத்து நேற்று (23.06.2018) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் நாகமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் இராசையா காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் கனகம்மா, தருமலிங்கம், கனகரத்தினம், தங்கம்மா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், சிவகாமிப்பிள்ளை மற்றும் சின்னத்துரை, மல்லிகாதேவி, ஞானாம்பிகை, கயிலாயபிள்ளை ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணிக்கு கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அல்லாரை வீதி,
மீசாலை.
க. தவரூபன் (சந்தனா)
0771350436

## முதலமைச்சர்...

யார் களமிறங்குவார் என்ற கேள்வி எழுந்துள்ளது. தற்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு, கூட்டமைப்பின் சார்பில் இடம் வழங்கப்படாது என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். கூட்டமைப்புக் கோரினால் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கத் தயார் என்றும், கடந்த தடவை முதலமைச்சர் வேட்பாளர் விவகாரத்தில் விட்டுக் கொடுத்து தவறிழைத்ததைப் போன்று இம்முறை தவறிழைக்க மாட்டேன் என்றும், மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்திருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் பங்கேற்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருவதை முன்னிட்டு, அவருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இடையில் இன்று சந்திப்புக்கள் இடம்பெறலாம் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் சில இணையத்தளங்களில் நேற்றைய தினம் செய்தி வெளியாகியிருந்தது. அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் போட்டியிலிருந்து ஒதுங்குவது கட்சிக்கு நல்லதெனில் என்னை நினைத்து சங்கடப்படத் தேவையில்லை. நான் ஒதுங்கிக்கொள்கிறேன் என்ற முடிவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா வந்துவிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவின் வீட்டுக்கு நேரில் சென்று, நாடாளுமன்ற உறுப்பினருக்கு நெருக்கமான ஒருவர் கேட்டுள்ளார். அந்தச் செய்தியை அவர் முற்றாக மறுத்துள்ளார். அப்படி ஒன்றும் கூறவேயில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (5)

## மன்னார்...

குழுவின் செயலராகப் பணியாற்றும் சீ.ஆர் மோகன்ராஜ் எதிர்வரும் வாரம் நியமிக்கப்படவுள்ளார் என்று அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோகன்ராஜ் முதலில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராகவும் , வடக்கு கிழக்கு மாகாண போக்குவரத்து ஆணையாளராகவும் பணியாற்றியதோடு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலராகவும் பணியாற்றியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-105)

## இராணுவ...

ளது. அது பற்றிய முழுமையான அறிக்கை பாது காப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விசாரணையில் நேற்றுமுன்தினம் 4 பேரும் நேற்றுமாலை ஒருவருமாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியில் காட்டுப் பகுதியை அண்மித்த பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு பொலிஸார் ஓட்டோவைச் சோதனையிட்டனர். அதில் புலிக்கொடிகள், சீருடைகள், 20 கிலோகிராம் கிளைமோர் குண்டு, அதை இயக்கும் ரிமோட் கருவிகள் என்பன மீட்கப்பட்டிருந்தன. சம்பவ இடத்தில் வைத்து ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்ட அதில் பயணித்த இருவர் தப்பியோடியிருந்த நிலையில் பின்னர் வெவ்வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் மேலும் இருவரும் மேற்கொண்டு நடத்திய விசாரணையில் நேற்று ஒருவருமாக 5 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்றுக் கைது செய்யப்பட்டவருக்கு ஒரு கை இல்லை.

அவர்களில் சிலர் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்துள்ளனர். சிலர் இராணுவத்தினருடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்துள்ளனர். ஒருவருக்கு இராணுவத்தினரால் மாதாந்தம் பணம் வழங்கப்படுகின்றமையும் புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதானவர்களில் ஒருவர் புதுக்குடியிருப்பில் வாகனத் திருத்தகம் நடத்துபவர்.

மற்றொருவருக்கு, சந்தேகநபர்களில் 55 வயதுடைய ஒருவர் போலி அடையாள அட்டை செய்து வழங்கியுள்ளார். அதில் பெயர் உள்ளிட்ட தரவுகள் மாற்றப்பட்டுள்ளன. போலியான தரவுகளை உண்மை போல்காட்டிப் பெற்ற போலியான அடையாள அட்டையைக் கொண்டு வங்கிக் கணக்கு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு வெளிநாடு ஒன்றிலிருந்து பணம் அனுப்பப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டில் உள்ளவர்களில் புலிகளின் முக்கிய சில நபர்கள் மீது குற்றஞ்சாட்டி அவர்களே இங்குள்ளவர்களுக்குத் தகவல் வழங்கி ஆயுதங்கள் எடுத்திருக்கலாம் என்பது உள்ளிட்ட பல விடயங்கள் புலன்விசாரணையில் தெரியவந்துள்ளன. கைதானவர்களுக்கும் இராணுவ புலனாய்வாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது என்பது புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது என்று அமைச்சுக்கு அனுப்பிய விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4,105)

## இரட்டைப்...

ருநது மாதாந்தம் ஆயிரம் விண்ணப்பங்கள் வருகின்றன என்று குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக் கட்டணம் 3 இலட்சம் ரூபா. குடும்பத் தலைவர் ஒருவரது மனைவி அல்லது பிள்ளைகளுக்கான கட்டணம் 50 ஆயிரம் ரூபா என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, வெளிவிவகார மற்றும் உள்துறை அமைச்சுக்களின் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இந்த விண்ணப்பங்களைப் பரிசோதித்து, அனுமதியளித்ததன் பின்னர் அவர்களுக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்கப்படுமென்று குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (4)

## கூட்டமைப்பின்...

னங்கள் நாடாளுமன்ற ஆயுட்காலத்தின் அரைவாசிக் காலம் என்ற அடிப்படையில் பிரிவுகளாகப் பங்கீடு செய்வதாக தீர்மானிக்கப்பட்டே தற்போதைய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் குறித்த பட்டியல் வழங்கப்பட்டது. அதன்படி பட்டியலில் உள்ள ஏனையவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று கட்சியின் சிலர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த விடயத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லும் நோக்கில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள இரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து தீர்மானத்தைக்கூறி அவர்களின் ஒப்புதலுடன் பதவி விலகல் கடிதத்தைக் கோருமாறு அறிவுறுத்தியுள்ளார். (4,105)

## வீடு...

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாயிடமிருந்து விளையாட்டுத் துப்பாக்கியும் கத்தியும் மீட்கப்பட்டுள்ளன. அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் மாங்குளத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

அவர் போதையில் பெண் ஒருவருடன் முரண்பட்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதனால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் அவரைச் சோதித்த போது அவரது உடைமையில் குறித்த பொருள்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. அவர் விசாரணையின் பின்னர் இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று பொலிஸாரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## கோத்தா...

தொடர்பில் அஸ்கிரிய பீட துணைத் தலைவர் வெடருவே உபாலி தேரர் விளக்கமளித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்யும் போது நேரடியான கொள்கை இருக்க வேண்டும் என்றும் ஹிட்லர் போன்று மனிதர்களைக் கொலை செய்து ஆட்சி செய்ய வேண்டும் என்று அர்த்தப்படுவதாகக் கூறவில்லை என்றும் தேரர் விளக்கமளித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

தன்னுடைய நீண்ட உரையை சுருக்கி ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டு முழுமையாக அர்த்தப்படுத்துவது தவறு. இது தொடர்பில் முக்கிய அரசியல் தலைவர்கள் விமர்சிப்பது வருத்தமளிக்கிறது என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் முன்னாள் சர்வாதிகாரி ஹிட்லர் போன்று இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்தாவது இலங்கையைக் கட்டியெழுப்புமாறு அண்மையில் வெடருவே உபாலி தேரர் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடும்...

உறுதி செய்யலாம். இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள நோர்வேயின் அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்க செயலர் ஜென்ப்ரோலிச்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவுக்கும் இடையில் நாடாளுமன்றிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் பணியகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சந்திப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

நாட்டில் நிலவும் தற்கால அரசியல் நிலைகுறித்துச் செயலரைத் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டுவது தொடர்பில் நோர்வே அரசின் பங்களிப்புக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், பொருளாதார மற்றும் வேலை வாய்ப்பு போன்றவற்றில் எமக்குச் சமஉரிமை வழங்கப்டுவதில்லை. இதனால் எம் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். மாறாக அதிகாரம் சரியாகப் பகிரப்படுமிடத்து இந்தப் பொருளாதார சமூகப் பிரச்சினைகளை மிகபயனுள்ள, நேர்த்தியான வகையில் நிவிர்த்தி செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

வடக்குகிழக்கிலுள்ள காணி விடுவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன் இந்த விடயம் தொடர்பில் முன்னேற்றம் காணப்பட்டாலும் போர் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்துள்ளமையைக் கருத்திற்கொள்ளுகின்ற போது இந்தக் கருமங்கள் இன்னும் துரிதமாக இடம்பெற்றிருக்கவேண்டும் என்பதனையும் வலியுறுத்தினார்.

ஆயுதப் படையினர் இந்த நிலங்களில் பயிர்ச்செய்கை செய்து விளைச்சலை இந்தக் காணியின் உரிமையாளர்களுக்கே விற்கின்ற துர்ப்பாக்கிய நிலைமையை எடுத்துரைத்த அதேவேளை நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்வதற்கு இப்படியான நடவடிக்கைகள் தடையாக அமைவதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எடுத்துக் கூறினார்.

மேலும் வடக்கு கிழக்கிலுள்ள பல பிரதேசங்களில் காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் தொடர்பில் குழுவினரைத் தெளிவுபடுத்திய இராசம்பந்தன் எமது மக்களின் இந்தப் பிரச்சினைகளுக்கானச் சரியான தீர்வை எட்டுவதற்கு பன்னாட்டுச் சமூகம் காத்திரமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இலங்கை தொடர்பில் நோர்வே அரசு எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்த இரா.சம்பந்தன் தொடர்ந்தும் அவர்களது ஆக்கபூர்வமான பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார் என்றுள்ளது. (5)

## புலிகள்...

டியாகத் தலையிட்டு மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் தலைதூக்காமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாது போனால் நாட்டில் மீண்டும் மோசமான நிலமை ஏற்படலாம் என்று மகிந்த அணி அரசை எச்சரித்துள்ளது.

ஒட்டுசுட்டானிலிருந்து புதுக்குடியிருப்பு செல்லும் வீதியில் நேற்று முன்தினம் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியிலிருந்து வெடிபொருள்கள், விடுதலைப்புலிகளின் சீருடைகள் மற்றும் கொடி என்பன கைப்பற்றப்பட்ட விடயம் தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜெயக்கொடி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் மூன்று தசாப்த காலமாக நீடித்த போரினால் சகல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டனர். எமது நாட்டின் பொருளாதாரம் பின்னடைவைச் சந்தித்தது. முன்னாள் அரச தலைவர் மகிந்த தனது ஆட்சி காலத்தில் முழு மூச்சாகப் போரை முடிவுக்கு கொண்டு வந்தார்.

போர் நிறைவுக்கு வந்த பின்னர் வடக்கில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினார். அந்தப் பிரதேச மக்களின் சுதந்திரமான வாழ்க்கை உறுதி செய்யப்பட்டதுடன் கட்டுக்கோப்பான நிர்வாகமும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. கடந்த ஆட்சியில் பயங்கரவாதம் தலைதூக்கவில்லை.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்பாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மலிந்துள்ளன. கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. அரசின் முறையற்ற நிர்வாகத்தினாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில் வடக்கில் காணிக்ள் விடுவிக்கப்படுகின்றன. மக்களின் காணிகள் விடுக்கப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்தில்லை. அதற்கு முன்னர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொடுக்க வேண்டும். மக்களின் வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது நடைபெறாதபோதே மக்கள் பயங்கரவாதத்தின் பக்கம் ஈர்க்கப்படுவர் என்றார். (5,61)

## க.குமாரை...

கொண்டு செயற்பட்டால் தனிக்கட்சி அமைத்துச் செயற்படும் தேவை இருக்காது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கடந்தவாரம் அவசரமாக முதலமைச்சரைச் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பின்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம், மாகாண சபைத் தேர்தலில் முதல்வரின் நிலைப்பாடு தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

தனித்துத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றோ அல்லது கூட்டமைப்பைச் சிதைக்க வேண்டும் என்றோ நான் எண்ணவில்லை. இருப்பினும் அனைத்தும் மக்களின் விருப்பமே. அதேநேரம் கூட்டமைப்பு ஆரம்பிக்கும் போது அதனுள் இருந்த அனைவரும் கூட்டமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க வேண்டும்.

இந்த வகையில் கஜேந்திரகுமார் மீண்டும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். ஏனையவை கட்சிக்குள் பேசித் தீர்க்கக்கூடியவைகள். கூட்டமைப்பிலும் மாவை. சேனாதிராசா, சாம் போன்றவர்களுடனுன் எனக்கு எந்த முரண்பாடும் கிடையாது. இருப்பினும் ஒரு சிலரே மாறுபட்டுக் காணப்படுகின்றனர். என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4105)

## கொள்கைகளை...

ரணிக்கு வழங்குமாறும் அவர் கூறியிருந்தார். அமைச்சர் மனோவின் இந்த அழைப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவரிடம் ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)

## திருவாசக...

பட்டிருந்தது. எனினும் பலரது கோரிக்கைக்கு அமைய அது இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம்12 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இன்று மாலை 4 மணிக்கு திருவாசக அரண்மனை திறந்து வைக்கப்படவுள்ளது என்று சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திரு முருகன் தெரிவித்தார்.

அங்கு திருவாசகங்கள் கருங்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடியவர்கள் இலகுவாகப் பார்த்துப் படித்துப் பயன்பெறமுடியும். அங்கு சுமார் 21 அடி உயர ரதமும் செய்யப்பட்டுள்ளது. (4)

# துனிசியாவை ஊதியது பெல்ஜியம்



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் துனிசியாவை ஊதித் தள்ளியது பெல்ஜியம்.

ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் துனிசிய வீரர் வெளிப்படுத்திய முறையற்ற ஆட்டத்தால் பெல்ஜியம் அணிக்குப் பெனால்டி வாய்ப்புக் கிடைத்தது. அதைக் கோலாக மாற்றினார் ஈடன். 16ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார் றோமலு லுகாலு. 18ஆவது நிமிடத்தில் டைலன் துனிசியாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியில் வழங்கப்பட்ட மேலதிக நிமிடங்களில் லுகாலு மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது பெல்ஜியம்.

51ஆவது நிமிடத்தில் ஈடன் மற்றொரு கோலையும் 90ஆவது நிமிடத்தில் மிச்சி பெல்ஜியத்தின் ஐந்தாவது கோலையும் பதிவுசெய்தனர். 5:1 என்ற கோல் கணக்கில் வலுவான ஆதிக்கம் செலுத்தியது பெல்ஜியம். 93ஆவது நிமிடத்தில் வகாப் துனிசியாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் வென்றது பெல்ஜியம்.

ஆட்டத்தின் முதல் பாதியில் மட்டுமே விறுவிறுப்பு என்பது இருந்தது. இரண்டாம் பாதியின் பெருமளவான நிமிடங்கள் 4:1 என்ற நிலையில் பெல்ஜியம் ஆதிக்கம் செலுத்தியதால் ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மை இருக்கவில்லை. சம்பிரதாயபூர்வமாக நடைபெற வேண்டிய ஆட்டமொன்று என்ற வகையில் தான் பெல்ஜியம் - துனிசியா மோதிக் கொண்டன. (ம)




# கிளிநொச்சி சிவநகர் அ.த.க. கபடியில் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜீன் 24

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுக்கு உட்பட்ட கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியனானது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கிளிநொ்ச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 34:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி பெற்றது. (ம-422)

# பற்றிக்ஸின் ரென்னிஸ் தொடரில் வைத்தீஸ்வராக் கல்லூரி மகுடம்



யாழ்ப்பாணம், ஜீன் 24

சென். பற்றிக்ஸ் கல்லூரியால் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட ரென்னிஸ் தொடரில் பெண்கள் பிரிவில் வைத்தீஸ்வராக் கல்லூரி அணி சம்பியனானது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ரென்னிஸ் திடலில் அண்மையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. வைத்தீஸ்வராக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலய அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சியானுவை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த தேனிலா மோதினார். 6:4, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சியானு வெற்றிபெற்றதை அடுத்து வைத்தீஸ்வரா 1:0 என்ற முன்னிலையைப் பெற்றது.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த நிலோஜியை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியலாயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கஜனி மோதினர். 6:0, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர் செற் வெற்றிபெற்றார் கஜனி. ஒற்றையர் ஆட்டத்தின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றதால் இரட்டையர் ஆட்டத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரட்டையர் ஆட்டத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த தனுசா, ஜதுசா இணையை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த லோஜிகா, மோகனா இணை மோதியது. 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வைத்தீஸ்வராக் கல்லூரியின் இணை வெற்றிபெற்றதை அடுத்து அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-23)

# ஹாலே ரென்னிஸ் தொடர் இறுதியில் றோயர் பெடரர்

ஜேர்மனியின் ஹாலே நகரில் நடைபெற்று வரும் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் பெடரர்.

பெடரரை எதிர்த்து அமெரிக்க வீரர் குட்லா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் முறையே 7:6, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார் பெடரர். (ம)



# ஐஸ்லாந்தை வீழ்த்தியது நைஜீரியா உயிர்ப்புடன் உள்ளது ஆர்ஜென்ரீனா

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில், ஐஸ்லாந்தை வீழ்த்தியது நைஜீரியா. நைஜீரியாவின் இந்த வெற்றி ஆர்ஜென்ரீனாவுக்கு ஓரளவு நிம்மதியைக்கொடுத்திருக்கும். ஏனெனில் ஐஸ்லாந்து வென்றிருந்தால் அது ஆர்ஜென்ரீனாவின் வெளியேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

ஆட்டத்தின் முதல் முப்பது நிமிடங்கள் வரையில் ஐஸ்லாந்தே ஆதிக்கம் செலுத்தியது. தடுப்பு மற்றும் தற்காப்பு ஆட்டத்தைத்தான் நைஜீரியா கடைப்பிடித்தது. 30ஆவது நிமிடத்தின் பின்னரேயே தற்காப்பு ஆட்டத்தில் இருந்து விடுபட்டுத் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தது நைஜீரியா. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

49ஆவது நிமிடத்தில் நைஜீரியாவின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் இளம் வீரர் மியூசா. ஐரோப்பிய அணிகளுக்கு அதிர்ச்சி கொடுக்கும் ஐஸ்லாந்து நேற்று அதிர்ச்சியில் உறைந்தது. 75ஆவது நிமிடத்தில் நைஜீரியாவின் இரண்டாவது கோலையும் மியூசா பதிவுசெய்தார். இந்தக் கோல் மியூசாவின் தனிமனித முயற்சியாகும். ஐஸ்லாந்து வீரர் கேரி அர்னாசனை அனாயாசமாகக் கடந்து சென்று எடுத்துச் செல்ல ஆபத்தை உணர்ந்த ஐஸ்லாந்து கோல் காப்பாளர் பொக்ஸுக்குள் இருந்து முன்னேறி வந்தார். எனினும் மின்னல் வேகத்தில் அந்தக் கோலைப் பதிவுசெய்திருந்தார் மியூசா. இன்னதுதான் நடக்கிறது என்று ஐஸ்லாந்து உணர்வதற்குள் அனைத்தும் நடந்து முடிந்தது. 80ஆவது நிமிடத்தில் கிடைத்த அருமையான பெனால்டி வாய்ப்பை ஐஸ்லாந்து அணியின் ஹால்டர்சன் வீணாக்கினார். 93ஆவது நிமிடத்தில் ஐஸ்லாந்தின் சவர்ஸசன் அரிதான வாய்ப்பொன்றை வீணாக்கினார். அவை பதிவாகியிருந்தால் ஆட்டம் சமநிலையாகியிருக்கும். எனினும் நேற்றுமுன்தின ஆட்டம் நைஜீரியாவுக்கு பெரியதொரு வெற்றியைக் கொடுத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. (ம)





## சேர்பியாவை வென்றது சுவிஸ்

உலகக்கிண்ண கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டமொன்றில் சேர்பியாவை வீழ்த்தியது சுவிற்சர்லாந்து அணி.

ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்திலேயே சேர்பிய வீரர் அலெக்சாண்டர் தனது அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அதன் பின்னர் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது சேர்பியா.

52ஆவது நிமிடத்தில் சாகா கோலொன்றைப் பதிவு செய்ய கோல் கணக்கு 1:1 என்றாக மாறியது. நீண்ட நேரமாக 1:1 என்ற நிலையே இருந்தது. 90ஆவது நிமிடத்தில் சாகிரி கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது சுவிற்சர்லாந்து. (ம)

## சந்திமலின் மேன்முறையீட்டை நிராகரித்தது ஐ.சி.சி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பந்தைச் சேதப்படுத்தியமை தொடர்பில் இலங்கை அணியின் தலைவர் சந்திமல் தொடர்ந்த மேன்முறையீட்டை நிராகரித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

சந்திமல் பந்தைச் சேதப்படுத்தும் காணொலியை அவருடனான விசாரணையின்போது வெளிப்படுத்தியது பன்னாட்டு கிரிக்கெட் சபை. இதையடுத்து சந்திமல் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். பந்தைச் சேதப்படுத்தியதற்காக ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளின்போது. நடுவர்கள் இலங்கை அணியினர் பந்தை சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தபோது அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் சுமார் இரண்டு மணிநேரம் களமிறங்கவில்லை. இது மிகப் பெரிய குற்றமாகும். இதற்காக சந்திமலுக்கு நான்கு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்படப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்தே சந்திமல் மேன்முறையீடு செய்தார். எனினும் அவரின் மேன்முறையீட்டை நிராகரித்தது ஐ.சி.சி. (ம)











## தேவை

யாழ்நகரில் 542, கே.கே.எஸ். வீதியில் உள்ள பிரபல Hotel ஒன்றில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கி நிற்பதற்கு சகல வசதிகளுடனான

**வீடு ஒன்று தேவை**

அத்துடன் இவ்விடத்திலிருந்து 1km தூர எல்லையில் அமைந்திருப்பது விரும்பத்தக்கது.

**021 222 1355/ 021 373 4116**

## இணை ஒப்பந்த அடிப்படையில் ஆள்கள் தேவை

(Please Contact Immediately)

கண்காணிப்பு கமரா (CCTV Installation) பொருத்துவதற்கும், வயரிங் வேலை (Wiring) செய்வதற்கும் ஒப்பந்த அடிப்படையில் (Contract) ஆள்கள் தேவை.

NALIN Information Technologies (Pvt) Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.

**021 222 1121 | 0777 66 79 75**

## வீடு வாடகைக்கு

யாழ்.பிறவுண் வீதி, நீராவியடியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிவீடு வாடகைக்கு

**076 173 4858**

## வேலையாள்கள் தேவை

- அரிசிஆலை வேலைக்கு (இரவு) ஆண்கள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும்.
- பிரதான பெண் கணக்காளருக்கான உதவியாள் (பெண்) தேவை.

தொடர்பு - 077 257 5712, 070 397 0888

## SLIIT

COMPUTING | BUSINESS | ENGINEERING

**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்**

**– யாழ் கிளை –**

## VACANCIES

Applications are invited from suitably qualified citizens of Sri Lanka serve at SLIIT Jaffna in the following posts till 30 June 2018

1. Lecturer - Business Management / Accounting
2. Lecturer - IT
3. Lecturer - English

**QUALIFICATIONS**

1. A degree with specialization in the relevant subject with first class or second class (upper division) Honours.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honours and at least one year experience in the teaching / research / processional work in recognized mercantile establishment / postgraduate studied in a recognized university or Higher Education Institution.

OR

3. i - A degree with specialization in the relevant subject with out Honours or any other general degree with at least Second Class Honours

AND

ii - A postgraduate degree with duration for at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis / dissertation.

**OTHER CONDITIONS:**

1. These appointments are permanent with entitlement to Employee's Provident Fund and Employees Trust Fund.
3. The desired post applied, should indicate clearly on the top left hand corner of the envelope.

CV send through E-mail: *sliitjaffna2@gmail.com*

*Jaffna Centre Managed By EWIS Career Training (Pvt) Ltd* e-wis

**CENTER HEAD SLIIT**

**NO. 59, POINT PETRO ROAD, JAFFNA. 021 7 204 204**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனமொன்றில் நிரந்தர தொழில்புரிபவரும், வயது 39, 3ஆம் பாதம் உத்தராடம் நட்சத்திரம், 5 அடி, 3 அங்குலம் உடைய மணமகனுக்கு அழகிய நற்பண்புள்ள மணமகள் சீதனத்துடன் தேவை.

விளம்பர இலக்கம் 1004, C/O உதயன்.

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

- UK- 550 /=Kg
- கனடா-900 /=Kg
- ஜேர்மனி-700 /=Kg
- நெதர்லாந்து-700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240

**V2 TRAVELS**

## E.S Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

esprintersjaffna@gmail.com

021 492 7471, 021 492 7472

## வாடகைக்கு

நல்ல நிலையில் உள்ள Hiace வாகனம் மாதாந்த/ நாளாந்த வாடகைக்கு விடப்படும்.

**077 026 1966**

## வீடு விற்பனைக்கு

நயினாதீவில் ரம்மியமான சூழலில் 6 1/2 பரப்பு காணியுடன் கூடிய 5 அறைகளைக் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 978 9201

## துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11 Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு

3 - 5 வேலை நாள்கள்

- UK - 550/=
- Germany - 650/=
- France - 700/=
- Canada - 850/=
- Australia - 800/=

திருமுருகன் கொம் நெற்

- கொழும்பு,
- யாழ்ப்பாணம்,
- திருநெல்வேலி,
- நெல்லியடி,
- கிளிநொச்சி,
- முல்லைத்தீவு,
- மன்னார்.

Hotline- **077 755 4528**


## SAMSUNG

**SAMSUNG** ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியொன்றை வாங்கி

ஒரு தடவைக்கான **SCREEN** மாற்றீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்



**BREAK FREE OFFER**



தற்போது **SAMSUNG** வாடிக்கையாளர்கள் மட்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய **BREAK FREE** சலுகை

உங்களது **DISPLAY** ஒன்றை **REPLACE** செய்து கொள்ளுங்கள்

J4, J7 Nxt LTE, J7 Nxt Refresh, J7 Prime2, J7 Max, J7 Duo, J6, J7 2017(PRO) | A6+, A8+ | S8, S8+, S9, S9+ | Note 8 | On Nxt

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Telecom | WOW.lk

*நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டது. இங்கு குறிப்பிடப்படும் விலைகள் எவ்வித முன்னறிவிப்புமின்றி மாறுபடக்கூடும். மேலதிக தகவல்களுக்கு விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனை முகவர்களை தொடர்பு கொள்ளவும். இங்கு காண்பிக்கப்பட்டுள்ள பொருட்களின் படங்கள், அம்சங்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகள் ஆகியன கட்புலனூடான தெளிவுப்பாட்டை வழங்கும் நோக்குடனே அமைந்துள்ளன. உண்மையான பொருள் இதிலிருந்து மாறுபடக்கூடும்.

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

SamsungLankaOfficial

SamsungLankaOfficial

"Youth Brand of the year"

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.